# TRIUMPH OF JUSTICE.

## A HIGH CLASS ROMANCE.

*IN LUCID TAMIL.*



# மாலினீமாதவ[illegible]

அல்லது

# தர்மவிஜயம்.

கல்யாண[illegible]மாண்டவன் மீண்டமாயம், [illegible]

முதலான இனிய தமிழ்நாவல்கள் [illegible]

R. S. நாராயணஸ்வாமி [illegible] [illegible]A. B.L.

[illegible]றியது.

[illegible] மதுரை.

# மாலினீமாதவம

## முகவுரை.

---

'இயல்', 'இசை', 'நாடகம்', எனும் க்ரந்தங்களுள், 'நாவல்' என்பது முதலாவது இனத்தைச் சார்ந்ததாகும் இது ஸம்ஸ்க்ருத பாஷையில் 'ஆக்யாயிகா' என்னும் வகுப்பையொத்த தாகும். இனிய இயல்பான நடையில் சாதாரணமாய் யாவரும் சுலபமாய் அறியும் வண்ணம், ப்ரக்ருதியின் இயற்கை அமைப்பையும், அழகையும், அற்புதங்களையும் (Constitution, Beauties and Wonders of Nature) ஜன ஸமூகங்களின் நடையுடைபாவனைகளையும், மனிதர்களின் மனோபாவங்களையும் மனோ (Thoughts) வாக் (Words) காயம் (Deeds) என்னும் த்ரிகரணங்களிலும் மனிதர்களுக்குள் ஏற்பட்டுள்ள எண்ணிறந்த வித்தியாஸங்களையும், ப்ரத்யக்ஷமாய் உள்ளபடி கண்ணாடிபோலப் ப்ரதிபிம்பித்துக் காட்டுவதே 'நாவல்' எனப்படும்.

இவ்வுலகில் நடக்கும் அதிசயங்களை நுட்பமாய்க் கவனிப்போமாகில், அவைகள் 'காரண காரிய' விதி (Law of Causation)க்குட்பட்ட வோர் 'சங்கிலித்தொடர்' (Chain of causes and effects), போல் விளங்கும். முன் நடப்பன பின் ஸம்பவிப்பவைகளுக்குக் 'காரண' மென்றும், பின் ஸம்பவிப்பவைகள் முன் நடந்தவைகளைக் காரணமாய்க்கொண்டு நேரிடும் 'காரியம்' (effect) என்றும் கூறப்படுகின்றன.

காரணங்களை விளக்கிக்காட்டி, யணிவகுத்து, அவைகளினின்றும், இயல்பாய் நேரிடும் விசேஷ ஸம்பவங்களைப் படிப்படியாய் விவரிப்பதே 'சாதாரண நாவல்' ஆகும். அப்படிக்கல்லாது, எதிர்பாராது நேரிடும் அற்புத ஸம்பவத்தை முதலில் சொல்லுவதும், அது நேரிடுவதற்கு ஹேதுவான காரணங்களை ஆராய்ச்சி செய்து அச்சம்பவத்தின் உண்மையையும் தன்மையையும் விளக்குவதுமே 'மாயக்கதைகள்' (Mysteries) என்றும், 'துப்பறி கதைகள்' (Detective Stories) என்றும் சொல்லப்படுகின்றன.

மேற்கூறிய விபாகங்களைத்தவிர, சரித்திரங்கள், அவைகளின் முடிவுக்குத் தக்கபடி, சுபகதைகள் (Comedies) எனவும், கொடுங் கதைகள் (Tragedies) எனவும், இருவகையாய்ப் பிரிக்கப்படுவது முண்டு.

உலகத்தின்கண் சம்பவிப்பனயாவும், அவனவன் வினைப்படி தெய்வசங்கல்பத்தாலேயே நடக்கின்றனவென்றும், நன்மைக்கு நன்மையும் தீமைக்குத்தீமையும் ஒவ்வொருவனும் அடைகின்றான் எனவும், நல்லவன் ஒருவன், துஷ்டர்களின் துற்செய்கைகளாலேலா அல்லது தற்சயலாய் ஆவிற்பவிக்கும் துர் ஸம்பவங்களாலேயோ, மத்தியகாலத்தில் கஷ்டமனுபவிக்க நேரிடினும் அவன் அக்கஷ்டங்களினின்றும் கரையேறி இறுதியில் சுபத்தையே அனுபவிக்கிறான், என்ற ஸித்தாந்தத்திற் கிணங்க அஃதை விளக்கிக் காட்டும் பொருட்டு, எழுதப்பட்டுள்ள சரித்திரங்களே சுபகதைகள் எனப்படும். ராமாயணம், அரிச்சந்திரபுராணம் முதலிய எண்ணிறந்த ஹிந்து புராணக்கதைகளையும், ஷேக்ஸ்பியர் எழுதிய 'வெனிஸ் வர்த்தகன்', முதலான கதைகளையும் இதற்கு உதாரணமாகச்சொல்லலாம்.

ஆனால் உலகத்தில் ஸம்பவிப்பனயாவும், ஏதோ அநாதியாயும், யாருக்கும் அடங்காதவையாகவும், யாதொரு தாக்ஷண்யமும் அற்றவையாகவும் ப்ரஸரிக்கும், ப்ரக்ருதி விதிகள்' (Laws of Nature) எனப்படும் மகாவிதிகட்குட்பட்டு, நடக்கின்றன வென்றும், நசனுயினும் கீசனுயினும், அவ் விதிக்குட்பட்டே நடக்கவேண்டுமே யல்லாது, அவ்விதிகள் யாருக்கும் அடங்கமாட்டாவென்றும், ஆனால், அவ்விதிகளின் தன்மைகளைப் புத்தித்திறமையால் அறிந்து, அவைகளை யனுஸரித்து, அவைகள் வழிபட்டு, அவைகளை எதிர்க்காது, தன் புத்தித்திறமையால், தனக்கு உபயோகித்துக்கொள்பவனே இவ்வுலகத்தில் சௌகரியமாய் வாழ்க்கூடியவன் (Succees in Life) என்றும், அவ்வாறு செய்து கொள்ளக்கூடிய ஸாமர்த்திய மற்றவன் வாழ்வெல்லாம் பாழாகத் (Failure) தக்கவைதான் என்றும், தர்மத்துக்கு நன்மையும், அதர்மத்துக்குத் தீமையும்' என்பதும், தர்மமே பலம் (Virtue is Power) என்பதும் அபாண்டம்

என்றும்; 'புத்திமானே பலவானாவான்', (Knowledge is Power), உலகவிதிகளுக் கிணங்கச் சமயோசிதமாய் நடப்பதும் (Adaptability) அவைகளின் வழிக்கு எதிர்ப்படாது (Without opposing the current of nature) காலங்கழிப்பதே புத்திமான்கள் செய்யத் தக்கதென்பதும், சொல்லக்கூடிய ஸித்தாந்தங்களை யனுஸரித்து, எந்த விஷயத்திலும் தனது புத்திக்குறைவாலோ, அல்லது பலவரின் புத்தி விசேஷத்தாலோ, சில ஜனங்களும் சம்பவங்களுக்கு இரையாக நேர்ந்தவன் விதியவ்வளவுதான், எவ்வளவு தர்மவானாயினும் அவனுக்கு விமோசனம் யாதொன்றுமில்லை, என்ற உலக விதிகளைக் கொடுமையாயினும் கண்ணாடிபோல் தத்வத்தாய்ப் பிரதி பிம்பித்துக் காட்டி அவைகளைப் படிப்பவர் அதனின்றும் தங்கள் புத்திக்கெட்டிய போதனைகளை யறிந்துகொள்ளுமாறு எழுதப்பட்ட சரித்திரங்களே கொடுங்கதைகள் (Tragedies) எனப்படும். முத்ராராக்ஷஸம், சாரங்கதர சரித்திரம்', ஷேக்ஸ்பியரின் ஒதெல்லோ, ஹாம்லெட், காரியோலேனஸ் முதலான நாடகங்களை இதற்கு உதாரணமாய்க் கூறலாம்.

மதுரை ஜில்லா மணிபுரம் ஜமீன்தார் ராமராஜரும் அவர் மனைவியும், ஆறுமாத வயதுள்ள அவர்களுடைய ஆண் சிசுவும் இச்சரித்திரகாலத்துக்குச் சுமார் 20 வருஷங்களுக்கு முன் கொலையுண்டதும், அக்கொலையின் மாயம், நுட்பதர்சிகளாகிய போலீஸ் நிபுணர்களின் புத்திக்குக்கூட எட்டாது, மனிதர்களின் ஞாபகத்தினின்றும் மாயப் பழங்கதையாய் மறந்துபோனதும், இறந்த ராமராஜரின் கனிஷ்ட சகோதரர் கிருஷ்ணராஜர் வாரிஸ் க்ரமப்படி ஜமீன்தாரியை யடைந்து தன் தமயனையிழந்த சோகத்தால் அத்ருப்தியுடன் அரசாண்டுவந்ததும், இவ்வாறு 20 வருஷத்துக்குப் பிறகு அக்கொலை விவரம் நமது பரதேசியாரால் வெளியிடப்பட்டதும், பூர்வ ஜமீன்தாரின் இறந்த புதல்வன் தன் சிறியதகப்பன் கிருஷ்ணராஜரின் வஞ்சனைக்கும் கொடுமைக்கும் தன்மேல் வந்த கொலைக்கேஸுக்கும் இரையாகாது தப்பியதும், மறுபடி ராஜ்யத்தை யடைந்து அரசாளநேர்ந்ததும், இச் சிறு நாவலின் முக்ய கதாம்சமாகும்.

இந் நாவல் கதா நிகழ்ச்சியில் மாயக்கதை (Mystery) அல்லது துப்பறி கதையாகவும், முடிவில், சுபகதையாகவும், இருப்பதுடன் வர்ணனையில் ரஸகல்பனை (Romance) யை ஒத்தும் இருக்கிறது.

இந் நாவல், மதுரையில் ப்ரசுரமாகும் வித்யாபாநு என்ற மாதப் பத்திரிகையில் 1911, 1912-ம் வருஷங்களில் கொஞ்சங்கொஞ்சமாய் ப்ரசுரிக்கப்பட்டு, இப்பொழுது புஸ்தகரூபமாய் மறுப்ரசுரம் செய்யப் பட்டிருக்கின்றது.

மதுரை,
1—11—1914. } R. S. நாராயணஸ்வாமி அய்யர்.

# மாலினீமார்தவம்.

## விஷய அட்டவணை.


| அத். | விஷயங்கள். | பக்கம். |
|---|---|---|
| 1. | காதலர் ... ... | 1. |
| 2. | கஷ்டகாலம் ... ... | 7. |
| 3. | பூர்வ கதை ... ... | 14. |
| 4. | நன்றியின்மை ... ... | 24. |
| 5. | தர்பார் ... ... | 31. |
| 6. | திகில் ... ... | 38. |
| 7. | தொடர்கதை ... ... | 46. |
| 8. | மாறு காட்சிகள் ... ... | 52. |
| 9. | மேகங்கள் ... ... | 60. |
| 10. | பத்திரிகைகள் ... ... | 66. |
| 11. | கள்ளன் கோட்டை ... ... | 70. |
| 12. | அபஹரணம் ... ... | 74. |
| 13. | விசாரணை ... ... | 80. |
| 14. | மரண தண்டனை ... ... | 87. |
| 15. | சிறைச்சாலை ... ... | 96. |
| 16. | பகல்வேஷம் ... ... | 103. |
| 17. | சோதனை ... ... | 106. |
| 18. | அந்தஸ்த்ரீயின் கதை... ... | 109. |
| 19. | சிறைமீட்டல் ... ... | 114. |
| 20. | தூக்குமரம் ... ... | 117. |
| 21. | சந்தோஷ ஸமாகமம் ... ... | 122. |
| 22. | விவரங்கள் ... ... | 129. |
| 23. | பாதகன் ... ... | 135. |
| 24. | முடிவு ... ... | 142. |

## [illegible].

### OR

## TRIUMPH OF JUSTICE.


| Chapter. | Contents. | Page. |
|---|---|---|
| 1. | The Lovers | 1. |
| 2. | Evil Day | 7. |
| 3. | Old Tale | 14. |
| 4. | Ungrateful | 24. |
| 5. | Durbar | 31. |
| 6. | Terror | 38. |
| 7. | Connecting Story | 46. |
| 8. | Changing Scenes | 52. |
| 9. | The Clouds | 60. |
| 10. | News Papers | 66. |
| 11. | Kallan Kottai | 70. |
| 12. | Abduction | 74. |
| 13. | The Trial | 80. |
| 14. | Sentence of Death | 87. |
| 15. | The Prison | 96. |
| 16. | The Masque | 103. |
| 17. | Search | 106. |
| 18. | The Story of that Woman | 109. |
| 19. | Release | 114. |
| 20. | The Gallows | 117. |
| 21. | Happy Meeting | 122. |
| 22. | Explanations | 129. |
| 23. | The Wretch | 135. |
| 24. | Conclusion | 142. |

...RUYANM...R MADRAS



# மாலினீமாதவம்

அல்லது

அன்பளிப்பு

# தர்மவிஜயம்

## காதலர்.

## The Lovers.

கல்வியிலும் செல்வத்திலும் சிறப்புற்றோங்கும் பாண்டிய நாட்டின் தலை நகரான மதுரை நகருக்கு வட மேற்குத் திசையில் சுமார் 50-மைல் தூரத்தில் மணிபுரமென்று சரித்திரங்களில் பேர் பெற்ற ஓர் ஜமீந்தாரியும், அதற்கு முக்கிய ஸ்தலமான மணிபுரமென்ற தலைநகரும் இருக்கின்றன.

இம்மணிபுரத்தருகில் ஐவர்மலை யென்ற ஓர் மலைத்தொடரும், அதன் உச்சியில் 'கள்ளன் கோட்டை' யென்ற ஓர் கோட்டையும் தோன்றும்.

இம்மலையினின்றும் "சிற்றாறு" என்ற ஓர் ஜீவநதி பிரவகித்து மணிபுரம் ஜமீன்தாரியை நீர்வளமுள்ளதாகச்செய்துகொண்டு கடைசியாக வைகையாற்றில் சங்கமமாகின்றது.

வஸந்தகால மந்தமாருதமானது அவ்வாற்றின் நீர்த்திவலைகளின் ஸ்பர்சத்தால் குளிர்ச்சிபெற்று, அம்மணிபுரத்தை யடுத்த "வஸந்தவிலாச"மென்ற அரண்மனையைச்சார்ந்த உத்யான வனத்தின் தருக்களின் இளந்தளிர்களை மெதுவாயசைத்துக்கொண்டும், பலவகை-மலர்களின் நறுமணங்களை வாரிக்கொண்டும் 'ஜில்'லென்று வீசுகின்றது. கதிரவனது வரவைத்தெரிவிப்பவனாய் அழகியசெம் மேனிவாய்ந்த அருணன் பூர்வதிக்கில் உதயமானான். பசுமையான

இலைதளிர்களிலும், புற்பூண்டு மலர்களிலும் முத்து வடிவாய்த் தங்கியிருந்த பனித்திவலைகள் சூரியனுடைய இளங்கிரணங்களை பிரதிபிம்பித்து ஸப்தவர்ண ஸ்படிகங்களாகப்ரகாசித்தன.

அவ்வதிகாலையில், மின்னர்கொடிபோல் துவளும் அழகிய சரீரமும்பொன்நிறம்வாய்ந்தமேனியும், சந்திரபிம்பம்போன்றவதனமும், கார் மேகம்போல் கறுத்து மயில் தோகைபோல் அடர்ந்து நீண்டு, குழைந்து மிருது வாய்ந்த கூந்தலும், அடிக்கடி புன்னகை கொள்ளுங்கால் மாதுளை விரைகள்போலழகிய பல்வரிசைகளும் கோவைக்கனிபோல் சிவந்த அதரமும் வாய்ந்த பதினெண் வயதுள்ள ஓர் யௌவன மாது இளந்தென்றலால் படபடவென்று துடிக்கும் மெல்லிய பட்டாடையால் தன் தேக அமைப்பையும் வடிவழகையும் தெரிவிக்கின்றவளாய் அன்னம்போல் அடிபெயர்த்து அடிக்கடி மயில்போல மெதுவாகத் தனக்குள்ளே கானஞ்செய்துகொண்டு அவ்வுத்தியான வனத்தில் 'கமலா' வென்ற தன் தோழியுடன் பிரவேசமானாள். இவர்கள் அப் பூஞ்சோலை மத்தியிலுள்ள தாமரைத் தடாகத்தருகே ஓர் பன்னீர் மரத்தடியில் போடப்பட்டதும், பனியால் நனைந்து குளிர்ச்சியுற்றதுமான ஓர் பளிங்குக்கல் மேடையிலமர்ந்து, அக்கேணியில், அப்பொழுதுதான் உதயமாகும் சூரிய கிரணங்களால், காதலன் ஸ்பர்சத்தால் கண்விழிக்கும் காதலிகள் போல தாமரை மலர்கள் விகஸிக்கும் அழகை யானந்தமாய்க் கண்ணுற்றுக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது 'கமலா' என்னும் தோழி மற்றவளை நோக்கி 'அடி மாலினி! ஏது இவ்வளவு சீக்கிரம் எழுந்து தனிமையாக இவ்வனம் வந்தாய். உன் முகத்தைப் பார்த்தால் இரா முழுமையும் துயில் கொள்ளாதவள் போலக் காண்கின்றாயே. என்ன விசேஷம்? ஏதாவது மனக்கலக்கம் கொண்டாயோ?" என்று அன்புடன் இனிமையாய் வினவினாள்.

மாலினி—"அம்மா! ஒன்றுமில்லை. என்ன மனக்கவலை எனக்கு? ஏதோ—" என்று சொல்லிக்கொண்டே முகத்தைத் திடீரென்று திருப்பித் தன் மனவருத்தத்தை யதிக பலவந்தமாயடக்கிக்கொண்டும் அருகிலிருந்த பாரிஜாத மலரைப் பறித்துக் கையிலேந்திக்

கண்களில் ஒற்றிக்கொண்டும் மறுபடி தோழியை நோக்கி "கமலா! இம்மலரின் அழகைக் கவனித்தாயா? இது சாதாரணமாய் நமது நாடுகளில் கிடைப்பதரிதாமே?" என்றாள். அதி புத்திசாலியான 'கமலா' இவ்வார்த்தைகளைக் கேட்டதும், "ஏதோ நமது தோழிக்கு இவ்விஷயத்தைப்பற்றிச் சம்பாஷிப்பதில் பிரியமில்லை. ஆதலால், அதை மறைக்கவெண்ணியே, மலரைப்பற்றி வினவுகிறாள்" என்று உணர்ந்து "மாலினீ! ஆமாம் இஃது இந்நாட்டிலகப்படக்கூடியதன்று. இது ஹிமயமலை வனப்பிரதேசங்களில் ஏராளமாய் உற்பத்தியாகின்றதாம். இந்த ஜமீன் திவான் ராஜாராம் அவர்களுக்கு மலர் வகைகளிலதிகப் பிரியமிருப்பதால் இதை யெவ்வளவோ பிரயாசைப்பட்டு மாதிரிக்காக வளர்க்கின்றனராம்" என்றாள்.

மாலினீ:—"கமலா! இவ்வழகிய மலர்கள் நிர்மாநுஷ்யமான ஹிமயமலை வனங்களில் உற்பத்தியாவதென்றால், அவைகளின் ஜன்மம் என்ன பலனடையும்? அவைகளினருமையை யாரறிவார்"?

கமலா:—மாலினீ! நீ சொல்லுவது மெய்யே.

காட்டினில் மலரும் பூக்கள் காதலன் கூடி வாழா
நாட்டினன் மங்கை போல நலமற்று வாடு மன்றோ!

என்று கவிகள் கூறியபடி, தக்கபருவத்தில் தன் மனத்துக்கிசைந்த காதலனைக்கூடி வாழாத யுவதிகளின் கதியைப்போல, இம்மலர்களின் ஜன்மமும் பலனற்றதாகவே அமையும்" என்றாள்.

இவ்வார்த்தைகளைக் கவனித்த மாலினி திடுக்கிட்டுத் தன்முன்றானையால் தன் முகத்தை மறைத்துக்கொண்டு தன்னையறியாமல் விம்மி, விம்மியழ ஆரம்பித்தாள்.

கமலா தான் ஏதோ புத்தியீனமாய், மாலினிக்கு வீண் வருத்தமுண்டுபண்ணிவிட்டதாயுணர்ந்து, அன்னவளைத் தன் மார்புமேல் சாய்த்துத் தன் ஆடை நுனியால் அவள் முகத்தைத் துடைத்து "அம்மா! மாலினீ! ஏனடியம்மா, திடீரென்று வருத்தப்படுகின்றாயே? உன் சோகத்துக்கு யாது காரணம்? பெண்புத்தியால் நான் ஏதாவது பிதற்றிவிட்டேனோ? என்னை மன்னித்துக்கொள்ளடி

யம்மா! என் முகத்தைப்பார். என்னுடன் இனிமையாய் ஓர் வார்த்தை பேசேன்" என்று தீனமாய் இனியகுரலுடன் பிரார்த்தித்தாள்.

தோழி வருந்துவதைக் கவனித்த மாலினீ தலைநிமிர்ந்து கமலாவின் முகத்தையன்புடன் நோக்கி மந்தஹாஸத்துடன் "கமலா! ஒன்றுமில்லை. நேற்றிரவு ஓர் கனவுகண்டேன். அதை நினைத்ததும்

கமலா:—"அதென்ன கனவு?—என்னிடம்—"

இவர்களிவ்வாறு ஸம்பாஷித்துக்கொண்டிருக்கையில், இளஞ்சூரிய பிம்பம்போன்ற முகவிலாஸமும், பொன்னிறமான மேனியும், அப்பொழுதுதான் பிரவேசிக்கும் யௌவனபருவத்தைக் குறிக்கும் கறுத்து வளர்ந்த இளமீசையும், படர்ந்த மார்பும், உருண்டு திரண்டு முழங்கால்வரை தொங்கும் அழகிய புஜங்களும், வாய்ந்து பாதாதிகேசம் வரை பருவத்துக்கும் காலத்துக்கும் தன் அந்தஸ்துக்கும் தக்கபடியணிந்த உடையும், தலையில் மைசூர்த் தலைப்பாகை தரித்து, அரையில் உடைவாள் துலங்கச் சுமார் 22 வயதுள்ள யௌவன புருஷனொருவன் கம்பீரமாய் அவ்வுத்தியானவனத்தில் பிரவேசித்து நம்முடைய கதா மாதர்களின் முன் நின்றான்.

அன்னவர்கள் சற்று திடுக்கிட்டெழுந், கமலா அருகிலிருந்த ஓர் மலர்ச்செடியின் பின் மரியாதையாய் மறைந்தாள். மாலினியோ ஒன்றும் சொல்லத்தோன்றாமல் சற்று பிரமித்து நின்றாள். மறுபடி வந்தவனை நோக்கி "மாதவ! ஏது விசேஷம்? இவ்வதிகாலையில்? இவ்விதமான ராணுவ உடையுடன் ஏதோ சண்டைசெய்யப் புறப்பட்டவன் போல் விளங்குகின்றாயே!" என்றாள்.

மாதவன்:—"அம்மணி!—"

மாலினி:—"ஆஹா! என்ன மாதவ! என்னை 'அம்மணி' யென்றழைக்கின்றாயே. கண்ணே யென்றும், பெண்ணே யென்றும், மாலினீ யென்றும் அன்புடன் இனிமையாயழைப்பாயே? ஏது இவ்வாறு எனக்கு 'அம்மணிப்பட்ட' மளித்தாய்? நான் ஏதாவது உன் மனம் வருந்தும்படி பெண் பேதமையால் செய்துவிட்டேனோ?"

மாதவன்:—மாலினி! அப்படியொன்றுமில்லை. நான் பால்ய முதல் உன் தகப்பனாருடைய ஸம்ரக்ஷணையிலிருந்து அவருடைய தயவாலிவ்வளவு பதவிக்குக் கொண்டுவரப்பட்டவன். நான் உண்ணும் அன்னம் உன் தகப்பனாரைச் சேர்ந்ததே. நீயும் உன் தமயனும் என்னிடம் சகோதரர் போல அன்பு பாராட்டி நேசித்து வந்திருக்கிறீர்கள் ஆயினும்,

மாலினி:—"ஆ! மாதவா! நீ சொல்லுகிறபடி இவ்வளவு நேசமாய் நாம் வாழ்ந்துவரும் நாளில் திடீரென்று உன் மனம் பேதிக்கும்படி என்ன காரணம் நேரிட்டது? யாராவது உன்மனம் புண்பட ஏதாவது செய்ததுண்டா?"

மாதவன்:—"மாலினி! அப்படியொன்றுமில்லை. ஆயினும், புருஷனாய்ப் பிறந்தவன் எவ்வளவு காலந்தான் பிறர்கை யெதிர்பார்த்துப் பிழைப்பது? எனக்கும் இப்பொழுது 22-வயதாகின்றது. இக்கத்தியும் இக்கையில் பலமும் உள்ளவரை நான் எப்படியாவது காலங் கழித்துக்கொள்ளுவேன். இப்பொழுது நமது ராஜாங்கத்தார் ராணுவம் சேகரிக்கின்றார்களாம். நானும் அதில் சேர்ந்து என் வயிற்றுப் பாட்டைக் கழிக்கலாமென்று எண்ணுகிறேன்".

மாலினி:—(கண்ணீர்ததும்ப) "மாதவ! மாதவ!! ஐயோ! எவ்வளவோ அன்புடன் இதுவரை இணைபிரியாது வளர்ந்துவந்த என்னை—எங்களைப்— பிரிய உன்மனம் எவ்வாறு துணிந்தது! என் மனம் துணியவில்லையே.! ஆண் நெஞ்சம் கல்லோ?" என்று முகத்தில் கைவைத்து விம்மி விம்மி யழுதாள்.

மாதவன்:—(மனஞ்சகியாதவனாய் அவளைச் சமாதானம்செய்யச் சற்றுக் கிட்டநெருங்கி மறு ஆலோசனையின்பேரில் மறுபடி பின்னடைந்து நின்றுகொண்டு) "ஏன் வருத்தப்படுகிறாய்? உனக்கென்ன குறைவு? என்பேரில் உங்களுக்குள்ள அன்புக்கு இதுவரை யாதொரு குறைவுமில்லை. ஆயினும்—"

மாலினி:—"பின்னை, என்ன காரணம்?"

மாதவன்:—அம்மணி!—"

மாலினி:—"ஐயோ! ஏன் அவ்வாறு அழைத்து என் மனதைப் புண்ணாக்குகின்றாய்? ஏதோ, உன் மனதில் வேதனை செய்துகொண்டிருக்கின்றது. அதைச் சொல்லமாட்டாமல் தியங்குகின்றாய். உன் விசுவாஸத்துக்கு நான் அவ்வளவு பாத்திரமில்லையா? சொல்லேன்! சொல்லேன்! ஐயோ! உன்முகம் வாடுகின்றதே. மாதவ! உன் துக்கத்துக்குக் காரணமென்ன—" என்று அன்புடன் இனிமையாய் மாதவனைநோக்கி வினவினாள்.

மாதவன்:—தன் இரு கரதலங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு, விம்மி விம்மி யழுதுகொண்டே "மாலினீ! நீயோ ஓர் பெரிய ஜமீந்தார் புதல்வி. நானோ தாய் தந்தை பேர்கூடத்தெரியாத ஓர் அநாதை. உங்கள் தயவால் இவ்வளவு காலம் உங்களுடன் வளர்ந்து விட்டேன். என் உதர நிமித்தம் எங்கேயாவது சென்று காலங்கழிக்கவேண்டாமா?"

மாலினி:—"மாதவ! ஐயோ! இன்னும் மறைக்கிறாயே. உன் மனதிலுள்ளதை முழுதும் நீ சொல்லவில்லையே! மாதவ! என்னிடம் சொல்லலாகாதா?"

மாதவன்:—"மாலினி! சரி. எனக்கு இவ்விடத்தில் என்ன இருக்கின்றது?"

மாலினி:—"மாதவ! ஏன் அப்படிக் கூறுகின்றாய்? இதுவரை நீ இவ்விடமிருப்பதற்கு எது காரணமோ அதற்கு இப்பொழுது ஏதாவது குற்ற நேர்ந்ததோ?"

மாதவன்:—இல்லை!. ஆனாலும்—மாலினி—ஆ!——அம்மணி!"

மாலினி:—மாதவ! என்ன! ஏன் "அம்மணி!" "அம்மணி!" என்றழைக்கின்றாய்?"

மாதவன்;—"மாலினி! தாங்களோ ஓர் பெரியஜமீந்தார் மனைவியாகப்போகின்றவர்கள்—ஜமீந்தாரிணியாக!. நானோ?—கேவலம்"

மாலினி:—"ஹா! மாதவ! என்ன சொன்னாய்?"

மாதவன்:—"ஆமாம். இம்மணிபுரம் ஜமீந்தாருக்கு உன்னை மணம்புரிவிப்பதாய் ஊரெல்லாம் வதந்தியாயிருக்கின்றதல்லவா?"

மாலினி:—“மாதவ! மாதவ!! மறுபடி இக் கர்ணகடூரமான வார்த்தைகளை என்னிடம் சொல்லாதே. வேண்டேன்! வேண்டேன்! எனக்கு ஒருக்காலும் விவாஹம் வேண்டாம்!. மாதவ! மாதவ!! என் மாதவனையும் என்னையும் பிரிக்கக்கூடிய எவ்வித முயற்சிக்கும் நான் இடங்கொடேன்” என்றுசொல்லி மான்போல் துள்ளி மாதவன் மேற் பாய்ந்து அவனைக் கட்டிக்கொண்டு விம்மிவிம்மி அழ ஆரம்பித்தாள்.

மாதவனும் தன்னடங்காத் துயரத்தை யடக்கிக்கொண்டு மாலினியை மார்போடணைத்து அவள் கண்களைத் துடைத்து அவள் முகத்தை யன்புடன்நிமிர்த்தி நோக்கி“என் கண்மணி! என் அன்பே! மாலினி!” என்று இன்பமொழிகள் கூறி யவள் கன்னங்களைத் தன் கரதலங்களால் தடவி முத்தமிட்டான்.

மாலினியும் தேகபரவசையாய் மாதவன் மார்பில் அப்படியே சாய்ந்தாள்.

“வானுக நின் றின்ப மழையாய்ப் பொழிவதுபோல்
தானுகவே பொழியும் தையலரின் மெய்க்காதல்”

---

## இரண்டாம் அத்தியாயம்.

---

### கஷ்ட காலம்.

### Evil Day.

அன்பெனும் இன்பக்கடலில் ஆழ்ந்து தன் நினைவற்றுத் தேக பரவசர்களாய், பூங்கொடியும் பாரிஜாத விருக்ஷமும்போல் ஒருவரை யொருவர் தழுவி நமது கதாநாயகர்களிருக்கும் இந்நிலைமையில், ஏக தாளக்ரமமாய் ‘கல், கல்’ என்ற இரும்புவளையற் சத்தமும், அதை யனுசரித்து, ‘தர்மமே நிச்சயம்’, ‘தர்மமே நிச்சயம்’ என்ற வாக்ய மும் சற்றுதூரத்திற் கேட்டன. திடுக்கிட்டு மாலினியும், மாதவனும், சற்றுப் பிரிந்து நின்றார்கள். இதற்குள் தலைநிரம்ப நரைத்த கேச

பாரமும், முகத்தில் வளர்ந்து நரைத்து மார்பின்மேல்துவளும் தாடியும், தலையிற்கட்டிய காவித்தலைப்பாகையும், கழுத்துமுதல் கால்வரை தரித்த ஒரே காவிச்சட்டையும், இரும்புவளையங்கள் கோக்கப்பட்ட கைத்தடியால் தன் நடைக்கிணங்கத் தரையில் தட்டி 'கல்,' 'கல்' என்று சத்தம் செய்துகொண்டும் அதற்கிணங்க 'தர்மமே நிச்சயம்,' 'தர்மமே நிச்சயம்' என்று தாளக்ரமம் தப்பாது உச்சரித்துக்கொண்டும் சுமார் 65 வயதுள்ள ஓர் பரதேசி ப்ரத்யக்ஷமாய் நமது கதா நாயகர்கள் முன் நின்றார். 'நாரியர்க்கழகு நாணமும் அன்பும்' என்ற பழமொழிப்படி நமது மாலினீ மாதவனிடமிருந்து சற்று விலகித் தலைகுனிந்து கடைக்கண்களால், நமது பரதேசியை உற்றுப்பார்த்துக்கொண்டு நின்றாள். மாதவனும், கம்பீரமாய்ப் பரதேசியின் முகத்தை யுற்றுநோக்கி "இவர் யாரோ ஒரு மகான் போற் காணப்படுகிறார். அன்று தினகரனும் நானும் வேட்டையாடின பிறகு களைப்பாறிக்கொண்டு, சிற்றாற்றுக் கரையோரமாயுள்ள ஆலமரத்து நிழலில் இருக்கும்பொழுது இவர் இவ்விதமாகவே ப்ரத்யக்ஷமானார். இவர் கருத்தென்னவென்று தோன்றவில்லையே." என்று பலவாறு தன் மனதுக்குள் ஆலோசித்துக்கொண்டிருக்கையில்,

பரதேசி:—(குறிப்பாய் மாதவனைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு)"குழந்தைகளே! சந்தோஷம்! நிரம்ப சந்தோஷம்!! உங்கள் இஷ்டப்படி மணம்புரிந்து நீடூழிகாலம் வாழ்வீர்கள். "தர்மமே நிச்சயம்!" தெய்வசங்கல்பமும் இதுதான். "தர்மமே நிச்சயம்" என்று வாக்களித்து ஓர் சிவப்புப் பட்டுப்பையினின்றும் கொஞ்சம் விபூதியெடுத்து மாதவன் நெற்றியிலும் மாலினி நெற்றியிலும் இட்டு மறுபடி குழந்தைகாள்! உங்களுக்கு ஒருகுறைவும் வராது. தெய்வ ஸம்மதமும் இதுவே" என்றார்.

மாதவன்:—"ஸ்வாமி! நாங்கள் பாலியர்கள். தங்களைப்போலொத்த மகான்களை உபசரிக்கு விதமறியாதவர்கள். நாங்கள் அபசாரத்துக்கு ஆளாய்விடாமல் எங்களைத் தாங்கள் மன்னித்தருள வேண்டும்" என்று பயபக்தியுடன் கேட்டான்.

பரதேசி:—"குழந்தாய்! நீ நல்லபிள்ளை! உன் முகத்தில் ராஜலக்ஷணங்கள் அமைந்திருக்கின்றன. "தர்மமே நிச்சயம்." நீ நல்ல

பிள்ளை. மூத்தோர்சொல் வார்த்தை யமுதம். நீ சொன்னபடி கேட்பாய். எங்கே உன் கைத்தலத்தைக் காட்டு" எனவே மாதவன் உள்ளங்கையைக் காட்டினான். அதைப் பரதேசி சற்று நுட்பமாய்க் கவனிப்பதுபோல் பார்த்துவிட்டு, குழந்தாய்! உன் சட்டையை கழற்று. நீ நல்லபிள்ளை. புத்திசாலி. பெரியோர்சொல்லைத் தட்ட மாட்டாய். எங்கே சட்டையை அவிழ்" என்று மறுபடி கேட்டார்.

மாதவன் மந்திரத்தால் கட்டுண்ட நாகம்போலத் தன் நினைவற்று, பரதேசியின் இனிய சொற்களால் மதிமயங்கி யந்திரப்பாவை போலத் தன் சட்டையைக் கழற்றியெறிந்தான். உடனே பரதேசி மாதவனுடைய இடது விலாப்புறம் பார்த்து அதிலுள்ள 3 அங்குல நீளமுள்ள ஓர் வ்ரணத்தழும்பையே சற்று நேரம் கவனித்துவிட்டு, குழந்தாய்! உன் சட்டையை யணிந்துகொள். நீ நல்ல பிள்ளை. புத்திசாலி, 'தர்மமே நிச்சயம்' எனவே மாதவன் மறுபடி சட்டையை மாட்டிக்கொண்டான்.

பரதேசி:—"குழந்தாய்! உன்னிடம் ராஜ லக்ஷணங்களமைந்துள்ளன. நீ ஓர் ஸமஸ்தானத்து—".

மாதவன்:—"ஸ்வாமி· தாங்கள் வாக்களிப்பது இன்னதென்று எனக்குத் தோன்றவில்லை. நானோ தாய் தந்தையர் பெயர்கூடத் தெரியாத ஓர் அநாதை. இதோ நிற்கின்ற இம்மங்கையின் பிதா, பாலூர் ஜெமீந்தாரவர்கள் கிருபையால் நான் இதுவரை வளர்க்கப் பட்டு—".

பரதேசி:—முகமலர்ச்சியுடன் "அப்பனே! நீ கவலைப்படவேண்டாம். பாலூர் மகாராஜாவின் யோக க்ஷேமங்கள் எவ்வாறு இருக்கின்றன?"

மாதவன்:—"ஸ்வாமி! நல்லோர்க்கு இது காலமல்ல! பரமதயாளுவான அம்மகாராஜன் நாடு துறந்து இம்மணிபுர மகாராஜாவின் கைபார்த்துப் பிழைக்கும்படி நேரிட்டிருக்கிறது". (மாலினியை நோக்கி) மாலினி! நான் ஏதாவது மனம் வருந்தக் கூறினேனோ? (மறுபடி பரதேசியை நோக்கி) ஆயினும் இம்மணிபுர ராஜனும் பரம தயாளுதான்—".

பரதேசி:—சிவ! சிவ! (காதுகளில் அடித்துக்கொண்டு) நாராயண! நாராயண! போதும், போதும்!—"

மாதவன்:—(திடுக்கிட்டு) "ஸ்வாமி! என்ன! அப்படி உத்திரவாகிறது? இம்மாலினியை அம்மகாராஜனுக்கு மணம்புரிவிப்பதாக—"

பரதேசி:—(காதுகளில் அடித்துக்கொண்டு) "சிவசிவா! சிவசிவா!" "கெடுவான் கேடு நினைப்பான்!" "கெடுவான் கேடு நினைப்பான்!!" "தர்மமே நிச்சயம்!" "தர்மமே நிச்சயம்!" என்று உரக்க உச்சரித்துக்கொண்டு மின்னல் பாய்வதுபோல ஓடி மறைந்தார்.

நமது கதா நாயகர்கள் அப்படியே ஸ்தம்பம்போல் ப்ரமித்து நின்றார்கள். சற்றுநேரங்கழித்துத் தங்கள் ப்ரக்ஞை தெளியவே இதுவரை நடந்ததெல்லாம் ஓர் கனவுபோல் தோன்றின. எதிரே நின்ற பரதேசியைக்காணோம். மணிபுரம் ஜமீந்தாரோ தங்கள் மேல் எவ்வளவோ அன்பும் ஆதரவுமாய் இருந்துவருகிறார். அவர் மேல் குற்றம் கற்பிக்க இதுவரை யாதொரு காரணமும் தென்படவில்லை. அப்படியிருக்க இப்பரதேசி ஏன் இவ்வாறு அபவாதம் கூறவேண்டும்? ஒருவேளை இப்பரதேசி சித்தப்பிரமை கொண்டவரோ? அல்லது ஜமீந்தாருக்கும் தனக்கும் உள்ள ஏதாவது இயற்கை விரோதத்தால் இவ்வாறு அவரைப்பற்றி அவதூறு கூறிச்செல்லுகின்றாரோ?" என்று ஒன்றும் தோன்றாமல் மாலினியும் மாதவனும் பரஸ்பரம் பார்த்துக்கொண்டு அப்பளிங்காசனத்தின்மீது மறுபடி நெருங்கி உட்கார்ந்து ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள்.

இப்பிரபஞ்சத்தின் அமைப்பையும் அதன் மாயா விலாஸங்களையும் ஆராய்ச்சி செய்வோமாகில், அவைகள் பெரும்பாலும் இரு வகுப்பாக அமைந்திருக்கின்றன. இவ்வைம்புலங்களாலறியக்கூடியதும் பஞ்சபூதங்களாலமைக்கப்பட்டதுமான ஸகல சராசரங்களுடன் கூடிய உலகமும், இவ்வைம்புலங்களாலறியக்கூடாததும், ஆனால், அநுமான ப்ரமாணங்களால் ஊகிக்கத்தக்கதும் தன்னறிவால் மாத்திரம் அறியக்கூடியதுமான மனமும் ஆகிய இவ்விரண்டுமே பெரிய தத்துவங்களாய் விளங்குகின்றன.

பஞ்ச பூதங்களாலமைந்த உலகமானது பிரகிருதி விதிகளுக் குட்பட்டு நடக்க இம்மனமெனும் அதிசயதத்துவமானது,யாதொரு விதிக்குமகப்படாது பற்பல விதமாய் பிரபலித்துக்கொண்டிருக்கின் றது. ஒருவன் மனதிலுள்ளது அவனால் மாத்திரமறியக்கூடிய தேயொழிய பிறரால் அறியக்கூடியதன்று.

"அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்றபடி ஒருவன் மனோ பாவங்களை யவன் நடத்தையால் மாத்திரம் பிறர் அனுமானிக்கக் கூடுமேயல்லாது ப்ரத்யக்ஷமாய் அறியமட்டார்கள். அவ்வனு மானங்கள் பெரும்பான்மை பிசகாகவே ஏற்படுகின்றன. சிரித்துச் சிரித்துக்குடியைக் கெடுக்கும் வஞ்சகரின் நெஞ்சத்தை யார்தான் நன்கு அறியக்கூடியவர்?

பரதேசியின் ஸம்பாஷணையைக் கவனித்துக்கொண்டிருந்த நமது கதாநாயகர்கள் மதிமயங்கி ஒன்றும் தீர்மானிக்கத் தோன்றாத வர்களாய் வீற்றிருக்கும் இந்நிலைமையில் சுமார் 21 வயதுள்ள ஓர் யௌவன புருஷன் வேட்டை யுடை தரித்து இடுப்பில் உடைவாள் தொங்கக் கையில் துப்பாக்கி யேந்திக்கொண்டு ஸிம்மக்குட்டிபோல் கம்பீரமாய்ச் சோலையில் பிரவேசித்து "மாதவா! மாதவா!! வேட் டையாட வரவில்லையா!" என்று அழைத்துக்கொண்டே அப்பளிங் காசனத்தருகே வந்து நின்றான். நமது கதா நாயகர்கள் திடுக்கிட் டெழுந்து பிரிந்து நின்றார்கள். மாலினியின் நெஞ்சும் மார்பும் பட படவென்று துடித்தன. பயத்தாலும் நாணத்தாலும் தலை குனிந்த வளாய் அப்பன்னீர் மரத்தண்டை விலகினாள். மாதவனும் சித்தப் பிரமைகொண்டவன்போல் ஒன்றும் சொல்ல வாயெழாமல் வந்தவன் முகத்தை நோக்கமாட்டாமல் வெட்கித் தலைகுனிந்து நின்றான்.

இவ்விஷயங்களெல்லாம் கவனித்த அந்த யௌவன புருஷனது தேகமெலாம் நடுங்க ஆரம்பித்தது. கண்கள் சிவந்தன. அவன் இளமீசை படபடவென்று துடித்தது. வீராவேசமும் கோபா வேசமும் கொண்ட அவ்வாலிபன் தனது உடைவாளின் பிடியில் கையைச்செலுத்தி அதை உறையினின்றும் சற்று உயர்த்திக் கொண்டு கோபாவேசத்துடன் மாதவனை நோக்கி "அடே பாவி! அடே துரோகி! அடே சண்டாளா! அடே துஷ்டா! அடே உண்ட வீட்டுக்கு இரண்டு நினைத்த பாதகா!—"

மாதவன்;—(தலை நிமிர்ந்து) "தினகரா!—".

தினகரன்;—"அடே சண்டாளா! இனி யென்னை யிவ்வாறு அழைக்கவேண்டாம்! அடே குலங்கோத்ர மறியாத அநாதையான உன்மேல் இரக்கங்கொண்டு பரமதயாளுவான என் பிதா உன்னை இதுவரை வளர்த்துவந்ததற்கு—நன்றிகெட்டபாதகா! ராஜவம்சத்தி லுதித்த என் சகோதரி—குழந்தை—ஒன்றுமறியாப் பேதையாகிய—என் மாலினியை உன் மோகவலைக்குட்படுத்தி என் வம்சத்துக்கு அபவாதம் உண்டுபண்ணவா எண்ணங்கொண்டாய்?"

மாதவன்:—"தினகரா!"

தினகரன்:—"சீ! துஷ்டா! இனி அவ்விதம் என்னை அழைக்காதே! அடே உன் பதவிக்குக்காரணம் யாரடா? அவர் அன்னத்தை யுண்டு உதியமரம்போல் நீ வளர்ந்ததுமல்லாது, அவர் அருமைப் புதல்வியின் கற்பையழிக்கவும் கருதினையோ? துஷ்டா! உன்னை இப்பொழுதே இவ்வுடைவாளால் இரண்டு துண்டாக்கிவிடுகின்றேன்" என்று கோபாவேசத்துடன் கத்தியை உருவி கிறு கிறுவென்று சுழற்றிக்கொண்டு மாதவன்மேல் சீறிப்பாய்ந்தான்.

மாதவன் சற்று பின்னடைந்து தன்னைக் காத்தற்பொருட்டு, தன் உடைவாளையும் உருவிக் கையிலேந்தி தினகரனைத் தகைந்து நின்று, "தினகரா! சற்று பொறு. உன் பலத்துக்கு நான் இளைத்தவனல்லன். நீ இதுவரை பேசிய நிந்தைக்காக உன்னை இவ்வாளுக்கிரையாக்கியிருப்பேன். ஆயினும் என் தாய் தந்தையரிலும் அதிகமாய் அன்பு ஆதரவுடன் என்னை வளர்த்துவந்த உன் பிதாவின் புதல்வன் நீ ஆதலாலும், நாமிருவரும் இதுவரை சகோதரர்போல் வேற்றுமையின்றி வளர்ந்துவந்ததாலும், நீ என்னிலும் சிறுவனானதாலும், கோபத்தால் நீ உச்சரித்த அவமரியாதைகளை மன்னித்தேன்—"

தினகரன்:—"என்ன!—நீ—என்னை—மன்னிப்பது!—".

மாதவன்:—(மனோதைரியத்தோடு பொறுமையாய்) "தினகரா! நீ என்னகாரணம்பற்றி இவ்வாறு கோபங்கொண்டாய்? உன் கோபத்துக்கு நான் எம்மாத்திரம் காரணமென்றாவது நீ அறிந்தாயா?

அஃதறிந்த பிறகல்லவோ உன் பலத்தைக் காட்டவேண்டும்." என்று கம்பீரமாய்க் கூறினான்.

தினகரன் துக்கத்தில் மூழ்கித் தன் கத்தியை மறுபடி உறையில் போட்டுவிட்டுப் பிரமித்து ஏதேதோ ஆலோசித்துக்கொண்டு நின்றான்.

இக்கொடிய காட்சிகளைக் கண்ணுற்ற மாலினி ஓடிவந்து தினகரன் கால்களில் வீழ்ந்து, கைகளை உயர்த்தி "அண்ணா! மன்னிக்க வேண்டும். மாதவன்மேல் ஒரு குற்றமுமில்லை. ஐயோ! நாமெல்லாம் எவ்வளவு அன்புடன் வாழ்ந்து வந்தோம்!. அவ்வன்புக்குக் குறைவு காலமும் வந்துவிட்டதா? அண்ணா! அண்ணா! அண்ணா!!" என்று தீனமாய்த் தினகரனைக் கெஞ்சிப் பிரார்த்தித்தாள். தினகரன் ஒன்றும் சொல்லத் தோன்றாதவனாய்த் திடீரென்று திரும்பி 'வஸந்த விலாஸ்'மென்ற தன் அரண்மனை நோக்கிச் சென்றான்.

இதற்குள் மாலினியும் துக்கத்தால் மயங்கி மூர்ச்சையடைந்தவளாய் அம்மரத்தடியில் சாய்ந்தாள். கமலா ஓடிவந்து மாலினியின் முகத்தில் தண்ணீர் தெளித்து, ஓர் தாமரையிலையால் விசிறிச் சற்றுக் களைப்பாற்றிப் பிறகு அவளையழைத்துக்கொண்டு அரண்மனை நோக்கிச்சென்றாள்.

மாதவனும், இவ்வதிகாலையில், இவ்வளவு சீக்கிரத்தில், இவ்வளவு காரியங்கள் நடந்ததை யாலோசித்துக்கொண்டு, "ஏதோ இன்று விடிந்தவேளை நல்ல வேளை இல்லை. ஒன்றின்மேலொன்றாய் ஆபத்துக்கள் நேரிடும்போல் தோன்றுகின்றது. என்ன நேரிடப்போகிறதோ?!" என்று பலவாறு சிந்தித்துக்கொண்டு தன் நினைவற்றுச் சூத்திரப் பாவை போல அந்தச் சோலையை விட்டு வெளியே சென்றான்.

எரிநிகர் வெகுளி பொங்க மயக்க வந்தெய்து மெத்தத்
தெரிபவை சிதையு முள்ளந் தெரிந்தவை சிதைந்த போதே
யுரிய தன்னுணர்வு மாயு முணர்வு மாய்ந் தொழிந்தவாறே
யரிய வென்றறிஞர் பேசு மனைத்துமாய்ந் தொழியு மன்றே

—பகவத்கீதை.

## மூன்றும் அத்தியாயம்.

---

### பூர்வ கதை.

### Old Tale.

இச்சரித்திரத்தை வாசிக்கும் நமது நண்பர்கள் இனி இக்கதா நிகழ்ச்சியைத் தெளிவாய் எளிதில் அறிந்து அனுசரிக்குமாறு இதன் பூர்வ விருத்தாத்தங்களைச் சுருக்கமாய் இங்கு எழுதுகின்றோம். இவைகள் பெரும்பாலும், அக்காலத்துப் பத்திரிகைகளினின்றும், அக்காலத்து ப்ரத்யக்ஷ ஸாக்ஷிகளாயிருந்த பெரியோர்களாலும் இன்னும் பலவித ஆதாரங்களைக்கொண்டும் எழுதப்பட்டு இருக்கின்றன.

பாண்டிய அரசர்க்குப் பிறகு இந்நாட்டை யரசாட்சிசெய்து வந்த நாயக்கர் வம்சத்தரசர்களுள் முதல்வராகிய விசுவநாத நாயக்கர் காலத்தில், ராணுவம் முதலான அரசாட்சி சௌகரியத்தின் பொருட்டு இப்பாண்டிய நாடானது 72 பாளையப்பட்டுகள் அல்லது ஜமீன்தாரிகளாகப் பிரிக்கப்பட்டு, வருஷந்தோறும் ஒவ்வொரு ஜமீன்தாரும் குறிப்பிட்ட கப்பம் செலுத்தி வருவதுமல்லாமல், யுத்தம் நேரிடும் காலத்தில் குறிப்பிட்ட சேனையும் உதவிபுரிய வேண்டுமென்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இம்மணிபுரம் ஜமீன்தாரியானது மேற்கூறிய 72 பாளையப்பட்டுகளுள் ஒன்று.

இந்த ஜமீன்தாரியை ஆண்டுவந்தவர்கள் பெரும்பான்மை தவறாது கப்பம் செலுத்திவந்ததுமன்றி விசேஷமாய் முறையே நாயக்கர் ஸமஸ்தானம், கர்நாடக ஸமஸ்தானம், ஆங்கிலேய ராஜாங்கம் இவைகளிடத்தில் பக்தியுள்ளவர்களாய், தங்கள் குடிகளுக்கும் யாதொரு குறைவும் செய்யாது தங்கள் நாட்டை யாண்டுவந்தனர்.

இப்பொழுது நமது கதாகாலத்தில் இந்நாட்டின் ஜமீன்தார் கிருஷ்ணராஜ்' என்பவர். இவருக்குச் சுமார் 40 வயதிருக்கலாம். இன்னும் விவாகமாகவில்லை.

நமது சரித்திரகாலத்துக்குச் சுமார் 22 வருஷங்களுக்கு முன், இந்நாடானது ப்ரகிருத ஜமீன்தாரின் தமையனான 'ராமராஜ்' என்பவரால் அரசாளப்பட்டு வந்தது. 'ராமராஜ்' கிருஷ்ணராஜ்' என்பவர்களின் சகோதரர் வாத்ஸல்யமானது உலகில் நிகரற்றதாயிருந்தது.

'ராமராஜ்' தன் மனதுக்கிசைந்த மனைவியை மணம்புரிந்து இன்பமாய் வாழ்ந்துவரும் நாளில் தெய்வகிருபையால், கற்பிற்சிறந்த அம் மாதுசிரோமணி கர்ப்பந்தரித்துச் சரியானகாலத்தில் ஓர் ஆண் சிசுவைப் பெற்றாள். சென்னையில் கல்விபயிலச் சென்றிருந்த 'கிருஷ்ணராஜா'வும் இச் சந்தோஷ சமாசாரம் கேட்டுத் தனது நகர் வந்து அக் குழந்தையினிடத் தன்புபாராட்டிச் சிறிதுகாலம் தனது தமையன் முதலானவர்களுடன் ஸந்தோஷமாய்க் காலங்கழித்து மறுபடி திரும்பிச் சென்றார்.

இக்காலத்தில் திவானாயிருக்கும் ராஜாராம் என்பவரே அக்காலத்திலும் திவானாயிருந்தார். அவருக்கு மணிபுரம் மகாராஜாவினிடத்தில் இருந்த பக்தி விசுவாஸமும், அன்பும், நற்சிந்தையும் அளவிடக்கூடாததாயிருந்தது.

முன்கூறியபடி 'ராம்ராஜாவும்' அவர் இன்ப மனைவியான மகாராணியும், புதிதாய்ப்பிறந்த சிசுவும் அதிக சந்தோஷமாய் வாழ்ந்து வந்தார்கள். சிசுவுக்கு ஆறு மாதமிருக்கலாம். ஒருநாள் மாலையில் ராமராஜாவும் ராணியும் குழந்தையைத் தாதியிடம் ஒப்புவித்து விட்டுப் பரிவாரம் யாதொன்றுமின்றி ஏகாந்தமாய் ஐவர்மலைச் சார்பிலுள்ள கிருஷ்ணன் கோவில் உத்ஸவத்துக்குச் சென்றிருந்தனர். இரவு 10 மணிநேர மிருக்கலாம். அரண்மனையில் தாதியிடம் ஒப்புவிக்கப்பட்ட அருமைக்குழந்தை 'மாந்தம்' என்னும் வியாதியால் அதிகக் கஷ்டப்படுவதாய் திவானிடமிருந்து அவசர ஸமாசாரம் வரவே ராம்ராஜாவும் ராணியும் அதிக வருத்தமடைந்து பரபரப்புடன் அலறியடித்துக்கொண்டு, இருட்டைக்கூடப் பொருட்டாயெண்ணாது காட்டு மார்க்கமாய் அரண்மனைநோக்கித் தனியே ஸாரத்தியம் செய்துகொண்டு திரும்பி வந்தார்கள். அரண்மனைக்குச் சற்று தூரத்தில் அவர்கள் சில திருடர்களால் எதிர்க்கப்பட்டுக் கொலையுண்டார்கள். அவர்கள் மேல் அணிந்திருந்த ஆபரணங்களும் காணு

மற்போயின. அரண்மனையில் சிசுவும் இறந்துபோய்விட்டது. மறு நாள், இறந்துபோன இம் மூவர்களுக்கும் ராஜ மரியாதையுடன் ஸம்ஸ்காரங்கள் நடந்தன.

இத்துக்க ஸமாசாரம் கேட்ட கிருஷ்ண ராஜா, தன் தமையன் மேலுள்ள அன்பால் அன்னவர் பிரிவாற்றாமல் உருகி உடனே மணிபுரம் வந்துசேர்ந்தார். "ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தில்?" உன்னி உன்னியழுதாலும் உயிரைக்கொண்டு வரலாமா? இறந்தவர்களுக்குப் பின் உத்தரக் கிரியைகள் நடந்தன. கிருஷ்ண ராஜா தான் தன் தமையன் மேற் கொண்டிருந்த பக்தி, அன்பு, இவைகளின் ஞாபகச்சின்னமாய் ராம ராஜாவும், ராணியும் கொலையுண்ட இடத்தில் ஓர் சிறு கோவில் கட்டி, அவர்கள் ப்ரதிமைகளையும், சிசுவின் ப்ரதிமையையும் கைதேர்ந்த சிற்பிகளால் நிர்மித்து, அக்கோவிலில் ஸ்தாபனம் செய்வித்தார்.

மனமானது மதத்த குதிரையைப் போன்றது. அதை அறிவெனும் கடிவாளத்தால் அடக்கியாண்டா லல்லது தன் போக்காகத் திமிறிச்சென்று அநேக துன்பங்களை விளைவித்து வரும். அது சிறிது நேரங்கூடச் சும்மாவிராது. எப்பொழுதும் சலித்துக்கொண்டே யிருக்கும். உண்மையான காரணத்தை யறியாவிடினும் ஏதாவதொன்று கல்பிப்பதே அதன் ஸ்வபாவம். "இம்மணிபுரம் கொலை" யின் காரணமும், கொலைநடந்த விதமும், கொலை செய்தவர்களையும் பற்றிப் பலர் பலவிதமாகத் தர்க்கிக்க ஆரம்பித்தார்கள். சிலர், மணிபுரம் ஜமீந்தார்களின் ஜன்மப் பகைவரான கள்ளன் கோட்டைத் தலைவர்களால் இக்கொலை நடந்திருக்கவேண்டும் என்றும், சிலர் "இக்கொலை பகைவரால் நடந்திருக்கமாட்டாது. திருடர்களால் பொருளாசையால் நடந்திருக்கலாமென்றும்," சிலர், "ராஜத்துரோகிகளான சில குடிகளால் நடந்திருக்கவேண்டும்" என்றும் இவ்வாறு பற்பலவிதமாய் ஸித்தாந்தம் செய்ய ஆரம்பித்தார்கள். இக்கொலை விவரம், இவ்விதமாகச் சித்தாந்த நிலைமையிலேயே யிருந்து பழங் கதையாய் மறந்துபோனதேயொழிய யாதொரு விதமான உண்மையும் ருஜுவுக்கு வரவில்லை.

சட்டப்படி கிருஷ்ணராஜா அடுத்த "வார்ஸ்" ஆக ஜமீந்தாரியை யடைந்தவராயினும், தமையனிருந்து ஆளப்பார்க்கக்கூடாத அவ்வளவு துர்ப்பாக்கியனான தான் நேரிலிருந்து ஆள மனமில்லாமல் சென்னையிலிருந்துகொண்டே திவான் ராஜாராம் மூலமாய் ஸமஸ்த காரியங்களையும் நிர்வஹித்து வந்தார். எப்பொழுதாவது ஏகதேசத்தில் வருஷத்துக் கொருதடவை அல்லது இரண்டு வருஷங்களுக் கொருதடவை மணிபுரம்வந்து சிலநாளிருந்து தமையனற்ற ராஜ்யத்தில் மனம்வெறுத்து மறுபடி சென்னைக்குத் திரும்பிவிடுவார். இவருக்கு இயற்கையாகவே உலக இன்பங்களில் வெறுப்பு ஏற்பட்டுவிட்டபடியால், நண்பர்கள் பலவிதமாய்ப் போதித்தும் கேளாது, விவாஹம் இல்லாமலே இருந்துவருவாராயினர். இவ்விதமாக 22 வருஷங்கள் கழிந்தன. நிற்க.

## பாலூர் ஜமீன்.

---

முன் கூறிய மதுரை ஸம்ஸ்தானத்தைச் சேர்ந்த 72 ஜமீந்தாரிகளில் 'பாலூர்' என்பதும் ஓர் புராதன ஜமீன். இப்பொழுது இது திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்திருக்கிறது.

பாலூர் ஜமீன்தாரியை ஆண்டுவந்த, ராஜவம்சத்தில், இச்சரித்திரத்துக்குமுன்னிருந்தவர் வம்சசேகரன் என்பவர். அவர் யாதொரு ஸந்ததியுமில்லாமல் சிறிது காலத்துக்குமுன் இறந்துபோகவே, அவருடைய அடுத்த சகோதரர் குமாரரும், நமது கதாநாயகியின் பிதாவுமான குணசேகரர் அஜ்ஜமீன்தாரியைப் பட்டம்பெற்று நீதி தவறாது ஆண்டுவந்தார்.

இஃதிப்படியிருக்க, மதுரைஜில்லாவில் புதூர் என்னும் கிராமத்தில் 'சிதம்பரம் செட்டியார்' என்றும், 'முத்து செட்டியார்' என்றும் ஜன்மப்பகைவரான இரண்டு செட்டிகள் இருந்தார்கள். அவர்கள் தக்க பணக்காரர்கள். ஒவ்வொருவருக்கும் 30 லக்ஷம் ரூபாய் பெறுமான சொத்துக்களுண்டு. இது தவிர அக்கரைச் சீமையிலும் சுமார் 10 லக்ஷத்துக்கு லேவாதேவியுண்டு. இவர்கள் செல்வத்துக்கும் கௌரவத்துக்கும் தக்கபடி, அநேக 'கோர்ட்டு'களில் 'வ்யவஹாரம்'

வ்யவஹாரங்கள் எப்பொழுதும் நடந்துகொண்டேயிருக்கும். தினசரி ஒரு வியாஜ்யமாவது 'தாக்க'லாகாமல் போனால் நமது செட்டியார்களுக்கு நித்திரை வராது. கொஞ்சகாலத்துக்குமுன் நமது செட்டியார் இருவருக்கும் வைக்கோற்போரில் மாடு மேய்ந்த விஷயமாய் கலகம் முதலானவை நடந்து 'க்ரிமினல்' விவகாரமாய் அது 'ஸீவில்' ஸம்பந்தமானது என்று தள்ளப்பட்டு, மறுபடி 'ஸீவில்' வழியாய் மூன்று 'கோர்ட்டு'வரை சென்று கடைசியாய், சட்ட அம்சத்தில் இடங்கொடாததால் சென்னை 'ஹைக்கோர்ட்'டார் அவர்களாலும் அங்கீகரிக்கப்படமாட்டாமல் போயிற்று. 'ப்ரீவிகௌன்ஸி'லுக்குப் போகத்தக்கதில்லை யென்று சில தக்க 'ஹைக்கோட்டு வக்கீல்கள்' சொன்னபடியால், அது அந்தமட்டில் தவிர்ந்தது. அதில் இருதரப் பினருக்குஞ் சுமார் 2 லக்ஷம் ரூபாய் வரைதான் செலவாயிருக்கும். அந்தக் 'கேஸ்' நடந்த விமர்சையையும், பட்டணத்திலிருந்து நாள் ஒன்றுக்கு 300 ரூபாய் கொடுத்து 'க்ரிமினல்' விசாரணைக்குப்'பாரிஸ் டர்'களையும் ''ஸீவில் விசாரணைக்கு'ஹைக்கோர்ட்டு வக்கீல்'களையும் கொண்டுவந்ததையும், அவர்கள் பேசின பேச்சுக்களையும், ''அடிச்சு அடிச்சு" ரூஜுப்''பாயிண்டு"க்களையும் 'லாபாயிண்டு'க்களையும் எடுத் துப் பேசினதையும், பொருளைப் பொருள் என்று பாராமல் என்ன வந்தாலும்சரி யென்று போட்டி போட்டுச் செலவுசெய்து மூன்று 'கோர்ட்டு' வரை 'கேஸ்' நடத்தின அதிசயத்தையும், நமது செட்டியார்களும், அவர்களின் உபக்கிரகங்களாகிய பரிவாரங்களும் தலையாட்டித் தலையாட்டி உத்ஸாகமாய் இன்னும் வர்ணிப்பார்கள்.

விதியை மதியால் வெல்லமுடியுமா? இவ்வளவு செல்வச்செருக் கடைந்த முத்துசெட்டியாருடைய மனஸ்தாபமானது சில காரணங்களால் நமது பாலூர் மகாராஜா குணசேகரருக்கு நேர்ந்துவிட்டது.

காலஞ்சென்ற வம்சசேகரருக்கு, மூன்றும் சகோதரரும், குணசேகரருக்குச் சிறியதகப்பனுருமான வீரபத்திரர் என்று ஒருவரிருந்தார். வம்சசேகரருக்குப்பின் அடுத்த 'வார்ஸ்' வீரபத்திரரேயொழிய குணசேகரரல்லர் என்றும் அதற்காக 'ஸீவில்' வ்யவஹாரங்கள் பலமாய் நடக்கப்போகிறதென்றும் வெகுநாளாய் வதந்தி பரவிக்கொண்டிருந்தது. வீரபத்திரருக்குப் போதுமான 'ஐவேஜ்' இல்லாததால்,

வ்யாஜ்யம் தொடக்கமுடியாமல் காலம் சென்று வந்தது; எரிகிற நெருப்பில் எண்ணெய்மழை பொழிவதுபோல, வீரபத்திருடன் முத்துசெட்டியார் சேர்ந்துகொண்டார். எப்படியாவது இந்த குணசேகரரைத் தொலைத்துவிடுகிறது என்று வீராவேசத்துடன் சபதஞ் செய்தார்கள். முத்துசெட்டியார் இரண்டுமடங்கு எழுதி வாங்கிக் கொண்டு ஏராளமான பொருள் செலவுசெய்ய ஆரம்பித்தார். திருநெல்வேலி 'சப்கோர்ட்'டில் 'வ்யாஜ்யம்' 'தாக்க'லாயிற்று.

எதிர்வாதம் செய்யப்போதுமான பணமில்லாமல் குணசேகரர் தவிக்கையில், நட்ப தர்சிகளாகிய அடைப்பக்காரர்கள், முத்து செட்டியாரின் ஜன்மப் பகைவரான சிதம்பரஞ்செட்டியாருக்கும், குணசேகரருக்கும் சிநேகம் செய்துவைத்தார்கள். தம் அந்தஸ்துக்குத் தக்கபடி பெரிய 'கேஸ்' ஒன்றும் 'பெண்டிங்'கிலில்லாமல் தவித்துக் கொண்டிருந்த சிதம்பரஞ்செட்டியாரும் போட்டி போட்டுப் பொருளுதவிசெய்ய ஆரம்பித்தார்.

அதிகமாய் வளர்ப்பானேன்? 'ஸப்கோர்ட்டில்,' பிரதிவாதிக்கனுகூலம். 'ஹைகோர்ட்'டில், வாதிக்கு அனுகூலம். ஜமீன்தாரியை வாதிவசம் ஒப்புவித்து விடும்படி தீர்ப்பாய் விட்டது. இப்பொழுது இந்த 'கேஸ்' ப்ரிவிகௌன்ஸலில்'பெண்டிங்'காயிருக்கிறது.

நமது குணசேகரருக்குத் 'தினகரன்' என்ற புதல்வனும் மாலினீ என்ற புதல்வியும் 'மாதவன்' என்ற அபிமான புதல்வனும் தவிர வேறு அடுத்த உறவினரில்லை. மாலினீ பிறந்த சிறிதுகாலத்துக்குப் பின் அவர் இன்ப மனையாள் காலஞ்சென்றாள். தன் மனையாளிடத்துள்ள மெய்க்காதலால் வேறு மங்கை முகம் பாராமலும், மறு விவாஹம் செய்துகொள்ளாமலும் குணசேகரர் காலங்கடத்தி வருவாராயினர். தன் மெய்க்காதலியின் ஸ்தூல சரீரமானது இம்மண்ணினின்று அழிந்துபோயிற்றே யொழிய அவள் ஞாபகம் இன்னும் மறவாது இவர் மன உலகில் ஸஞ்சரித்துக் கொண்டிருந்தது.

முன் கூறியபடி, அப் பாலூர் ஜமீன் கேஸில் ஹைகோர்ட் தீர்ப்புக்காலத்தில், குணசேகரர் தனது சிறு குடும்பத்துடனும், குறிப்பான சில வேலைக்காரருடனும், சென்னையில் வசித்துவந்தார்.

ஹைகோர்ட்டு அப்பீல்' அவருக்கு விரோதமாயிற்று. ஜமீன்தாரி 'ரிஸீவர்' கையில் போய்விட்டது. என்ன செய்வார்? மறுபடி பாலூர் போவதற்கு மனம் துணியவில்லை.

இவ்வாறு மனம்வருந்திக் காலங்கழித்து வருகையில் ஒருநாள், நமது மணிபுரம் மகாராஜா கிருஷ்ண ராஜா தன் உயர்ந்த தோழரான குணசேகரரின் ஜாகைக்குவந்து, க்ஷேமஸமாசாரம் விசாரித்து, அவர் நிலைமையைக்கண்டு பரிதபித்து, "அண்ணா! ஏன் வருந்துகிறீர்கள்? தாங்கள் குடும்பத்துடன் மணிபுரம் சென்று நமது 'வஸந்த விலாஸ் பங்களாவில் வஸியுங்கள்: தங்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்துகொடுக்கும்படி என் திவானுக்கு ஆக்ஞாபிக்கின்றேன்" என்று அன்புடன் ஆதரவாய்க் கேட்டார். இந்த நிலைமையில் குண சேகரர் வலியவரும் தயவை வீணாக்கலாகாதென்று உணர்ந்து, சரியானபடி ஆலோசித்துவிட்டு அவ்வாறே செய்வதாய் ஒப்புக்கொண் டார். குணசேகரர் மணிபுரஞ் செல்லவேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டார் நிற்க

ஒருநாள் மாலையில் எழும்பூர் 'ஸ்டேஷனில்' ஓர் முதல்வகுப்பு வண்டியில், குணசேகரர், தினகரன், மாதவன், மாலினி அமர்ந்திருந் தார்கள். இவர்களுக்கு வழியனுப்ப மணிபுரம் ராஜாவும் வந்திருந் தார். வண்டி புறப்பட ஐந்து நிமிஷம் செல்லுமானதால் தானும் அவ்வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு' குணசேகரரோடும், தினக ரனோடும், மாலினியோடும், மாறி மாறித் தன் வைபவங்களையும், பெருமையையும், தனக்குச் சமீபத்தில் கிடைத்த 'ராவ்பகதூர்' பட் டத்தையும்பற்றி ஆத்மஸ்தோத்திரம் செய்துகொண்டார்.

"டாங்! டாங்!! டாங்!!!" ஸ்டேஷனில் முதல் மணியடித்தது. கிருஷ்ண ராஜா கீழே இறங்கினார். "என்ன இந்த வருஷம் நம் மாலினிக்கு விவாஹம் ஹ! ஹ! ஹ!! --" என்று குலுங்க மந்த ஹாஸம் செய்தார்.

குணசேகரர்:— "ஆமாம்— நடக்கவேண்டியதுதான். இந்த 'கேஸ்' ப்ரதிகூலமானதால்—"

கிருஷ்ணராஜ்:—"அது ஒரு பக்கந்தான். மாலினிக்கு வயதாயிற்றல்லவா?--ஹ! ஹ! ஹ!!—" என்னையும் விவாஹம் செய்து

கொள்ளச் சொல்லுகிறார்கள் நமது நண்பர்கள். ஹ! ஹ!! ஹ!!! சரியான— அழகான நல்ல — அந்தஸ்துள்ள ஹ! ஹ!! ஹ!!!—வந்தால் செய்துகொள்ளலா மென்றுதான் நானும் நினைத்திருக்கிறேன். ஹ! ஹ! ஹ!!"

குணசேகரர்.—"ஆமப்பா, நீ இவ்விதமே இருந்துவிட்டால் உன் வம்சம் ஸந்ததியற்றுப் போம். ஜமீன்தாரியை ஸர்க்காரில் எடுத்துக்கொண்டுவிடுவார்கள்."

கிருஷ்ணராஜ்:—"ஆமாம். நானுமப்படித்தான் நினைக்கிறேன். ஹ! ஹ! ஹ!! நல்ல—அழகான—படித்த ஹ! ஹ!! ஹ!!!—"

"டாங்டாங்! டாங்டாங்!! டாங்டாங்!!!" மறுமணியடித்தது. 'விஸில்' கேட்டது. வண்டி மெதுவாய்ப் புறப்பட ஆரம்பித்தது.

கிருஷ்ணராஜ்:—'அவஸர அவஸரமாய்' என்ன! மாலினி! ஹ! ஹ! ஹ! என்ன அண்ணு! நான் சொன்னது! ஹ! ஹ!; ஹ!!! மாலினி! கல்யாணம்! நான்! மாலினி!—ஹ! ஹ! ஹ!! ஹ! ஹ! ஹ!!"

வண்டி இவர் ஆத்திரத்தைக் கொஞ்சமேனும் கவனிக்காமல் வேகமாய்ப் புறப்பட்டுவிட்டது.

நாம் முன் கூறிய விருத்தாந்தங்கள் நடந்து நான்கு மாதங்களாகின்றன. பாலூர் மஹாராஜா, தன் அருமைப் புதல்வன் தினகரன், புதல்வி மாலினீ, அபிமான புத்திரன் மாதவன் இவர்களுடனும், குறிப்பான வேலைக்காரருடனும் நமது கதையின் 'ரங்க' ஸ்தலமாகிய மணிபுரத்தில் 'வஸந்த விலாஸம்' பங்களாவில் வசித்து வருகின்றார். மணிபுரம் மஹாராஜாவின் உத்தரவுப் பிரகாரம், திவான் 'ராஜாராம்' அவர்கள், இச்சிறு குடும்பத்தை எவ்வளவோ அன்பும் ஆதரவுமாய், யாதொரு குறைவுமின்றிப் பாதுகாத்து வருகின்றார். சென்னையில் வசிக்கும் மணிபுரம் மஹாராஜாவுக்கும் மணிபுரத்தில் வசிக்கும் பாலூர் மஹாராஜாவுக்கும் பிரதிதினமும், பரஸ்பரம் க்ஷேம சமாசார நிரூபங்கள் சென்றுகொண்டிருக்கின்றன. நிற்க.

இவ்வுலகில் மனிதரால் இச்சிக்கப்படும் பலவகை இன்பங்களில் முக்கியமானவை மானம், உயிர், பொருள். மனிதரில் உத்தமர்கள், பொருளினும் உயிரையும், உயிரினும் மானத்தையும் பெரிதாய்க் கருதுவார்கள். அதமர்களோ, மானத்தினும் உயிரையும், உயிரினும் பொருளையும் பாதுகாப்பார்கள். "மானமிழந்தபின் வாழாமை முன்னினிதே" என்ற பெரியோர் வாக்கியப்படி, உயர்வகுப்பினுதித்த நமது பாலூர் மஹாராஜா, தமது நாடிழந்து, பதவியுமிழந்தது மன்னியில், தம்மைப்போன்ற மற்றொரு மஹாராஜாவின் தயவை எதிர்பார்த்து எவ்வளவு காலம் ஜீவிப்பது?. "ப்ரீவி கௌன்ஸி"லுக்குப்போன 'அப்பீல்' இன்னும் முடிவாகவில்லை. இவ்வாறு ஒவ்வொரு நாளும் தம் மனத்துள்ளதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் முள்ளின்மேலிருப்பதுபோல் அவர் காலங்கழித்து வருகின்றார். அவர் தம்முடைய மெய்க் காதலியை இழந்தபின்னும் அன்னவள் பிரதிபிம்பம்போல் விளங்கும் புதல்வரையாவது கண்ணுற்றுச் சந்தோஷித்து வருகின்றார். ஆயினும், இப்பொழுது நாடிழந்து தமக்குச் சமமான அன்னியரின் கைபார்த்துப் பிழைக்கும்படி நேரிட்டதை நினைக்க நினைக்க, அவ்வற்ப சந்தோஷமும், மேகத்தால் மறையும் சந்திர பிம்பம்போல் மறைய ஆரம்பித்தது. தம் அருமைக் குழந்தைகளான தினகரனும் மாலினீயும், தன்னையண்டி யன்புடன் வளர்ந்துவரும் மாதவனும் அதிபாலியர்கள். உலகத்தின் அமைப்பும், மனிதர் வாழ்விலுள்ள சங்கடங்களும், அவர்களறியார்கள். தாங்களே தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் நிலைமையில் அவர்களை வைத்துவிட்டாவது, இந்த உலக இன்பங்களை வெறுத்து, ஆத்மவிசாரஞ் செய்துகொண்டாவது ஏகாந்தமாய் சஞ்சரிக்கலாமென்று எண்ணுவார். நிற்க.

மணிபுரம் மஹாராஜா எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும், விசேஷமாய், மாலினியின் யோகக்ஷேமங்களையும், அவள் விவாஹத்தைப்பற்றியும், 'இம்மணிபுர ராஜ்யமே தங்களது' என்றும் 'மாலினியைத் தங்கள் அந்தஸ்துக்குத் தக்க மகாராஜனுக்கே மணம் செய்விக்கவேண்டு'மென்றும், சிலகடிதங்களில் 'மாதவன் விஷயத்தில் கொஞ்சம் ஜாக்கிரதையா யிருக்கவேண்டு' மென்றும் எழுதப்பட்டிருந்தன.

தன் துயரம் எவ்வளவாயினும், அதைத் தன் அருமை மைந்தர்கள் இந்தப் பாலிய வயதிலேயே அறிந்து வருந்தாவண்ணம், பாலூர் மகாராஜா அவர்களை அன்புடன் உத்ஸாகமாய் வளர்த்து வந்தார். நிற்க,

பிரதிதினமும் மாலினியும் கமலாவும் பூஞ்சோலை சென்று விளையாடி வருவார்கள். மாதவனும் தினகரனும் "ஐவர்மலை" ச்சார்புசென்று வேட்டையாடியும் உயர்ந்த விருக்ஷங்களையும், அருவிகளையும், குகைகளையும், பலவிதப்பக்ஷிகளையும் இன்னும் அங்குள்ள நானாவிதமான இயற்கையற்புதங்களையும் கண்டு களித்தும் திரும்புவார்கள்.

இந் நிலைமையில் வஸந்தகாலமும் நெருங்கியது. நமது கதாதினத்துக்குச் சுமார் ஒரு வாரத்துக்குமுன், நமது மாதவனும் தினகரனும் "ஐவர்மலை" யருவியொன்றின் கரையோரமாய் உட்கார்ந்து, அவ்வருவியின் தெள்ளிய நீரானது ஸ்படிகம்போல் ஒளிவீசும் சிறு பருக்கைக் கற்களின்மீது பாய்ந்தோடும் அழகை யுற்று நோக்கி ஆனந்தித்துக்கொண்டிருக்கையில், நாம் முன் கூறிய பரதேசி, அவர்கள்முன் ப்ரத்யக்ஷமாய்,

"சிறுவர்களே! நீங்கள் ராஜகுமாரர்களைப்போல விளங்குகின்றீர்களே?" என்று வினவ,

மாதவன்:—"ஸ்வாமி! எனது நண்பன் ராஜகுமாரன் தான் நான்—"

பரதேசி:—"குழந்தாய்! நீ குழந்தைதான்.—உன் முகத்தில் ராஜலக்ஷணங்கள் தோன்றுகின்றன. தர்மமே நிச்சயம்—(தினகரனை நோக்கி) அப்பா! நீ பாலூர் ராஜபுத்திரனல்லவா? உன் சகோதரி மாலினி சௌக்கியமாயிருக்கின்றாளா? மாதவனும் நீங்களும், இதுவரை இருந்ததுபோல் இனியும் எப்போதும் அன்பாயிருங்கள். உங்களுக்கு ஒரு குறைவும் வராது. "தர்மமே ஜயம்" என்றார்.

"இவ்வளவுவரை தங்கள் குடும்ப ரகசியங்களையறிந்த இம் மஹானுபாவர் யாராய் இருக்கலாம்?" என்று மாதவனும், தினகரன் அவர் முகத்தை யுற்றுநோக்கி ஆலோசித்துக்கொண்டிருக்கையில்,

பாதேசி இரும்பு வளையங்கள் கோக்கப்பட்ட தன் 'சோட்டா'த்தடி யால் தரையை 'கல்', 'கல்' என்று சத்தமிட்டுத் தட்டிக்கொண்டும் "தர்மமே நிச்சயம்!" "தர்மமே நிச்சயம்!" என்று கோஷித்துக் கொண்டும் ஆங்கோர் புதருக்குள் மறைந்தார்.

---

## நான்காவது அத்தியாயம்.

---

### நன்றியின்மை.

### Ungrateful.

நன்றறியா தீயோர்க் கிடங்கொடுத்தல் நல்லோர்க்கும்
என்று கிளைக்கும் துயர்சேரும்—குன்றிடத்தில்
பின்னிரவில் வந்த கரும்பிள்ளைக் கிடங்கொடுத்த
அன்னமுதற் பட்டதுபோ லாம்—நீதிவெண்பா.

இப்பொழுது இதுவரை செய்துவந்த பூர்வ கதாப்ரஸங்கங்களை நிறுத்திவிட்டுச் சற்று கதாநிகழ்ச்சியை யனுசரிப்போம்:

மெய்க்காதலின் மிகுதியால், நமது கதாநாயகர்கள் மெய்மறந்து ஆனந்த பரவசர்களாயிருந்தனரென்றும், அந்நிலைமையில் தற்செய லாய்த் தினகரன் அவர்களைப் பார்க்க நேர்ந்ததென்றும், அப்பொ ழுது கோபாவேசத்தால் தினகரன் மாதவனைப் பலவாறு நிந்தித்துச் சென்றான் என்றும் நாம் முன்னொரு அத்தியாயத்தில் கூறினோ மல்லவா?

'வஸந்த விலாஸம்' பங்களாவின் மேல்மாடியில், சுற்றிலும் வரிசையாயமைக்கப்பட்ட பலவகை யழகிய வாசனை மலர்ச்செடிக ளாலும், படர்கொடிகளாலும், அலங்கரிக்கப்பட்ட ப்ரகாரங்களா லும், பலவர்ணத் தட்டிகளாலும், வெட்டிவேர் விலாமிச்சைவேர்த் தட்டிகளால் மறைக்கப்பட்ட வளைவுகளாலும், பலவிதப் பூவேலை களுடன் கூடிய ஜப்பான் தேசத்துத் திரைகளால் மறைக்கப்பட்ட ஜன்னல்களாலும், நாற்புறச் சுவர்களிலும்மாட்டப்பட்ட உயர்ந்த

"ரவிவர்மா"ப் படங்களாலும், பலவகைச் சித்திரவேலைகளுடன் செய்யப்பட்டுத் தரையில் விரிக்கப்பட்ட ரத்னகம்பளங்களாலும், ஊஞ்சல் ஸோபா, வில்நாற்காலிகள், கட்டில்கள், மேஜைகளாலும் அலங்கரிக்கப்பட்ட ஓர் அறையில், சுமார் 45 வயதுள்ளவரும், ஆனால் பார்ப்பதற்குச் சுமார் 60 வயதுக்குமேல் மதிக்கத்தக்கவருமான ஓர் பிரபு ஓர் ஸோபாவில் சாய்ந்து அன்று காலை வந்த பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தார் உடனே ஸேவகன் நுழைந்து சில தபாற் கடிதங்களைக் கொடுக்கவே, அவைகளை, மேலெழுந்தவாரியாய் புரட்டிக்கொண்டு வருகையில் அவர் திருஷ்டி முக்கியமான ஓர் கடிதத்திற் செல்லவே, அதை யவர் பரபரப்புடன் உடைத்து, அவசரமாய் வாசித்துவிட்டு ஆழ்ந்த யோசனையில் மூழ்கினர்.

இத்தருணத்தில், அவ்வறைக்குள் நுழையும் வாசலிலுள்ள ஜப்பான் திரை திடீரென்று முரட்டுத்தனமாய் அப்புறம் விலக்கப்பட்டது. பிரபு ஆச்சரியத்துடன் அவ்வாயிலை நோக்கவே, கோபாவேசத்துடன், தன் மீசை படபடவென்று துடிக்கத் தன் வலக்கை உடைவாளின் பிடியின்மீது நாட, எவ்வளவோ பயபக்தியுடன் செல்பவனாயினும், அப்பொழுது, 'திட்' 'திட்' என்று தரையில் காலடி வைத்துக்கொண்டு, நமது தினகரன் பிரவேசமாகி, "ஐயா!" என்று கதறிக்கொண்டு கோபவெறியுடன், அப்பிரபுவின் முன் நின்றான். இதைக் கவனித்த குணசேகரர் திடுக்கிட்டுத் தன் மகனைக் கட்டிக்கொண்டு தன் பக்கத்தில் அமர்த்தி யவனைத் தன் மார்புமேல் சாய்த்து, உச்சி முகந்து, தினகரனைத் தடவிக்கொடுத்து தீனமான குரலுடன், "அப்பா! என் கண்மணி! தினகரா! ஏதப்பா! இவ்வளவு மனவேதனை யடைந்திருக்கிறாய்? நீ வெகு சாந்தவானாயிற்றே, உன் உடையையும் வாளையும் பார்த்தால் ஏதோ வீரகோலத்துடன் யுத்தத்துக்குச் சென்றவன்போற் காண்கின்றாயே. அப்பனே! செந்தாமரை போன்ற உன் முகம்—ஐயோ!—சோகத்தால் வாட்டமுற்றிருக்கின்றதே! அப்பா! தினகரா! என்ன நேர்ந்தது? சொல்லேன். ஐயோ! உன் நெஞ்சும் மார்பும் படபடவென்று துடிக்கின்றனவே!" என்று பரிதாபமாய் வினவின

தினகரன்:—"ஐயனே! கண்டேன்! கண்டேன்!! இப்பாவி கண்களால் கண்டேன்!—" என்று பெருமூச்செறிந்து கொண்டு விம்மி விம்மி யழுதான்.

குணசேகரன்:—திடுக்கிட்டு "அப்பா! தினகர! ஐயோ! எதைக் கண்டாய்? சீக்கிரம் சொல்லேன்—ஐயோ! என்மனம் பதறுகின்றதே, அப்பா யாருக்கு என்ன ஆபத்து நேர்ந்தது? அப்பனே! தினகரா!—"

தினகரன்:—"ஐயா! மாதவன்—"

குணசேகரன்:—"ஹா! மாதவன்!—மாதவன்!! மாதவனுக்கு என்ன நேர்ந்தது?—"

தினகரன்:—"ஐயா! இம்மாதவனுடைய பூர்வ விருத்தாந்த மென்ன? அவன் தாய் தந்தையர் யாவர்?—"

குணசேகரன்:—"அப்பா! தினகர! நீ கேட்பதொன்றும் எனக்கு விளங்கவில்லையே! அவனைப்பற்றி யென்ன?"

தினகரன்:—"பால்வார்த்து வளர்ப்பினும் பாம்பு பாம்புதானே?"

குணசேகரன்:—"கண்மணி! நீ சொல்வது ஒன்றும் துலங்க வில்லையே! என் மனம் பதறுகின்றதே!"

தினகரன்:—"ஐயனே! உண்டவீட்டுக்கிரண்டு நினைத்த இச் சண்டாளத் துரோகி—இம்மாதவன்——"

குணசேகரன்:—"ஹா!"

தினகரன்:—தாய் தந்தையர் பேர்கூட அறியாத எந்த இழி குலத்தில் பிறந்தவனோ?— அப்பாதகன்.—"

குணசேகரன்:—கண்மணி! தினகர!—"

தினகரன்:—ஐயோ! என் வயிறு எரிகின்றதே! இப்பாவி கண்களால் பார்க்கவும் நேர்ந்ததே!"

குணசேகரன்:—"அப்பா! என்ன நடந்தது? சொல்—"

தினகரன்:—ராஜகுலத்துதித்த என் சகோதரி—ஐயோ! என் மனம் துடிக்கின்றதே! அடி மாலினீ! ஐயோ! பெண்களெல்லாம் பேதையர் தானே?"

குணசேகரன்:—"தினகர!—"

தினகரன்:—"ஐயோ! இப்பாவி, நமது குழந்தை—ஒன்றுமறியாத குழந்தை—மாலினியை, மோஹவலையால் மயக்கி—ஐயோ! மாலினீ! மாலினீ! அம்மா! என்னவெல்லாம் நினைத்தோமடீ! ஐயோ நாடிழந்து, பேரிழந்து தவிப்பதுகூடப் பெரிதாகத் தோன்றவில்லையே! அம்மா! மாலினீ! உன் தலைவிதியு மிதுதானோ!!" என்று கோவென்று கதறிக்கொண்டு தன் தகப்பன் மேல் சாய்ந்தான்.

குணசேகரன்:—(அடங்காத்துயரத்தில் ஆழ்த்தப்பட்டவனாய் கண்களில் கண்ணீர் ததும்ப, தன் அநுபவமெனும் சாதனத்தால் துக்கத்தை அடிக்கடி அடக்கிக்கொண்டு தன் புதல்வனுக்கு ஆறுதல் கூறி) "அப்பா! தினகர! நீ யொன்றுக்கும் வருத்தப்படாதே. மாலினீ குழந்தைதானே?—ஏதோ தெரியாப்புத்தி. இனியவளுக்கு விவாகத்தை நடத்திவிடவேண்டும் தாமதிக்காமல்—"

தினகரன்:—குலங் கோத்ரம் தெரியா இத்துரோகிக்கா?"

குணசேகரன்:—அப்படியல்ல. அவள் மனதுக்கிசைந்த மணவாளனுக்கு—"

தினகரன்:—"ஐயனே! ஏது! உயர்குலத்துதித்த தங்கள் பெருமையெலாம் மறந்துவிட்டீர்களே? அவள் மனப்படி விடுவோமாகில், இப்பாதகன் வலையிலகப்பட்டவள் வேறே எவரை வரிக்கப்போகின்ருள்? ஈசுவரா! இதுவும் உன் செயலோ!" என்று முகத்தில் கை வைத்து விம்மிவிம்மியழுதான்.

குணசேகரன்:—"தினகரா!"

தினகரன்:—ஐயனே! வேண்டாம்! வேண்டாம்! இப்பொழுதே உத்தரவு கொடுங்கள். இம்மாதவனை இக்கத்திக்கிரையாக்கி வருகின்றேன். என் உயிர் போனாலும் பாதகமில்லை. மானமழிந்த பின் வாழ்வதெப்படி? அல்லது மாதவனை இப்பொழுது நமது முன் நிற்

காது துரத்திவிடவேண்டும். அப்படிச் செய்யத் தாம் உடன்படா விடில், நானுவது, இனி இப்பாவத்தைப் பார்க்காது, ஓடிப்போகின் றேன். இவ்வகண்ட உலகத்தில், இச்சிறு வயிற்றை நிரப்ப என்னுல் முடியாதா?"

குணசேகரன்:—அப்பா! நீ அவ்வளவு பதருதே. மாதவனுக்கு, நமக்குச் சரிசமானமாய் இடங்கொடுத்தது நம்மேல் தவறு. இனி நொந்துகொள்வதில் பயனென்ன? அவனை இனி நம்முன் வரவழைக் காமல், அலக்ஷியமாயிருப்போமாகில் அவனே போய்விடுவான். நாம் வாயால் சொல்லுவதைக் காட்டிலும் செய்கையால் நம் அதிருப்தி யைத் தெரிவித்துவிடுவோம்" என்று சொல்ல, தினகரன் முகம் சற்று மலர்ச்சியடைந்தான். உடனே குணசேகரர் தான் பார்த்துக் கொண்டிருந்த கடிதத்தைத் தினகரன் கையில் கொடுத்தார். அதின் ஓர் பாகம் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது.

" ... ... ... ... ... ... ...

மேலும் என் அன்பான தமயனும், அவர் மனைவியும் காலஞ் சென்ற பிறகு இவ்வில்லறத்தையே முற்றிலும் துறந்து எத்தனை யோ நண்பர் முயன்றும், காதலென்னும் வலைக்குட்படாது தப்பி வந்த என் மனம், அழகில் சிறந்த தமது மாலினி—என் துணிவைத் தாங்கள் பொறுத்தருள வேண்டும்.—மாலினீயின் வினயம், குணம், அழகு என்னும் சிறந்த குணங்களால் என் மனமானது மறுபடி இவ் வுலகத்தை நாடுகின்றது. அவளன்றி வேறு எதுவும் என் மனத்தை யணுவும் அசைக்காது. அவளை விவாஹம் செய்துகொள்ள எக்கார ணத்தாலாகிலும் நேரிடாவிட்டால், இவ்வுலக இன்பமே எனக்கு வேண்டாம். மெய்க்காதலென்பது கேவலம் மிருகப்ராயமான விஷ யசுகம் மாத்திரமன்று. என் நாடு நகரெலாம் தமது. என் உயிரும் உடலும் தமதே. என் நாட்டுக்கு, எனக்குப்பின் 'வாரீஸ்' ஏற்பட்டு இவ்வம்சம் நிலைத்தோங்க வேண்டுமென்று தாங்கள் கருதுவது உண் மையாகில் என்மனம் குளிரச் செய்வீர்களென்று விரும்பி எதிர் பார்க்கிற

தமது நண்பன்

கிருஷ்ண ராஜன்"

சோலையினின்றும் திரும்பிவந்த மாதவன் மனவேதனையுடன் 'வஸந்தவிலாஸ'த்தில் தன் அறைக்குட் பிரவேசித்துத் தான் அணிந்திருந்த மேலுடையையும், உடைவாளையும் பரபரப்புடன் கழற்றி இரண்டு கைகளாலும் சுருட்டிச் சுழற்றி வெறுப்புடன் ஆங்கோர் மூலையில் எறிந்துவிட்டு, 'அம்மா !' என்று அலறிக்கொண்டு ஓர் சோபாவில் சாய்ந்து தனது இடது கைத்தலத்தால் தன் நெற்றியைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு பலவாறு சிந்திக்கலானான். நிர்மலமான ஆகாயத்தின்கண் மேகவரிசைகள் செல்வதுபோல, அவன் செந்தாமரைபோன்ற வதனம் சோகத்தாலும் எண்ணிறந்த சிந்தைகளாலும் வாட்டமுற்றது. "அம்மா! ஐயோ! என் நிலைமையை இன்றுதான் நான் உணர்ந்தேன். தாய் தந்தையரை இழந்த சோகம் அன்று நான் அறிந்திலேன். இன்று தான் அவர்கள் என்னை இவ்வாறு தியங்கவிட்டுச் சென்றார்களோ? ஐயோ! என்ன செய்வதென்று ஒன்றும் புலப்படவில்லையே" என்று பலவாறு சிந்தித்துக்கொண்டும் அடிக்கடி பெருமூச்சு விட்டுக்கொண்டும் 'மனவேதனையடைந்திருந்தான். இந்நிலைமையில், அவ்வறைக் கதவு திடீரென்று திறக்கப்பட்டது. உடனே அவ்வரண்மனை 'ஸம்பரதி' பிரவேசமாகி, அலக்ஷியமாய் 'ஓய் மாதவ!—' என்றழைக்கவே, மாதவன் திடுக்கிட்டு அவனைப் பார்த்து, இதுவரை "சின்ன துரைகளே!" யென்று எவ்வளவோ மரியாதையுடனும் பயபக்தியுடனும் அழைக்கும் ஸம்பிரதி இவ்வாறு அலக்ஷ்யமாய் அழைப்பதைப் பார்த்து 'ஏதோ விபரீதமாயிருக்கிறது' என்று உணர்ந்து 'ஸம்பரதி! என்ன விசேஷம்? என்ன இவ்வளவு அவஸரம்?" என்று வினவினான்.

ஸம்பரதி:—'மாதவா! உமக்கு ஸ்நாநத்துக்கு வெந்நீர் முதலானவைகள் இவ்வறையின் தெற்குத் தாழ்வாரத்தில், வைக்கப்பட்டிருக்கின்றன. சௌகரியப்படி செய்கிறது. உமக்குப் போஜனம் முதலானவைகள் இவ்வறைக்கே கொண்டுவரப்படும்.—'

மாதவன்:—(திடுக்கிட்டு) "ஆனால் நான் போஜனசாலை—"

ஸம்பரதி:—"ஐயா! ஏதோ அவ்விதம் மஹாராஜா அவர்களின் உத்தரவு—"

மாதவன்:—"அவ்வாறு திடீரென்று உத்தரவானதற்குக் காரணம் நான் அறியலாமோ?—"

ஸம்பரதி:—"அதெல்லாம் எனக்குத் தெரியமாட்டாது. எனக்கிட்ட கட்டளையை நான் தெரிவித்தாய்விட்டது. அப்புறம் உமதிஷ்டம்.—'

மாதவன்:—"ஆனால் நான் இவ்வறையைவிட்டுக்கூட வெளியே போகலாகாதோ?—"

ஸம்பரதி:—"அது உமதிஷ்டம்—" என்று அலக்ஷ்யமாய்ச் சொல்லிவிட்டு மாதவனுடைய அடுத்த கேள்விக்கு இடங் கொடாமல் திடீரென்று வெளியேறிவிட்டான்.

அப்பொழுது மாதவனுடைய நிலைமையையும் மனோவேதனையையும், எண்ணிறந்த கவலைகளையும்பற்றி நமது நண்பர்களே ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். இஃதிவ்வாறிருக்க, அந்தப்புறத்தில் நமது பாலூர் மஹாராஜா குணசேகரன் ஓர் சாய்பு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருக்கின்றார். அவர் அருகில் அந்நாற்காலியின் பின் சாய்பின்மேல் தனது இடதுகையை வைத்துக்கொண்டும், தனது வலது கைவிரல்களால் படபடவென்று துடிக்கும் தன் இள மீசையை முறுக்கி நெறநெறவென்று பற்களால் கடித்துக்கொண்டும், கோபாவேசத்துடன் தினகரன் நிற்கின்றான். எதிரில் மாலினி தன் இருகைத் தலங்களாலும் தன் முகத்தை மூடிக்கொண்டு கண்ணும் கண்ணீருமாய் நிற்கின்றாள். ஆங்கோர் மூலையில் கமலா யாதொன்றும் செய்யத் துணியாமல், சித்திரப் பதுமை போல அடங்கியொடுங்கி 'என்ன நேரிடுமோ?' என்று பதறிக்கொண்டு நிற்கின்றாள். இந்தக்காலத்தில் எல்லாம் மௌனமாயிருந்து கடைசியாய் குணசேகரர் "மாலினீ! நீ எவ்வளவோ புத்திசாலியென்று நான் நினைத்திருக்க—என் கஷ்டகாலம் பொருளையிழந்தும், பதவியையிழந்தும், நீங்களாவது நல்ல நிலைமையிலிருக்கக் கண்டு களிக்கலாமென்று நான் இருக்க—"

தினகரன்:—"அப்பாதகன்—அக்கொடிய துரோகி—ஐயோ! என் வயிறு எரிகிறதே—நம் அந்தஸ்தெங்கே? பதவியெங்கே? அச்

சண்டாளனால் நமக்கு மானக்கேடும் நேரலாயிற்றே? வளர்த்த கடா மார்பில் பாய்வதுபோல—அத்துரோகி—''

குணசேகரன்:—மாலினீ! அம்மா! கண்மணி! உன்னைப்பெற்றவள் இருந்தால், இதைக்கண்டு, தன் பிராணனைத் துறந்துவிடுவாளே! அம்மா! கண்மணி! ஏதடீயம்மா! உனக்கிப்படிப் புத்தி போயிற்று? ஐயோ! என் மனம் சகிக்கவில்லையே— கண்மணீ! போனது போகட்டும் இதுவரை யாதொன்றும் கல்மிஷமாய் ஏற்படவில்லையென்று தோன்றுகின்றது. இதுவரை நடந்தது வெளிப்படவேண்டாம். இனிமேலாவது அவனுடன் நெருங்கிப் பழகாமல் அலக்ஷ்யமாய்—இருந்தால்,—

தினகரன் பற்களை 'நெற நெற' வென்று கடித்துக்கொண்டு, உதடுகள் துடிக்கத் தன் வலக்கை உடைவாளின்மீது நாட, "இனி இவ்வாறு இக் கண்களாற் பார்க்க நேரிட்டால், அப்பாதகனை இக் கத்தியால் துண்டிப்பதுமல்லாமல்—'' என்று சொல்லிக்கொண்டு உடைவாளை உருவி வெட்டவெளியில் வீராவேசத்துடன் ஒரு சுழற்றுச் சுழற்றினான்.

குணசேகரர் தன் புதல்வனுடைய வீரவெறியைக்கண்டு சற்றுப் பயந்து, இனி இச் சம்பாஷணையை வளர்த்தல் புத்தியீனமென்று உணர்ந்து "மாலினீ! கமலா! ஜாக்ரதை, புத்திசாலிகளாய் இருங்கள்" என்று தீனமான குரலுடன் உபதேசித்துவிட்டு, தினகரனுடன் தன் 'தர்பார்' அறைக்குச் சென்றார். அது முதல், மாதவனுக்கு வேறு சாப்பாடு படுக்கை முதலியன ஏற்பட்டுவந்தன. அவ்வாண்மனையில், யாவரோடும் பேசாமல் தனியேயிருந்து அவன் காலம் கழித்து வந்தான். இவ்வாறு இரண்டு மாதங்கள் கழிந்தன.

---

## ஐந்தாவது அத்தியாயம்.

### தர்பார்.

### Durbar.

நமது சரித்திர காலத்தில், மணிபுரத்தை யாண்டுவரும் ஜமீன்தார் கிருஷ்ணராஜன், தன் தமையன் இருபது வருஷங்களுக்கு முன், கொலையுண்டு அகால மரணமான பிறகு, சட்டப்படி தனக்கு

இஜ்ஜமீன் கிடைத்ததாகிலும், தன் தமையன் மேலுள்ள மெய்யன் பால், அவர் நினைவு தன்னுள்ளத்தை யெப்பொழுதும் வருத்திக் கொண்டிருந்ததாலும், மகுடாபிஷேகம் முதலிய மகோத்ஸவம் ஒன்றும் கொண்டாட மனம் ஸகியாதவராயும், ராஜகோலங்கள் கொள்ளாதவராயும், இதுவரைச் சென்னையிலேயே தன் வாழ் நாளைக் கழித்துவந்தார்.

இப்பொழுது சிலநாட்களாய், மணிபுரம் ஜமீன்தார் தாமே நேரில் மணிபுரத்திலிருந்தே ராஜ்யபாரம் செய்யப் போகிறார் என் றும், இருபது வருஷத்துக்கு முன் நடக்கவேண்டிய பட்டாபிஷேக மகோத்ஸவம் இப்பொழுது விநோதமாயும், கோலாகலமாயும் நடக் கப்போகிற தென்றும், அதுவுமன்றி, தமையனிறந்தது முதல், உல கப்பற்றையும் சிற்றின்பத்தையுமே வெறுத்திருந்த மஹாராஜா அவர் கள், இப்பொழுது பாலூர் ஜமீன்தாரின் புதல்வி மாலினீயை மணஞ் செய்யப் போகிறார் என்றும், இன்னும் பற்பலவிதமான ஸந்தோஷ ஸமாசாரங்கள், இம் மணிபுர நகரினும், மதுரை ஜில்லாவிலும், மற்றுமுள்ள இதர ஜில்லாக்களிலும் பரவின.

நமது சரித்திர தினத்தில் மணிபுரம் முழுமையும் ரமணீயமா யும், கோலாகலமாயும், விளங்கிற்று. வீதிகள்தோறும் அணி யணியாய் நாட்டப்பட்ட துவஜங்களாலும், தோரணங்களாலும், விசித்திரமான கோலங்களாலும், பூமாலைகளாலும், அலங்கரிக்கப் பட்டிருந்தன. அரண்மனைகளும், ராஜவீதிகளும், அதியற்புதமான சித்திரவேலைகளுடன் கூடிய பூம்பந்தர்களாலும், சித்திரப்பிரதிமை களாலும், 'நல்வரவுத்' தோரணங்களாலும், இனிமையான வாத்திய கோஷங்களாலும், ஆங்குள்ளோர் மனத்தைக் களிக்கச் செய்து கொண்டிருந்தன. ஓர்புறம் நாகஸர வாத்யம், ஓர்புறம் 'பாண்டு' வாத்யம், ஓர் புறம் பாட்டுக்கச்சேரி, சிலவிடங்களில் சதிர்க்கச்சேரி முதலிய விநோதங்கள் ஆங்காங்கு ஜனங்களின் மனதைக் கவர்ந்து கொண்டிருந்தன.

அநேக இடங்களிலிருந்தும் ஜனங்கள் திரள் திரளாய் வந்து கொண்டிருந்தனர். அநேக ராஜாங்க உத்தியோகஸ்தர்களும், பிர புக்களும், துரைமார்களும் இம் மஹோத்ஸவத்தைப் பார்க்க வந்

திருந்தார்கள். ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு வகுப்பினர்க்கும் தனித்தனி 'ஜாகாக்கள்' ஏற்படுத்தப்பட்டிருந்தன. துரைமார் விருந்துக்காக "ஸ்பென்ஸர் கம்பெனி," "டி. ஏன்ஜலிஸ்" முதலான உயர்ந்த கம்பெனிகளிலிருந்தும், சுமார் 1300 ரூபாய் வரை செலவு செய்து உயர்வகை உணவுகள் தருவிக்கப்பட்டிருந்தன. இவ்வளவு கோலாகலமாய் மணிபுரம் ஜமீன்தாரின் பட்டாபிஷேக மஹோத்ஸவ ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

அதிகமாய் வளர்ப்பதேன்? பட்டுக்களாலும், பூமாலைகளாலும், அலங்கரிக்கப்பட்டு, இரண்டு வெள்ளைத் துரகங்கள் பூட்டப்பட்ட ஓர் வண்டியின்மீது ஜமீன்தார் ஆரூடராய், முன்னும் பின்னும், விதம் விதமான வாத்தியங்கள் முழங்க, உத்தியோகஸ்தர்களாலும், பட்டணத்தார்களாலும், சூழப்பட்டவராய் ராஜவீதி வழியாய், ஊர்கோலம் வருகின்றார். அப்பொழுது ஜனங்களடைந்த உத்ஸாகமும், ஸந்தோஷமும் அளவிறந்தனவாயிருந்தன.

திடீரென்று ஜமீன்தார் வண்டியில் பூட்டிய குதிரைகள் திமிற ஆரம்பித்தன. பக்கத்திலுள்ளோர் யாவரும் திடுக்கிட்டார்கள். ஸாரதி குதிரைகளை அதிக சிரமப்பட்டு அடக்கி நிறுத்திக் குதிரைகளையும் தட்டிக்கொடுத்தான்.

யாது காரணமென்று திரும்பிப்பார்த்து விசாரிக்கையில், நமது பரதேசி, தன் கையால் "சோட்டா"த் தடியைக் குலுக்கிக்கொண்டு "தர்மமே நிச்சயம்," "தர்மமே நிச்சயம்" என்று கோஷித்துக்கொண்டு, குதிரைகள் முன் நின்றுகொண்டிருந்தார். ஜமீன்தார் கண்களும், பரதேசியின் கண்களும் பரஸ்பரம் நாடின. ஜமீன்தார் மனம் கலங்கிற்று. இதற்குள் வாத்தியகோஷங்களும், விநோதங்களும் நின்றுவிட்டன. அடைப்பக்காரரில் சிலர் ஓடிவந்து 'அடே! பண்டாரப் பயலே' என்று பயமுறுத்திக்கொண்டு பரதேசியின் கழுத்தில் கை போட்டார்கள். இதற்குள் திவானும் வந்துசேர்ந்து, "அவரையொன்றும் செய்யவேண்டாம். ஏதோ புத்தி தடுமாறினவர் போலக் காணப்படுகிறார். மேலும், ஸந்தோஷகாலத்தில் நமது நாட்டில் ஒருவனும் துக்கமடையலாகாது" என்று சொல்லிவிட்டு, ஜமீன்தார் முகத்தைப் பார்த்தார். முகத்தில் செழிப்பேயில்லை. மனக்கலக்கம் முக

விகாரத்தால் வெளியாயிற்று. இதற்குள் திவான், தம் பணப்பையி லின்றும், 4, 5 கால் ரூபாய்களை எடுத்துப் பரதேசியின் முன் எறிந்து, "ஓய்! பண்டாரம்! ஓடிப்போம். இனி இங்கே நில்லாதே யும்!" என்று உரக்க அதட்டி ஆக்ஞாபித்தார். பரதேசி அந்நாணயங் களைப் பொறுக்கி; பக்கத்தில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்த ஓர் ஏழையண்டை கொடுத்துவிட்டு, மறுபடி ஜமீன்தாரை யும், திவான் முதலானவர்களையும் நோக்கி, "நான் பண்டாரந்தான். நீயும் பண்டாரந் தான்." உன் காசுக்கு வரவில்லை நான். "தர்மமே நிச்சயம்.' கெடுவான் கேடுநினைப்பான். 'தர்மமே நிச்சயம்" என்று கோஷித்துக்கொண்டும் தன் 'சோட்டா'த் தடியால் தரையில் தட் டிக்கொண்டும் திடீரென்று திரும்பிக் கூட்டத்துக்குள் மறைந்தார்.

ஜமீன்தார் தன் மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டார். 'ஏதோ கிறுக்கன்போலிருக்கிறது' என்று திவான் சமாதானம் சொல் லிப் பிறகு அங்கிருந்தோரை நோக்கி 'சரி' உங்கள் அலுவல்களைக் கவனியுங்கள்', என்று ஆக்ஞாபித்துவிட்டுத் தன் வண்டியிலேறிக் கொண்டார்.

நமது மஹாராஜாவின் உப க்ரஹங்களாய் விளங்கும் வீரன், வெறியன் முதலானவர்கள் "என்னடா! ஒரு பரதேசிப்பயல்! சும்மா கண்டபடி பேசறது—நம்மா — ராசாவை — இப்படியே — நச்சுன் னிட்டு—ஒரே—அடியிலே — பண்டாரப்பயலை நிமித்திரலாமெண்டு பார்த்தேன்— திவானெசமாங்க—கெடுத்தூட்டாங்க—என்று பிதற் றிக்கொண்டு சென்றார்கள். இவ்வற்புதக் காட்சிகளைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களில் சில புத்திமான்கள் மாத்திரம், இதை யவ் வளவு ஸாதாரண ஸம்பவமாய் அபிப்பிராயப்படவில்லை. இது ஏதோ அதிசயமாய் இருக்கிறது. அவ்வளவு திருப்திகரமாயிருக்கவில்லை. "பரதேசி உண்மையாய்க் கிறுக்கனுயிருக்கும் விஷயத்தில், அவன் நடத்தைகளையும், வார்த்தைகளையும் பார்த்துவிட்டு ஜமீன்தார் பரி கசித்துத்தானே செல்லவேண்டும்? அவர் மனம் ஏன் கவலைப்பட வேண்டும்? அவர் முகத்தில் இயற்கையாயுள்ள குதூகலமெல்லாம் மறைந்து போயினவே!—என்ன மாயமோ தெரியவில்லை" என்று பலவாறு தர்க்கித்துச் சென்றனர்.

ஊர்கோலம் முடிந்தது. கண்டசியாக ஜமீன்தாரின் வண்டி அரண்மனையின் முன் மண்டபத்தி (Portico)ல் வந்து நின்றது. எவ்வளவு சமாதானம் செய்துகொண்டாலும், அவரது அகத்துள்ள கவலையை முகம் தெரிவித்தது. யந்திரகதியால் நடத்தப்பட்ட உருவம்போல ஜமீன்தார் அவ்வண்டியினின்றும் எழுந்து இறங்க ஆரம்பித்தபோது, படி தவறிக் கால்வைக்கவே திடீரென்று கால்வழுவி முழங்கால் வளைந்து வாயிற் படியில் விழ்ந்துவிட்டார். "ஹா! ஹா! ஹா!" என்ற சத்தம் எங்கும் பரவிற்று. மனக்கலக்கத்தால் தம் நினைவு தவறி விழுந்தவராயினும், ஏதோ தற்செயலாய்க் கால்வழுவி விழ்ந்தவர்போல பாவனை செய்துகொண்டு எழுந்து மற்ற காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தார். ஆங்குள்ளோர் 'இதென்ன சகுனத் தடை?' என்று மனங்கலங்கினார்கள். ஒருவாறு அன்று பகலில் நடக்கவேண்டிய காரியங்கள் நடந்தேறின.

மாலை நாலு மணிக்குக் கொலுமண்டபத்தில், பிரபுக்களும், துரைமார்களும், உத்தியோகஸ்தர்களும், தங்கள் அந்தஸ்துக்குத் தக்க உடை தரித்து, வரிசையாய் அமர்ந்திருந்தார். அன்று அவ்வேளை நடக்கவேண்டிய விஷயங்களெல்லாம் நடந்தபிறகு, கலெக்டர் துரையவர்கள் பின்வருமாறு உபசாரமாய் ஜமீன்தாருக்கு வந்தனமளித்தார்.

"ஸ்ரீமதிகாள்! ஸ்ரீமான்காள்! இன்று மாலை இப்பெரும் ஸபையோர்களின் பிரதிநிதியாக எனது நண்பர், இம்மணிபுரம் மஹாராஜா அவர்களுக்கு உபசார வந்தன மளிக்கும் கௌரவம் எனக்கு ஏற்பட்டது என் பாக்கியமென்றே எண்ணுகின்றேன். ஸ்ரீமான்களே! கொஞ்சகாலமாவது நமது ஜமீன்தாரவர்களின் பழக்கமுள்ளவர்கள், இம்மஹானுபாவனுடைய அன்பும் பெருந்தன்மையும் உத்தமகுணங்களும் கவனியாது இருக்கமாட்டார்கள். ராஜபக்தியும், குடிகளிடத் திரக்கமும், தன் அந்தஸ்துக்குத் தக்க கௌரவ புத்தியும், உயர்ந்த கல்வியும், உயர் வகுப்பினர் ஸங்கமும் வாய்ந்த நமது நண்பர், இம்மதுரை ஜில்லாவுக்கே—ஏன், இச்சென்னை ராஜதானிக்கே—ஓர் திலகமாய் விளங்குகின்றார்.

இன்று காலை ஊர்கோலம் முடிந்ததும், நமது நண்பர் வண்டியினின்றும் தவறி விழுந்தவராயினும் யாதொரு காயமுமில்லாது தப்பினதைப்பற்றி நாம் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஸ்ரீமான்காள்! இன்னொரு ஸந்தோஷ ஸமாசாரம்! நமது நண்பர் இதுவரை விவாஹமில்லாமல் இருந்து—அடுத்த வெள்ளிக்கிழமை அவருக்கு விவாஹம் நடக்கப்போவதைக் கேட்க நாமெல்லோரும் ஸந்தோஷமடைகிறோம்.

ஸ்ரீமான்காள்! நமது நண்பரின் உத்தம குணங்களை, இந்நாட்டிலுள்ள இதர ஜமீன்தார்களும் அனுஸரிக்குமாறு, நமது நண்பர் ஓர் உதாஹரணமாய் நீடூழிகாலமாய் எக்காலமும் ராஜபக்தியும், குடிகளிடத்தன்பும் வாய்ந்தவராய் ராஜ்யபரிபாலனம் செய்து வருவாராக!”

ஆங்குள்ளோர் யாவருக்கும், பூமாலைகள், பூச்செண்டுகள், சந்தனங்கள், தாம்பூலங்கள் வழங்கப்பட்டன. கலெக்டர் முகமலர்ச்சியுடன், ஜமீன்தாருக்கும், ஆங்கு வந்திருந்த கனவான்களுக்கும் பரஸ்பரம் பரிசயப்படுத்திவைத்தார்.

இவ்வாறு கோலாகலமாய் நமது மணிபுரம் மஹாராஜாவின் மகுடாபிஷேக மஹோத்ஸவம் நடந்தது.

சிற்சில சமயங்களில் தோழி கமலா மூலமாய்க் கடிதப் போக்குவரவுகள் உண்டு. அவைகளைக் கண்டதும் மாதவன் தன் மெய்க்காதலியை நேரில் கண்டதுபோல அடிக்கடி பார்ப்பதும், கண்களில் ஒத்திக்கொள்ளுவதும் முத்தமிடுவதுமாய் அடிக்கடி ஆனந்த பரவசனாவான். மாலினியொருத்தி நிமித்தந்தான் மாதவன் ஆங்கு அவ்வளவு துன்பங்களின் மத்தியில் காலங்கடத்திவந்தான்.

மாலினிக்கும் மணிபுரம் மஹாராஜாவுக்கும் விவாஹ மஹோத்ஸவத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் எவ்வளவோ சீக்கிரமாய் நடந்துவருகின்றன.

மாலினி என்ன செய்வாள்! பாவம்! தன் மனத்துள்ளதை மனதாரத் தெரிவித்துச் சமாதானமடையத் தாயார் இருக்கின்றாளா?

தினகரன் எவ்வளவோ புத்திமதி கூறியபோதிலும், தன் கௌரவத்துக் கேற்ற ஸம்பந்தம் செய்வதிலேயே மனமுடையவன். பாலூர் மஹாராஜாவும் காலதேச வர்த்தமானங்களை யனுசரிப்பதே புத்தித் திறமையென்று எண்ணி, 'மாலினீ பெண் பேதமையாற் பிதற்றுகின்றாள்' என்று அவள் மனவேதனையை அலட்சியம் செய்துவிட்டு, மணிபுரம் மஹாராஜாவுக்கே தன் புதல்வியை மணம்புரிவிப்பதாய்த் தீர்மானித்துவிட்டார்.

ஸ்திரீகளின் வாழ்வு ஓர் பூங்கொடி போன்றது. தான் பிறந்த விடத்து எவ்வளவோ அன்புடன் வளர்ந்து வந்தாலும், தக்க பருவம் வந்த காலத்தில், தனக்குரிய ஓர் ஆச்ரய விருக்ஷத்தைத் யடைந்தால், அக்கொடி அதைப் பலவாறு சுற்றிப் புஷ்பித்துத் தானும் மலர்ந்து அம் மரத்தையும் மலரச் செய்வதுபோல, பெண்களும், தங்களுக்குப் பருவம் வந்தகாலத்தில், தங்கள் மனதுக்கிசைந்த காதலனைக் காமுறுகின்றார்கள். அவர்கள் இச்சைப்படி யடைந்து விட்டால் தாங்களும் சுகமடைவதல்லாது, தங்கள் காதலர் மனதுக்கும் ஓர் இன்ப விளக்குப்போல் விளங்குவார்கள்.

சரியான ஆச்ரய விருக்ஷமற்ற பூங்கொடியானது, தரையிலே படர்ந்து, கால்களால் மிதியுண்டு, கொஞ்சமேனும் செழிப்பற்று வாடி வதங்குவதுபோல, மனதுக்கிசைந்த காதலனையடையா மங்கையரும், தங்கள் வாழ்நாளெல்லாம் வீண் நாளாயினவென்று மனம் நொந்து, உலகத்தையே வெறுத்து வாடுகின்றார்கள். மாலினியின் கதியும் இவ்வாறே முடிந்தது. எவ்வளவோ செல்வவானான மணிபுரம் மஹாராஜனை மணம்புரிய மனம் சகியாதவளாயினும், 'பித்ரு பக்தி'யெனும் பெரும் தர்மத்திற்குக் கட்டுப்பட்ட அம் மாது சிரோமணி "சரி! உங்களிஷ்டம்" என்று சொல்லிவிட்டு, (மனதுக்குள்) "என் தலைவிதி இவ்வளவு தான். அன்று எழுதியவன் அழித்தெழுதப் போகிறானோ?" என்று தன்னையே நொந்துகொண்டாள்.

# ஆறாவது அத்தியாயம்.

## திகில்.

## Terror.

தர்பார் தினமுதல், பல விடங்களிலிருந்தும் அநேக நண்பர்களும், இதர ஜமீன்தார்களும், பல கனவான்களும் மணிபுரம் வந்து நமது மஹாராஜாவைக்கண்டு பரஸ்பரம் மரியாதை கொண்டாடி, சிநேகம் பாராட்டிப்போவதும், சாதாரணமானவர்கள், நமது ஜமீன்தாரவர்கள் பேட்டி பெற்று, அதிசயவஸ்துக்களைக் காணிக்கையாகச் செலுத்தி தயவு சம்பாதித்துச் செல்லுவதும், நானாவித வித்தைக்காரர்கள், வாத்தியக்காரர்கள், ஸங்கீதவித்துவான்கள் முதலான அநேக வித்துவான்கள் தங்கள் தங்கள் அருமையான வித்வத்தை அரங்கேற்றிப் பரிசுபெற்றுச் செல்லுவதும், பல தமிழ் வித்துவான்கள் ஜமீன்தாரவர்கள் மேல் கவிகள்பாடிச் சம்மானம் பெற்றுச் செல்லுவதும் இவ்வாறு மணிபுரத்தில் ஒவ்வொரு தினமும் காலை முதல் மாலைவரை உத்ஸவமாகவே இருந்தது.

அகணித குணகண, ஸர்வ வித்யா ஸர்வசாஸ்திர ஸர்வகலா பாரங்கத,சதாவதானம், கவிகுஞ்சரம் ஜகந்நாதகவிராயரவர்கள் நமது ஜமீந்தாரவர்கள் சந்திரவம்சத்திலிருந்து ஸாக்ஷாத்தாய் உதித்து, இக்கலியுகத்தில், தர்மம், ஸத்தியம் என்பவைகளே ஒருருக்கொண்டு அவதரித்தவர் என்றும், ஜகத்துக்கே ஓர் திலகம்போல், அக்ஷரலக்ஷம் கொடுத்த போஜ மஹாராஜனே மறு அவதாரம் செய்தவரென்றும் ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களும், அவரது பாதாரவிந்தங்களில் காணிக்கைகள் செலுத்தப்பெற்றவராயும், அம் மன்னவர்கள், நமது ஜமீன்தாரவர்கள் பேட்டிக்கு ஆசார வாசலில் நூற்றுக்கணக்காகக் காத்துக்கொண்டிருக்கும் அதிசயத்தை அழகாக வியந்து, வர்ணித்துச், செந்தமிழில் செய்யுட்கள் பாடி நமது ஜமீன்தாரவர்களிடம் சம்மானம் பெற்றும், திருப்தியடையாமல் தன் கவித்திறமையையும், அருமையையும் அறியவல்லவர் இந்த ஜம்பூத்தீவிலேயே இல்லையே யென்று மனம் நொந்துபோய்ச் சேர்ந்தார்.

தர்பார் நடந்த மூன்றாம் நாள் மாலையில் நமது ஜமீன்தாரவர்க ளும், பாலூர் மஹாராஜா அவர்களும், அரண்மனைக்கு அரை மைல் தூரத்திலுள்ள ஓர் அழகிய பங்களாவின் உப்பரிகையில் ஓர் ஸோபா வில் சாய்ந்துகொண்டு ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள். சற்றுதூரத்தில் வீரவேடம் பூண்டு, உடைவாள் தரித்துத் தினகரன் அங்கும் இங்கும் சிம்மக்குட்டிபோல் உலாவிக்கொண்டிருந்தான்.

மணிபுரம் ஜமீன்தார்:— 'என்ன! அண்ணு! எல்லாம் ஈசன் செயலே! அன்று எழுதினவன் அழித்து எழுதப்போகிறானு? உங்க ளுக்குப் 'ப்ரீவி கௌன்ஸிலில், கேஸ்' நிச்சயம் ஜயிக்கும். அதற்கு ஆக்ஷேபணையேயில்லை. தடையேயில்லை. குட்டிச்சுவரில் முட்டிக் கொள்ள வெள்ளெழுத்தா? அதற்காகக் குழந்தை கல்யாணத்தை— மாலினிக்கும் வயதாய்விட்டது. சரியான காலத்தில்—"

பாலூர் ஜமீன்தார்:—"அதைப்பற்றி யொன்றும் நான் சொல்ல வில்லையே. அந்தக் கல்யாணம் நடக்கவேண்டியது தான்———"

மணிபுரம் ஜமீந்தார் மனம் சற்று சமாதானமடைய— "ஆ! அதுதான் சொன்னேன். வேண்டிய கார்யங்களெல்லாம் யத்னம் செய்து அநேகமாய் பூர்த்தியாய்விட்டது. 'சுப:சீக்ரம்' என்று யத்தனித்த கார்யம் நிறைவேறவேண்டுமல்லவா?—அதைப்பற்றி—"

பாலூர் ஜமீன்தார்:—விவாஹ விஷயத்தில் ஆக்ஷேபணையே இல்லை. குழந்தை மாலினீயின் விவாஹம் நடக்கவேண்டியதுதான்—ஆனுல்-"

மணிபுரம் ஜமீன்தார் மறுபடி திடுக்கிட்டு ஒன்றும் சொல்லத் தோன்றாதவராய்த் திகைத்தார். சற்று தூரத்தில், இவைகளை யெல் லாம் கவனித்துக்கொண்டு உலாவிக்கொண்டிருந்த தினகரன் திடுக் கிட்டுத் திரும்பி, இவர்களண்டை யோடிவந்து! "என்ன! அண்ணு! இப்படிப் பேசுகிறீர்கள்! விவாஹ விஷயந்தான் தீர்மானமாய்விட் டது. உங்கள் மனதிலிருப்பதென்ன? நாமும் நம் அந்தஸ்துக்குத் தகுந்தபடி நமது ராஜ்யத்தால் விவாஹம்—."

மணிபுரம் ஜமீன்தார்:—(மறுபடி முகமலர்ச்சியுடன்,) "அண்ணு! பார்த்தீர்களா! தாங்கள் இவ்வளவு வித்யாஸம் பாராட்டிவிட்டீர்களே! என் நகர் வேறு தங்கள் நகர் வேறு? எல்லாம் தங்களதே! எப்

பொழுது மாலினீக்கு விவாஹம் ஆயிற்றோ அப்பொழுதே இஜ் ஜமீன்தாரி முழுமையும் அவளுடையதே! அவள் ஜமீன்தாரி, தங்களுடையதே. மாலினீக்குச் சேரவேண்டிய நகரிலேயே அவளுக்கு விவாஹம் நடப்பதில் கௌரவக்குறைவு என்ன இருக்கிறது?" என்று சொல்லிவிட்டு ஏதோ தர்க்க சாஸ்திர (logical) ரீதியாய்த் தான் பேசிவிட்டதாக நினைத்துச் சந்தோஷத்துடன், தன் பேச்சுத் திறமையை எவ்வளவுவரை, பாலூர் மஹாராஜாவும் தினகரனும் கவனித்து மெச்சுகிறார்கள் என்று அறியும்பொருட்டு அன்னவர்கள் முகங்களை முறையே நிமிர்ந்து பார்த்தார்.

இவர்கள் இவ்வாறு ஸம்பாஷித்துக்கொண்டிருக்கையில் அடைப்பக்கார சோணை இவர்களிருந்த அறைக்குள் ப்ரவேசமாய், நமது ஜமீன்தாரை நோக்கிக் கும்பிட்டு, வாய்பொத்தி "மஹாராசா!—தலைவன்க வந்திருக்காங்க,—ஏதோ அவசரமாம்—கட்டாயம் மஹாராசாவைக்கண்டு பேசணுமாம்—' என்று சொன்னான்.

மணிபுரம் ஜமீன்தாரின் உடல் திடீரென்று நடுக்கமுற்றது. 'இவனாடா அவன்? பூஜை வேளையிலே கரடியை ஓட்டிவிட்டாப் போலே' என்று முணுமுணுத்துக்கொண்டு, என்ன பதில் சொல்லுவதென்று தெரியாமல் திகைக்கலானான்.

சோணை சொன்ன வார்த்தைகளையும் அவைகளைக் கேட்டதும் மணிபுரம் ஜமீன்தாரின் முகம் மலர்ச்சியிழந்து கறுத்ததையும் கண்டு, என்ன விசேஷமிருக்கலாமென்று பாலூர் ஜமீன்தாரும் தினகரனும் சந்தேகிக்கலானார்கள்.

பாலூர் ஜமீன்தார்:—" ஏன்! அவசர கார்யம்—ராஜாங்க காரியமிருக்கலாம். அதைப்போய்க் கவனிக்கிறதுதானே! அல்லது நாங்கள் சற்று வெளியே சென்று உத்யானவனத்தில்—மாலைவேளையானதால்—உலாவித்திரிந்து வருகிறோம். உத்தரவு கொடுங்கள்." என்று சொல்லி ஆஸனத்தைவிட் டெழ ஆரம்பிக்க

மணிபுரம் ஜமீன்தார்:—"இல்லை! இல்லை! சற்று இருங்கள்!" என்று சொல்லித் தடுத்துவிட்டுச் சோணையை நோக்கிப் பதிலுரைக்க ஆரம்பித்தார்.

இதற்குள் அவ்வுப்பரிகைக்கு ஏறக்கூடிய படிவரிசைகளில், 'திட், திட்' என்று காலடி சத்தமும், 'கட், கட்' என்று தடிகளின் சத்தமும் கலந்து கலந்து கேட்டன. ஜமீன்தார் உடல் முழுமையும் மின்சார ப்ரயோகமானதுபோல் நடுநடுங்கிற்று. உடனே, கார்மேகம் போல் கறுத்துப்படர்ந்த மார்பும், உயர்ந்து பருத்த சரீரமும், உருண்டு திரண்டு முழங்கால்வரை தொங்கும் கைகளும், இடுப்பில் வெற்றிலைப் பையுடன் கட்டிய வேஷ்டியும், கறுத்து, வளைந்து, இருகன்னங்களிலும் செழிப்பாய்ப் படர்ந்து வளர்ந்து முறுக்கி விடப்பட்ட பயங்கரமான மீசைகளும், வாய் நிறைய யடக்கியுள்ள புகையிலை வெற்றிலைத் தாம்பூலமும், தலை நிறைந்து உயரமாய்க் கட்டப்பட்ட தலைப்பாகையும், உள்ள இருவர் கையில் ஆறடி யுயர முள்ள தடிபிடித்து, வரும் வழியிலெல்லாம், தாம்பூலத்தைத் துப்பிக்கொண்டு பிரவேசமானுர்கள்.

அவர்களைக் கண்டதும் நமது மணிபுரம் ஜமீன்தாரின் 'ஸப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன, இன்னது செய்வது, இன்ன சொல்லுவது என்று தோன்றுதவராயும், வந்தோரை மரியாதையாய் 'வா' என்று கூடச் சொல்ல நாவெழாதவராயும், விலுவிலுத்து அப்படியே 'ஸோபா'வில் சாய்ந்தார்.

"என்ன! இவர்கள் யாதொரு மரியாதையுமில்லாமல் இவ்வளவு தடித்தனமாய் வருகிறுர்கள்" என்று பாலூர் மஹாராஜாவும் தினகரனும் அதிசயத்துடன் சந்தேகித்தார்கள். தினகரன் இளமீசை படபடவென்று துடித்தது. அவன் வலக்கை விரல்கள் அவனறியாமலே உடைவாளின் பிடிமீது நாடின.

வந்தவர்கள் கள்ளன் கோட்டைத் தலைவர்கள். திம்மன் பொம்மன், என்ற சகோதரர்கள். அறைக்குள் பிரவேசித்ததும், பரஸ்பரம் யாதொருவிதமான உபசாரமுமின்றியே, மணிபுரம் ஜமீன்தார் அருகில் போட்டிருந்த காலியான 'ஸோபா'வில் உட்கார்ந்தார்கள்.

மணிபுரம் ஜமீன்தார், சற்று தைரியப்படுத்திக்கொண்டு, பயக் குறிகளுடன்கூடிய தன் வதனத்தை வந்தவர்கள்பேரில் திருப்பிக் கொண்டு, "என்ன! திம்மத்தேவரே! என்ன? நான் சொல்லியனுப்பிக்குமுன் வந்துவிட்டீரே? கொஞ்சமேனும் ஜமீன்தாரென்ற மரி

யானை தெரியவேண்டாமோ உம்க்கு—?" என்று தீனமான குர லுடன் நடுநடுங்கி வினவ,

பாலூர் மஹாராஜாவும், தினகரனும், இஃதென்ன ஆச்சரியம், வந்த பயல்கள் மரியாதைத் தப்பாய் நடப்பதும், மணிபுரம் ஜமீன் தார் இவ்வளவு பயபக்தியுடன் வினவுவதும், ஏதோ அதிசயமாய்த் தானிருக்கின்றது" என்று திகைத்தார்கள்.

இதற்குள், தலைவர்களிருவரும் 'இடியிடி' யென்று குலுங்கச் சிரித்துக்கொண்டு, தங்கள் தடிகளால் ஓங்கித் தரையில் தட்டவே, வெண்கல வார்ப்புப்போன்ற அக்கட்டிடம் முழுதும் 'கிண் கிண்' என்று எதிர் ஒலித்தது.

திம்மன்:—(குலுங்க நகைத்துக்கொண்டு) "ஓஹோ! கிட்ண ராஜரே! நீரு மஹாராசாவாயிட்டீங்களோ! அது தான் ஒரு முழம் கொம்பு, கூடஇத்தனே முளைத்திருக்கீங்க!" என்று பரிஹாஸமாய்ப் பேசினான். கிருஷ்ணராஜன் முகத்தில் களேயே குன்றிவிட்டது.

அருகில் சிம்மக்குட்டிபோற் கோபாவேசத்துடன் நிற்கும் தின கரன், தன் உடைவாளை உருவி 'கிறு கிறு'வென்று சுழற்றித் திம் மன் மார்புக்கு நேராகப் பிடித்துக்கொண்டு, அடே! தேவ! நீங்க ளிருவரும் அக்கிரமமாய், யாதொரு மரியாதையும், பயபக்தியு மின்றி இவ்வறைக்குட் பிரவேசித்தது மல்லாமல், மரியாதைத்தப் பாய்ப் பிதற்றவும் துணிந்தீர்கள்! இந்தக்ஷணமே நீங்கள் இவ் வறையை விட்டு வெளியேறாவிட்டால் உங்களிருவரையும் இக்கத்திக் கிரையாக்கி விடுவேன்" என்று கோபாவேசத்துடன் கர்ஜிக்க,

தலைவர்கள் எழுந்து தங்கள் தடிகளைத் தலைக்குமேலே சிலம்பம் ஆடுவதுபோலச் சுழற்ற ஆரம்பித்தார்கள்.

இதற்குள் பாலூர் மகாராஜா இவ்விருதிறத்தாரையும் தடுத்து நல்லவார்த்தை சொல்லிச் சமாதானம் செய்தார். மணிபுரம் ஜமீன் தார் யாதொன்றும் தோன்றாதவராய் மந்திரத்தால் கட்டுண்டவர் போலச் சோபாவிற் சாய்ந்தபடியே அக் கொடுங்காட்சியைக் கண் ணுற்றுக் கற்சிலைபோல் அமர்ந்திருந்தார்.

"சரி! பார்த்துக்கொள்ளுவோம்!" வாடா போம்ம! என்று தன் தம்பியை யழைத்துக்கொண்டு, திம்மன் திடீரென்று அவ்வறையை விட்டு வெளியேறிச் சென்றான். மற்ற மூவரும் யாதொன்றும் சொல்லத் தோன்றாதவர்களாய், "இதென்ன விபரீத ஸம்பவம்! இது கனவுபோலத் தோன்றி மறைந்ததே!" என்று மனத்திகிலடைந்தார்கள்.

இந் நிலைமையில் "ஐயோ! ஐயோ!!" என்ற சப்தம் உத்யான வனத்தினின்று கிளம்பிற்று. 'இஃதென்ன! கமலாவின்சப்தமல்லவா!" என்று அறிந்து அச் சப்தம்வந்த திசைநோக்கி மூவரும் விரைந்தோடி உத்யானவனம் வந்து, "என்ன?" வென்று கமலாவை விசாரித்தார்கள்.

கமலா:—"ஐயோ! பாவிகள் நமது மாலினியை பலாத்காரமாய்க் குதிரைமீது ஏற்றிக்கொண்டு மேற்குத்திசை நோக்கிச் செல்லுகிறார்களே! ஐயோ! ஐயோ! என்று விம்மி விம்மிக் கதற ஆரம்பித்தாள். ஒரு க்ஷணநேரங்கூடத் தாமதிக்கவாவது இன்ன செய்வதென்று யோசிக்கவாவது அவகாசமில்லை.

மணிபுரம் ஜமீன்தார்:— "சோணை! கொண்டுவா குதிரைகளை! நமது புலிகுத்தி வீரன்களை யனுப்பு! அந்தோ ஓடுகின்றார்களே அவன்களைப் பிடிக்கச்சொல்" என்று ஆக்ஞாபிக்கச் சிறிது நேரத்துக்குள் ஜேணம்பூட்டிக் குதிரைகள் தயாராய் வந்து சேர்ந்தன. தினகரன் ஓர் துரகத்தில் பாய்ந்து ஏற மணிபுரம் ஜமீன்தாரும் மற்றோர் குதிரைமீது ஏறிக்கொண்டார். உடனே புலிகுத்தி சிப்பாய்களில் 20 பேர்கள் துரகாரூடராய்த் தடிகளையும் கத்திகளையும் ஏந்திக்கொண்டு வந்துசேர்ந்தார்கள். இதற்குள் தலைவர்கள் மாலினியைத் தூக்கிக்கொண்டு அரைமைல் தூரம்வரை போய்விட்டார்கள்.

அவர்கள் பக்கத்திலும் 20 ஆட்கள்வரை யுத்தஸந்நத்தர்களாய் வந்திருப்பதாய்த் தெரிந்தது.

மணிபுரம் ஜமீன்தாரின் சிறு சைந்யமானது தலைவர் சைந்நியத்தைத் துரத்திக்கொண்டு புறப்பட்டது. ஆனால் துரத்துபவர்கள்

குதிரைகள் உயர் இனமானதால், வேகமாய்ச் செல்லவே, கடைசியாகத் தலைவர் சைந்நியத்தை அநேகமாய் நெருங்கிவிட்டார்கள்.

தலைவரிருவரும் திரும்பிப்பார்த்து இனி ஓடுவதிற் பயனில்லையென்று உணர்ந்து, தங்களில் அதிக நம்பிக்கையுள்ளவர்களும், அதிக பலசாலிகளுமான மூத்தன், பேத்தன் என்ற இருவர்களிடமும், மாலினீயை ஒப்புவித்து, 'நீங்கள் ஜாக்ரதையாய் கோட்டை போய்ச் சேருங்கள்' என்று அனுப்ப, அவ்விருவர் மாத்திரம் மாலினீயைத் தூக்கிக் கொண்டு, மற்றவர்களிடமிருந்து பிரிந்து அதிவேகமாய்க்கோட்டை நோக்கிச் சென்றார்கள்.

உடனே, திம்மன் மற்றவர்களைநோக்கி "அடேடே! பயன்களா! நம்ப கருப்பன் ஆணை! உயிர் போனாலும் போகுது. இந்தப் பயல்களை விடாதேயுங்கள்" என்று கர்ஜிக்க, மற்றவர்கள் திடீரென்று திரும்பி நிற்கவே, ஜமீன்தார் சைந்நியமும் வந்து எதிர்த்தது. இக்கூட்டத்தில் மாலினீயைக் காணாததினால் ஜமீன்தாரும் தினகரனும் நாற்புறமும் திரும்பிப்பார்க்கவே சற்று தூரத்தில் இரண்டு குதிரை வீரர்கள் பலாத்காரமாய் மாலினீயைச் சுமந்து செல்வதையும், மாலினீ கதறுவதையும் கண்டார்கள். "இப்போது இவர்களுடன் சண்டைசெய்தல் தகுதியல்ல, மாலினீயை மீட்கவேண்டியதுதான் முதற்கடமை" என்று ஆலோசித்து, தலைவர்சேனையைக் கடந்துசெல்ல ஆரம்பிக்கவே, அவர்கள் அவ்வாறு செய்யமுடியாமல் தலைவர்சேனை தடுத்துவிட்டது. இருண்ட நுழை காடானதாலும், அந்திப்பொழுதானதாலும், வேறு பாதைவழியாய்ப்போகவும் முடியவில்லை. சண்டை நடந்தே தீரவேண்டியதாய் நேர்ந்துவிட்டது. உடனே இருதிறத்தாரும் சிலம்பம் பழக ஆரம்பித்தார்கள். சில குதிரைகள் வெருண்டோடி தங்கள் மீதுள்ளோரை மரங்களில் மோதித் தள்ளிவிட்டு, ஓடிப்போய்விட்டன. சிலர் மண்டையில் காயப்பட்டுக் கீழே வீழ்ந்தார்கள். தினகரன் அதிவேகமாய்த் தாண்டி பொம்மனைத் தாக்கவே, அவன் கத்தி, பொம்மன் குதிரையின் காலைச் சேதிக்கப் பொம்மன் கீழும், அவன் குதிரை மேலுமாய்ப் புரண்டார்கள். இதற்குள் நாலுபேர்கள் ஓடிவந்து தினகரனைத் தகைய அதற்குள் பொம்மன் எழுந்து இன்னொரு குதிரைமீது ஏறிக்கொண்டான்.

இவர்கள் இந்நிலைமையில் இருக்கையில் நமது மாலினியின் கதியைக் கவனிப்போம்: முத்தன் தன் குதிரைமீது மாலினியை ஏற்றிக்கொண்டு, முன்செல்ல' பெத்தன் பின்னால் பாதுகாத்துக் கொண்டு இருவரும் 'ஓடடா ஓடடா!!' என்று கோஷித்துக்கொண்டு அதிவேகமாய்க் குதிரையை துரத்திச் செல்லுகிறார்கள். அநேகமாய் மணிபுரம் எல்லை வந்துவிட்டார்கள்.

"இனி யென்ன பயமடா நம்ம எல்லை வந்துட்டோம்" என்று முத்தன் உரக்கக் கூவினான். மாலினியோ 'ஐயோ! ஐயோ!' என்று கதறுகிறாள். "ஏண்டியாத்தே! சும்மாத்தானே?" என்று பெத்தன் சொல்ல, இருவரும் பின்னே திரும்பிப் பார்த்து யாதொரு வரும் தொடரவில்லை யென்று அறிந்து பயம் நீங்கி, அதிவேகமாய்க் குதிரைகளை ஓட்டினார்கள்.

இந்நிலைமையில் பக்கத்துப் புதரிலிருந்து திடீரென்று ஓர் ஆண் உருவம் தோன்றவே, முன்சென்ற குதிரை, சற்று வெருண்டது. ஓர் தடி 'கலகல'வென்று சுழன்று குதிரையின் முன் காலில் விழவே, குதிரை கால்கள் ஒடிந்து மண்டிபோட்டுக் கீழே வீழ்ந்தது. முத்தனும், பெத்தனும், திடுக்கிட்டுத் தம் தடிகளைச் சுழற்று முன் னமே, மாலினி 'கோ!' வென்று கதறிக்கொண்டு குதிரையினின்றும் மூர்ச்சையாய்க் கீழே சாயவே, அவளை உடனே மாதவன் தன் இரு கரங்களாலும் தாங்கி, தன் மார்பில் சாய்த்துக் கட்டிக்கொண்டு, அப் புறஞ்சென்றான். இதற்குள் முத்தன் கீழும் முத்தன் குதிரை மேலு மாகப் புரண்டார்கள். அருகிலிருந்த நமது பரதேசி, பின் வந்த பெத்தன் தலையில் தன் தடியால் ஓங்கியடிக்கவே, 'ஆத்தே!' என்று அலறிக்கொண்டு பெத்தன் கீழே வீழ்ந்தான்.

உடனே பரதேசி பெத்தனுடைய குதிரையின் கடிவாளங்களை பிடித்துக்கொண்டு, "மாதவ! இனி காலதாமதம் செய்யலாகாது! என்னென்ன நேரிடுமோ? சீக்கிரம் மாலினியை இக்குதிரைமீது ஏற்றிக்கொண்டு, இக்குறுக்குப் பாதையாய், அரண்மனை செல்" என்று ஓர் குறுக்குப் பாதையையும் காட்டினார். இதற்குள் மாலினி யும் மூர்ச்சை தெளிந்தெழவே, தான் மாதவன் மடியிலிருப்பதையும், 'அநாதைக்குத் தெய்வமே கதி' யென்றபடி, தெய்வமே மாதவன்

உருவெடுத்துத் தன்னை ரக்ஷிக்க வந்ததுபோல உணர்ந்தாள். "மாலினீ! சீக்கிரம் இக்குதிரைமீதேறு" என்று மாதவன் சொல்ல,

மாலினீ:—(கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு) "மாதவ! மாதவ! ஐயோ! உன் குரலைக்கேட்டு எத்தனையோ நாளாயிற்றே! ஐயோ! மாதவ! என் மாதவ!" என்று விம்மி விம்மியழுதுகொண்டு மாதவனை இறுகத்தழுவி, அவன் மார்புமீது தன் முகங்களைப் புதைத்துக் கொண்டு கண்ணீரை தாரைதரையாகப் பெருக்கலானாள்.

மாதவன்:—"மாலினீ இது சமயமல்ல. இருட்டாய் விட்டது. சீக்கிரம் அரண்மனை சேரவேண்டும். துஷ்டர் வசிக்கும் நுழை காடாயிருக்கிறது, சீக்கிரம்!" என்று துரிதப்படுத்தினான்.

மாலினீயும் குதிரைமீதேற, மாதவனும் வேகமாய் அதன்மீது பாய்ந்து ஏறி மாலினீயை இடக்கையால் அணைத்துக்கொண்டு, வலக் கையால் லகானைப் பிடித்துச் சாரத்தியஞ்செய்து, குதிரையை வேக மாய்த் தட்டிவிட்டான். பரதேசி சற்றுநேரம் பார்த்துவிட்டு, கீழே வீழ்ந்த முத்தனும் பேத்தனும் எழுந்திருக்குமுன் காட்டுக்குள் மறைந்தார்.

---

## ஏழாவது அத்தியாயம்.

---

### தொடர்கதை:

### Connecting Story.

தருமமே யுலகம் போற்றச் சகலகா ரணமதாகும்
தருமமே அழியா தென்றுந் தாபர மாகிநிற்கும்
தருமமே தனைவேட் டோர்க்குச் சவுக்கிய மனைத்துநல்கும்
தருமமே முத்திசேருஞ் சாதன மென்றுட் கொள்வான்.

—காசிரகசியம்.

உலகத்தில் மனிதர்கள் ஸர்வ ஜாக்ரதையாய் இருக்குங் காலத் திலும் தற்செயலாய்த் திடீரென்று பலவாறு இடையூறுகள் நேரிடு வதும், அவ் வாபத்துக்களினின்றும் தப்பிக்கும் வழி தெரியாது

தியங்கும் காலத்தில் அதினின்றும எதிர்பாராது தப்பித்து வெளி யேறுவதும், இயற்கையாய்ப் பிரதிதினமும் ஸம்பவிப்பதைக் கண் டிருக்கிறோம். அதன் காரணம் யாதென்று விசாரிக்கப்புகின், அவை யெல்லாம் அபூர்வ ஸம்பவங்கள் (Strange concidences) என்றும், அவைகளின் காரணங்களை விசாரித்தல் வீண்காலக்ஷேபம் (waste of time) என்றும் சிலர் அலக்ஷ்யம் செய்துவிடுவார்கள். ஆனால், உல கத்தில் ஸம்பவிப்பனயாவும் காரணகார்யவிதி (Law of causation)க் குட்பட்டே நேரிடுகின்றனவென்றும், மத்திய காலங்களில் எவ்வாறு தோன்றிடினும் கடைசியில் தர்மத்துக்கு நன்மையும், அதர்மத் துக்குத் தீமையுமே பலனாக வாய்க்கின்றனவென்றும், சில தத்துவ சாஸ்திர நிபுணர்கள் கூறுவார்கள்.

மேற்கூறிய ஸித்தாந்தங்களின் உண்மை எவ்வாறாயிருப்பினும், ஒவ்வொரு மனிதனிலும் அந்தர்யாமியாயுள்ள மனமும், மனதைச் சார்ந்த புத்தியும் அதி யற்புதமான யந்திரங்களா யிருக்கின்றன. அவைகள் செய்யும் அற்புதவேலைகள், பார்க்கப் பார்க்க அதிசயத் தையும் ஆச்சரியத்தையும் விளைவிக்கத் தக்கனவா யிருக்கின்றன. இனி, இப்பாவிகளின் வசத்தினின்றும் தப்புவது எவ்விதமென்று தெரியாது மாலினீ தவித்துக்கொண்டிருக்கும் நிலைமையில் "திக்கற் றவனுக்குத் தெய்வமே துணை" "தைவம் புருஷ காரணே" என்ற பழமொழிகள் மெய்யென்று நிரூபிக்க வந்ததுபோல, மாதவனும் நமது பரதேசியும் அகஸ்மாத்தாய்த் திடீரென்று அந் நடுக்காட்டில் அம் மாலைவேளையில் தோன்றி, மாலினீயைக் கொடியவர் வசத்தி னின்றும் மீட்டினதாய்ச் சொன்னோமல்லவா? அவர்கள் அவ்விடம் வந்து சேரவேண்டிய காரணத்தை யொருவாறு எடுத்துரைப்போம்:

பிரதி தினமும் போஜனமானதும், அரண்மனையில் இருப்புக் கொள்ளாது மாதவன் அவ் வரண்மனையைச் சார்ந்த பெரிய உத்யான வனத்தில் உலாவித்திரிந்து, தன் சோகத்தைச் சற்று மறந்து காலம் கழிப்பது வழக்கம்.

அன்று மாலையிலும் சுமார் 3 மணிக்கு, அவ்வாறே உலாவித் திரிந்துவிட்டுக் கடைசியாய், முந்திய ஜமீன்தாரின் ஞாபகச்சின்ன மான கோவிலண்டை வந்து, ஆங்குள்ள பிம்பங்களைக் கண்ணுற்றுத்

தாரை தாரையாய்க் கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தான். இதற்கு முன் அப் பிம்பங்களின் பூர்வகதைகளும், அம் மணிபுரம் கொலைக் கேஸும் அவனறிந்தவனாதலால், அப் பிம்பங்களைப் பார்த்தவுடன், இவ் வுலகவாழ்வின் நிலையின்மையும், திடீரென்று மனிதருக்கு நேரிடும் கொடிய ஸம்பவங்களும், அவைகளால் அவர்கள் எண்ணியிருந்த எண்ணங்களெல்லாம் திடீரென்று தீயிற்பட்ட பனிபோல் சிதைந்து போவதும், அவனுள்ளத்தே தோன்றி அவன் மனத்தைக் கலக்கத் துவக்கின.

இந் நிலைமையில் நமது பரதேசியார் ப்ரத்யக்ஷமாகி, "மாதவ! என்னப்பனே! குழந்தாய்! மாதவ! ஆஹா! என்ன ஆச்சர்யம்! :'நீ எவ்விடத்தினின்றும் உதித்தாயோ அவ்விடத்தையே நீ ஆச்ரயமடைந்தாய்! இவையெலாம் ஈசனுடைய அற்புதச்செயல்களல்லவா!" என்று மாதவனை ஆலிங்கனம் செய்து கண்ணீர் தாரை தாரையாய்ப் பொழிந்தார். முற்றத் துறந்த ஞானிபோல் நடிக்கும் நமது பரதேசி, தன் (மாதவன்) விஷயத்தில் இவ்வளவு அன்பு பாராட்டுவதையும், கேவலம் ஸாதாரண ஜனங்கள்போலக் கட்டியணைத்துக் கண்ணீர் பெருக்குவதையும், முன்பின் அறியாத தன்னிடம் இவ்வளவு விசேஷ பக்ஷமுடையவரா யிருப்பதையும் கவனித்தும், அவனைப் பார்த்துச் சொன்ன சில வார்த்தைகளையும், அவைகளின் கருத்து இன்னவென்று அறியப்படாதாயினும் ஏதோ ரகஸ்யமான அர்த்தம் இருக்கவேண்டுமென்றும் நினைத்தும் மாதவன் பலவாறு ஆலோசிக்கலானான்.

இவைகளை எல்லாம் மாதவன் முகக் குறிகளால் கவனித்த நமது பரதேசியார், மாதவனை ஒருதடவை தட்டிக்கொடுத்து "அப்பனே! குழந்தாய்! நீ ஒன்றுக்கும் கலங்கவேண்டாம்!. உலகமும் உலகத்தில் நடக்கும் விஷயங்களும் எல்லாம் மாயமாய்த் தோன்றும்" என்றார்.

மாதவன்:—"ஸ்வாமி! தாங்கள் சொல்லுவதொன்றும் எனக்கு விளங்கவில்லை. நான் யாதொரு வேதாந்தமும் படித்தவனல்லன்."

பரதேசி:—"அப்பா! வேதாந்தம் படிக்கத் தக்கதன்று. அறியத் தக்கதே. மேலும் நான் வேதாந்த (Philosophical) பரமாய் ஒன்

றும் சொல்லவில்லை. எல்லாம் மாய்ம் (Mysterious) என்றுதான் சொன்னேன். எல்லாம் இம் மண்ணுலகைப் பற்றியதே!"

மாதவன்:—இரண்டு மூன்று தடவை தன் கபோலங்களைக் கை விரல்களால் அழுத்திக்கொண்டு, மறுபடி, "ஸ்வாமி! நான் சிறியவன். தாங்கள் சொல்லுவதின் தத்துவ அர்த்தம் என் புத்திக்கெட்டவில்லை. தாங்கள் யார்? ஏதோ அநாதையான என் விஷயத்தில் தாங்கள் இவ்வளவு அன்பு பாராட்டும்படி யவ்வளவு நான் பாக்யம் பெற்றது என்ன?—".

பரதேசி:—குழந்தாய்! நீ இப்பொழுது இம்மாயங்களெல்லாம் அறியவேண்டாம். நான் இன்னாரென்றும் உனக்குத் தெரியவேண் டாம். ஆனால், ஒரு சிறு கதை மாத்திரம் சொல்லுகிறேன். (என்று சொல்லி மாதவனை மெதுவாக அழைத்துக்கொண்டு அவ்வன நடு வில் உலாவிக்கொண்டு) "டில்லியில் அரசாண்ட சக்ரவர்த்திகளில் ஒருவருக்கு, இரண்டு புதல்வர்கள். அவர்களில் மூத்தவன் மிக்க புத்திமான். ஸகல நூல்களையும் கற்றவன். ஸத்தியஸந்தன். நல்ல யோக்யன். அவன் அரசாளுவது அக்குடிகளின் பெரும் பாக்கிய மென்றே சொல்லலாம். அப்படியிருக்கக் கபடனான இளைய புதல் வன் தன் தமயனை—"

என்று சொல்லுமுன்னமே, நாம் முன் அத்தியாயத்திற் கூறியபடி மாலினியின் அழுகைக்குரல் கேட்கவே திடுக்கிட்டுத்திரும்பி, அவ ளைக் காப்பாற்றுவதற்காக இருவரும் விரைந்தோடினார்கள். மாலினி எவ்வாறு தப்புவிக்கப்பட்டாளென்றும், கடைசியாக மாதவன் ஸம் ரக்ஷணையின்பேரில் மாலினி அரண்மனைக்கு அழைத்துப் போகப்பட் டாளென்றும், முன் அத்தியாயத்தில் விவரித்திருக்கின்றோம்.

பால்யம் முதல் எவ்வளவோ நாளாய்ப் பழகி பரஸ்பரம் அன்பு விருத்தியடையப்பெற்ற இச்சிறுவர்கள் கேவலம் மனித எத்தனத் தால் சில நாட்களாய்ப் பிரிக்கப்பட்டும், அவ்வன்பு மேன்மேலும் அந்தரங்கமாகவே அதிகரித்து, மறுபடி கூடும்பொழுது இருவகைப் பட்ட (positive and negative currents) மின் ஸாரமும் இட ரென்று சேரும்பொழுது, 'பளிச், பளிச்' என்று உதயமாகும் மின் ஒளிகள் போலவும், வெகுகாலமாய்க்காய்ந்து மழைபெய்து செழித்

துத் திடீரென்று புஷ்பிக்கும் மலர்கள்போலவும் இவர்களுடைய அன்பு அனேகமான இன்ப மொழிகளாயும், ஆலிங்கனங்களாகவும், முத்தங்களாகவும், இன்னும் பலவிதமான காதற்குறிகளாகவும் வெளிப்பட ஆரம்பித்தன.

மாதவன் மாலினியைத் தன் இடதுகையால் அணைத்துக் குதிரையின் வேகத்தால், அன்னவள் கீழே விழாவண்ணம் காத்துக்கொண்டு, தன் வலக்கையால் 'லகா'னைப்பிடித்து அதிவேகமாயும், சாமர்த்தியமாயும் ஸாரத்யம் செய்து, கூடிய சீக்கிரம் அரண்மனையின் பக்கத்து வாசலண்டை வந்து, குதிரையை நிறுத்தி மெதுவாக மாலினியைக் கீழே இறக்கிக் குதிரையை ஓட்டிவிட்டு, மாலினியை இறுகத்தழுவி முத்தமிட்டு, "கண்மணி! மாலினி! என் அன்பே! என் உயிரே! நாம் இருவரும் சேர்ந்துவாழத் தெய்வ ஸம்மதமில்லை போலும்! நீ எப்படியாவது ஸந்தோஷமாய் வாழக்கேட்பதே எனக்குப்பெருத்த ஸந்தோஷம்!" என்று சொல்லிக்கண்ணீர் சொரிந்தான்.

"மாலினி:—என் மாதவ! என்ன இவ்வாறு கூறுகின்றாய்? சூரியனிடத்திருந்து ஒளியையும், சந்திரனிடத்திருந்து குளிர்ச்சியையும், பாலிலிருந்து வெண்மையையும், மலரிலிருந்து மணத்தையும், உடலினின்று உயிரையும் பிரித்து வேறாக வைக்க முடியுமோ? என் மாதவனிடத்திருந்து மாலினி பிரிந்து எவ்வாறு உயிர்த்திருப்பது?-"

மாதவன்:—"கண்மணி! நீ அவ்வாறு சொல்லலாகாது. நீ உயிருடன் இருந்து வாழ்ந்தால், உன் க்ஷேமசமாசாரம் கேட்டாவது என் பால்ய ஞாபகங்களை நினைத்து ஒருவாறு ஸந்தோஷமடைவேன். என் உயிரே உருவெடுத்தாற்போல் விளங்கும் நீ உயிர் துறப்பதென்றால், இம்மாதவன் உயிர் எவ்வாறு தரிக்கும்? ஒருக்காலும்—"

இதற்குள் சிறிதுதூரத்தில் குதிரைக் காலடிச் சத்தங்களும் மனித அரவமும் கலந்து கலந்து கேட்டன,

மாதவன்:—(மாலினியை மறுபடி வாரியணைத்து முகத்தோடு முகம் பதித்து முத்தமிட்டு) "கண்மணி! என் மாலினி! எனக்கு விடைகொடு. நீ உள்ளே போ! யாராவது பார்க்க நேரிட்டால் நாம் இந்நிலையிலிருப்பதும் கெட்டுப்போம். அன்று எழுதியவன் அழித்தெழுதப்போகிறானோ? நடக்க நடக்கப் பார்ப்போம். தைரியமாயிரு" என்று சொல்லி மாலினியை துரிதப்படுத்தி அரண்மனைக்குள்

அனுப்ப, அவ்விரு உடல்களும் பிரிந்து சென்றனவாயினும், ஊசியும் காந்தமும் போன்ற அவர்களுள்ளம் பிரிவாற்றாது வருந்தித் தவித்தன.

இதற்குள் தலைவர்களைத் துரத்திச் சென்ற நமது மணிபுரம் ஜமீன்தாரும் தினகரனும் அரண்மனை சேர்ந்ததும், மாலினீ திரும்பி வந்து விட்டதையும், மாதவனுடைய பேருதவியால் அவள் தப்பித்து வந்தாளென்பதையும் அறிந்துகொண்டார்கள். தினகரனும், அவன் பிதா பாலூர் ஜமீன்தாரும் மாலினீயின் அறையை நோக்கி விரைந் தோடினார்கள்.

நமது மணிபுரம் ஜமீன்தார் தனிமையாக ஆழ்ந்த ஆலோசனையில் மூழ்கலானார்: "எப்படியாவது யார் செயலாலாவது மாலினீ இவ்வளவாவது, பாதகர்களின் கைவசப்பட்டு மானபங்கமடையாது தப்பித்தது எல்லோருடைய பெரும் பாக்யமுமே. எனக்கும் ஓர் சந்தோஷந்தான். ஆனால் அவளைத் தப்புவிக்கும் பாக்கியம் மாதவனுக்கு நேர்ந்ததே! ஏற்கனவே என்மேல் மாலினீக்கு மெய்க்காதல் இல்லையென்று தோன்றுகின்றது. அப்படியிருக்க இவ்வளவு ஆடம்பரஞ்செய்தும் என்னால் தப்புவிக்கமுடியாமல் ஏகாங்கியான மாதவனால் தப்புவிக்கப்பட்டது, அவள் மனதில் மாதவனுடைய பெருமையையும் என்னுடைய சிறுமையையும் எடுத்துக் காட்டுமே! மேலும் காதல் என்பது தானாகவே உதிக்கவேண்டுமேயல்லாது,மனிதன் செயலால் ஏற்படக்கூடியதன்று. தவிரவும் என்ன புத்தியீனம்! மாலினி மனதைக் கொள்ளை கொள்ளும் மாதவன் இவ்வரண்மனையிலிருக்கும் வரை, அவள் எவ்வாறு அவனை மறக்கப்போகிறாள்! அவன் இவ்வரண்மனைவிட்டு இதற்கு முன்னமேயே வெளியேறி இருக்க வேண்டும்! அப்படிச் செய்யாதது நமது தவறு. ஆனால்—ஆனால்—ஆனால்—ஆனாலென்ன?, ஆனால், நமது காரியம் ஸாத்யமாவதற்கு வேண்டிய முயற்சி நாம் செய்யாது சும்மா இருந்துவிட்டுப் பிறகு நொந்து கொள்ளுவதில் பயனென்ன?" என்று பலவாறு சிந்தித்துக் கொண்டிருக்கையில் அடைப்பக்கார

சோணை:—"மஹா ராசா! யாரோ ஒரு பையன் இந்தக் கடுதாசியை மஹாராசாவிடம் கொடுக்கச் சொல்லிவிட்டுப் போனான்"

என்று சொல்லிக்கொண்டு, ஒரு 'லகோடா'வை ஜமீன்தார் கையில் கொடுத்தான்.

ஜமீன்தார் ஆவலுடன் அதை வாங்கி யுடைத்துக்கொண்டே "அந்தப்பையன் யார்? இங்கே அழைத்துவா!"என்று ஆக்ஞாபிக்க,

சோணை:—மஹாராச! கொடுத்தானே இல்லையோ பையன் விறுட்டுனிட்டு மஹாராசா வேட்டை நாக்குட்டிபோலே ஓட்டமாய் ஓடீட்டான். மஹாராசா நாய்க்குட்டி அடிமைக்குக் கூட என்னடா எண்டு சந்தேகமாயே இருந்துச்சு" என்று சொல்லி முடித்தான்.

இதற்குள் ஜமீன்தார் 'லகோடா'வை உடைத்துப்பார்க்கவே, அதில் ஊர், பெயர், தேதி ஒன்றுமில்லாமல், எழுத்துக்களும் இயற்கையாய் எழுதப்படாமல் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது:—

"ஏ சமீன்தாரே! இருவது வரிசத்துக்கு முன் நடந்ததை நினைச்சிக்கிடு. இண்ணைக்கு நடந்தது அப்படியே போகட்டும். அப்படி இப்படி எண்டு போலீசுக்குக் கிலிசுக்குச் சொல்லிக் கில்லிக்கொண்டு இருந்தியோ, அப்பறம் பாத்துக்கோ! தெரிஞ்சதை பாத்துக்கிடுதேன். உன் உயிர் என் கையிலே இருக்குது."

இதை வாசித்ததும் நமது ஜமீன்தாரின் முகம் கறுத்து வாட்ட முற்றது. கடிதத்தை மடக்கிக்கொண்டு அப்படியே சோபாவில் சாய்ந்து கண்ணீர் பெருக்கிக் கொண்டு என்னென்னவோ யோசனையில் மூழ்கலானார்.

---

## எட்டாவது அத்தியாயம்.

---

### மாறு காட்சிகள்.

### Changing Scenes.

கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினான்
கோபத்தால் நகுடனும் கோல மாற்றினான்,
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தா லழிந்தவர் கோடி கோடியே.

—விவேகசிந்தாமணி.

இந்நிலைமையில் மூன்று தினங்கள் சென்றன. நமது மணிபுரம் மஹாராஜாவின் விவாஹத்துக்கு வேண்டிய முயற்சிகள் வெகு விமரிசையாயும், ஸம்ப்ரமமாயும் நடந்து வருகின்றன. பட்டணத்தில் அநேக விடங்களில் சிங்காரமான பந்தல்களாலும், வீதிகள் எல்லாம் விதம்விதமான தோரணங்களாலும் பூமாலைகளாலும், பதாகைகளாலும், ஆலவட்டங்களாலும், தீபஸ்தம்பங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருக்கின்றன.

புறத்தேசத்தினின்றும் இவ் விவாஹ மஹோத்ஸவத்தைப் பார்க்கவரும் ஜமீன்தார்களும், ஜில்லா அதிகாரிகளும், துரைகளும், ப்ரபுக்களும் தங்கும்பொருட்டு ஆங்காங்கு தனித்தனி 'ஜாகாக்கள்' அவரவர்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி நிர்மிக்கப்பட்டிருந்தன.

சென்னை 'ஸிம்ஸன் கம்பெனி'யாரிடமிருந்து நவீன நாகரீகத்துக் கிணங்க (up to date fashion) வெகு அழகானதும்,—உயர்ந்தவில் வைத்ததும், மேகவர்ண வெல்வெட்டுகளாலும், ஜரிகை ஓரங் (borders) களாலும் விதம் விதமான மலர்கள் கொடிகளாலும், அலங்கரிக்கப்பட்டதும், முத்துக்கள் ஜாலர்கள் ரசக்குண்டுகளால் அலங்கரிக்கப்பட்ட விதானங்களுடனும் கூடியதுமான'பீடன்'ஒன்று ரூ 2750-க்கு இக் கல்யாண ஊர்கோலத்துக்கென்றே 'ஸ்பெஷல் ஆர்டரின்'பேரில் புதிதாய்த் தயாரிக்கப்பட்டு, வந்திருக்கின்றது.

அவ் வண்டிக்கும் நமது மஹாராஜாவின் அந்தஸ்துக்கும், தக்கதான இரண்டு உயர்வகை ஆஸ்த்ரேலிய மட்டங்கள் ரூ 3500-க்கு வாங்கப்பட்டு அவைகளும் வந்து சேர்ந்தன.

துரைகளுக்கும், துரைபோல் நடிப்போர்க்கும், தாங்கள் ஸாக்ஷாத் துரைகள் தானென்று மதித்துக்கொள்வோர்க்கும், அந்தஸ்துக்குத் தக்கபடி "டி. ஏன்ஜலிஸ்" கம்பெனியாரிடமிருந்து 5000 ரூபாய் தீனிக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டு அக்கம்பெனியார் தங்கள் வேலையிலிருக்கும் பாகசாஸ்திர நிபுணரான ப்ரான்ஸ்தேசக் குசினிக்காரச் சிரேஷ்டனொருவனைத் தக்க ஸிப்பந்திகளுடன் அனுப்ப அவனும். மணிபுரம் வந்து சேர்ந்தான்.

நானாதேசங்களினின்றும், நானாவித உயர்ந்த வாத்தியக்காரர்களும், பாட்டுக்காரர்களும், அஷ்டாவதானம், சதாவதானம், இந்திரஜாலம், மஹேந்திரஜாலம், நாட்டியம், நாடகம், ஸர்க்கஸ் முதலான பல வித்தைகளிற் கைதேர்ந்த வித்வான்களும், வந்து சேர்ந்தார்கள். செந்தமிழிற் சிறந்த அகணித குணகண ஸமஸ்த ஸாமந்த ஸீமந்த ஸாம்ராட் ராஜாதிராஜ ஸமஸ்தான கவிச்சிங்கம், சதாவதானம் *ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீமான் நெல்லையப்பக் கவிராயரவர்களும் தமது சீடர் குழாங்களுடன் அப்பொழுது தான் விஜயம் செய்திருக்கிறார்கள். அதிகமாய் வர்ணிப்பதேன்? விவாஹ காரியங்கள் வெகு தடபுடலாய் நடந்து வருகின்றன.

“காதலும் துரோகமும் காவலுக்கடங்கா” என்ற பழமொழிப் படி, இந்நிலைமையில் நமது மாதவனும், மாலினியும்,கமலாவின் உதவியால், ஸங்கேதத்தின்பேரில் அடிக்கடி ஏகாந்தமாய் ஸந்திப்பதும், காதல்மொழிகள் கூறுவதும், ரகஸ்யங்கள் சொல்லிக்கொள்ளுவதும், இன்னும் பலவிதமாய்க் கூடாலோசனைகள் செய்வதுமாய் இருந்தார்கள். இவர்கள் உள்ளத்தில் என்ன நினைத்திருக்கின்றார்களோ நாம் அறியோம். ஆனால் மாலினியும் மாதவனும், ரஹஸ்யமாய் நிசி வேளையில் அரண்மனையினின்று வெளியேறி எங்கேயாவது ஓடிப்போவது என்ற யோசனையும் செய்தனர். ஆனால், அப்படிச் செய்வது மாலினியின் உயர் பிறவிக்கும் கற்புக்கும், மாதவனுடைய ஆண்மைக்கும் பெருந்தன்மைக்கும் முற்றிலும் விரோதமென்றும், உலகத்தார் பழிக்க ஓர் இடமாகும் என்றும் பிறகு நினைத்து, அவ்வாறு செய்வது தகுதியல்லவென்று ஒருவாறு தீர்மானித்துவிட்டார்கள். பின்பு அவர்கள் என்ன தான் எண்ணியிருக்கின்றார்கள்? ஒருவேளை அவர்களுக்குள் உள்ள பரஸ்பரக் காதல் மாறிவிட்டதா? அல்ல. அவர்கள் செய்துகொள்ளும் சிங்காரச் சேஷ்டைகளைக் கவனிக்குங்கால், அக்காதல் அதிகரித்தே வருவதாய்த் தோன்றுகின்றது. அல்லது, தாங்கள் அந்த க்ஷணத்துக்கு முன் உயிர் துறந்துவிடுவதாய் வீரா

*குறிப்பு:—ஸ்ரீலஸ்ரீ. இது சீலஸ்ரீ என்னும் ஸம்ஸ்கிருத பதத்தின் மரூஉ. சீலம்—ஒழுக்கம், ஸ்ரீ—ஸம்பத்து. ஒழுக்கமே ஸம்பத்தாய்உடையவர்கள். ‘ஸ்ரீல’ என்ற பதம் இருப்பதாகத் தெரியவில்லை. எக் காரணம்பற்றியோ சீலஸ்ரீ என்னும் அழகிய பதம் ஸ்ரீலஸ்ரீ என்று உபயோகப்படுத்தப்படுகிறது.

வேசம் (Despair) பூண்டு விட்டார்களா? தர்மமே உருவெடுத்து வந்தாற்போல விளங்கும் அவர்கள் அவ்வாறு தற்கொலை செய்யத் துணியார்களே. அல்லது, ஸமயத்தில் 'மாட்டேன்' என்று மாலினி ஆக்ஷேபிக்கத் தீர்மானித்துவிட்டாளா? பித்ரு பக்தியில் சிறந்த நமது கதாநாயகி அப்படிச் செய்யத்தக்கவளல்லவே! பின்பு அவர்கள் என்னதான் எண்ணியிருக்கின்றனர்? கல்யாணக் கார்யங்களோ வெகு தடபுடலாய் நடக்கின்றனவே!

ஆஹா! 'மனம்' என்பது இருக்குமிடம் தெரியாவிடினும், அம் மனக் கோட்டைக்குள் அடக்கப்பட்டு, மற்றோருக்குச் சற்றேனும் தெரியாது எவ்வளவோ கூடமாய் காக்கப்படும் விஷயங்கள் எண்ணிறந்தவைகள் உள. 'மனம்' எனும் இவ்வதிசய இந்திரியத்தின் அமைப்பும் அதன் அற்புதச் செய்கைகளும் ஆலோசிக்க ஆலோசிக்க எவ்வளவு ஆச்சர்யத்தை விளைவிக்கின்றன! இந்நிலையில் நமது கதாநாயகர்களின் உள்ளத்தில் என்ன கள்ள எண்ணங்கள் குடிகொண்டிருக்கின்றனவென்று அறிந்து ஆவலுடன் அறிய விரும்பும் நமது நண்பர்களுக்கு த் தெரிவித்து அவர்களைத் திருப்தி செய்யப்போதுமான ஞான திருஷ்டி (Thought-reading) எனும் அற்புத சக்தியும் நமக்குக் கிடையாது. ஆதலால் நடக்க நடக்கப் பார்த்துக் கொள்ளுவோம். நிற்க.

நமது சரித்திர தினத்தின் பிற்பகல் சுமார் 3 மணி நேரத்தில் அரண்மனைக்குச் சற்று தூரத்திலுள்ள ஓர் சோலையில் ஓர் மறைவிடத்தில், மாமரத்தடியில் போடப்பட்ட ஓர் சலவைக்கல் ஆஸனத்தின் மேல் நமது மாதவனும் பரதேசியும் ஏதோ ஸம்பாஷித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பரதேசி:—"மாதவ! என் கண்மணி! நீ ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். எல்லாம் சுபமாகவே முடியும்."

மாதவன்:—"ஸ்வாமி! அது சரிதான். சுபம் என்பது மணிபுரம் ஜமீன்தாருக்கோ, அல்லது அடியேனுக்கோ?"

பரதேசி:—(புன்னகைகொண்டு) அப்பா! மாதவ! நீ நன்றாய்க் கேட்டாய்; நீ நல்ல புத்திசாலி!—என் அன்புக்கு எவன் பாத்திரனோ—அவனுக்குத்தான் சுபம்."

மாதவன்:—(சற்று சந்தேகத்துடன் திடுக்கிட்டு) "ஸ்வாமி தங்கள் அன்புக்கு அடியேன்—"

பரதேசி:—(மடமடவென்று சிரித்துக்கொண்டு,) "பேஷ் பேஷ்! அது வேறே சந்தேகமா! அப்பா! என் கண்மணி! நீ—"

மாதவன்:—"ஸ்வாமி! நல்லது! அன்று 'டில்லிசக்ரவர்த்தி—அவனுக்கு இரண்டு புதல்வர்கள்—' என்று ஏதோ கதைசொல்ல வந்தீர்கள். அதன் முடிவும், சொல்லநேர்ந்த ப்ரக்ருதமும் அடியேனுக்கு—"

பரதேசி:—(அலட்சியமாய்) "ப்ஸ்! மாதவ! எல்லாம் ஸமயோசிதமாய்ச் சொன்னால்தான் ஸ்வாரஸ்யம். ஆனாலும் சொல்லுகிறேன். இளையவன் தமயனைக்கொன்று, அவ்வபவாதம் தன்னைச் சாராவண்ணம், வெகுகாலம் துக்கம் பாராட்டி வந்ததுமன்றி தமயன் சமாதியின்மேல் பளிங்குக்கல்லால், ஓர் விசித்திரமான சமாதியும் கட்டியிருக்கின்றானும். இதெல்லாம் உனக்கென்ன கவலை!—"

இதற்குள் பக்கத்துப் பூம்பந்தலினின்றும் சலசல வென்று சத்தம் கேட்டது.

பரதேசியார்:— "நான் போய்வருகிறேன். ஜாக்ரதை! நான் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கட்டும்! ஜாக்ரதை," என்று எச்சரித்துவிட்டு, தன் 'சோட்டா'த் தடியைக் குலுக்கிக் 'கல் கல்' என்று சப்தித்துக்கொண்டு, ஆங்கோர் புதரில் மறைந்தார்.

மாதவன், தான் இதுவரை பரதேசியாருடன் செய்துவந்த ஸம்பாஷணைகளையும், தன் க்ஷேம ஸமாசாரங்களைப்பற்றி அவர் அவ்வளவு உறுதியாய் இருப்பதையும், பார்ப்போர்க்கு ஓர் பேதைபோல் தோன்றும் அவர் உண்மையில் உலக விவஹாரங்களையும், அதற்கிணங்க அப்போதைக்கப்போது நடந்துகொள்ளவேண்டிய ஸகல தந்திரங்களையு மறிந்தவராயிருப்பதையும், எல்லாம் துறந்த ஞானி போல் தோன்றும் அவர் ஏதோ மனதில் ஓர் ஸங்கல்பம் செய்திருப்பதையும், அது நிறைவேறுதற்குத் தக்க உபாயங்களைச் செய்துவருவதையும், மேலும் தன்னிடத்தில் எக்காரணம் பற்றியோ விசேஷ அன்பு பாராட்டுவதையும், தவிரவும், யாதொரு ஸம்பந்தமும், ஸந்தர்ப்பமுமில்லாமல், டில்லி சக்ரவர்த்தி கதை சொல்லியதையும் நினைத்து, இவையெல்லாம் ஓர் கனவுபோல் தோன்ற, மாதவன் சிந்தையில் மூழ்கலானான்.

இத் தருணத்திற் பக்கத்திலிருந்த பூஞ்சோலையினின்றும் நமது மாலினீயும் அவள் தோழி கமலாவும் வெளியேறி மாதவன் முன் ப்ரத்யக்ஷமானார்கள்.

ஏதோ தற்செயலாய் வந்தவள்போல பாவனைசெய்து கமலா மாலினீயை நோக்கி, 'மாலினீ! சற்று இம் மரநிழலில் சலவைக்கல்லாசனத்தில் உட்கார்ந்திரு. நான் தாமரைத் தடாகஞ் சென்று உனக்குத் தாகத்துக்குத தீர்த்தம் கொண்டுவருகின்றேன் " என்று சொல்லி மாலினீயைப் பிரிந்து மறைந்தாள்.

மாலினீ, தான் ஏகாந்தமாய் மாதவனருகில் இருப்பதைக்கண்டு, தனது அங்கங்களெல்லாம் புளகிக்க, ஆழ்ந்தயோசனையில் மூழ்கியிருக்கும் அவனண்டை சென்று, அப் பளிங்காசனத்திலமர்ந்து, தனது வலக்கையால் அவனைத்தழுவி இடக்கையால் அவன் முகத்தைத் தன் முகத்தோடு சேர்த்து காதல் பாவசையாய் முத்தமிட்டு "என் அன்பே! என் மாதவ! என்ன யோசனை? பக்கத்திலிருக்கும் மாலினியை மறந்துவிட்டாயோ!" என்று இனிமையாய் வினவ, மாதவன் கனவுகண்டு விழித்தவன்போலப் பரபரப்புடன் திரும்பிப் பார்த்து, மாலினீயை வாரியணைத்துப் பிரதி முத்தமிட்டு "என் கண்மணீ! ஏது! இந்நேரத்தில்—இவ்வெயில் தருணத்தில்—இவ்விடம் வந்தாய். நீ அரண்மனையைவிட்டு வெளியேறினவிஷயம் யாருக்காவது தெரிந்தால் மிகுந்த சந்தேகத்துக்கு இடமாகுமே! என் கண்மணீ! பயந்து பயந்து காலங்கழிக்கும்படி நமது தலையிலும் ஈசன் எழுதியிருக்கின்றானே!" என்று தீனமான குரலுடன் பிரலாபித்துக்கொண்டு, மாதவன் கண்ணீர் சொரிந்தான்.

மாலினியும் அடங்காத் துயரத்தால், தன் கண்களினின்றும் கண்ணீர் தாரைதாரையாய்ப் பெருக, மாதவன் முகத்தை நோக்கி "என் மாதவ! ஐயோ! என்னசெய்வேன்! எனக்குச் சற்றேனும் இருப்புக்கொள்ளவில்லையே! இன்றைக்கு மூன்றாம் நாள் விவாஹமாமே. கல்யாண கார்யங்கள் நடக்கும் அவசரத்தைப் பார்த்தால் என் வயிறு எரிகின்றதே! ஐயோ! உன்னை நான் காதலித்த பிறகு, அப் பாவி கையை எவ்வாறு பிடிப்பேன்?—"

மாதவன்:—"கண்ணே! நாம் என்ன செய்வோம். அன்று அவன் எழுதிய எழுத்தில் அணுவேனும் மாறாது. நாமிருவரும் காதலராய்க் கூடிவாழ்வது தெய்வஸம்மதமில்லை யென்றால், நம் முயற்சியால் என்ன செய்யத்தக்கது? ஆனால் ஒன்றுமாத்திரம் என் மனதில் தோன்றிக்கொண்டிருக்கின்றது. கடைசியில் எல்லாம் நமது இஷ்டப்படி சுபமாகவே முடியுமென்று—"

மாலினீ:—மாதவ! என் அன்பே! ஏது நீ சித்தப்பிரமைகொண்டு விட்டாயோ? ஐயோ? கேடுமேல் கேடுவிளைந்துகொண்டிருக்கும் இக்கொடுங்கோலங்களைப் பார்த்துக்கொண்டிருந்தும், கடைசியில் எல்லாம் சுபமாய் முடியுமென்ற நிச்சய புத்தி யுனக்கு எவ்வாறு உதித்தது. ஐயோ! எனக்கு ஒன்றும் நல்லதாகத்தோன்ற வில்லையே! ஒருவேளை என்மீதுள்ள காதல் மிகுதியால், இப்பொழுது நேரிடுபவற்றின் பலாபலங்களைப் பகுத்தறியும் புத்தித்திறமையையும் இழந்து விட்டாயோ? ஐயோ! என்ன செய்வேன்! செந்தாமரை போன்ற உன் அழகிய வதனம், சோகத்தில் வாட்டமுற்று விட்டதே—" என்று கதறிக்கொண்டு, கண்ணும் கண்ணீருமாய் மாதவன் மார்பிற் சாய்ந்தாள்.

நமது கதாநாயகர்கள் சோகம் என்னும் பெருங்கடலில் ஆழ்ந்து பெரும்புயல்களால் தாக்கப்பட்ட படகுபோல் நிலையற்றுத் தவிக்கும் இந்நிலைமையில் திடீரென்று தினகரன் வீரகோலத்துடன் அவர்கள் முன் ப்ரத்யக்ஷமானான். தன் அருமைச் சகோதரி மாலினியும், 'உண்ட உணவுக்கு இரண்டு நினைத்த பரமத் துரோகியான' மாதவனும், எவ்வளவோ இதற்குமுன் எச்சரித்தும், மறுபடியும் இக்கோலத்திலிருக்கக் கண்டதும், தினகரனுக்கு அடங்காக் கோபம் பொங்கி விட்டது. கண்கள் சிவந்தன. அவன் இள மீசைபடபடவென்று துடித்தது. பற்களை 'நெறநற' வென்று கடித்தான். திடீரென்று உடைவாளை யுருவிக் கிறுகிறுவென்று சுழற்றிக்கொண்டு "அடே! சண்டாளா! துரோகி! பாதகா! உன்னை இப்பொழுதே இக்கத்தியால் இருதுண்டாக்கிவிட்டு—" என்று கர்ஜித்துக்கொண்டு ஸிம்மக்குட்டி போல் துள்ளி மாதவன் ஸமீபத்தில் பாய்ந்தான்.

உடனே மாதவனும் மாலினியும் திடுக்கிட் டெழுந்தார்கள். மாதவனும் தன் உடைவாளின் பிடியை, சமயத்துக் குதவும்பொருட் டுக் கெட்டியாய் வலக் கையால் பிடித்துக்கொண்டு, தைர்யமாய்த் தினகரனை நோக்கி "தினகர! பதறாதே! நான் உனக்கு எவ்விதத்தி லும் இளைத்தவனில்லை. ஞாபக மிருக்கட்டும். நீ படித்த இடத்தில் நானும் படித்திருக்கிறேன். நீ கற்ற வித்தைகளை நானும் கற்றிருக் கின்றேன். ஆயினும், எனக்கு அன்னமிட்டு இதுவரை வளர்த்த அம்மஹானுடைய புதல்வனாய் நீ இருப்பதாலும், நாமிதுவரை சகோ தரர்போல் பால்யமுதல் பழகிவந்த வாஞ்சையாலும், உன் சொற் களைப் பொறுத்தேன். நீ பிதற்றிய மொழிகளை வேறு எவராவது சொல்லியிருப்பார்களாகில்———"

தினகரன்:—"அடே துஷ்டா! என்ன சொன்னாய்?. என்னி டத்தில் நீ தாக்ஷண்யப் படவேண்டாம். உன் சாமர்த்தியத்தைக் காட்டு. இக்ஷணத்தில் நம்மிருவரில் ஒருவராவது உயிர் துறப்பது திண்ணம்——"

மாதவன்:—"தினகர! ஆலோசித்துப் பார். நாமிருவருமே இவ்வுலகத்தில் இருக்க முடியாதா?"

தினகரன்:—"இனி யொருக்காலும் இல்லை."

இதற்குள் மாலினி சற்று தைர்யமடைந்து தினகரன் பாதங்க ளில் விழுந்து, மண்டிபோட்டு இரண்டு கால்களையும் கட்டிக்கொண்டு, சோகத்தாலும், பயத்தாலும் வாடிய தன்முகத்தை நிமிர்த்திக் கண் ணும் கண்ணீருமாய்த் தன் தமயன் முகத்தை நோக்கி "அண்ணா! அண்ணா! ஐயோ! என் முகத்தைப் பாரேன். ஐயோ! மாலினிமேல் உனக்கிருந்த வாஞ்சையை மறந்துவிட்டாயோ? அண்ணா! எவ்வள வோ அன்புடன் வாழ்ந்த நீங்களிருவரும் இவ்வாறு விரோதிகளாய் மாறியது கேவலம் என்னிமித்தந்தானே! என் உயிர் துடிக்கின்றதே! இனி என்னால் ஒரு க்ஷணமும் உயிர் தாங்க முடியாது. நான் வாழ் வது—" என்று 'கோ!' வென்று கதறினாள். இதற்குள் கமலாவும் வந்து சேர்ந்தாள்.

தினகரன்:—(தான் உயர்த்தியகத்தியை வெறுப்புடன் தாழ்த்திக்கொண்டு) "மாலினி! கமலா! நீங்கள் இருவரும் அரண்மனை செல்லுங்கள். இனி ஒருக்ஷணங்கூட இங்கே தாமதியாதேயுங்கள்," என்று கோபத்துடன் கட்டளையிட்டான்.

மாலினி:—"அண்ணா! நாங்கள் போகிறோம். ஆனால் தாங்களும் மாதவனும்—"

தினகரன்:—"'போ' என்றால் உடனே புறப்படவேண்டும். அதிகமாய் வார்த்தைகள் வளர்க்காதே! நட!"

மாலினி:—(மாதவனை நோக்கி தீனமான குரலுடன்) "மாதவ! நாம் மூவரும் சகோதரர்கள்போல் சிறிதுகாலமாவது அன்புடன் வாழ்ந்தது உண்மையானால், எனது தமயன் என்ன சொன்னாலும் நீ—"

மாதவன்:—"கண்மணி! மாலினி! எனக்குக் கொடிய விரோதியாயினும் என் மாலினிக்கு ப்ரியமானவர்களுக்கு அணுவளவேனும் கெடுதி செய்யத்துணியேன்" என்று கம்பீரமாய்ச் சொன்னான்.

மாலினியும் கமலாவும் சோகாக்னியில் மூழ்கியவர்களாய் அரண்மனை நோக்கிச் சென்றார்கள்.

---

## ஒன்பதாவது அத்தியாயம்.

---

### மேகங்கள்.

### The Clouds.

உலகம் யாவையும் ஒரு பெரிய நாடகசாலையாகவும், உலகத்திலுள்ள மனிதர்களை நாடக பாத்திரங்களாகவும், தேசகாலவர்த்தமானங்களுக்குத் தக்கவாறு உலகத்தின்கண் அடிக்கடி தோன்றும் மாறுபாடுகளை, அந் நாடகக்காட்சிகளாகவும், கவிகள் வர்ணிப்பதுண்டு. ஆனால் உண்மையான நாடகசாலைக்கும், உலகத்தில் நடக்

கும் அற்புதங்களுக்கும் அநேக வித்யாஸங்களுண்டு. நாடகசாலையில் நடப்பன யாவும், மனிதனுடைய ஆதீனமாய், 'மனிதனுடைய செய்கைகளாலேயே, மனிதனுடைய தன்னறிவுடன் நடக்க, உலக அமைப்பும் அதில் தோன்றும் மாறுபாடுகளும், எதிர்பாராது தற்செயலாய் மனித சக்திக்குட்படாது ஸம்பவிக்கும் அற்புத ஸம்பவங்களும், அவைகள் நேரிடும்காலத்தில் மனிதனுடையஅனாதமான நிலை(Helplessness)யும்,ஏதோ மனிதனுக்கும் மீறின ஓர் அற்புதசக்தி யொன்றிருப்பதாகவும், அச் சக்தியின் வழிப்பட்டே ஸகலசராசரங்களும் நடைபெற்று சலித்துக்கொண்டிருக்கின்றன வென்றும் தோன்றும். ஆனால் அவ்வாறு தோன்றும் அதிசய ஸம்பவங்களெல்லாம், ஏதாவது விதிக்குட்பட்டனவோ, அல்லது கேவலம் யாதொரு விதிக்கு முட்படாது மாயமாய் நேரிடுகின்றனவோ என்ற சங்கைகள் ஏற்படத்தக்கன. மனிதனது வாழ்வும், அவனனுபவிக்கும சுகதுக்கங்களும், தெய்வாதீனமென்று சிலரும், அவன் செய்த பூர்வகர்ம வாஸனையால் அமைகின்றனவென்று சிலரும், எல்லாம் ப்ரகிருதி விதிகளுக்குட்பட்டே நடக்கின்றனவென்றும், சமுத்திரங்களும், பெரிய அருவிகளும், மின்ஸாரங்களும், உபயோகப்படுவது போல, உலகத்திலுள்ள வையாவையும், மனிதனுடைய புத்தித்திறமையால் உபயோகப்படுத்தி அடக்கியாளப்படலாமென்று சிலரும் கூறுகிறார்கள். இவைகளில் எந்த ஸித்தாந்தம் உண்மையாய் இருப்பினும், சில சமயங்களில் திடீரென்று அதிசயமாய்ச் சிலவிஷயங்கள் ஸம்பவிப்பதும், அவைகளின் காரணங்கள் தெரியாது மனிதர்கள் தவிப்பதும், பிரதிதினமும் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

நமது மணிபுரம் மஹாராஜாவின் அரண்மனையின் ஆசாரவாசலில் இரண்டுபுறமும் இரண்டு கல்யானைகளும், அவற்றின்பக்கத்தில், ராணுவஉடையும், உருவினகத்தியும், கையுமாய் இரண்டு துவாரபாலகர்கள், கம்பீரமான பார்வையுடன் ஒருவரை யொருவர் நோக்கி நின்றுகொண்டிருக்கின்றார்கள். இவர்கள், தோள்களில் சிவப்பும் மஞ்சளும் கலந்த பட்டால் தைத்த ஓர் 'டவாலி'யும், அதில் ஒரு வெள்ளி வில்லையும் தரித்துக் கொண்டிருக்கின்றனர்.

முன் அத்தியாயத்தில் கூறியுள்ள விருத்தாந்தங்கள் நடந்து சுமார் ஒருமணிநேரமிருக்கலாம். அந்நேரத்தில், உடல் எங்கும்

காயமும் உடைகளெல்லாம் சிற்சில இடங்களில் கிழிந்தும், இரத்த வெள்ளம்பெருக, இரத்த வெறிகொண்டவன்போல் மாதவன் திடீரென்று தோன்றி, துவாரபாலகர்களை நோக்கி, 'ஏ! ஜவான்களே! சின்னராஜா இங்கே வந்தார்களா?' என்று அதிக பரபரப்புடன் வினவ, ஜவான்கள், இவனுடைய வீரகோலத்தையும், இரத்தக்கறையையும், பரபரப்பையும் கண்டு திடுக்கிட்டு, மெய்ம்மறந்து, இவன் சொன்ன வார்த்தைகள்கூடக் காதில்படாதவர்களாய், ஸ்தம்பாகாரமாய் நின்றுவிட்டார்கள். மாதவன் யாதொரு பதிலுக்கும் எதிர்பாராதவனாய்ச் சரேலென்று அரண்மனைக்குட் புகுந்து தன் அறை நோக்கிச் சென்றான்.

இதற்குள் ஆசாரவாசல் முன்னிலையில், இவ்வதிசயம் என்னவென்று ஆவலுடன் வினவிக்கொண்டு திரள்திரளாய் ஜனங்கள் கூடிவிட்டார்கள். ஜவான்களுக்கோ தங்கள் நினைவுவரச் சுமார் இரண்டு நிமிஷங்களுக்கு மேலாயின தாங்கள் பார்த்த கொடுங் காட்சியின் விவரம் இன்னதென்றும், அதன்காரணம் இன்னதென்றும் அறியாதவர்களாய்க் கண்டதெல்லாம் கனவோ என்று ப்ரமிக்க ஆரம்பித்தார்கள். மாதவன் ஒருவேளை வீரவெறிகொண்டு (running amok) யாரையாவது கொலை செய்துவிட்டு இரத்தவெறியால் இவ்வாறு ஓடுகின்றானோ, இன்னும் யாராரைக் கொன்றுவிடுவானோ என்று ஜனங்களெல்லோரும் பயந்து நடுநடுங்கி 'ஹா! ஹா! ஹா!!, என்று பயக்கூக்குரலிட்டார்கள்.

இதற்குள் தனது பொற்கதிர்களை பத்து திக்குகளிலும் வீசி உலகம் யாவையும் ஏகசக்ராதனாய் ஆள்பவன் போல் மேற்றிசையில் ப்ரகாசித்துக் கொண்டிருந்த சூர்யனது பிம்பம் திடீரென்று மேகங்களால் மறைக்கப்பட்டது. ப்ரளயகாலத்தில், இந்திரனால் விடுபட்ட ஸப்தமேகங்களோ என, மேகங்கள் கர்ஜித்து ஆகாயம் எங்கும் மறைத்துவிட்டன. இருண்டமேகங்களின் இடையிடையே பளிச், பளிச் என்ற மின்னல்களும், கட, கட, கடவென்ற இடி முழக்கங்களும் கலந்து கலந்து உண்டாயின. கடல்முழுதும் வானத்தில் தொங்குவதுபோலத் தோன்றிற்று. ஒரே தாரையாய் மழை பொழிய ஆரம்பித்தது; எதிரிகளின் பீரங்கிக்கு எதிர் நிற்கமாட்டாத

போர்வீரர்கள்போல, மனிதர்கள் நாலாபக்கமும் சிதைந்து ஓடத் தலைப்பட்டார்கள். சற்றுமுன் மனிதர் நாடாயிருந்த அம் மணிபுர மெல்லாம் நிமிஷ நேரத்தில் வெள்ளக்காடாக மாறியது.

இதற்குள் அரண்மனையெங்கும் ஒரே அலங்கோலமாகவும், அழுகைக் கூக்குரலாகவும், மனிதர்களும் பரிசாரகர்களும், சேவகர்களும், அடைப்பக் காரர்களும் முன்னேயும் பின்னேயும் கண்டவாறு பிதற்றுவதும், தங்கள் தங்கள் மனோவேதனைகளைத் தெரிவிப்பதுமாக, எங்கு பார்த்தாலும் ஒரே 'கலவரமாய்' (Confusion) முடிந்தது. "கொலை! கொலை! கொலை!" என்ற வார்த்தை ஒவ்வொருவர் நாவினின்றும் எதிரொலித்தது.

அரண்மனையில் ஒரு பெரிய அறையில் நமது பாலூர் மஹாராஜா சோபாவிற் சாய்ந்து மூர்ச்சையாய்க் கிடக்கின்றார். பக்கத்தில் மாலினி, நின்றுகொண்டு அண்ணா! அண்ணா! அண்ணா! என்று கதறுகிறாள். 'கமலா' கூடியவரை தன் மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு மாலினியைச் சமாதானம் செய்துகொண்டிருக்கின்றாள். அநேக பரிசாரகர்கள், பாலூர் மஹாராஜாவுக்கு முகத்தில் பனி நீர் தெளிப்பதும், மயில்தோகை விசிறிகளாலும், விளாமிச்சைவேர் விசிறிகளாலும் வீசிக்கொண்டிருப்பதுமாய்ப் பக்கத்தில் நிற்கின்றார்கள்.

இந்நிலைமையில் பாலூர் மஹாராஜாவுக்குச் சற்று மூர்ச்சை தெளிந்து கண்களை விழித்ததும், தன்னினைவடைந்து, "அப்பா! தினகர! தினகர! என் கண்மணி! கண்மணி" என்று கதறினார். இதற்குள் மணிபுரம் மஹாராஜா பரபரப்புடன் பிரவேசமானார். பாலூர் ஜமீன்தார் அவரை நோக்கி "என்னவென்று விசாரித்தீர்களா?" என்று வினவ,

மணிபுரம் ஜமீன்தார்:—"ஒன்றும் சொல்லுகிறானில்லை, ஏதோ இரத்தவெறியால் நரஸிம்ம மூர்த்திபோல் பயங்கரமாயிருக்கிறான். மாதவன், கேட்ட கேள்விகளுக்கு உம்முடைய ஜோலியைப்பார்த்துப் போம் என்கிறான். மாலினியும் கமலாவும் தெரிவித்த விருத்தாந்தங் களையும் இப்பொழுது மாதவன் இருக்கும் நிலைமையையும் கவனித்

தால் நாம் உத்தேசித்த பிரகாரம்தான் நடந்துவிட்டது போலிருக்கிறது" என்று பதட்டத்துடன் சொல்ல,

பாலூர் மஹாராஜா:— "அப்பா! என்னப்பனே! நான் என்ன செய்வேனடா? ஐயோ! வ்ளர்த்த கடா மார்பில் பாய்வதுபோல,— ஐயோ! ஐயோ!" என்று கதறினார். இதற்குள் துவாரபாலகர்கள் பிரவேசமாகிச் சற்றுமுன் தங்களுக்கு முன்னிலையில் நடந்த விருத்தாந்தங்களைத் தெரிவித்தார்கள். அடைப்பக்காரச் சோணை நெஞ்சும் மார்பும் படபடவென்று துடிக்கப் பெருமூச்செறிந்துகொண்டு அதிக வேகமாய் உள்ளே பிரவேசிக்க,

மணிபுரம் ஜமீன்தார்:—"சோணே! என்னவாவது சமாசாரம் தெரிந்ததா? என்று கம்பீரமாய்க் கர்ஜிக்க,

சோணை:—"மஹாராஜா! நாய்க்குட்டி உத்தரவாச்சோ இல்லையோ மூலைக்குமூலை திக்குத்திக்காய் ஆள் அனுப்பிவிட்டேன். சின்ன மஹாராசாவைக் காணவே காணோமாம். வெள்ளக்காடாக் கிடக்குதாம். சித்தாத்துக்கடவிலே இடுப்புத் தண்ணி போகுதாம். எல்லாம் அடிச்சுக்கிட்டுப் போகுதாம். வேலாமரத்தண்டை இந்தத் தலைப்பாவும், கத்திப்பிடியும் கிடந்துச்சாம். தோட்டக்கார இருளன் கொண்டுவந்தான்." என்று சொல்லிக்கொண்டு ஓர் தலைப்பாகையையும், கத்திப்பிடியையும் மணிபுரம் ஜமீந்தார்கையில்கொடுக்க, பாலூர் மஹாராஜா திடீரென்று அத் தலைப்பாகையைப் பிடுங்கிப் பார்த்து விட்டு, ஐயோ! என்குழந்தை தினகரன் தலைப்பாகையல்லவா? ஐயோ! என்னப்பா தினகர! தினகர!! தினகர!!!" என்று கதறிக்கொண்டு அப்படியே சோபாவிற்சாய்ந்து மறுபடியும் மூர்ச்சை யடைந்தார். மறுபடியும் பரிசாரகர்கள் வேண்டிய உபசரணைகள் செய்ய ஆரம்பித்தார்கள். இதற்குள் மணிபுரம்ஜமீன்தார் தன் கையிற்கொடுக்கப் பட்ட வாளின் பிடியை நுட்பமாய்ப் பரிசோதிக்க ஆரம்பித்தார். அக் கத்தியின் முன்பாதி ஒடிந்து காணமற்போய்விட்டது. அடிப்பாதி மாத்திரம் பிடியில் இருந்தது. அப்பாகத்தில் 'மாத' என்ற பெயர் வரையப்பட்டிருந்தது. இனிக் கேட்பதேன்! சந்தேகம் தெளிந்துவிட்டது. இதற்குள் பாலூர் ஜமீன்தார் மூர்ச்சை தெளிந்

கொலை" என்ற வார்த்தைகள் எங்கு பார்த்தாலும் எதிரொலிக்கத் தலைப்பட்டன. ஐயோ! ஐயோ! என்று கதறுபவர் சிலர். கண்ணுங் கண்ணீருமாய் ஜடம்போல் நிற்பவர் சிலர். 'என்னடா அநியாயம் பட்டப்பகலில்!' என்று கர்ஜிப்பவர் சிலர். பலர்பலவிதமாய்த் தங்கள் தங்கள் மனோவேதனைகளைத் தெரிவிக்க எல்லாம்சேர்ந்து ஏக 'ரகளை' யாய் முடிந்தது.

இதற்குள் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஹரிராவ், 4, 5 'கான்ஸ் டேபிள்'களுடன், கத்திகள், துப்பாக்கிகள், விலங்குகள்சகிதம் பயங் கரமான கோலம்பூண்டு, தன் மீசை பட படவென்று துடிக்கக் கோபாவேசத்துடன் பிரவேசமானார். அரண்மனை வாசல்தோறும் 'பாராக்கள்' வைக்கப்பட்டன. உள்ளே இருந்தோர் வெளிச்செல்ல முடியாமலும், வெளியேயுள்ளோர் உட்புகமுடியாமலும், ஒருவருக் கொருவர் தகவல்கொடுக்கமுடியாமல் பந்தோபஸ்துசெய்யப்பட்டது.

இன்ஸ்பெக்டர் பிரவேசமானதும், அங்கிருந்தோர் அவருக்கு வழிவிட்டு விலகிப் பக்கத்தில் ஒதுங்கி நின்றார்கள். அவர் நேரே சென்று, நமது ஜமீன்தார்கள் பக்கத்தில் நிற்க, நமது மணிபுரம் ஜமீன்தார், வாருங்கள் ஸார்! உட்காருங்கள் என்று மரியாதையாய் அழைத்து ஓர் ஆஸனத்தைக் காட்ட, இன்ஸ்பெக்டர் உட்கார்ந்து கொண்டு அதிகமாக மரியாதைகள் பரிவர்த்தனைகள் செய்யாமல் தன் கார்யத்தைக் கவனிக்க ஆரம்பித்தார். தன் உடைப்பையினின்றும் ஓர் சிறு புஸ்தகத்தை யெடுத்து, வாக்குமூலங்களைக் குறிக்க ஆரம் பித்தார். மாலினி, கமலா, துவாரபாலகர்கள், இருளன், மணிபுரம் ஜமீன்தார் முதலானவர்கள் முறையே வாக்குமூலங்கள் கொடுத்தார் கள்.

இன்ஸ்பெக்டர் தனது 'பென்ஸி'லை தன் பற்களில் வைத்துக் கடித்துக்கொண்டு இடக்கையால் தன் மீசையைக் கதிர்போல் முறுக் கிக்கொண்டு, அண்ணாந்துபார்த்துச் சற்றுநேரம் ஆழ்ந்தயோசனையி லிருந்துவிட்டுக் கடைசியாக, "சரி, மாலினி மாதவனை விவாகம் செய்துகொள்ளும் விஷயத்தில் தினகரனுக்குச் சம்மதமில்லை—செய் கை நேரத்தில்—செய்கை ஜாகாவில்,—மாலினியும் மாதவனும் தனித் திருப்பதைத் தினகரன் பார்த்துவிட்டான். அப்பொழுதே இருவர்

களுக்கும் சச்சரவுண்டாய்விட்டது. இதுவரை ஒன்று, இரண்டு ஸாக்ஷிகள் வாக்குமூலம் ருஜுவாகிறது. தினகரனைக் காணவில்லை. சிற்றாற்றில் வெள்ளம் அதிகமாய்ப் போகிறது. அதன் கரையில் வேலாமரத்தண்டை தினகரன் தலைப்பாகையும் மாதவனுடைய ஒடிந்த கத்தியும் கண்டுபிடிக்கப்பட்டது. தோட்டக்கார இருளனால்—. மாதவன் இரத்தவெறியோடு அரண்மனை புகுந்திருக்கிறான். இதற்கு ஜவான்கள் ஸாக்ஷி—ஒடிந்தகத்தி மாதவனுடையது தான்—சரி! சரி! சரி!—இப்படித்தான்—ஆமாம். இப்படித்தான்—இருக்க வேண்டும்," என்று தனக்குள் ஒருவாறு தீர்மானித்துக்கொண்டு பக்கத்திலிருந்த கான்ஸ்டேபில்களை நோக்கி, அடே 393!, 765!, 117! நீங்கள் மூவரும்சென்று மாதவனை (அரஸ்டு)பண்ணி 'போலீஸ் டேஷன்' 'லாக் அப்' பில்வையுங்கள்" என்று ஆக்ஞாபித்தார். உடனே மூவரும் பிரிந்து சென்றார்கள். இன்ஸ்பெக்டர், உடனே ஸாக்ஷிகளை நோக்கி, "நாளை ஒருவேளை துரை வருவார். தவறாமல், இதுபோலவே,—ஸாட்சி சொல்லவேண்டும்—ஞாபகம்" என்று எச்சரித்துவிட்டு மற்ற இரண்டு கான்ஸ்டேபில்களுடன் வெளியே சென்றார்.

---

## பத்தாவது அத்தியாயம்.

### பத்திரிகைகள்.

### News Papers.

இக்கொடுங்கதையின் விருத்தாந்தங்களை அக்காலத்துப் பத்திரிகைகள் ஸவிஸ்தாரமாய் தம்தம் முறை (Policy)யை யனுஸரித்து ப்ரஸ்தாபித்திருக்கின்றன. அவைகளிற் கூறப்பட்டுள்ளதை ஸம்க்ஷேபமாய் நாமும் இவ்வத்தியாயத்திற் கூறுவோம்.

### தந்தி ஸமாசாரங்கள்.

நமது சொந்த நிருபரிடமிருந்து

#### மணிபுரம் கொலை.

நேற்றுமாலை சுமார் 4-மணிக்கு, மதுரை ஜில்லா மணிபுரம் ஜமீன்தாரியில், வஸந்தவிலாஸம் பங்களாவைச் சார்ந்த சிங்காரத் தோட்டத்தில் பட்டப்பகலில் ஓர் கொடுங்கொலை நடந்ததாம்.

அடுத்த தந்தி.

கொலை செய்யப்பட்டவர், திருநெல்வேலி ஜில்லா பாலூர் ஜமீன் தார் புதல்வன் தினகரனும். கொலைசெய்தவர், அன்னவரால் அபி மானத்துடன் வளர்க்கப்பட்டுவந்த மாதவன் என்றவனும்.

அடுத்த தந்தி.

கொலைக்குக்காரணம்—இறந்தவரின் ஸகோதரி மாலினியும், மாதவனும் பரஸ்பரம் காதலித்ததும், இறந்தவரும், அவர் பிதாவும் அதற்குச் சம்மதியாது, மணிபுரம் மஹாராஜாவுக்கு அவளை விவா கம்செய்விப்பதாய் நிச்சயித்ததும் என்று சொல்லப்படுகிறது.

அடுத்த தந்தி.

செய்கை நேரத்துக்குச் சற்றுமுன், மாலினியும் மாதவனும் ஏகாந்தமாயிருந்ததைத் தினகரன் பார்க்க நேர்ந்ததாகவும், அப் பொழுது நேர்ந்த கொடுங்கோபத்தாற் கைகலந்து விட்டதாகவும்— அதன் முடிவு இக்கொலையென்றும் தெரியவருகின்றது. மற்ற விவ ரங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அடுத்த தந்தி.

மணிபுரம் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ஹரிராவ் உடனே அரண் மனை சென்று சில ப்ரதம விசாரணைகள் செய்து, மாதவனைக் கைதி செய்து இருக்கின்றாராம். நகரம் முழுமையும் துக்கத்தில் மூழ்கி யிருக்கின்றதாம்.

ஆர்யா பத்திரிகையின் அபிப்பிராயம்.

மற்றோரிடத்தில் மதுரைஜில்லா மணிபுரம் கொலைக்கேஸைப் பற்றிய தந்தி ஸமாசாரங்களை விவரித்திருக்கின்றோம். அந்த ஜில்லா வில் சென்ற இரண்டு மாஸத்துக்குள் இரண்டு கொடுங்கொலைகளும், ஒரு பெருங்கலகமும் நேர்ந்த விஷயம் மிகவும் விஸனிக்கத்தக்கதே! "அந்த ஜில்லாவில் போலீஸ் பரிசீலனை அவ்வளவாகத் திருப்திகர மில்லை" யென்றுசென்றவருஷ 'போலீஸ் பரிசீலனை அறிக்கை (Administration Report) யில் நமது சென்னை கவர்ன்மெண்டார்

அபிப்பிராயப்பட்டிருக்கும் விஷயத்தை முன்னமேயே இப்பத்திரிகையின் மூலமாய் நமது நண்பர்களுக்குத் தெரிவித்திருக்கின்றோம் ..............இந்த சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயமும் நாம் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். உயர்ந்த சம்பளங்கள் கொடுத்தால் தான் தக்க மனிதர்கள் யாதொரு விதமான களங்கங்களுக்கு முட்படக் கூடாதவர்களாய் (above corruption and suspicion) இவ்வுத்தியோகத்துக்கு வருவார்களென்று போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் அபிப்பிராயப்பட்டிருப்பதும் நமது நண்பர்கள் அறிவார்கள்.

### தண்டரர் பத்திரிகை.

ஆனால் மதுரை ஜில்லா அனுபவிக்க நேர்ந்த இந்தக்கொடும் ஸமயத்தில், இங்கிலாந்தில், 'ஸ்காட்லாந்த் யார்ட்' என்ற போலீஸ் பலத்தைச்சேர்ந்து மிக்க ப்ரக்யாதி பெற்ற 'எல்லிஸ்' துரையவர்கள் அந்த ஜில்லாவுக்கு போலீஸ் ஸூபரிண்டெண்டாக வாய்த்தது மதுரைஜில்லா செய்த பெரும்பாக்யமே. ........................அன்னவர் தன் ஸாமர்த்தியத்தாலும் புத்தித்திறமையாலும் இக் கொடும்ஸம்பவங்களின் காரணங்களை யாராய்ச்சி செய்து குற்றவாளிகளைச் சரியான தண்டனைக்குட்படுத்தச்செய்வதுடன், இனிமேல் அவர் பரிசீலனையில் இப்படிப்பட்ட குற்றங்கள் மறுபடி ஸம்பவிக்காது காத்து, மதுரை ஜில்லாவின் நற்பெயரை மறுபடி நாட்டுவார் என்பதை நாம் நிச்சயமாய் எதிர்பார்க்கின்றோம்.

### அடுத்தநாள் தந்தி.

மதுரை ஜில்லா ஸூபரிண்டெண்டு எல்லிஸ் துரையவர்கள் இன்று காலை மணிபுரம்சென்று ஸ்தல விசாரணைகள் பலவாறுசெய்து மறுபடி மதுரைக்கு வந்துவிட்டாராம்.

### அடுத்தநாள் தந்தி

இன்று பாரிஸ்டர் மிஸ்டர் கோமன் துரையவர்கள் மணிபுரம் இரண்டாவது வகுப்பு மேஜிஸ்ட்ரேட் முன், கைதி (மாதவன்) யை ஜாமீனில் விடும்படி, விண்ணப்பம் செய்தாராம்............உபயதரப்

பிலும் அநேக விதமான ஆக்ஷேபணை ஸமாதானங்களானபிறகு, கடைசியாக, மணிபுரம் ஜமீன்தாரின் பேர் ஜாமீன்பேரிலும், 30,000 ரூபாய் ரொக்க ஜாமீன் பேரிலும், கைதியை விட்டிருக்கின்றாராம். மாதவன் மணிபுரம் ஜமீன்தாரின் வருதிக்குட்பட்டு, அவர் அரண்மனையிலேயே இருக்கவேண்டும் என்ற ஒப்பந்தத்தின் பேரில் அவ்வித உத்தரவு செய்யப்பட்டதாம்.

அடுத்த தந்தி.

மாதவன் மணிபுரம்ஜமீன்தார் அரண்மனையில் வஸித்துவருகின்றான். அரண்மனைக்குத் தக்க பாராவைக்கப்பட்டிருக்கிறது. அரண்மனைக்குள் மாதவன் ஸ்வேச்சையாய்த்தான் இருக்கின்றானும். தேவையான புஸ்தகங்கள் பத்திரிகைகள் முதலானவைகள் உபயோகிக்க அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதாம்.

பத்திரிகையின் அபிப்பிராயம்.

இந்த ஸந்தர்ப்பத்தில் நமது மணிபுரம் ஜமீன்தாரின் பெருந்தன்மையையும், தயையையும் பற்றி விசேஷித்துப் புகழ்வது ஸமயோசிதமென்றே நாம் எண்ணுகின்றோம்.

தெய்வபக்தி ராஜபக்தி ஜனங்களிடத்தன்பு முதலான உத்தம குணங்களிற்சிறந்த, ஓர் பூர்வவம்சத்தில் உதித்தவர் இப்புண்யவான். இவர் நற்குணங்களை அறிந்தே இவருக்கு, இவ்வளவு சீக்கிரத்தில் நமது ராஜாங்கத்தார் திவான் பஹதூர் பட்டமளித்திருக்கின்றார்கள்.

மாலினீயின் விவாஹ விஷயத்தில் தனக்கு எதிரியாய் (Rival) மாதவன் நேர்ந்தவனாயினும் அதைை யோர்பொருட்டாய்ப் பாராட்டாமல், தருமமே உருவெடுத்தாற்போல் விளங்கும் நமது ஜமீன்தாரவர்கள் ஜாமீன்தாராக நின்றது, மிகவும் ஆச்சரியிக்கத் தக்கதே!

* * * * *

இவர் அநேக நண்பர்களின் வேண்டுகோளுக்குடன்பட்டு, நமது சென்னை சட்டநிரூபண ஸபைக்கு அடுத்ததடவையில் மெம்பராகச் சம்மதித்திருக்கின்றாராம்.

இப்படிப்பட்ட உத்தம குணசாலியானவர் மெம்பராக வருவது நமது சட்ட நிரூபண ஸபைக்கே ஓர் பெருமையென்பதை இப்பத்திரிகையை வாசிப்பவர்கள், நாம் சொல்லாமலே அறிந்துகொள்ளுவார்கள்.

### அடுத்த தந்தி.

" மணிபுரத்தில் எதிர்பாராது நடந்த இந்தக் கொலைக்கேஸினுலும், அதனால், பாலூர் மகாராஜாவுக்கு ஏற்பட்ட புத்திரசோகத்தாலும், மாலினீக்கும், மணிபுரம் ஜமீன்தாருக்கும் நிச்சயித்திருந்த விவாஹமானது உத்தேசித்த பிரகாரம் வெள்ளிக்கிழமை நடக்கவில்லை. பின்பு சிறிதுகாலம் சென்று தான் ஆலோசிக்கப்படும்" என்று நமது மதுரை நிரூபர் தந்தியடித்திருக்கின்றார்.

---

## பதினோராவது அத்தியாயம்.

### கள்ளன் கோட்டை.

### Kallan Kottai.

மதுரை ஸம்ஸ்தானத்தை அரசாண்டுவந்த நாயக்கர் வம்சமானது மீனாக்ஷி ராணியுடன் 1736-ம் வருஷம் முடிவு பெற்றதும், அவளுக்குப்பின், தேசமானது பற்பல கொடுங்கலகங்களுக்கும், கொள்ளைக்கும் பஞ்சத்துக்கு முட்பட்டுக் கடைசியாய், கர்நாட நவாபின் வசப்பட்டதும், பிறகு சிறிதுகாலம், ஈஸ்டுஇந்தியா கம்பெனியாரின் உதவியினால், நவாபால் ஆளப்பட்டுவந்ததும், பிறகு 1781-ம் வருஷத்தில் அத்தேசத்தை நேராக ஆளத்திறமையில்லாததாலும், மைசூர் சுல்தான் ஐதர் ஆலியுடன் செய்ய நேர்ந்த சண்டையின் நிமித்தம் எற்பட்ட ஏராளமான கடன்களைத் தீர்க்க வழியில்லாமையாலும், மேலும் தன் ராஜ்யத்தை 'உதவிச்சேனை' (Subsidiary Force) புரிந்து காப்பதன்பொருட்டு அதற்கு நேரிடும் செலவுக்காகவும், மதுரை ஸமஸ்தானத்தின் தீர்வை வரும்படி (Revenue)களை வசூலித்துக்கொள்ளும் பாத்யதையானது கம்பெனியார்களுக்குக் கர்நாட நவாப் அளித்ததும், கடைசியாய் 1801-ம் வருஷம் இம்

மதுரை ஸமஸ்தான முள்படக் கர்நாட ராஜ்யம் முழுமையும் இங்கி லீஷ் ராஜாங்கத்தார் வசமானதும், இத்தேசசச்சரித்திரங்கள் விவர மாய்க்கூறுகின்றன. இந்த மத்யகாலத்தில் இத்தேசமானது அனு பவித்த துன்பமும், கொலைகளும், கொள்ளைகளும், கலகங்களும், பஞ் சங்களும், எண்ணிறந்தவை. சரீரமும் சொத்தும் தன்னுடையவை யென்று சிறிது காலமாவது தைரியமாயிருக்க மார்க்கமில்லாமலிருந் தது. எவனாவது ஒரு தலைவன் திரளான ஜனங்களைச் சேர்த்துக் கொண்டு, அனுதமான க்ராமங்களில் ப்ரவேசித்து, எதிர்ப்பவரை வதைத்துக் கொள்ளையடிப்பதும், ஸ்திரீகளை மானபங்கம் செய்வது மாய்த் திரிவான்.

இத்துஷ்டர் வம்சங்களில் ஒன்று நமது கள்ளன்கோட்டைத் தலைவன் வம்சம். 'கள்ளன் கோட்டையான்' என்றால் அப்பிரதேச முழுமையும் 'கிடுகிடெ'ன்று நடுக்கமடையும். 'அழுதபிள்ளைவாய் மூடும்.' அத்தலைவர்களுக்குக் காவற் கூலி, துப்புக்கூலி கொடுக்காத ஜமீன்தாராவது ப்ரபுவாவது கிடையாது. நாஞ்சநாடு முதல் கம்பம், கூடலூர், பழனி வரை யவர்கள் அதிகாரஞ் சென்றுவந்தது.

18-ம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த பாஞ்சாலங்குரிச்சிக் கலகத்தில் கட்டப்பொம்ம நாயக்கன், ஊமையன் முதலான கலகக் காரர்களைப் பிடித்த விஷயத்தில் ஆங்கிலேயருக்கு அக்காலத்தலை வன் பேருதவி செய்ததின் நிமித்தம் கள்ளன்கோட்டையும் அதைச் சார்ந்த சொல்ப ப்ரதேசமும், அவ்வம்சத்துக்கு சாசுவதமாய், கௌல் செய்துகொடுக்கப்பட்டது.

நமது சரித்திர காலத்தில் அவ்வம்சத்திற் பிறந்த 'திம்மன்' 'பொம்மன்' என்ற இரண்டு சகோதரர்களுமே, அக்கள்ளன் கோட் டைத் தலைவர்கள்.

இவர்கள் தங்கள் தகப்பன் பாட்டன்மாரைப்போல யோக்ய மாயிருந்து காலங்கழிக்காமல், அதற்கு முந்தின பூர்வீகர்களைப் போல ஆட்கள் திரட்டிக் கொள்ளையடிப்பதும், கலகம் முதலானவை செய்வதும், இன்னும் பலவிதமான துர்ச்செய்கைகளால் அப்பிர தேசத்துக்கே ஓர் பயங்கரமாயிருந்துவருகின்றனர்.

ஸர்க்காரில் எவ்வளவோ முயற்சித்தும், இத்துஷ்டர்கள் சட்டத்துக்குட்பட்டு (Clutches of Law)த் தண்டனையடையாது தப்பித்துவருகின்றனர்.

இத்தலைவர்களைப்பற்றி முன் அத்தியாயங்களிலும் சொல்லியிருக்கின்றோம். இவர்களுக்கு இன்னும் விவாஹமாகவில்லை. இவர்கள் நினைத்தமாத்திரத்தில், 2,0000 ஜனங்கள் தடியும் கையுமாய் யுத்தசன்னத்தராய் வந்துவிடுவார்கள். அவ்வளவு ப்ரபல துஷ்டர்கள். ஒருவரும் நிகரில்லை. நமது சரித்திர தினத்தின் மாலை சுமார் 3 மணி நேரமிருக்கலாம். நமது தலைவர்கள் கள்ளன்கோட்டையில் ஓர் ஆலமரத்தடியிலுட்கார்ந்து ஸம்பாஷித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

பொம்மன்:—“அண்ணே! அன்னிக்கு அடிச்ச பன்னி முறட்டுப்பன்னியப்பா, கறி நல்லா கொழுத்த—

திம்மன்:—தம்பி! அது கிடக்கட்டும்! இப்படி இருந்துட்டா—நாமென்ன உயிரோடிருக்கிறது நிச்சயமா? இப்படியே மண்டையைப் போட்டால் இந்தக்கோட்டை கொத்தளங்களை ஸர்க்காரில் பிடுங்கிக்கிடுவான்களே. அண்டைக்கே ஒரு துரை பார்த்துவிட்டுப் போனுங்க. வெயிலுக்காலத்தில் இங்கே குளிர்ச்சி யாயிருக்குதாம். துரைமார் இருக்கச் சவுக்கியமாம். நாம்பள் இவன்களுக்கு வேட்டையாட வேண்டிய உதவி செய்கிறது, இவன்க நமக்கே குண்டு வைக்கப்பார்க்கிறது. நம்ம மண்டையைப் போடவேண்டியதுதான். உடனே ஸர்க்காரில் எல்லாத்தையும் பிடுங்கிக்கிடுவாங்க!

பொம்மன்:—அதற்காகத்தான் சொன்னேன். அண்ணே எப்படியாவது ஒரு குட்டியைப்பிடித்துக் கட்டிக்கிட்டா, நம்ம கருப்பன் செயலாலே ஒரு குஞ்சுகிஞ்சு பிறந்திடிச்சானல். ஏதோ நம்ம பேரையும் நம்ம பெரியவக பேரையும் சொல்லிக்கிட்டுத் திரியுமே! நீ ஒண்டுக்கும் உடன்படமாட்டேன் என்குதையே’

திம்மன்:—தம்பி! எனக்கோ வயதாச்சுது நீ தானே செய்துக்கிடேன். உனக்கு நல்ல குட்டியாய்ப் பாத்து வைத்துருக்கேன்!

பொம்மன்:—அண்ணே! நீ சொல்லுது எனக்குத்தெரிஞ்சிச்சு. அந்த மணிபுரத்தான் குட்டி தானே? அண்டைக்கு'—

திம்மன்:—இப்போத்தான் என்ன! இப்போ நீ உறுதியாய்ச் சொன்னு இண்டை இரவுக்கே கொண்டாந்துடலாம்—சொல்லு பார்ப் போம்.

பொம்மன்:—அண்ணே! மணிபுரம் சமீன்தாருக்கல்லோ அந்தக் குட்டியைப் பரிசம் பேசியிருக்குதாம்—நல்லாகுட்டியண்ணே!—நல்லா தனுக்கு, நல்லாமினுக்கு.!

திம்மன்:—இந்த இழவு விசாரமுனக்கென்னத்துக்கு சம்மத மானுச் சொல்லு இண்டை இரவுக்கே—

பொம்மன்:—அண்ணே! எப்படியாவது கிடத்திக்கிட்டுவந்தூட் டோமானல், நீயாவது, நானுவது, யாராவது ஒருவர்—ஆனல், இழவு சலுக்காரானுக்குப் பயந்தல்லோ முடியல்லே. அண்டைக்கு அந்த இனுசுபேட்டர் எசமானே ஒரே நிமித்தா நிமித்திடலாமெண்டு பார்த்தேன் நீயல்லோ கெடுத்தூட்டே!

திம்மன்:—அடே பயித்தாரா! அப்படியெல்லாம் செய்யக்கூடா தடா! இதென்ன கர்நாட ராச்சியமா? கும்பினியான் ராச்சியமில்லே! ஒரு பீரங்கி போட்டால்—. சரி—சொல்லு உறுதியாய்.

பொம்மன்:—மணிபுரம் சமீந்தாரு, பிராது போட்டா!

திம்மன். இந்த இழவு விசாரமெல்லாம் உனக்கென்னுத்துக்கு? நானல்லோ பாத்துக்கிடுதேன். அவன் குடுமி நம்மா கிட்ட அகப் பட்டு முழிக்கிதல்லோ? நம்ம மீறி ஒரு காரியஞ்செய்திருவான்? நெஞ்சழுத்தம் அவனுக்கு!—ஆ! அண்டைக்கு அந்தக்குட்டிக்கிடத் திருேமே என்னு பிறட்டிட்டான்.

சம்பாஷணை முடிவில், அன்றிரவே மாலினீயின் அந்தப் புரத் தில் பிரவேசித்து. அவளைக் கிடத்திக் கள்ளன் கோட்டைக்குக் கொண்டுவந்து விடுகிறதென்று சகோதரரிருவரும் தீர்மானித்தார்கள்.

# பன்னிரண்டாவது அத்தியாயம்.

## அபஹரணம்.

## (Abduction.)

மனிதனுடைய மன நிலைமைகள் ஜாக்ரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி (நித்திரை) என முவ்வகையாய்ப் பிரிக்கப்பட்டிருப்பதாய் மனநூலோர் (Psychologists) கூறுவார்கள். மனிதன் தன்னினைவுடன், உலகத்தின்கண் தோன்றும் பொருள்களை ஐம்புலன்களின் மூலமாய்ப் பகுத்தறியும் நிலைமையே ஜாக்ர (விழிப்பு) நிலைமையாகும். இந்நிலைமையில் மனிதனுக்குத் தன்னறிவும் (Subjective consciousness) வெளியறிவும் (Objective knowledge), அதை பூர்வ அனுபவ ஞானத்துடன் (Knowledge of past experiences) ஒத்துப் பார்த்துப் பகுத்தறியும் திறமையும் உண்டு. தன்னறிவும், வெளியறிவுமில்லாமல், மனமானது லயமடைந்து, கேவலம், ஜீவாதாரங்களான ஹிருதயம், சுவாஸாசயம் முதலான மர்மக்கருவிகள் மாத்திரம் வேலைசெய்துகொண்டிருக்கும் நிலைமையே ஸுஷுப்தி (தூக்க) நிலையாகும். இவ்விரு நிலைமைகளுக்கும் நடுநிலைமையொன்றுண்டு. அதுதான், ஸ்வபனம் (கனவு) எனப்படும். இந்நிலையில், மனிதன் வெளியறிவையும், மனதில் உதிக்கும் தோற்றங்களை யறியவும் பாவ்ய, அபாவ்யங்களைப் பகுத்தறியவும் சக்தியற்றவனாய், சுவல்பமான தன்னினைவுடன், மனதின்சேஷ்டைகளுக் குட்பட் டிருக்கின்றான். இவ்வற்புத நிலைமையைப் பற்றி புத்திமான்கள் பலவாறு கூறுகின்றார்கள்.

வஸந்தவிலாச பங்களாவில் தனது அறையில், மாதவன், சரீரக் களைப்பாலும் மனவேதனைகளாலும், அயர்ந்து நித்திரை செய்கின்றான். ஆமாம்! நித்திரை செய்கின்றான்! அதிகமாய் வேதனையடைந்தால், மறுபடி வேதனையடைய மார்க்கமில்லாமல், சரீரமும் மனமும் உணர்ச்சியே யற்ற நிலைமை யடைகின்றனவல்லவா? இந்நிலைமையில் மாதவன் மனம் கொந்தளித்துக்கொந்தளித்துத் தானே லயமடைந்திருக்கின்றது. பக்கத்திலிருந்த விளக்கொளியானது [illegible] ப்ரகாசிக்கின்றது. தாமரை மொட்டுக்கள்

போல அவன் கண்கள் மூடியிருக்கின்றன. சிவந்த அதரங்களினிடையிலிருந்து ஓர் மந்தஹாஸ ரேகையானது ப்ரகாசிக்கின்றது. ஆஹா! இவ்வளவு துன்பங்களுக்கும் மத்தியில் அவனுள்ளத்தில் என்ன ஸந்தோஷம் குடிகொண்டிருக்கின்றது? அதுதான் கனவின் அதிசயம்! அஸம்பந்தங்க (Incongruities) ளே கனவின் குணங்களல்லவா?

இந்நிலைமையில் நமது பரதேசியார், ஓர் சிறு விளக்கைக் கையிலேந்திக்கொண்டு, மாதவன்முன் ப்ரத்யக்ஷமாய் "மாதவ! என்னப்பனே! எழுந்திரு," என்றழைக்க, மாதவன் விழித்துப் பரதேசியை வந்தித்தான். அவன் சிறையிலிருப்பது அவனுக்கே ஞாபகமில்லை. பரதேசி எவ்வாறு உள்ளே புகுந்தார் என்பதையும் அவன் ஆலோசிக்கவில்லை. 'வா' என்று பரதேசி யழைக்க அவர் பின்னோடு யந்திரப் பாவைபோல் மாதவன் சலித்தான். கதவுகளெல்லாம் தன்படியே மந்திரபலத்தாற்போல படீர் படீர் என்று தெறித்து அவர்களுக்கு வழிவிட்டன. சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்கள் அரண்மனையை விட்டு வெளியேறி, நடுக்காட்டிலிருக்கும், ஸமாதியண்டை வந்து சேர்ந்தார்கள். அதன்மேலுள்ள கோவிலுட் புகுந்து, ஆங்குள்ள பிம்பங்களை மாதவன் முறையே வந்திக்க, அப் பிம்பங்கள் உயிர்கொண்டு, தம் தம் கைகளால் மாதவன் சிரஸை முறையே தடவி, மாதவனை வாரியணைத்து மடிமீது போட்டு, முத்தமிட்டு, "குழந்தாய்! கண்மணீ!, நீ நீடூழிகாலம் வாழ்வாய்—உனக்கு ஒரு குறைவும் வராது" என்று ஆசீர்வதித்தன.

இவ்வாறு மாதவன் கனவுகொண்டிருக்கும் நிலைமையில், தன் அறையின் பின்பக்கத்தில் "ஐயோ! ஐயோ!" என்று பெண்குரல் கேட்கவே, மாதவன் திடுக்கிட்டு விழித்தான். தன் கனவெல்லாம் மறந்து மறுபடி 'பாரா'க்களுக் குட்பட்டு சிறையில் தான் சுவாதீனமற்றவனாய் இருக்கும் நிலைமையை யுணர்ந்தான். இதற்குள், "ஐயோ! ஐயோ." என்ற தீனமான குரல்கள் மறுபடி கேட்டன. நிசிவேளை. எங்கும் நிஸ்சப்தமாயிருந்ததால், இப் பெண்குரலானது அதிக தீர்க்கமாய் இவன் உள்ளத்தில் பாய்ந்தது. அது மாலினியின் குரல் என்று அறிந்துகொண்டான். ஐயோ! என்னசெய்வான்!

என்ன ஆபத்துக்குட்பட்டிருக்கின்றாளோ! எவ்வாறு அவளைக் காப்பது! ஒருவழியு மில்லையே! அங்குமிங்கும் பித்துப் பிடித்தவன் போல் ஓடினான். வெளியேற வழியில்லை திடீரென்று, அவ்வறையின் ஓர் கதவைத் தன் வீராவேசத்துட னுதைக்க அது படீரென்று கீல்கள் துண்டித்து வீழ்ந்தது. அதன் வழியாய், மாடிக்கு ஏறினான். வெளிப்புறம் எட்டிப்பார்த்தான். மாலினீயின் அழுகைக்குரலும், "அடேடே! தூக்கடா! சீக்கிரமடா! சீக்கிரமடா! தூக்கடா" என்ற ஆண்குரல்களும் கலந்து கலந்து கேட்டன. சுமார் நாலைந்துபேர்கள் எதிரிக ளிருப்பார்களென் றறிந்துகொண்டான் தான் இருக்குமிடம் தரையினின்றும் சுமார் 30 அடி உயரமிருக்கும். ஒன்றும் தோன்றவில்லை. கடைசியாய் அம் மாடிமீது நாட்டப்பட்டிருந்த 'கொடியின்' ஓர் கயிற்றை யறுத்து, ஆங்கோர் பலகணிக் கம்பியில் ஓர் நுனியைக்கட்டி, அக் கயிற்றின் வழியாய் மட மடவென்று கீழே இறங்கித் தன் பகைவரின் மத்தியில்வந்து சேர்ந்தான். நிற்க,

இதற்குமுன் நடந்த விஷயங்களை ஸம்க்ஷேபமாய் நமது நண்பர்களுக்குத் தெரிவிப்பது அவசியமென்று நினைக்கின்றோம்: தன் தமையன் இறந்த துக்கம் தவிர, யாதொன்று மறியாத மாதவன் மீது ஏற்பட்டுள்ள அபவாதங்களையும் நினைத்து நினைத்து மாலினீ மனம் வருந்தலானாள். "இவ்வளவு அன்புடன் வாழ்ந்துவந்த மாதவன் இக் கொடுஞ் செய்கையைச் செய்ய எவ்வாறு துணிந்திருப்பான்? ஒருவேளை கோபாவேசத்தால் தன் மதிகலங்கி இவ்வாறு செய்திருப்பானோ? அன்று மாலையில், தன் பிரார்த்தனைப்படி, தனக் கபிமானமானவருக்குக் கெடுதிசெய்யச் சிறிதேனும் தான் துணிபவனல்லன் என்று மாதவன் வாக்களிக்கவில்லையா? எப்படியானால் என்ன? சந்தர்ப்ப ஸாக்ஷ்யங்களெல்லாம் ஒன்று சேர்ந்து பலமாக மாதவனுக்கு விரோதமாயிருக்கின்றன". என இவ்வாறு பலவாறு சிந்தித்துக்கொண்டு, அன்றிரவு தன் அறையில் படுக்கைமேல் படுத்துக் கண்ணயர்ந்தாள். அந்நிசிவேளையில் அரண்மனைக்கு வெளியே, திம்மனும் பொம்மனும், தைரியம், பலம், விசுவாஸம் முதலான குணங்களமைந்த தக்க ஆறுபோர்களுடன், அரண்மனையின் பக்கத்து வாசல்வந்து சேர்ந்தார்கள். அவ்வாசலின் முன் ஒரு திண்ணையில் காவற்காரன், உட்கார்ந்து சுவரில் சாய்ந்து, அப்படியே குறட்

டைவிட்டுக்கொண்டிருந்தான். திம்மன் அவனண்டை சென்று, "அண்ணே!" என்று எழுப்பக், காவற்காரன் திடுக்கிட்டெழுந்து 'யாரடா!' என்று கர்ஜிக்க ஆரம்பித்தான். இதற்குள், பொம்மன் தன் கத்தியை, காவற்காரன் நெஞ்சுக்கு நேராகப் பிடித்துக்கொண்டு "அடே! சத்தம் போடாதே! இனி மூச்சுவிட்டாயோ—இந்தக் கத்தி உன் நெஞ்சிற் பாய்வது திண்ணம். உன் மூச்சும் கடைசி மூச்சுத் தான்." என்று பயமுறுத்த, காவற்காரன் நடுநடுங்கி "ஏனண்ணே!—என்—னை—உன—க்கு—க்கோடி புண்ணிய முண்டு—நான் பிள்ளை குட்டிக்காரன்—அண்ணே!—" என்று அழுதான்.

திம்மன்:—"சரி! அப்படியானால் இந்தக் கதவுத் திறவுகோலை என் கையில் கொடு".

காவற்காரன்:— "அண்ணே! கருப்பன் ஆணை சொல்லுதேன் அண்ணே! என்னண்டை கிடையாதண்ணே!"

பொம்மன்:—இந்த வாக்கிலே 'நச்சென்னாட்டு அடிச்சேனானல் என்னமாயிருக்கும் தெரியுமா ?' என்று பயமுறுத்திக்கொண்டு தன் சிறு துணியால் காவற்காரன் வாயையும், கண்களையும் இறுகக்கட்டி விட்டு, உடைப்பையில் கைபோட்டு, அங்கிருந்த திறவுகோலை யெடுத்து மெதுவாய்க் கதவின் துவாரத்தில் செலுத்திச் சுழற்றவே தாழ் விலகிற்று. நிமிஷநேரத்தில் கதவும் திறந்தது. காவற்காரன் கூச்சற்போடாமலும், ஓடிப்போய்விடாமலும், பந்தோபஸ்து செய் யும்படிக்கு இருவரை யங்கே நிறுத்திவிட்டு, மற்றநால்வரும் உள்ளே புகுந்தார்கள். சிறிது நேரத்திற்குள் அப் பாதகர்கள், முன் தார்சா வழியாய்ச்சென்று, மாலினியின் அறைக்கதவை மெதுவாய்த்திறந்து, அவ் வறைக்குட்புகுந்தார்கள்.

மங்கிய ஒளியுடன் எரிந்துகொண்டிருந்த விளக்கானது, மாலி னியின் அழகிய சரீரத்தைத் தெரிவித்தது. திம்மன் சந்தடிசெய் யாமல் மெதுவாய் அடிமேல் அடிவைத்து, மாலினியின் அருகிற் சென்று, செந்தாமரைபோன்ற அவ் வழகிய முகத்தைப்பார்த்துத் தன்னை அறியாமல், "அடேடே! நல்ல பொம்பிளையடா! கட்டிக்கிட் டாலும் இப்படியல்லோ கட்டிக்கிடணும்" என்று புலம்ப, அருகி

யிருந்த பொம்மன் 'அண்ணேண்ணே! என்ன இப்படிச் சொல்றே! இதுதானு சமயம்?' என, திம்மன் தன் ஞாபகமடைந்து, தான் வந்த வேலையைப் பார்க்க ஆரம்பித்தான்.

உடனே திம்மன் தன் இடுப்பில் வைத்திருந்த ஓர் சிமிழைத் திறந்து, அதனின்றும் ஓர் வெண்மையான பொடியை யெடுத்துத் தன் இருவிரல்களாலும், பொடித்து மாலினீயின் மூக்குமுன் பிடிக்க, மாலினீ முன்னிலும் அதிகமாக அயர்ந்துபோனுள். உடனே அப் பாதகன் மாலினீயைத் தூக்கித் தன் தோள்மீது சாத்திக்கொள்ள முன்னே இருவரும், பின்னே ஒருவனுமாக, அவ்வறையினின்றும் புறப்பட்டு, அரண்மனைக்கு வெளியே வந்து சேர்ந்தார்கள். அப் பொழுது வாயிற்காப்போனைப் பார்த்து, அடே! நாங்கள் வந்து போனதைப்பற்றி யாரிடமாவது சொன்னியோ, நாளைக்கி மறுபடி உன் பிள்ளேகுட்டியைப் பார்க்கமாட்டே. இந்தா திறவுகோல்! கதவை அடைச்சுக்கோ. சும்மா குறட்டை விடு. விடிந்தா—என்க் கொன்னும் தெரியாது என்னுடு. உன்பாட்டிலே தப்பிக்கோ. தெரிஞ் சிச்சா?" என்று பயமுறுத்திவிட்டு, அங்கே தயாராயிருந்த ஓர் கட் டிலின்மீது மாலினீயைப் படுக்கவைத்துத் தூக்க ஆரம்பிக்கவே, அவள் திடீரென்று மூர்ச்சை தெளிந்து, தன் நிலைமை யறிந்து மேற்கூறியவாறு சத்தமிட்டாள்.

உடனே மாதவன் பிரத்யக்ஷமாய், அங்கேநின்றுகொண்டிருந்த காவற்காரனிடமிருந்து கத்தியைச் சரேலென்று பிடுங்கிக்கொண்டு, அக்கட்டிலைத் தூக்கிச் செல்லுபவரில் பின்புறத்துள்ள இருவரையும் இரண்டு அடி அடிக்க "அப்பச்சி!" என்று அலறிக்கொண்டு கீழே சாய்ந்தார்கள். கட்டிலும் கீழே சாயவே; மாலினீயும் கீழே வீழ்ந்தாள்.

மாதவன் மாலினீயைத் தூக்கித் தோள்மீது சாத்திக்கொண்டு, அரண்மனைவாசல் நோக்கிச் செல்லவே, அப்பாதகர்களில் மற்றநால் வரும் பின்தொடர்ந்தார்கள். மாதவன், வாசலண்டை மாலினீயை இறக்கிவிட்டு, அவளுக்குமுன் தான் நின்று அவள்மீது யாதொரு அடியும் விழாது காத்துக்கொண்டு, எதிரிகளை ஒருவனுய் எதிர்க்க ... நோக்கினர்கள் மாதவன் எதிரிகளுக் கிரையாய்

விடுவான்போலத் தோன்றினான். ஆனால், கடைசியாய் வீராவேசத்துடன் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து தன் கத்தியால் திம்மனை தூங்கியடிக்கவே, 'அடி ஆத்தே!' என்று அலறிக்கொண்டு, திம்மன் கீழே சாய்ந்தான்.

இவ் வபஜயத்தைக்கண்டு மற்றவர்களும் பயந்து திம்மனையும், மற்ற இருவர்களையும் தூக்கிக்கொண்டு, தங்கள் கோட்டையை நோக்கி ஓடினார்கள்.

இதற்குள் மாலினீ, பயந்தெளிந்து, மாதவனை இறுகத்தழுவி, "மாதவ! என் மாதவ! ஐயோ! உன்கதி இப்படி நேர்ந்ததே" என்றலற,

மாதவன்:—"அம்மணி! நானே கொலைசெய்தவன். என்முன் நிற்பதே தங்களைப்போன்றவர்களுக்கு மிக்க இழிவாகும். மேலும் தங்கள் தமயனையே——"

மாலினீ:—(கண்ணீர் சொரிந்துகொண்டு) "நம்பேன்! மாதவ! நம்பமாட்டேன். ஒருக்காலும் நீ செய்திருக்கமாட்டாய். இதெல்லாம் ஏதோ மாயமாயிருக்கின்றது. ஐயோ! என்னன்பே! ஐயோ, கேவலம் என்னிமித்தமல்லோ இவ்வித ஆபத்துக்களெல்லாம்——. இவ்வற்ப உயிர்——"

மாதவன்:—(சோகத்துடன் கண்ணீர் பெருக்கிக்கொண்டு, மாலினீயை மார்போடணைத்து, முகத்தோடு முகம்பதித்து) கண்மணி! எல்லாம் வல்ல ஈசன் திருவுள்ளப்படிதான் நடக்கும். நாம் என்ன செய்யலாம்—"

இவர்களிங்கிலைமையில் இருக்கையில், இங்கு நடந்த சத்தத்தால், அரண்மனையினின்றும், சில சேவகர்களும், மணிபுரம் ராஜாவும் விளக்குகள் ஸகிதம் வந்து சேர்ந்தார்கள். இவர்களைக் கண்டதும், ஜமீன்தாருக்குக் கோப மதிகரித்தது. கண்கள் சிவந்தன. மீசை படபடவென்று துடித்தது.

"அடே மாதவ! அடே வஞ்சக! உனக்கு நான் ஜாமீன்கொடுத்திருக்க என் அனுமதியின்றியில் நீ எவ்வாறு வெளியேறினாய் உள்ளே போ! இல்லாவிட்டால் சற்றேனும் தயை தாக்ஷண்யமின்றி

உன்னை விலங்கிடச் சொல்லுவேன்," என்று கர்ஜிக்க, மாதவன் தன் விதியை நொந்துகொண்டு, ஒன்றும் பேசாமல் அரண்மனையில் புகுந்தான். மாலினியும் உட்புகுந்து தன் அறைபோய்ச் சேர்ந்தாள். வாசற் காப்போன், இக்கொடும் ஸம்பவங்களைக் கண்ணுறக் கண்டவனாயினும், ஜமீன்தாரிடம் ஒன்றும் சொல்லத் துணியாமல் நடுநடுங்கிக் கொண்டிருந்தான்.

ஜமீன்தார்:—(கோபாவேசத்துடன் காவற்காரனை நோக்கி) "நாயே! நீ இவ் வஞ்சகர்கள் இவ் வரண்மனை விட்டு வெளியே ஓடிப்போக உடந்தையாய் இருக்கின்றாயா! பார் உன்னைச் சொல்லுகிறேன், நாளைக்காலை" என்று கர்ஜித்துவிட்டு, தன் சேவகர்களில் இருவரைக்கொண்டு, அவனைப் பிடித்துப்போகும்படி ஆக்ஞாபித்துவிட்டு, மற்றவர்களுடன், மறுபடி அரண்மனைக்குட் புகுந்தார்.

---

## பதின்மூன்றாவது அத்யாயம்.

### விசாரணை.

### The Trial.

மழைவளஞ் சுரக்குமாறும் வயநிலம் விளையுமாறும்
விழையறம் வளருமாறும் வேதநூல் விளங்குமாறும்
தழைபொரு ளீட்டுமாறுஞ் சமரிடை வெல்லுமாறும்
பிழைதப வாழுமாறும் பிறழ்தராக் கோலினாகும்.

—விநாயகபுராணம்.

இவ் வத்தியாயத்திற் கூறப்போகும் விருத்தாந்தங்கள் நடந்த தினத்துக்கு இரண்டு தினங்களுக்கு முன் 'ஹிந்து'ப் பத்திரிகையில் பின்வரும் ப்ரசுரம் வெளியாயிற்று.

மணிபுரம் கொலை.

"இக் கொடுங்கொலையின் விருத்தாந்தங்களைப் பற்றி அப்போதைக்கப்போது நமது நண்பர்களுக்கு விவரமாய்த் தெரிவித்துவந்திருக்கின்றோ மல்லவா? இப்பொழுது, ஷை கேஸ் மணிபுரம் இரண்

டாவது மேஜிஸ்ட்ரேட்டாரால் ப்ரதமவிசாரணை செய்யப்பட்டு, 'கமிட்' ஆய், மதுரை ஸெஷன்ஸ்கோர்ட்டில் அடுத்த திங்கட்கிழமை விசாரணைக்கு வருகின்றது. "மதுரைஜில்லா முழுமையும் எங்கே போனாலும் இக்கொடுங் கொலையைப்பற்றிய ப்ரஸ்தாபம் தான்" என்று நமது சொந்த நிரூபர் எழுதுகின்றார். *பின் விசாரணை விருத்தாந்தங்கள் வர வர இப் பத்திரிகை மூலமாய் ப்ரசுரம் செய்யப் படும்."

குறித்த தினத்தில் விசாரணைக்கு ஒரு மணி நேரம் முன்னமேயே மதுரை ஸெஷன்ஸ் கோர்ட்டில் இக் கொடுங்கொலை விசாரணை வேடிக்கை பார்க்க ஜனங்கள் திரள் திரளாய்க் கூடிவிட்டார்கள். "சத்தம்! சத்தம்!!" என்று 'டலாயத்' அடிக்கடி எச்சரித்துக் கொண்டு முன்னும் பின்னும் ஓடுவதும் கூட்டத்தை விலக்கி ஓர் வரிசையாய் அமர்த்துவதுமாய் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கின்றான்.

• "ஏதுடா தூ! இந்தக் கும்பல்லே! இன்டைக்கு என்னமா தொரை கேசு நடத்தப்போகு தாங்கோ! ஏ, ஐயா! ஒங்களுக்கெல்லாம் இங்கே என்னு! சுண்டல் கிண்டல் கொடுக்கப்போகுராங்களா? என்ன வேடிக்கை இது ஒங்களுக்கு? நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குப் பிராணுவத்தை! ஏன்?" என்று சொல்லிக்கொண்டு தன் பேச்சுத்திறமையைப் பற்றித் தானே மகிழ்வதுமல்லாமல் கூடியவர்களில் ஆமோதிப்பவர்கள் முகங்களையும் பார்த்துப் புன்சிரிப்புடன் 'டலாயத்' உலாவி வருகின்றான்.

ஸர்க்கார் வக்கீலும், எதிரிதரப்பு பாரிஸ்டர் கோமனும், உதவி வக்கீல்களும் ஆஜராய் அவரவர்கள் ஆஸனங்களி லமர்ந்தார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ஹரிராவ், தன் உயர்ந்த போலீஸ் உடையுடன் ஸர்க்கார் வக்கீல் பக்கம் ஓர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, தன் இடக்கையால் தன் கருமீசையைக் கதிர்போல் முறுக்கி வளைத்து விட்டுக்கொண்டு, 'ஸர்க்கார்' வக்கீலுக்கு ஏதேதோ 'இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.

ஸர்க்கார் வக்கீல் திடீரென்று திரும்பிக் கோமன் துரையை சலாம்செய்து, "மிஸ்டர் கோமன்! மத்ராஸில் இருந்து நேற்றே வந்து விட்டீகளோ?" என்று உபசாரமாய் வினவினர்.

கோமன்:—"அலோ! மிஸ்டர் பப்ளிக் ப்ராஸ்க்யூட்டர்! தாங்க் யூ! ஆமாம்! என்னமாய் இருக்கிறது? கேஸின் தன்மை; ஹ ஹ ஹா!"

ஸர்க்கார் வக்கீல்:—என்னைப் பார்க்கிலும் தாங்கள் அதன் விவரம் நன்றாய் அறிந்திருக்கவேண்டும். கீழ்க்கோர்ட்டில் நடத்தியிருக்கின்றீர்கள்! ஹ ஹ ஹா ஹ ஹ ஹா!"

கோமன்:—"ஆமாம் ஆமாம்! ெதுவும் வாஸ்தவம் தான்—ஆனால்"

இதற்குள் டாங்! டாங்! டாங்...........11 மணி அடித்தது. விலஹ்! விலஹ்!! விலஹ்!!! என்று டலாயத் கூட்டத்தை விலக்குகிறான். டக்! டக்! டக்! என்று பூட்ஸ் சத்தமிட்டுக்கொண்டு, கழுத்து முதல் கால்வரை 'கௌன்' (4 கைச்சட்டை) தரித்து, ஸெஷன்ஸ் ஜட்ஜ் ப்ரவேசமானார். உடனே வக்கீல்களும், மற்றவர்களும் எழுந்து நின்றார்கள். ஜட்ஜ் வக்கீல்களை நோக்கி உபசாரமாய் ஸலாம் செய்து தன் ஆஸனத்தில் அமர்ந்தார். அவர்களும் ப்ரதி ஸலாமிட்டு, மறுபடி உட்கார்ந்தார்கள்.

இதற்குள் ஸூபெரிண்டெண்டெண்டு 'எல்லிஸ்' துரையும் பாதாதிகேச பரியந்தம் போலீஸ் உடைதரித்தவராய் தாளக்ரமம் தவறாது நடையுடன் ப்ரவேசமாய் ஜட்ஜ் அண்டை வந்து ஒரே விறைப்பாய் நின்று ராணுவஸலாமிட, ஜட்ஜும் ப்ரதி ஸலாமிட்ட பிறகு அவரருகில் போடப்பட்ட ஓர் ஆஸனத்தின்கண் அமர்ந்தார சிறிது நேரம் எல்லாம் நிஸ் சப்தமாயிருந்தது. பிறகு,

ஜட்ஜ்:—"சரீ! இன்றைக்குக் கேஸை ஆரம்பிப்போம்" என்றார். உடனே குமஸ்தா இன்ஸ்பெக்டர் ஹரிராவை நோக்க, இன்ஸ்பெக்டர் போலீஸார்களைப்பார்க்க, இரண்டுபேர்கள் ஓடினார்கள். சிறிது நேரத்தில் மாதவன் ஜட்ஜ்முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். காட்டில் ஸ்வேச்சையாய்த்திரியும் சிங்கக்குட்டியானது கூட்டில் அடைபட்டு, தன் வீரமும் பலமும் அடங்கி யொடுங்கியிருப்பது போல மாதவன் தனக்கு நேர்ந்த ஆபத்தால் மயங்கிநின்றான். ஆங்குள்ளோர் யாவரும் அவன் முகத்தை நோக்கினார்கள்.!! ஆஹா!

தர்மமே உருவெடுத்தாற்போல் விளங்கும் இவன் இக் கொடுங்கொலையை எவ்வாறு செய்திருப்பான்? என்று சிலர் சந்தேகித்தார்கள்.

"ஆ! சிரித்துச் சிரித்துக் குடியைக் கெடுக்கும் சண்டாளர் எத்தனைகோடி! இவனும் ஒருவனுய் இருக்கக்கூடாதா" என்றூர்கள் சிலர். "அகத்தினழகை முகத்தால் எவ்வாறு அறிய முடியும்" என்றூர்கள் வேறு சிலர், "காமமும் துரோகமும் காவலுக் கடங்கா!" என்பது சரியாய்விட்டதே! அடடா! கேவலம் காமவெறியால் கொலை செய்யத் துணிவதுண்டோ? என்ன அந்யாயம்? "இந்த லோகத்தில் இது தான் ஸம்பாவிதம் இது அஸம்பாவிதம், என்று சொல்ல இடமில்லை. ஸார்" என்று சொல்லிக்கொண்டார்கள் வேறு சிலர். "ஆ! நமக்கென்ன தெரியும்? எல்லாம் ஈசனுக்குத்தான் வெளிச்சம்! காணுதகைக் கூருதே! கேளாததைச் சொல்லாதே" என்று சொல்லிக் கொண்டார் பின்னும் சிலர். நிற்க.

"மாதவ! நீ மணிபுரம் வஸந்த விலாஸம் பங்களாவுக்கடுத்த சோலையில் வேலாமரத்தடியில் அல்லது அதற்குச் சமீபத்தில் ...........தேதி பகல் சுமார் 3 மணி நேரத்தில், மரண முண்டாக்க வேண்டுமென்று, அல்லது உண்டாகுமென்று தெரிந்துகொண்டு, தினகரனைக் கொன்றுவிட்டதாகவும், அதனுல், கொலைக் குற்றமாகும்படியான நரஹத்தி செய்திருப்பதாயும் உன்மேல் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது. நீ குற்றம் செய்தாயா இல்லையா?"

மாதவன்:—(மௌனம்)

உடனே அஸெஸர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஸர்க்கார் வக்கீல் ப்ரக்ருத விசாரணையின் தன்மையையும், சட்ட அம்சங்களையும், தான் விசாரிக்கப்போகும் ஸாக்ஷ்யங்களையும், அவைகளின் பலாபலங்களையும் பற்றி ஸம்க்ஷேபமாய் எடுத்துரைத்தார்.

முதலாவது ஸாக்ஷியாகிய மாலினீ செய்கை தினம் மாலையில் நடந்த விருத்தாந்தங்களைத் தெளிவாய்க் கூறினுள்.

ஸர்க்கார் வக்கீல்:—"ஏனம்மா! தங்களை மணிபுரம் ஜமீன்தாரவர்களுக்கு விவாஹம் செய்விப்பதாய் நிச்சயமா யிருக்கின்றதல்லவா?"

மாலினி:— ( தலை குனிந்தவண்ணமே கண்ணீர் சொரிந்து கொண்டு ) "ஆமாம்!"

ஸர். வக்.:—"ஆனால் தாங்கள் மாதவனை—"

கோமன்:—"நான் ஆக்ஷேபிக்கிறேன், எதற்காக இக் கேள்வி நமது நண்பர் கேட்கின்றார் என்று விளங்கவில்லை"

ஸர். வக்.:—"வர வர எல்லாம் விளங்கும் ஹ! ஹ!!"

கோமன்:—"அல்ல! இக் கேள்வி இவ் விசாரணையில் எவ்வாறு ஸம்பந்தமுள்ளதென்பது அறிய எனக்குப் பாத்தியமுண்டு!"

ஜட்ஜ்:—உமது கேள்வியானது இக் கேஸில் எவ்வாறு சம்பந்த முள்ளது?"

ஸர். வக்.:—"கைதி இக் கொலை செய்வதற்குக் காரணத்தை நிரூபிக்க வேண்டுமல்லவா? இக் கேள்விக்கு ஏற்படும் விடைகள் அதை நிரூபிக்கும்."

ஜட்ஜ்:—"சரி! மேலே!——"

ஸர். வக்.:—"அம்மா! சொல்லுங்களம்மா!"

மாலினி:—"ஆம் மாதவனைத் தான் காதலித்திருக்கின்றேன். (விம்மி யழுகின்றாள்).

ஸர். வக்.:—"அவனிடத்துள்ள அன்பு இன்னும் மாறவில்லை என்று எண்ணுகின்றேன்?"

மாலினி:—"என்றும் மாறாது!"

ஸர். வக்.:—"சரி. அது இருக்கட்டும். இவ் விஷயத்தில் உன் தமயனுக்கு ப்ரியமில்லை——?"

மாலினி:—"ஆமாம்"

பிறகு பல கேள்விகள் கேட்கப்பட்டன. பாரிஸ்டர் கோமன் எதிர் விசாரணை (cross-examination) செய்து பல கேள்விகள் கேட்டபிறகு,

கோமன்:—"அம்ம! செய்கை மாலையில், தாங்களும் கமலாவும், தங்கள் தமயனால் கண்டிக்கப்பட்டு, அனுப்பப்பட்டதாகச் சொன்னீர்களல்லவா ?"

மாலினி:—"ஆமாம்"

கோமன்:—"தாங்கள் பிரியும்பொழுது மாதவனை ஏதாவது பிரார்த்தித்த துண்டா ?"

ஸர். வக்.:—"ஆக்ஷேபிக்கின்றேன் மாலினி எமது ஸாக்ஷியே யொழிய எதிரி ஸாக்ஷியல்ல! மேலும் இக் கேள்வி இந்தக் கேசுக்கு அஸம்பந்தமானது."

கோமன்:—"அப்படியல்ல! இதனால் மாதவனுடைய மன நிலை இத்தன்மையா யிருந்ததென்று வெளியாகும். அதனால் அவன் இக் கொலை செய்திருப்பானா, மாட்டானா என்பதை கலபமாய் ஊகித்துவிடலாம்."

ஜட்ஜ்:—எங்கே! ஸாக்ஷியின் விடையை முதலில் கேட்போம் எழுதிக்கொள்ள வேண்டுமா என்பதைப்பற்றிப் பின்னால் யோசிட் போம்."

கோமன்:—"சொல்லுங்களம்மா ! தைரியமாய்! "

மாலினி:—"மாதவ! என் தமயன் என்ன சொன்ன போதிலும் நாம் மூவரும் இது வரை வாழ்ந்து வந்த நேசத்தைப் பாராட்டி, ஒன்றும் செய்யாது மன்னிக்கவேண்டுமென்றேன்"

கோமன்:—"அதற்கு அவன் என்ன பதிலுரைத்தான்?"

மாலினி:—"எனக்குக் கொடும் பகைவனாயினும் உனக்கு அட மானம் கொஞ்சமேனும் இருப்பின் அவனுக்கு நான் கெடுதி செய்ய துணியேன், என்றான்"

ஸர். வக்.:—"ஓ! இது கொஞ்சமேனும் கேஸுக்குச் சம்பந் மில்லை"

கோமன்:—"ஏன் ? மாதவன் மனநிலைமையைத் தெரிவிக்கிறது. செய்கை சமயத்தில் நடந்தது, சொன்னது எல்லாம் ஸாக்ஷி மாகும்."

ஸர். வக்.:—"எனது நண்பர் சொல்லுகிறபடியே வைத்துக் கொண்டாலும், மாலினீயும் கமலாவும் பிரிந்த பிறகு மறுபடி சண்டை யுண்டாயிருக்கலாகாதா?"

கோமன்:—"அதைப்பற்றிப் பின்னால் தர்க்கித்துக் கொள்ளுவோம்"

ஸர். வக்.:—"இதை எழுதிக்கொள்ளக் கூடாதென்று ஆக்ஷேபிக்கின்றேன்"

ஜட்ஜ்:—(கொஞ்சம் கோபத்தை யடக்கிக்கொண்டு சாந்தமாய்) "மிஸ்டர் பப்ளிக்ப்ராஸ்க்யூடர்! க்ரிமினல் வ்யவஹாரங்களில் பிடிபட்ட கைதிகளை எப்படியாவது தண்டித்துவிட வேண்டுமென்பது க்ரிமினல் தர்மமல்ல. ஸர்க்கார் முறை (Policy)யு மல்ல. கைதி குற்றம் செய்தவன் தான் என்று நிச்சயமாய் ருஜுவாகும் விஷயங்களில், அவ்வாறு ருஜுவாகாமல் தப்பாது காக்கும் பொருட்டு மாத்திரம் ஸர்க்கார் வக்கீல்கள் நியமிக்கப்படுகிறார்கள். எள்ளளவேனும் சந்தேகம் ஏற்படுமாயின் கைதியை விட்டுவிடவேண்டியதே க்ரிமினல் தர்மமல்லவா? இதை உத்தேசித்துத் தானே கொலைக்குற்றங்களில், கைதிக்குக்கூட ஸர்க்கார் செலவில் வக்கீல்கள் நியமிக்கப்படுகின்றார்கள்? அதனால், நியாயமானது அணுவளவேனும் தவறாது நடக்கவேண்டுமென்பது தான் ஸர்க்கார் அபிப்பிராயம். எப்படியாவது தாங்கள் கொண்டுவந்த கேஸ் ஜயிக்கவேண்டுமென்பதல்ல. மேலும் குற்றமுள்ள நூறுபேர்கள் விடுபட்டாலும் பாதகமில்லை. குற்றமற்ற ஒருவன்கூட தண்டனைக்குட் படலாகாது."

ஸர். வக்.:—"கோர்ட்டார் அபிப்ராயம்.!"

ஸாக்ஷ்யம் எழுதிக்கொள்ளப்பட்டது. பிறகு இரண்டாவது ஸாக்ஷி கமலா என்பவளால் மாலினீயின் ஸாக்ஷியம் பெரும்பாலும் ஆதரிக்கப்பட்டது. பிறகு துவாரபாலகர்கள் இருவரும் முறையே விசாரிக்கப்பட்டார்கள். அவர்கள் எதிர் விசாரணையில்,

கோமன்:—"சரீ! மாதவன் இரத்தக்கோலத்துடன் அரண்மனையில் புகுந்ததாகச் சொன்னாயல்லவா?"

சாக்ஷி:—"ஆமாம்!"

கோமன்:—அப்பொழுது அவன் உங்களை ஏதாவது கேட்டானா?"

சாக்ஷி:—"ஏ! ஜவான்களே சின்னராசா உள்ளேவந்தாங்களா? என்று கேட்டார்.

கோமன்:—"சரி!"

அநேக ஆக்ஷேபணை ஸமாதானங்களின் பேரில் இந்த விடையும் எழுதிக்கொள்ளப்பட்டன. பிறகு தோட்டக்காரர்கள், தாங்கள் கண்டெடுத்த, ஒடிந்த கத்திப்பிடியைப் பற்றியும் தலைப் பாகையைப் பற்றியும் விசாரிக்கப்பட்டார்கள். மேற்சொன்ன கத்திப்பிடியும் ஒடிந்த துண்டும், மாதவனதுதானென்றும் தலைப்பாகை தினகரனது தானென்றும் அங்கீகரிக்கப்பட்டன.

---

## பதினான்காவது அத்யாயம்.

### மரண தண்டனை.

### Sentence of Death.

கொலையஞ்சார் பொய்நாணார் மானமுமோம்பார்
களவொன்றோ வேனையவுஞ்செய்வார்—பழியொடு
பாவமிஃதென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமங்கதுவப் பட்டார்.

—நீதிநெறிவிளக்கம்.

பிறகு போலீஸ் ஸூபெரிண்டெண்ட் துரையும் ஸர்க்கார் வக்கீலும் இன்ஸ்பெக்டரும் சற்று நேரம் இரகஸ்யமாய் ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள். கடைசியாய்,

ஸூப்பிரிண்டெண்டெண்ட்:—"அவசியம் விசாரித்துத்தான் தீரவேண்டும்" என்றார்.

ஸர். வக்.:—"சரி அப்படியே செய்கிறது."

ஸேவகன்:—"கிருஷ்ணராஜ்! கிருஷ்ணராஜ்!! கிருஷ்ணராஜ்!!!"

உடனே நமது மணிபுரம் மஹாராஜா ப்ரவேசமாய் சாக்ஷிப் பெட்டியில் ஏறி நின்றார். ஆங்குள்ளோர் யாவர் கண்களும் அவர்

முகத்தை நாடின. எல்லோரும் ஆவலுடன் கவனிக்க ஆரம்பித்தார்கள்.

கோமன்:—(எழுந்து) "இவர் கீழ் கோர்ட்டில் ஸாக்ஷியல்ல புது ஸாக்ஷி விசாரிப்பது நியாயமல்ல."

ஜட்ஜ்:—"என்ன ஸமாதானம் சொல்லுகிறீர்?"

ஸர். வக்.:—"அவசிய மென்பது விசாரணையிலே வெளியாகும். விசாரணை முடிந்ததும், இது நியாயத்தை யனுசரித்துத்தானிருக்கிற தென்பதைப் பல ஆதாரங்களால் ஸ்தாபிக்க முடியுமென்று எண்ணுகின்றேன்."

ஜட்ஜ்:—"சரி! இந்த ஸாக்ஷியை விசாரிப்போம். அதன் பலாபலங்களைப் பின்னால் யோசிப்போம்.

கோமன்:—"கோர்ட்டார் உத்தரவு ப்ரகாரம்."

ஸர். வக்.:—"ஏனையா தாங்கள் மணிபுரம் ஜமீன்தாரா?"

ஜமீன்தார்:—"ஆமாம்"

ஸர். வக்:—"தாங்கள் திவான் பகதூர்?"

ஜமீன்தார்:—"ஆமாம்"

ஸர் வக்:—"கீழ்கோர்ட்டில் விசாரணை நடந்த தினம் சுமாராய் ஞாபகமிருக்குமா?"

ஜமீன்தார்:—"ஆமாம்—சுமா—ர்—"

ஸர். வக்—"ஆ சரி! அதிருக்கட்டும்; அதற்குப்பிறகு கைதியைத் தாங்கள் பார்த்ததுண்டா?"

ஜமீன்தார்:—"ஆ—ஆ—மா—ம்!"

ஸர். வக்:—"சும்மா—தைர்யமாய்ச் சொல்லும்—நீராகப் போனீரா?"

ஜமீன்தார்:—"அல்ல! சொல்லியனுப்பினான்—மாதவன்"

ஸர். வக்:—"தாங்கள்—போனீர்கள். மாதவனுடன் ஸம்பாஷித்தீர்கள்."

ஜமீன்தார்:—"ஆ—ஆ—ஆ—மா—ம்!"

ஸர். வக்:—"என்ன நடந்தது? சொல்லுங்கள் தைர்யமாய்?"

ஜமீன்தார்:— " இன்ஸ்பெக்டர் ஹரிராவைப் பரபரப்புடன் பார்க்க, இன்ஸ்பெக்டர் அவரைப் பாராதவர்போல் தலைகுனிகின்றார்.

ஸர். வக்:—"சொல்லுங்களேயா? நடந்ததைச் சொல்லும்"

ஜமீன்தார்:— " இ — இ — இல் — லை! அது — நா—ன்— சொ—ல்—"

ஸர். வக்:—"சொல்லித்தான் தீரவேண்டும். இது ந்யாயஸ்தலமாக்கும். கேட்ட கேள்விகளுக்குத் தெரிந்தவரை பதிலுரைக்க வேண்டும். வேண்டும் வேண்டாமென்று சொல்ல உமக்கு அதிகாரமில்லை!"

ஜமீன்தார்:—"ஆ—ஆ—ஆ"

ஸர் வக்:—"ஆ—ஆ என்ன? ஊ—ஊ என்ன? சொல்லும் சீக்கிரம்."

ஜமீன்தார்:— " ஆமாம். மாதவன்—மாதவன்—ஏதோ ஒரு கடிதத்தை என் வசம் ஒப்பித்து, அதை மாலினியிடம் கொடுக்கும் படி பிரார்த்தித்தான்."

ஸர். வக்:—"அது தவிர வேறு என்ன நடந்தது? ஒளியாமல் சொல்லும். இன்ஸ்பெக்டர் அவர்களிடம் நீர் ஒப்புக்கொண்டிருக்கின்றீர். ஞாபகமிருக்கட்டும்—ஜாக்கிரதை."

ஜமீன்தார்:—"மாதவன், தான் ஏதோ சிறுபிள்ளைத்தனமாய் கோப வெறியால்—சண்டையிலே—தினகரனைக் கொன்று—சிற்றூற்றில் பிரேதத்தை எறிந்துவிட்டானும்."

மாதவன்:—(கோபாவேசத்துடன்) "அடே பாதகா!"

ஜட்ஜ்:—"இரையாமலிருக்கச் சொல்"

டலாயத்:—"ஐயா! இரையாதேயு மையா சும்மா இரும்"

ஸர். வக்:—"உம்!"

ஜமீன்தார்:—"எப்படியாவது தன்னைத் தப்பித்துவிட வேண்டும்—என்றான்."

மாதவன்:—"அடே பாதகா! அடே சண்டாளா! அடே துரோகி!"

ஜமீன்தார்:—(தைர்யமாய் மாதவனை நோக்கி) "நான் என்ன செய்வேனப்பா? நான் இந்த ஸமாசாரத்தை வெளியிடவில்லையென்று வாக்களித்தது வாஸ்தவம். உன்னைத் தப்புவிப்பதில் என்னால் வேண்டிய உதவி செய்வதாய் வாக்களித்ததும் வாஸ்தவம். பொருளைப் பொருளென்று பாராட்டாமல், உனக்கு வக்கீல் நியமித்து வேண்டிய ஏற்பாடு செய்து வருகிறேன்."

ஸப்ரிப்ரி:—புன்சிரிப்புடன் மீசையைத் திருக்கி விட்டுக்கொள்ளுகிறார்."

ஜமீன்தார்:—"நான் என்ன செய்வேன்? பிறந்தது முதல் இதுவரை ஸாக்ஷிக்கூட்டில் ஏறினது இல்லை. இந்த இன்ஸ்பெக்டர் என்னை விசாரணையில்லாமல் செய்கிறதாக வாக்களித்தவர் வாக்குத் தவறிவிட்டார்."

மாதவன்:—"அடே பரம சண்டாளா! பொய்சொல்லிப் — பழி—"

ஜமீன்தார்:—"நான் என்ன செய்வேன்? எனக்கு இந்த ஸாக்ஷ்யம் சொல்ல இஷ்டமே இல்லை. நான் செய்த வாக்குறுதி தவறிவிட்டது எனக்கே வருத்தமாயிருக்கிறது."

மாதவன்:—"அடே—!"

மேற்கூறிய ஸம்பாஷணையானது நாம் எழுதச் சொல்லக்கூடிய காலத்திலும் அதிவிரைவாய் நடந்தபடியால் ஜட்ஜ், வக்கீல்கள் எல்லோரும் மந்திர சக்தியால் கட்டுண்டவர்கள் போல ஸ்தப்தமாய் இருந்துவிட்டார்கள்.

ஜட்ஜ்:—"சும்மா இருக்கச் சொல்"

டலாயத்:—"சும்மா இரும் ஐயரே! துரை கோவிப்பாங்க?"

ஸர். வக்:—"சரி. மேலே! என்ன நடந்தது?"

ஜமீன்தார்:—"இந்த வார்த்தையைச் சொன்னதும்—அது வரை அவன் மேல் கெட்ட எண்ணமில்லை—உடனே என்னை அறியாமல்—பாவி! பாவி! என்று சத்தமிட்டுக்கொண்டு ஓடினேன். இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு வந்து என்னறியாமலே எல்லாம் தெரிவித்து விட்டேன்."

ஸர். வக்:—"அப்புறம்!"

ஜமீன்தார்:—"எல்லாம் சொன்ன பிறகுதான் என்புத்தி என் ஸ்வாதீனத்துக்கு வந்தது. உடனே எப்படியாவது—அவனைத் தப்புவிக்க வேண்டுமே யென்றேன்."

ஸர். வக்:—"அதற்கு அவர் என்ன சொன்னார்?"

ஜமீன்தார்:—"அது தன்னால் வாக்களிக்க முடியாதென்றும் ஆனால் என்னைப் பெட்டியிலேற்றாத வகை செய்வதாயும் வாக்களித்தார். நான் அவர் வாக்குறுதி தவறார் என்றிருந்தேன்."

ஸர். வக்:—"மாதவன் கொடுத்த கடிதம்—"

ஜமீன்:—"ஆமாம்—அதையும் ஞாபகப் பிசகாய் இன்ஸ்பெக்டர் கையில் கொடுத்துவிட்டேன்."

ஸர். வக்:—(ஓர் கடிதத்தைக்காட்டி) "இதுதானா அந்தக் கடிதம்?"

ஜமீன்தார்:—(அதை வாங்கிப் பார்த்துவிட்டு) "ஆமாம்"

எதிரிதரப்பிலும், அது மாதவன் கடிதம் தான் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. அதில் பின் வருமாறு வரையப்பட்டிருந்தது.

(குமாஸ்தா வாசிக்கின்றார்.)

"பால்யம் முதல் ஸகோதர வாஞ்சையுடன் வாழ்ந்து வந்த மாலினீ யம்மாளுக்கு மாதவன் எழுதிக்கொண்டதாவது:—

தாங்கள் இப் பாவியாகிய என்மேல், ஸகோதர வாத்ஸல்யத்துக்கு அதிகமாய்க்கொண்டிருந்த எவ்வித அன்பையும் மறந்து, தங்கள் அந்தஸ்துக்கும், கௌரவத்துக்கும் தக்க நாயகனை யடைந்து வாழ்வதற்கு எல்லாம் வல்ல ஈசன் ஸகாயம் செய்வார் என்று எப்பொழுதும் பிரார்த்திக்கின்ற,

தங்கள் அடியேன்,

மாதவன்.

மாதவன்:— "அடே பாதகா! அடே துரோகி! அடே சண்டாளா!"

ஸர். வக்:—"சரி! ஒரு கேள்வி:—இந்தக் கேஸில் எதிர்தரப்பில் பணச்செலவு முழுமையும் தாங்கள்தானே?"

ஜமீன்தார்:—"ஏதோ அடியேன் கடமையென்று நினைத்து—'

ஸர். வக்:—"சரி! சரி! அதனால் பாதகமில்லை."

கோமன்:—(எதிர் விசாரணை) "மாலினீயின் காதல் விஷயத்தில் மாதவன் உமக்குக் கொடிய எதிரிதானே?"

ஜமீன்தார்:—"ஏதோ சிறுபிள்ளை! அப்படி நினைத்துக்கொண்டிருக்கின்றான். எனக்கு அவன் மேல் கொஞ்சங் கூடக் கோபமில்லை. கொடுத்தால் குசாலாய் விவாகம் செய்து கொள்ளட்டும். நானா பழி! ஏதோ தெரியாத பையன் இவ்வளவு தூரம்—"

கோமன்:—"சரீ! உம்மை கூப்பிடும் வரை, நீர் ஸாக்ஷியாய் விசாரிக்கப் படுவீரென்று உமக்குத் தெரியாதே."

ஜமீன்:—"தெரியாது. அப்படித்தான் இன்ஸ்பெக்டர் வாக்களித்தார்."

கோமன்:—"அப்படியானால், உமக்கு இங்கே என்ன ஜோலி? மணிபுரத்தைவிட்டு ஏன் இங்கே வரவேண்டும்?"

ஜமீன்:—"இ—இ—இல்லை. பணச்செலவு செய்கிறோம். சரியானபடி எதிர் தரப்பு—நடக்கிறதா?"

கோமன்:—"அப்படியானல்—உம்முடைய கார்யஸ்தர்கள் மூ
மாய் நடத்தலாகாதா? உம்முடைய கேஸுகளுக்கெல்லாம் நீரே
நேரில் வந்தா நடத்துகின்றீர்? பெரிய ஜமீன்தாராயிற்று—திவாக
பகலூர் வேறே—?"

ஜமீன்:—" ஆ!—ஆ!!—ஆ!!!"

கோமன்:—"அது இருக்கட்டும். வேடிக்கை பார்க்க வந்தவர்,
இவர்களெல்லோரையும் போல இங்கே உட்காராமல் மற்ற ஸாக்ஷி
களைப்போல் வெளியே இருப்பானேன்?"

ஜமீன்:—"ஆ—ஆ—ஆ—இ—இ—இன்ஸ்பெக்டர் வெளியே
இருக்கச் சொன்னார்."

கோமன்:—"ஆகையால், கூப்பிடுவதற்கு முன்னமேயே நீர்
ஒரு ஸாக்ஷியென்று உமக்குத் தெரியும்—?"

ஜமீன்:—"ஆ—ஆ—ஆ—மாம்."

கோமன்:— "ஆகையால், தெரியாதென்று சொன்னது
பொய்?—அப்படித்தானே?"

ஜமீன்தார்:—"ஆ—ஆ—ஆ."

பிறகு இன்ஸ்பெக்டர் ஹரிராவ் விசாரிக்கப்பட்டார். அநேக
மாய் ஜமீன்தார் ஸாக்ஷ்யத்தை ஆதரித்தார். இந்த விஷயத்தைப்
பற்றித் தானும், ஸுப்ரிண்டெண்டெண்டும் கலெக்டரும் பலவித
மாய் ஆலோசித்து, ஜமீன்தாரைப் பெட்டியிலேற்றிவிட வேண்டியது
தானென்றும், இந்தக் கடிதத்தை கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்
டியதுதா னென்றும் தீர்மானத்துக்கு வந்ததனல், தான், ஜமீன்
தாருக்கு வாக்களித்தபடி நிறைவேற்ற முடியாததுபற்றித் தான் மிக
விசனிப்பதாகவும் அது தன் செயலல்ல வென்றும் தெரிவித்துக்
கொண்டார். இவ்வாறு வாதி தரப்பு ஸாக்ஷியங்களெல்லாம் க்ரமப்
படி விசாரணையானபின், எதிரி தரப்பில் ஸாக்ஷ்யம் யாதொன்று
மில்லை யென்று தெரிவிக்கப்பட்டது.

உடனே ஸர்க்கார் வக்கீல் மீறுபடி, தன் கேஸின் தன்மையையும், அதன் ஸாக்ஷ்ய அம்சங்களையும், அவைகளின் பலா பலங்களையும், சில முக்கியமான விவாத அம்சங்களுக்கு ஆட்சேபணை சமாதானங்களையும் சுருக்கமாயும் தெளிவாயும் எடுத்துக் கூறிய பிறகு, கடைசியாக, "கனவான்களே! இந்தக்கேஸில் கொலை செய்யப்பட்டவரின் ப்ரேதம் அகப்படவில்லையென்று எதிரி தரப்பில் மிகவும் வற்புறுத்திக் கூறலாம். ஆனால் ப்ரேதம் அகப்படாதது சட்டப்படி வாதிதரப்பில் யாதொரு பலக்குறைவு மில்லை. ஆனால், தினகரனுடைய தலைப்பாகை கிடைத்திருக்கின்றது. செய்கை தினம் முதல் தினகரனைக்காணோம். எதிரியின் அடிக்கத்தி யொடிந்தது அகப்பட்டிருக்கின்றது. சில நாட்களாய் எதிரிக்கும் இறந்தவனுக்கும், மாலினீ நிமித்தமாய்க் கொடிய பகையென்றும், செய்கை நேரத்துக்குச் சற்று முன், கொடுஞ்சண்டை நேர்ந்ததென்றும், சற்றுப் பின், எதிரி இரத்தக்கோலத்துடன் அரண்மனைக்குள் ப்ரவேசித்தானென்றும் ருஜுவாயிருக்கின்றன. இவ் வபூர்வ ஸம்பவங்களுக்கு எதிரிதரப்பில் யாதொரு ஸமாதானமும் சொல்ல முயலவில்லை. மேலும், எதிரிமீது என்றும் மாறாக் காதலையுடைய மாலினீ ஏன் இவ் விஷயத்தில் பொய் கூறவேண்டும்? தவிரவும், எதிரி தரப்பில் ஏராளமான பணச்செலவு செய்து எதிர்வாதம் செய்யும், ஜமீன்தாரவர்கள் ஏன் பொய் சொல்லவேண்டும்?. இவ்வாறு ஸந்தர்ப்ப ஸாக்ஷ்யங்களெல்லாம் ஒன்று சேர்ந்து எதிரியின் குற்றத்தை நிரூபிக்கும் பொழுது கேவலம், ப்ரேதமகப்படாத ஒரு அம்சம் மாத்திரம், எதிரியைக் குற்றமற்றவனாய்ச் செய்யப் போதுமானதல்லவென்று தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது." என்று சொல்லி முடித்தார்.

பிறகு கோமன்துரை தன் பக்கத்துப் பலாபலங்களைத் தெரிவித்துக் கொண்டபிறகு "கனவான்களே! எதிரியும், தினகரன் குடும்பமும், அன்யோன்யமாய் வாழ்ந்து வந்த விஷயமும் கேவலம் காதல் மாத்திரம், இக் கொடுஞ் செய்கைக்கு எதிரியை யுட்படுத்த மாட்டாதென்பதும், செய்கைக்கு முன் மாலினீயின் பிரார்த்தனைக்கு மாதவன் கூறிய விடையையும், துவாரபாலகர்களை நோக்கி, "ஜவான்களே! சின்னராசா உள்ளேவந்தாரா?" என்றுகேட்ட கேள்வியையும்

தாங்கள் சற்று நன்றாய்க் கவனிக்கவேண்டும். மேலும் மாதவன் தினகரனைக் கொலைசெய்தது வாஸ்தவ மாயின் துவார பாலகர்களை நோக்கி அவ்விதமாய்க் கேட்க யாதொரு காரணமுமில்லை. இந்தக் கேஸில், மாதவன் ஏதோ தன் குற்றத்தை யொப்புக்கொண்டதாக, ஜமீன்தார் சொன்ன சாக்ஷ்யமானது, அங்கீகரிக்கத் தக்கதுமன்று; திருப்தி காமுமன்று. மாலினீயின் காதல் விஷயத்தில், ஜமீன் தாருக்கு மாதவன் எதிரி. ஜமீன்தார் பணச்செலவு செய்வது கேவலம் உலகத்தை மெய்ப்பிக்கும் பொருட்டுத்தான் செய்து வரு கின்றார். ஆகையால், அவர் ஸாக்ஷ்யத்துக்கு யாதொரு கௌரவமும் வைப்பது ந்யாயமுமல்ல. தவிரவும், ப்ரேதம் அகப்படாத விஷய மும் வாதிதரப்புக்கு மிக்க பலக்குறைவு தான். இந்த ஜில்லாவி லேயே முன் ஒருதடவை, மரணதண்டனையான பிறகு, கொலை செய்யப்பட்டதாக ருஜூப்படுத்தப்பட்டவன் (எல்லோரும் 'குல்' என்று சிரிக்கின்றார்கள்) உயிருடன் ஆஜரானான்' என்ற விஷயமும் இந்த ஜில்லா முழுமையும் தெரிந்த விஷயமல்லவா ? இதே மாதிரி தினகரன் எக்காரணம் பற்றியாவது மறைந்தாவது, மறைக்கப்பட் டாவது இருக்கலாம். அப்படி யேற்படும் விஷயத்தில் நிஷ்கல்மஷ மான ஒருவன் கேவலம், ஸந்தர்ப்ப ஸாக்ஷ்ய பலத்தால் மாத்திரம் ந்யாயஸபையால் மரணதண்டனை யடைவது மிக்க துக்க கரமானது; இவைகளெல்லாம் ஆலோசிக்கும் விஷயத்தில் எதிரியை விடுதலை செய்வதே மிக்க ந்யாயம் என்றும் தர்மமென்றும் தெரிவிக்கப்படு கின்றது" என்று சொல்லி முடித்தார்.

ஜட்ஜ்:—(பிறகு உபயதரப்பின் பலா பலங்களை எடுத்துக் கூறிய பிறகு) "கனவான்களே ! இவ் விஷயத்தில் தாங்கள் மத்யஸ்தர்களா யிருப்பதில் முக்கியமாய் ஒரு விஷயம் கவனிக்கவேண்டும், விசாரணை யில் விசாரிக்கப்பட்ட ஸாக்ஷ்யங்களை மாத்திரம் கொண்டு நீங்கள் தீர் மானிக்க வேண்டும். இதைத் தவிர வேறு வெளி விஷயங்கள் தங்கள் தீர்மானத்தை எவ்விதத்திலும் மாற்றும்படி விடலாகாது. ப்ரேதம் அகப்படாததும், ஜமீன்தாருடைய கொடும் பகையும், எதிரி தரப் புக்கு முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய அம்சந்தான். மற்றவிஷயங் கள் யாவற்றிற்கும் எதிரிதரப்பில் யாதொரு ஸமாதானமும் சொல் லுப்பட வில்லையென்பதும் தாங்கள் கவனிக்கவேண்டிய விஷயம்.

ஜமீன்தாரின் அந்தஸ்தைப் பற்றியும் அவர் ஸாக்ஷ்யம் எவ்வளவு வரை நம்பத்தக்கதென்பதும் தாங்களே யோசித்துக்கொள்ளவேண்டும்." என்று சொல்லிமுடித்தார். சற்று நேரம் எல்லாம் மௌனமாயிருந்தது. பிறகு

ஜட்ஜ்:—"தயாராய் விட்டீர்களா?"

அஸேஸர்கள்:—"ஆமாம்"

ஜட்ஜ்:—"உங்கள் அபிப்பிராய மென்ன ?"

அஸேஸர்கள்:—"எதிரி குற்றவாளிதான்."

ஜட்ஜ்.—"நானும் இணங்குகின்றேன்."

மாதவன் பேரில் மரணத்தண்டனை விதிக்கப்பட்டது. மிக்க அல்லோல கல்லோலத்துடன் கோர்ட்டும் கலைந்தது.

---

## பதினைந்தாவது அத்யாயம்.

### சிறைச்சாலை.

### The Prison.

மாதவனுக்கு மரண தண்டனை விதித்துச் சில நாட்களாயின. மாதவன் ஹைகோர்ட் உறுதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றான். எந்தத் தினத்தில் எந்நேரத்தில் வருமோ தெரியாது.

பிறவி முதல் பிராணிகளுக் கெல்லாம் ஸகஜமாய் உயிரின் மீது ஓர் வித அன்புண்டென்பது யாவரும் அறிந்த விஷயம். அப்படியிருக்க உயிரையும் வெறுக்கத் துணியும் சில காலங்கள் மனித வாழ்வில் ஏற்பட்டு விடுகின்றன.

நமது மாதவன் மதுரை புதுஜெயிலில் கைதியாய் இருக்கின்றான். ஒரு நாட்காலை சுமார் 8 மணி இருக்கலாம். "புதுஜெயில்" முன்பாகச் செல்லும் பெரும் சாலையில் திடீரென்று ஓர் "ப்ரூஹாம்" வண்டி வந்து நின்றது. பின் தட்டில் நின்று "ஹேய் ஹேய்" என்று எச்சரித்துக் கொண்டுவந்த வில்லைச் சேவகன் திடீரென்று குதித்து வண்டியின் வடபுறமாய் வந்து கைப்பிடியைச் சுழற்றக் கதவு திறந்தது. உடனே அவ் வண்டியிலிருந்து, கழுத்து முதல் முழங்கால்

வரை "அல்பாகா" உடைதரித்து, கால்களில் காற்சட்டை "பூட்ஸ்" அணிந்து, காஞ்சிபுரம் ஜரிகை ருத்ராக்ஷக்கரைவேஷ்டியொன்றைக் கரைகாண மடித்து யோகவேஷ்டியாய்த் தரித்துத் தின்டுக்கல் தலைப் பாகையும், தங்கம் கட்டிய மூக்குக்கண்ணாடியுமணிந்த ஒருவர் மெது வாய்க் கீழே இறங்கினார். இவருக்கு சுமார் 50 வயதிருக்கலாம். சேவகன் வண்டிக்குள்ளிருந்த ஓர்கைப்பை(Brief-bag)யை எடுத்துக் கொண்டு பின் சென்றான். பிரபு கம்பீரமாய் முன் நடக்க, அவர்பின் சேவகன்செல்ல, இருவரும் ஜெயில் ப்ரகாரத்துக்குட்புகுந்து அதற் கடுத்த பெரியவாசலில் நின்றார்கள். அவ்வாசலைக் காத்துக்கொண்டு எதிர் எதிராய் நின்றுகொண்டிருந்த இரண்டு சேவகர்கள் விறைத்த படியே நின்றுகொண்டு பிரபுவுக்கு "ராணுவஸலா"மிட்டார்கள். பிரபுவும் தனது மந்தஹாஸவதனத்தை யசைத்து அதை அங்கீகரித் தார். உடனே ஓர் சேவகன் எதிரே வந்து, ஸலாமிட்டு "மஹராஜ்! என்ன விசேசம்?" என்று வினவினான்.

ப்ரபு:—"உங்கள் ஸுபெரிண்டெண்டெண்ட் இருக்கிறாரா? ஓர் கைதியைப்பார்த்துப் பேசிப்போகவேண்டும்," என்று கம்பீரமாய்ச் சொல்ல,

சேவகன்:—"கேட்டுக்கிட்டு வருதேன் எஜமான்" என்றுசொல்லி விரைவாய் உட்புகுந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் மறு படிவந்து "வரச்சொல்லுதாக துரையவுக" என்றுசொல்ல, ப்ரபுவும், பின்னாலே அவர் சேவகனும் உட்புக ஆரம்பிக்க, ஜெயில் சேவகன் "மஹராஜ் எஜமானை மாத்திரம் உள்ளே வரும்படி உத்தரவாயி-ருக்-கு-து" என்றான்.

ப்ரபு:—(மந்தஹாஸத்துடன்) "பாதகமில்லை; மூக்கா! பையை என் கையில் கொடு" என்று கேட்க, அதற்குள் ஜெயில் சேவகன் அதைத் தன்கையில் வாங்கிக்கொண்டான். சேவகன் முன்னும் ப்ரபு பின்னுமாக ஜெயிலுக்குள் நுழைந்தார்கள். கடைசியில் முன் அணியிலிருந்த ஓர் ஆபீஸில் வந்துசேர்ந்தார்கள். ஆங்கு ஓர் மேஜைக்குப்பின் போடப்பட்ட ஓர் நாற்காலியில், "ஸுபெரிண் டெண்டெண்ட்" உட்கார்ந்து வெகு முறுக்காய் வேலைபார்த்துக் கொண்டிருந்தார்.

ப்ரபு உள்ளே நுழைந்ததும் துரைக்கு, "குட் மார்னிங்! மிஸ்டர்" என்று ஸலாமிட, துரையும் மந்தஹாஸத்துடன் தன் பேனாவைப் பற்களில்வைத்துக் கடித்தபடியே பற்களை இளித்துக்கொண்டு, "அலோ! குட்மார்ன், இவ்வாஸனத்தில் உட்காருங்கள்" என்று சொல்ல, ப்ரபுவும் அவ்வாறே அமர்ந்தார்.

துரை:—"ஏதாவது விசேஷம்?"

ப்ரபு:—"ஓர் கைதியைக்கண்டு பேசிப்போகவேண்டும் என்று வந்தேன்."

துரை:—"நல்லது! யாரது?"

ப்ரபு:—"மாதவன் என்று—"

துரை:—"ஓ! அந்த—அதென்ன?—மணிபுரம் கேஸ்—அது நல்ல வேடிக்கைக் கேஸ்—அப்படித்தானே?—ஜட்ஜ் புத்திசாலி! அப்படித்தானே?—

ப்ரபு:—(சற்று வாடியதன்முகத்தை ஸாமர்த்தியத்தால் மறைத்துக் கொண்டு, ச்ரமப்பட்டுப் புன்னகை கொண்டு) "ஆமாம், அவர்தான்—" என்றார்.

துரை:—"மாதவனைப் பார்க்கவேண்டுமோ? ஏதாவது மேல் நடவடிக்கைகள்?"

ப்ரபு:—"அது விஷயமாய்த்தான்—"

துரை:—"மன்னித்துக் கொள்ளவேண்டும். இந்த விஷயத்தில் அவ்வளவு ரகஸ்யங்களை நான் வினவலாகாது 'ஜெயில் ரூல்', பிரகாரம். ரகஸ்யமாய்ப் பேசவேண்டுமானால் அதோ அந்த அறை, அதில் போய் உட்காருங்கள். வேண்டிய ஸமாசாரங்களைக் கேட்டுக் கொள்ளலாம்."

ப்ரபு:—"தாங்க்ஸ்!"

துரை:—"குட்மார்ன்! வார்டர்! கைதி மாதவனை அந்த அறைக்கு இட்டுக்கினுபோங்கோ."

ஜெயில் சேவகன் பிரபுவை அழைத்துச் சென்று ஓர் அறையிற் போட்டிருந்த ஒரு நாற்காலியில் உட்காரச் சொன்னன். சிறிது நேரத்துக்கெல்லாம் வார்டர்கள் மாதவனை அழைத்து வந்து ப்ரபுவின் முன் நிறுத்தினர்கள். ப்ரபு தன் உடைப் பையினின்றும், ஒரு ரூபாயை எடுத்துச் சேவகன் கையிற் கொடுத்து "நீங்கள் மூவரும் காபிவாங்கிச் சாப்பிடுங்கள்" என்றார். சேவகன் "ஸலாம் மஹாராஜ்" என்று ஸலாமிட, மூவரும் வெளியே சென்றார்கள்.

மாதவன் அறைக்குட் புகுந்து ப்ரபுவைப் பார்த்துத் திடுக்கிட்டு ப்ரமித்தான். ஆயினும் தன் புத்தித் திறமையால் தன் ஆச்சரியத்தை யடக்கிக் கொண்டு தன்னறியாமலே கைகூப்பி நின்றான். "ஜெயி"லர்கள் வெளியே சென்றதும், மாதவனுக்குத் தன்னறியாமலே சோகம் அதிகரித்தது. கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று. விம்மி விம்மியழ ஆரம்பித்தான். பிரபு வெளிப்புறம் பார்த்துவிட்டு, மாதவனைத் தன் இடக்கையால் கட்டிக் கொண்டு, தன் கைக்குட்டையால் அவன் முகத்தைத் துடைத்து விட்டு, அடங்காத் துயரத்தால் தன் தைரியமான கண்களிலிருந்து தத்தளிக்கும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, மாதவனைத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டார்.

சிறிது நேரம் இருவரும் யாதொன்றும் ஸம்பாஷிக்க வாயெழாமல் சித்திரப் பதுமைகள் போல் ஸ்தப்தமாயிருந்தார்கள். கடைசியாய்,

ப்ரபு:—"மாதவ! என் கண்மணீ!"

மாதவன்:—"ஸ்வாமி! "(விம்மி விம்மி யழுகிறான்.)"

ப்ரபு:—"அப்பா! வியஸனப்படாதே யப்பா! அவனவன் செய்த வினையை அவனவனே அனுபவிக்க வேண்டும்."

மாதவன்:—"ஸ்வாமி! எல்லாவற்றையும் காக்க வல்ல ஈசன் ஒருவனுண்டென்று கேட்டிருக்கிறேன். ஆனல் பாபியாகிய என் மீது மாத்திரம் அவருக்குக் கருணையில்லையே! ஸ்வாமி! இறப்பதைப் பற்றி எனக்குக் கொஞ்சமேனும் வருத்தமில்லை! ஆனல், (விம்மி விம்மி யழுதுகொண்டு) கொலைக்கேஸிலே மரணதண்டனையடைந்து தூக்குமரம் சேரும்படிநேர்ந்த என் துர்ப்பாக்கியத்தை நினைத்தால்—"

ப்ரபு:—"கண்மணி! நீ வருத்தப்படாதே! ஈசனிருக்கின்றார். நியாயமந்யாயம் அவருக்குத் தெரியும். நல்லகாலம் வந்தவுடன் இவை எல்லாம் ஆதவனைக் கண்ட பனிபோல் விலகிவிடும்."

மாதவன்:—"என் கஷ்டங்கள் என்மண்டையோடுதான் விலக வேண்டும். இனி என்ன விசாரம்?"

ப்ரபு:—"அப்பா மாதவ! வந்த கார்யத்தைக் கவனிப்போம், மலை யறுந்து மயிரிழையில் தொங்குவதுபோல் உன்னுயிருக்கு அநு வசியமாய், அநியாயமாய் ஆபத்து நேர்ந்திருக்கின்றது. அதினின் றும் தப்புவிக்க—"

மாதவன்:—"ஸ்வாமி! காட்டினில் படுகுழியில் வீழ்ந்து புலி வாயி லகப்படுந் தருணத்தில் தேனில் ஒரு சொட்டு விழுந்தால் இனிமை தருவது போல் இனிமையாயிருக்கின்றது தங்கள் வசனம். ஐயோ! என்மீது யாதொரு குற்றமுமில்லையென்று தாங்களாவது நினைக்கின்றீர்களே என்ற ஸமாதானத்தோடாவது தூக்குமரம் செல்லுகின்றேன். ஸ்வாமி! என்னைத் தப்புவிக்க இனி ஈசனாலும் முடியாது. ஹைக்கோர்ட்டிலும் உறுதியாய்விட்டதாய்க் கேள்வி. அடியேன் மீது தேவரீர் இவ்வளவு சிரமப் பட்டும் வீணாக நேர்ந் தால்—. ஆனால் தங்களை வனத்திற் கண்டது முதல், தாங்கள் என் மீது பாராட்டிவரும் அபிமானத்தையும், நான் ஏதோ எப்படியா வது கடைசியில் நல்ல ஸ்திதியில் இருப்பேன் என்று தாங்கள் கொண்டிருக்கும் தீர்மானத்தையும் கவனிக்க எனக்கு ஆச்சர்யமாய் இருக்கின்றது.

ப்ரபு:—"அப்பனே! எல்லாம் வல்ல ஈசனுடைய க்ருபை யொன் றிருக்குமாயின் இவ்வுலகில் அசாத்யமென்பது மொன்றுண்டோ? இவ்வளவு கஷ்டங்களின் மத்தியில் எப்படியாவது எல்லாம் மங்கள மாகவே முடியுமென்பது என் மனதில் தோன்றிக் கொண்டேயிருக் கின்றது."

மாதவன்:—"ஸ்வாமி! ஒருவன் ஒரு விஷயத்திலேயே அதிக மாய்ப்புத்தியை லயிக்கச்செய்தால், அவ்விஷயமானது ஸாத்யமான தாகவே காண்கின்றான். இதுதானே மனோலயம் (Fixed-ideas)

என்ற நியாயம்? எப்பொழுதும் என் நன்மையையே கருதிக்கொண்டிருக்கும் தங்கள் மனதில் அதே ததாகாரமாய்த் தோன்றுகின்றது. ஆனால்—,"

ப்ரபு:—"மாதவ! அதிகமாய் இனிக்காலதாமதம் செய்வதிற் பயனில்லை. ஆகையால் உன்னிடம் சில ரகஸ்யங்கள் கேட்க வந்தேன். அதற்காகத்தான் இவ்வளவு வேஷம் எனக்கு"—

மாதவன்:—"ஸ்வாமி! தாங்கள் எவ்வாறு இச்சிறைச்சாலைக்குட் புகுந்தீர்கள்? வெகு கண்டிப்பாய் காக்கப்பட்டிருக்கின்றதே!"

ப்ரபு:—"அப்பனே! மாதவ! அன்பினாலகாதொன்றுண்டோ! கண்மணி! உன் ஆசையால், இவ்வாறெல்லாம் நான் செய்யத் துணிந்தேன். கண்ணே! என் நிஜ அழகைப்பார்த்தா என்னை உட்புகவிட்டான்? என் உடைகளின் கௌரவத்தால் அல்லவோ நான் உட்புக முடிந்தது? இரண்டரை ரூபாயல்லவோ இவ்வுடைகளுக்கு வாடகை. இன்றுமாலைக்குட் திருப்பிக்கொடுத்துவிட வேண்டும். வடக்கு வெளிவீதி வண்ணானிடமிருந்து இவை வாங்கப்பட்டன. யாரோ ஒரு வக்கீல் உடைகளாம்.—"

மாதவன் இவ்வளவு கஷ்டங்களின் மத்தியில் கொஞ்சம் தானறியாமல் சிரித்துக்கொண்டான். இன்பமும் துன்பமும் உள்ளத் தமைப்பே! சிறிது நேரம் மாதவனும் நமது பரதேசியாரும் பேசிக்கொண்டிருந்து, பிறகு பரதேசியார் விடைபெற்று வெளியே சென்றார். (நமது பரதேசியார்தான் ப்ரபு வேடம்பூண்டவர் என்பதை நமது நண்பர்கள் நாம் கூறாமலே அறிந்து கொண்டிருப்பார்கள்.)

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தானினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

—நல்வழி.

# பதினொருவது அத்தியாயம்.

## பகல்வேஷம்.
## The Masque.

உலக ஸம்பவங்களை ஒருவாறு ஆராய்ச்சி செய்வோமாகில் அவைகளெல்லாம், நித்யமாயும் என்றும் மாறாதனவுமான சில அற்புத விதிகளுக்குட்பட்டே நடக்கின்றனவென்று தோன்றும். இவ் விதிகளின் ஸூக்ஷ்மங்களை யறிந்து கொண்டு அவைகளை அனுஸரித்து அவைகளைத் தன்னுளுகைக் குட்படுத்தித் தனக்கு உபயோகமாகச் செய்து கொள்வதே மனிதனுடைய புத்தித் திறமை. தற்காலத்தில் அமைக்கப்பட்டுள்ள அற்புத யந்திரங்களெல்லாம், உலக விதிகள் மனிதஸ்வாதீனத்துக்கு உட்படுத்தப்பட்ட அற்புத புத்தித் திறமைகளைக் காட்டும். உலகஸம்பவங்க ளெல்லாம் கார்ய காரண விதிகளுக்குட்பட்டே நடக்கின்றன. ஓர் கார்யமானது (effect) பல காரணங்களால் ஏற்படலாமாயினும், புத்திமான், அப்படிப்பட்ட காரணங்கள் யாவையும் ஆராய்ச்சி செய்து, அவைகளை அக்கால சந்தர்ப்பங்களுடன் ஒத்துப் பார்த்து அவைகளில் பாவ்யம் இன்னவை அபாவ்யம் இன்னவை என்பதைப் பகுத்தறிந்து பிறகு பாவ்யமானவைகளை மாத்திரம் தனது ஆராய்ச்சி (Investigation) யின் பாதையாகக்கைக்கொண்டு செல்வானாயின் அநேகமாய் உண்மையான மூலகாரணத்தைக் கண்டுபிடித்துவிடலாம். இப்பொழுது கூறியவை யெல்லாம் சித்தாந்த (Theory)த்துக்கு அழகாயிருக்கலாம், அனுஷ்டானத்தில் உபயோகிப்பது மாத்திரம் கடினம். மண்ணுலக ஸம்பவங்கள் அற்புதமாகவும் அதிகச் சிக்க (Complicated)லாகவும் இருக்கும். ஆகையால், ஒவ்வொன்றையும் அந்தந்த ஸந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறே கவனித்துக் கொள்ள வேண்டும். அதற்குத் துல்யமான பொதுவிதி யொன்றும் சொல்ல முடியாது.

முன் அத்தியாயத்திற் கூறிய விருத்தாந்தங்கள் நடந்து சில நாட்களாயின. ஒருநாள் மாலை சுமார் ஆறுமணி நேரமிருக்கலாம். அப்பொழுதுதான் கதிரவன் பகல் முழுதும் ஸஞ்சரித்த அலுப்பினால் தனது உக்ரமெல்லாம் தணிந்து எங்கும் செம்மேனி வாய்ந்தவனாய்ச்

சற்றுச் சிரம பரிகாரம் செய்வதற்காக மேற்குத் திசையில் அமர மனமானான். அந்நேரத்தில் கள்ளன் கோட்டை வாசலருகில் ஓர் உத்தர தேசத்தான் தாடியும், மீசையும் கழுத்து முதல் கால்வரை துவளும் கம்பளிச் சட்டையும், பெரிய தலைப்பாகையும், சிறு செம்பும், 'உக்காவும்' 'சோட்டாத்தடியும்' தரித்து ப்ரவேசமானான்.

அங்கு வாசலில் நின்றவனை நோக்கி, "அடேயப்பா! உங்க தலைவர்கள் எங்கே?" என்று வினவ, அவன், ஏ! லாடா! உள்ளே இன்னும் போணியே தெரியுமா சேதி? முதலாளி ஒருத்தனையும் விடக் கூடாது எண்டிருக்காங்க, என்றான்.

வந்தவன்:—"அப்பா நான் லாடனில்லை. தமிழன் தான்—"

காவல்காரன்:—"ஏ, கோணங்கிப் பலே! இங்கே என்ன வேடந்திட்டம் போட்டுக்கினு எதையாவது அடிச்சுக்கிண்டு போகப் பாக்குறையோ? போ, அங்கிட்டு! உள்ளே நுழைஞ்சாயோ (தடியை ஓங்கிக்கொண்டு) இப்படியே நச்சினுட்டு, செத்தமாட்டை அடிச்சாப்பிலே அடிச்சிடுவேன்—"

வந்தவன்:—அப்பா! நீ செத்தமாட்டையடிப்பதிலே சாமர்த்தியசாலி தான்—"

காவல்காரன்:—(கோபத்துடன்) "ஏ, பரதேசிப்பலே! என்ன குறும்பா? கேலி கிலீ பண்ணிக்கிட்டுத் திரியுதே! போ இன்னுக்கட் போகுதையா என்ன—"

வந்தவன்:—"அப்பா நான் பிச்சைக்காரன். பகல் வேஷக்காரன். உங்க முதலாளிகளைக் கண்டா என்ன வாவது நாலு கஞ்சிப் பாட்டுக்குக் கொடுப்பாங்க. வருசாவருசம் வந்து வாங்கிக்கிட்டுப் போவது வழக்கம். போனவருசம்கூட வந்தேன். உனக்குத் தெரியாதா? நீ கூட ஒரு தெம்மாங்கு பாடச் சொன்னியே. நான் பாடினேன். நீ மறந்து விட்டாயோ? "என்ன தம்பி! ஞாபக மில்லாதவன் போலப் பாக்குதையே?" என்ன, காவல்காரனுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. அவன் வந்தவனை நோக்கி "ஏ அண்ணே! இப்போ ஒரு பாட்டுப் பாடு" என்றான். உடனே வந்தவன்,

தன் 'கின்னரி'யை அடித்துக் கொண்டு,

"அடே, மதுரேக்கு வடக்கேக் கிட்ட
மலேமேலே கோட்டேக் கிட்ட
அடே! கள்ளன் கோட்டை வாசல் கிட்ட
காவல் கார வீரனடா
நன்னனே நன்னனெ!" அடடா!
நன்னனே! நன்னனே!"

என்று பாடின்தும் காவல்காரன் மனமகிழ்ந்து, வந்தவனே உள்ளே விட்டான்.

ஆங்கோர் ஆலமரத்தடியில் போடப்பட்டிருந்த ஓர் பலகைக்கல் மீது நமது திம்மனும் பொம்மனும் உட்கார்ந்து அன்று நடந்த விருத் தாந்தங்களேப்பற்றி ஸம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஓர் வேலேக்காரன் ஓடிவந்து ஓர் கத்தியின் ஒடிந்த நுனியைத் திம்மன் கையில் கொடுத்து, மகராசா, அன்னைடை அடிச்சீங்களே அந்தப் பன்னி—அது வகுத்துலே இது இருந்துச்சு" என்றான்.

அதை இருவர்களும் பார்த்துவிட்டு, "சரிதான் இது அந்தப் பயமகன் கத்திபோலிருக்குது" என்று பக்கத்தில் அலக்ஷியமா யெறிந்து விட்டான். இதற்குள் பகல் வேஷக்காரன், தன் கின்னரி யை மீட்டிக்கொண்டு,

(இந்துஸ்தானி மெட்டு.)

ஆதி மூலமே யற்புதப் பொருளே
அணையாப் பெருஞ் சுடரே;
உன்னை நினைந்தேன் என்னை மறந்தேன்
உண்மையை நானறிந்தேன்.
தேவர்கள் முனிவர்கள் ஞானிகள் யோகிகள்
தேடும் பரம் பொருளே
திவ்யஸ்வ ரூபா சின்மாத்ர ரூப
தேடினேன் நின்பதத்தை!
அகிலப்ர பஞ்சத்திற் காதரவாய் நிற்கும்
அற்புத தத்துவமே
ஆனந்த ரூப ஆத்யந்த ரஹித!
அவ்யக்த தேஜோமய!

என்று பாடிக்கொண்டே தலைவர் முன்வந்து நின்று கைகூப்பி மரியாதையாய் வந்தனம் செய்தான்.

திம்மன் புகையிலை யடக்கிக் கொண்டு, பக்கத்தில் துப்பிவிட்டு, வா அப்பா பரதேசி, நீயாரப்பா? எங்கிட்டு வந்தே?

வேஷக்காரன்:—"தேவரவுகளே, நான் பகல் வேஷக்காரன், இதுதான் ஜீவனம். இப்படி வேஷங் கட்டிக்கிட்டு, உங்களைப்போல ப்ரபுக்களிடம்போய் வேடிக்கை பண்ணி ஏதாவது சம்மானம்—"

திம்மன்:—"நீ எந்தூரப்பா? என்ன சாதி?"

வேஷக்காரன்:—"நானிருப்பது மடம். குடிப்பது கஞ்சி."

தலைவர்கள் குலுங்க நகைத்தார்கள். இதற்குள் வேஷக்காரன் கண்கள் பக்கத்திற்கிடந்த கத்திரனியில் நாடவே குனிந்து அதையெடுத்துப்பார்த்தான். அதின் அடிப்பாகத்தில் ஒடிந்த இடத்தில்—'தவன்'என்று எழுதியிருந்தது. வேஷக்காரனின் உடல் ஒருதரம் மின்சார ப்ரயோகமானதுபோல நடுங்கிற்று. தன் மன ஆவலையடக்கிக் கொண்டு, அக்கத்தியை அலக்ஷியமாய்த் தன் தலைப்பாகையில் சொருகிக்கொண்டான். தலைவர்கள் பார்த்து இவன் ஏதோ கிறுக்கன் என்று எண்ணிச் சிரித்துக்கொண்டு, ஏனப்பா உனக்கு என்னத்துக் கடா? என்று வினவ,

வேஷக்காரன்:—"நெஞ்சிலே இடிச்சுக்கிட" எனவே தலைவர்கள் குலுங்க நகைத்தார்கள். அக்கத்தியைப்பற்றி அவர்கள் அவ்வளவு பொருட்டாகவும் எண்ணவில்லை.

தலைவர்கள்:—"ஏ பரதேசி! என்னென்னவோ பாடுறையே—நம்ம மருதைவீரனைப் பாடு.

வேஷக்காரன்:—பாடுகிறான்:—

வெள்ளாடு பலிகூட டுப்பேன் வேண்டுங்கள்ளுந் தான்கூட டுப்பேன்—அடே

கச்சேதனை இறுக்கிக்கட்டி காக்கவாடா மருதே வீர!
அடே சப்பாணிக் கருப்பா னடா, சங்கிலிவீர னடா!
அடே! முண்டாசு கட்டிக்கிட்டு, முறுக்கு மீசிவைத்துக்கிட்டு,
அடே எந்நேரமும் காக்கவாடா! [illegible] குலதெய்வங்கா"

UPADHYAYA

இவ்வாறு பாட்டுப்பாடவே, தலைவர்களிருவரும், மயங்கித் தலை சாய்த்தார்கள். திம்மன் கையில் பிடித்திருந்த ஓர் கடிதம் கீழே விழுந்தது. வேஷக்கரன் அவஸரமில்லாமல் அலக்ஷியமாய்க் குனிந்து அதையெடுத்துத் தன் பைக்குள் அடக்கம் செய்துகொண்டான். இக் கடிதத்தைப்பற்றிய வரலாற்றைப் பின்னால் விவரிப்போம்.

சிறிது நேரத்துக்கெல்லாம் தலைவர்கள் மறுபடி நித்திரைதெளிந்து எழுந்து அடே வீரனே! இந்தப்பரதேசிக்கு நல்ல சோறு கறி போட்டு, படுக்கவை. நேரமாச்சுது. விடியக்கருக்கல்லே போகட்டும். ஏன் பரதேசி, சம்மதந்தானே? மறுத்து இப்போதே போகணுமோ? என,

வேஷக்காரன்:—"முதலாளி உத்தரவுப்படியே" என்றான்.

---

## பதினேழாவது அத்தியாயம்.

### சோதனை.

### Search.

இரவு 12-மணி நேரமிருக்கலாம். பக்கத்திருப்போரைக் கூடப் பார்க்கமுடியாவண்ணம், எங்கும் ஏக இருளால் மூடப்பட்டிருந்தது. கள்ளன்கோட்டைக்குள் யாதொருவிதமான அரவமுமின்றி நிச்சப்தமாயிருந்தது. திம்மனும் பொம்மனும், அவர்களைச் சேர்ந்த பரிவாரங்களும், உபக்ரகங்களும், அன்று மாலை குடித்த அரக்குச் சாராய வெறியால், தம் நினைவற்று, அயர்ந்து நித்திரை செய்கின்றார்கள். ஆகாசத்தில் பரவிப் பிரகாசிக்கும் எண்ணிறந்த தாரா கணங்களைத் தவிர, பூமியில் நடப்பனவற்றைப் பார்க்க வேறொரு ஸாக்ஷ்யங்களுமில்லை. கோட்டை வாசலானது சார்த்தித் தாளிடப்பட்டு தக்க பாராக்காரர்களால் பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது. கோட்டைக்குவெளியே ஆங்காங்கு இரண்டோரிடங்களில் மாத்திரம், தீவளர்த்து அதன் பக்கத்தில் சில பணியர்கள் குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள்.

மலை ப்ரதேசங்களில் சிற்சில திசைகளிலிருந்து சில மிருகங்களின், ரீங்காரசத்தமும், நாய்களின், ஒற்றைக்குரலும், இராக்கோழிகளின் கொக்கரிப்பும் எதிரொலித்துக்கொண்டிருந்தன.

இந்நிலைமையில், கோட்டைக்குள் ஓர் சாவடியில் இருட்டில் படுத்திருந்த நமது பகல் வேஷக்காரர், மெதுவாய் எழுந்து, தனது சட்டைப் பையில் கைபோட்டு, ஒரு தீப்பெட்டி யெடுத்து, அதனின்றும், ஓர் குச்சியெடுத்து உறைக்க, அதனின்றும் உதயமான ஜ்வாலையால், பக்கத்தில் தன்னைத்தவிர வேறு மனிதர் யாவருமில்லை யென்று நிச்சயப்படுத்திக்கொண்டு, தன்கைவசமிருந்த ஓர் மெழுகு திரியில், தீபத்தை ஏற்றிக்கொண்டு அவ்விடம் விட்டு மெதுவாய் அடிமேல் அடிவைத்து அங்குமிங்கும் கவனித்துக்கொண்டுசென்றார்.

சிறிது நேரத்துக்குள் நமது வேஷதாரி, ஓர் பழைய கட்டிடத்துக்குள் நுழைந்தார். அக்கட்டிடமானது வெகுகாலமாய் மனிதர் வாசமற்றுப் பாழடைந்திருந்தது. அநேக விடங்களில், இடிந்தும் பூச்சிக்கூடுகளும், கறையான் புற்றுக்களும் வைக்கப்பெற்றதாயிருந்தது.

மினுக்கு மினுக்கென்று எரியும் தன் சிறியவிளக்குடன் அப்பாழ் வீட்டுக்குள் நுழைந்ததும் அவனுடைய ஸஞ்சாரம், வெளியே தெரியாதவாறு முற்றிலும் மறைபட்டுவிட்டது. கடைசியாய், நமது வேஷதாரி, ஓர் பழைய கதவண்டை வந்து சேர்ந்து, தனது கொத்துச்சாவிகளில் ஒன்றை யெடுத்து அதைப் பூட்டில் மாட்டிச் சுழற்ற அக்கதவு திடீரென்று வழிவிட்டது.

சிறிதுதூரம் சென்றவுடன், வேஷதாரி, சில படிவரிசைகளின் வழியாய், ஓர் பிலத்துவாரத்துள் இறங்கினார்; அவ்வழி கடைசியாய் ஓர் அறைக்கு முன் கொண்டுபோய்ச் சேர்த்தது. அவ்வறைக்கு முன்புள்ள பலகணிக் கதவு வழியாய் நமது வேஷதாரி, தன் விளக்கொளியால், அவ்வறையினுள் நோக்கவே—

ஆ! என்ன கண்டார்! என்ன ஆச்சர்யம்! உடனே திடுக்கிட்டுப் பின்னடைந்து, பின்சுவரில் அப்படியே சாய்ந்தார். தன் இடது கையில் பிடித்ததிரி அவ்வாறே எரிந்து கொண்டிருக்கின்றது. வலது கையில் கொத்துச் சாவிகளிருந்தன. இவ்வளவு திடுக்கிடலுக்குக் காரணம் யாது?

மனிதவாழ்வில் முன்நேர்ந்த ஸம்பவங்களைத் தற்கால ஸந்தர்ப்பங் (present circumstances) களுடன், கார்ய காரணவிதியின்

பிரகாரம் ஒத்துப்பார்த்து இனி நேரிடக்கூடியவைகளை யொருவாறு உத்தேசமாய் ஊஹிப்பதே த்ரிகாலஞானிகளின் தன்மையெனப் படும். இவ்வற்புத புத்தித்திறமை விசேஷமாய், மந்திரிகள், ராஜ தந்த்ரிகள் முதலான ப்ரதான நிர்வாஹாதிகாரிகளுக்கு இன்றியமை யாத தாயினும், சாதாரண மனிதர்களுக்கும், தங்கள் இல்வாழ்க்கை யை நல்வாழ்க்கையாய்க் கழிப்பதற்கு அவசியமானது. புத்திமானே பலவான் அல்லவா? இவ்வாறு முக்காலத்தையும் முற்றுணர்ந்து, இனி நேரிடுபவைகளை யறிந்து, அவைகளை யெதிர்பார்த்திருப்பதே எதிர்பார்த்த (expected) ஸம்பவங்கள் எனப்படும். எதிர்பாராது தற்செயலாய், நேரிடுபவைகளெல்லாம் "எதிர்பாரா (un-expected) ஸம்பவ"ங்களெனப்படும். எதிர்பாராது நேரிடும் ஸம்பவங்களினின் றும், மனதுக்கு ஓர் வித விகாரம் ஏற்படுகின்றது. இதுதான். "ஆச் சர்யம்" (Surprise) என்ற மனோவிகாரம் (Emotion.)

நமது வேஷதாரி, ஆச்சர்யத்தால் திடுக்கிட்டுப் பின்னடைந்த தும், சற்று, தந்நினைவற்றுத் தயங்கவிட்டுப் பிறகு தைர்யமடைந்து தன் கையில்பிடித்திருந்த மெழுகுதிரி வெளிச்சத்தை அவ்வறையின் பலகணிவழியாய் உட்செலுத்திப்பார்க்க, ஆங்கோர் பெண் சுமார் 40 வயதுள்ளவள், கந்தை யாடையுடனும், விரிந்த கேசத்துடனும், இளைத்த சரீரத்துடனும், காலக்கொடுமையால் இக்கோலமடைந்தவ ளாய், அவ்விருட்டறையினின்றும் எட்டிப்பார்த்து அடே! பாவி! இன்னும் உனக்கு இரக்கம்வரவில்லையா? அடே! பெண்பாவம் பொல் லாதது. நான் ஒன்றும் சொல்லவில்லை. எங்கேயாவது ஓடிப்போகி றேன் கண்ணுக்கெட்டாத தேசத்துக்கு! என்று தீனமானகுரலுடன் பலவாறு ப்ரலாபித்து அழுதாள்.

வேஷதாரி, பற்பல மனோவிகாரங்களின் சேஷ்டை (conflicts of emotions.) களால், ஒன்றும் சொல்லத்தோன்றாமல் சற்றுநின்று விட்டு, மறுபடி தைர்யமாய், பெண்ணே! நீ யார்? தைர்யமாய்ச் சொல். நான் கள்ளன்கோட்டையான் வகையைச் சேர்ந்தவனில்லை. நான் இங்கொருவனைச் சிறையினின்றும் மீட்க வந்திருக்கின்றேன். நீ யார்? உன்னையும் விடுவிக்கச் சித்தமாயிருக்கிறேன். "என்ன நேர்ந்தாலும் சரி" என்ன,

அப்பெண் ஐயனே! தாம்யாரோ ஓர் மஹான்போலக் காண்கின்றீர்கள். ஆண்டவனே! இவ்வுருவாய், என்னை ஆதரிக்கவந்தனரோ! ஐயனே, நீர்தான் தெய்வம், நீர்-நீர்-நீர் என்று சொல்லிக்கொண்டே சோகபாரத்தால், மதிமயங்கி அப்படியே தரையில் கண்ணும் கண்ணீருமாய்ச் சாய்ந்தாள்.

தாமதிப்பது பிசகென்று உணர்ந்து நமது வேஷதாரி, திடீரென்று, தனதுசாவிகளை, அப்பூட்டுக்களில் ஒவ்வொன்றாய் மாட்டிச் சுழற்ற ஒன்றும் சேரவில்லை. பிறகு அதிகமான ஆவேசத்துடன், தன் உடைப்பையிலிருந்து, சிறு அரத்தையெடுத்து அப்பூட்டின் கொண்டியை அறுக்கவே சிறிதுநேரத்தில், அக்கதவு திடீரென்று திறந்தது. வேஷதாரி உள்ளேசென்று, அப்பெண்ணின் தலையைத் தன்மடிமீது சாய்த்துக்கொண்டு, ஆங்கோர் செம்பில் வைத்திருந்த நீரை அவள் முகத்தில் தெளித்துத் தன் உடைப்பையிலிருந்த ஓர் சிமிழியைத் திறந்து ஓர் உப்பையெடுத்து, விரலில் கசக்கி அவள் மூக்குக்கு நேராகப் பிடிக்க, அவள் மூர்ச்சைதெளிந்து எழுந்து, பரபரப்புடன் நமது வேஷதாரியின் முகத்தையே நோக்கினாள். வேஷதாரியும் கண்ணீர் தாரைதாரையாய்ச் சொரிந்துகொண்டு அம்மங்கையை யதிக மனக்கவலையுடன் உற்றுநோக்கினார்.

---

## பதினெட்டாவது அத்யாயம்.

### அந்த ஸ்திரீயின் கதை.

### The Story of that Woman.

தன் நயம் என்பதே ஸமஸ்த ஜீவராசிகளின் ப்ரவிருத்திகளுக்கும் ஸகஜமான காரணமென்பது யாவரும் அறிந்த விஷயம். இம் மனதத்வ ரஹஸ்யத்தை இவ்வாறு துணிவாய்க் கூறுவது கேட்போர்க்கு முதல்முதல் விசேஷ ஆச்சர்யத்தை விளைக்கத்தக்கதே! பிறர் நன்மையே ப்ரதானம் என்று வாதிக்கும் ஸர்வஹிதவாதிகளும் (Altruists) எல்லாம் ஒன்றுதான் என்று கூறும் வேதாந்திகளும் கூடப் பெரும்பாலும், இம்மஹா விதிக்குட்பட்டுத்தான் உழல்கின்றனர். உலகத்தின்கணுள்ள மனிதர்களின் ப்ரவிருத்திகளையும், அவர்

கள் பரஸ்பரம் நடந்துகொள்ளும் முறைகளையும் ஒருவாறு நுட்பமாய் ஆராய்ச்சி செய்யப்புகின் இம்மஹா தத்வத்தின் உண்மை தெளிவாய் விளங்கும். இப்பெரிய ஸித்தாந்தத்தை இச்சிறு நாவலில் விவரிப்பது அசந்தர்ப்பமாகவும், அரஸிகமாகவும் தோன்றுமாதலால் அதைப்பற்றி வேறு சந்தர்ப்பங்களில் விவரிப்போம். இம் மஹா ஸித்தாந்தமானது சொன்னமாத்திரத்தில், நிராக்ஷேபமாய் யாவராலும் அங்கீகரிக்கத்தக்கதென்பது நமது அபிப்ராயமன்று. இந்த ஸித்தாந்தத்திற்கு எண்ணிறந்த ஆக்ஷேபங்களும் ஸமாதானங்களும் மனோ வித்யா நிபுணர் (Psychologists) கூறியிருக்கின்றனர். எத்தனையோ பேர்கள் பரோபகாரிகளாய் உலகத்தில் இருக்கின்றனர். எத்தனையோ பேர்கள் தந்நலங்கருதிப் பரோபகாரிகள் போலப் பாசாங்கு செய்து திரிவோருமுண்டு. நிற்க,

நமது வேஷதாரி, சற்றுநேரம் அப்பெண்ணை உற்றுப்பார்த்துவிட்டுப் பிறகு "பெண்ணே! நீ யார்? இவ்வாறு தனிமையாய் இங்கு அடைபட்டிருப்பதற்குக் காரணமென்ன?" என்று இரக்கத்துடனும் கொஞ்சம் அதிகாரத் தோரணையுடனும் வினவ, சாவிகொடுத்த (Gramaphone) பேசும் வாத்யம் போல தன் விருத்தாந்தங்களைப் பின் வருமாறு உரைக்க ஆரம்பித்தாள்.

"ஐயா! என் சரித்திரமானது சுமார் 20 வருஷங்களுக்குமுன் முதல் ஆரம்பிக்கின்றது. அக்காலத்தில், என் தாய் தந்தையர் விருத்தாப்பியர்களாயும், மிக்க எளியவர்களாயும், அஹந்யாஸ காலக்ஷேபஞ் செய்துவந்தார்கள். எங்கள் குடும்பத்தில் என் பெற்றோர்களும், நானும் என் தமையனும் மாத்திரம் இருந்தோம். என் தமையன் இம்மலைமீதுள்ள கிருஷ்ணன்கோவில் மணியம். அவன் சம்பாதித்து வந்த சொற்ப வருமானத்தைக்கொண்டு நாங்கள் நாணயமாய்க் காலங்கழித்து வந்தோம். நான் கன்னிப்பருவங்கழிந்து யுவதியானேன். ஏழையாய்ப் பிறந்தவளாயினும் அக்காலத்தில் நான் பார்க்க அழகாயிருந்தேன்.

என் தமையன், தன் வேலைக்குப்போய் இரவு 9 மணிக்குப் பிறகுதான் திரும்புவான். சிலநாள் வராமலே இருந்துவிடுவான். நானும் என் தாய் தந்தையருக்கு வேண்டிய உதவிகள் செய்துவிட்டு

பக்கத்தில் எங்களுக்குச் சொந்தமான சோளக்காடு முதலியவற்றிற்குப் போவதுண்டு. அக்காலத்தில் இந்த மணிபுரம் ஜமீனைச்சேர்ந்த ஓர் உத்தியோகஸ்தன் அங்கே வரத்துப்போக்குண்டு. அவன் என்னை விவாகம் செய்துகொள்வதாயும், ஜமீன்தார் தயவின்மேல், என்னை நற்பதவிக்குயர்த்துவதும் தவிர, என் குடும்பத்தையும் வறுமையினின்றும் மீட்பதாயும் வாக்களித்தான். அவன் மிக்க அழகாயிருந்தான். வறுமையின் கொடுமையுடன் யௌவனத்தின் கொழுப்பும் அதிகரித்து விட்டபடியால், எங்களிருவருக்கும் சரீரசம்பந்தம் ஏற்பட்டு விட்டது. கல்யாணமாகு முன்னமேயே கர்ப்பிணியாய் விட்டேன். கர்ப்பம் நாளுக்கு நாள் விருத்தியடைந்தது. பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் தெரியாமல் எத்தனை நாள் காப்பாற்றுவது? என் நிலைமையைப்பற்றி பயபக்தியுடன், என் காதலனிடம் பிரலாபித்து என்னை அதிசீக்கிரம் விவாகம் செய்துகொண்டு என் மானத்தைக் காப்பாற்றும்படி நான் பலவாறு வருந்திக்கேட்டேன்.

ஐயோ! அப்பொழுதுதான் புருஷர்களுக்கு இயற்கையாயுள்ள வஞ்சகம் எனக்கு வெளியாயிற்று. பேர் இடி படீரென்று வீழ்வது போல அவர் பதில் என்மனதைத் திடீரென்று பேதித்தது. அவர், தான் மணிபுரம் ஜமீன்தார் ராமராஜனென்றும், ஜாதி முறைப்படி இருவரும் விவாகம்செய்துகொள்ளத் தகுதியில்லையென்றும், ஆனால் என்னைப் போகஸ்திரீயாய் மாத்திரம் எப்பொழுதும் கைவிடாது ஆதரிப்பதாகவும் வாக்களித்தார். ஆக்ஷேபம் சொல்லுவதற்கோ அவகாசமில்லை. என் கர்ப்பம் விருத்தியடைந்து விட்டது. உடன்பட்டேன். என் தாய்தந்தையரையும் என் தமயனையும் துறந்தேன். என் ஆசைக் காதலனோடு காம வெறியால் ஓடிவிட்டேன். என்னையோர் சிறிய அரண்மனையில் வஸிக்கச்செய்து அதிக அன்புடன் அவர் என்னைப் பாதுகாத்துவந்தார். சிறிது நாளைக்கெல்லாம் என்னைப்பிரிந்த சோகத்தாலோ அல்லது தங்கள் குலத்துக்கு என்னால் நேர்ந்த அவமானத்தாலோ, அல்லது எக்காரணத்தாலோ என் தாய் தந்தையர் இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன். சரியானகாலத்தில் எனக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது, இக்குழந்தை பிறந்த ஒரு மாதத்துக்கெல்லாம் ஜமீன்தாரிணிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஜமீன்தார் என்னைத்தன் அரண்மனைக்கே அழைத்துச் செல்வதாயும், தன்

பக்கத்திலேயே வைத்துக்கொள்வதாயும், நான் ஒரு செவிலித்தா யெனச்சொல்லி தன் மனைவிக்கும் எனக்கும் சிநேகம் செய்விப்ப தாயும் சொன்னார். அதற்கும் உடன்பட்டேன். அவ்வாறே நடந்தது. நானும் ஜமீன்தாரிணியும் சகோதரிகள்போல அந்யோந்யமாய் வாழ்ந்துவந்தோம். தெய்வத்துக்குப் பொறுக்கவில்லை. ஒருநாளிரவு தன் மகனை என்னிடம் ஒப்புவித்துவிட்டு, ஜமீன்தாரும் அவர்மனைவியும், "ஐவர் மலை" கிருஷ்ணன் கோவில் உத்ஸவத்துக்குச் சென்றார்கள். சுமார் இரவு 7 மணி இருக்கலாம். ஓர்பாதகன் திடீரென்று உள்ளே புகுந்து என் அருமை மகளண்டைவந்து தன்கையிலுள்ள ஓர் பாலாடையால் ஓர் ஔஷதத்தை பலாத்காரமாய் அதன் வாயில்செலுத்திவிட்டு வெளியே சென்றான். குழந்தையின்கண்கள் சுழன்றன. கைகால்கள் பதறின. சற்று நேரத்தில் ப்ராணனை விட்டது. சிறிது நேரத்தில் அரண்மனை முழுதும், ஜமீன்தார் குழந்தை இறந்துவிட்டதாகவும், மாந்தத்தால் இறந்ததாகவும் வதந்தி பரவிற்று. அதனால் கொலைசெய்ய யத்தனித்தது ஜெமீன்தாரின் மகனை யென்று அறிந்து கொண்டேன். ஆனால் இறந்தது என் பெண்குழந்தை. இறந்தது விஷத்தால். மாந்தத்தாலன்று. இரண்டுமணி நேரங்களாயின. ஜமீன்தாரும் ஜமீன்தாரிணியும் கள்ளர்களால் கொலை செய்யப்பட்டார்களென்றும் கேள்விப்பட்டேன்.

ஏதோ ஓர் பெரும் கொடிய சதி ஆலோசனையால் இவையெல்லாம் நடக்கின்றனவென் றுணர்ந்தேன். அவ்விரு குழந்தைகளையும் என் இரட்டைப்பிள்ளைகளைப் போல அவ்வளவு அன்புடன் நான் வளர்த்து வந்ததால், இறந்துபோன என் பெண் குழந்தை நிமித்தமாயாவது அல்லது ஜமீன்தார், ஜமீன்தாரிணி இவர்கள் நிமித்தமாவது துக்கப்படத் தோன்றவில்லை. அதில் புத்தி செல்லவுமில்லை. அதற்கு ஸாவகாசமுமில்லை. என்ன மாயமோ! உயிர்த்திருக்கும் ஜமீன்தார் புத்திரனையாவது காக்கவேண்டுமே என்பதில் மாத்திரம் என்புத்தி சென்றது. அதிகமாய் வளர்ப்பதேன்! இறந்துபோன என் குழந்தையை அவ்வாறே மூடிவைத்துவிட்டு, ஆண் குழந்தையை யெடுத்துக்கொண்டு யாருமறியாமல், அவ்விரவிலேயே வெளியேறிவிட்டேன். இராமுழுமையும் எங்கெங்கே சுற்றித்திரிந்தேனோ எனக்குத் தெரியாது. மறுநாட்காலையில் ஓர்

அடர்ந்த வனத்துக்குள் நான் ஸஞ்சரிக்கக்கண்டேன். உண்மையோ அல்லது நினைவோ, என்னை யாரோ சிலர் பின்தொடர்ந்து வருவதையும் உணர்ந்தேன். இக்கற்றவளுக்குத் தெய்வமே துணை யென்றபடி, திடீரென்று என் தமையனைப் பரதேசிக்கோலத்தோடு ஸந்தித்தேன். அடியம்மா! என்றலறிக்கொண்டு ஓடிவந்து அவர் என்னைக் கட்டிக் கொண்டார். கருமமே கண்ணாயின நான், ஒன்றும் பதில்சொல்ல வாயெழாமல் "அண்ணா! இதற்கெல்லாம் இது சமயமல்ல. மலையறுந்து மயிரிழையில் தொங்குவதுபோல, அபாயமானது நம்மைப் பின்தொடர்ந்து வருகின்றது. என்னையும் இக் குழந்தையையும் எப்படியாவது காப்பாற்றவேண்டும்" என்று சொல்லி அக்குழந்தையை அவர் கால்மீது போட்டு, நானும் அவர் பாதங்களில் வீழ்ந்தேன். என் வார்த்தைகளைக்கேட்ட என் தமையன் ஒன்றும் மறுமொழி கூறாமல் குழந்தையைக் கையிலேந்திக்கொண்டு வேகமாய் மணிபுரம் எல்லைக்கப்பால் ஓடினார். நானும் பின்தொடர்ந்து ஓடினேன். இவ்வாறு இரண்டு தினங்கள் சென்று கடைசியாய், பாலூர்ஜமீன் வந்து சேர்ந்தோம். அப்பொழுது பாலூர் ஜமீன்தாரும் புதிதாய் விவாகமான அவர் இன்பமனைவியும், ஏகாந்தமாய்ச் சிங்காரவனத்தில் உலாவிக்கொண்டிருந்தார்கள். என் தமையன், குழந்தையை அவர்கள் பாதங்களில் வைத்து, நமஸ்கரித்து, மகாராஜ ப்ரபோ! இக்குழந்தைக்கும் இப்பெண்ணுக்கும் அபாயம் பலமாய் நேர்ந்துகொண்டிருக்கின்றது. மகாராஜாதான் எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்று வருந்திக் கேட்டார்.

எங்கள் தீனமான நிலைமையைக்கண்டு மனமிரங்கி, அவ்விருவரும் எங்களைக்காப்பாற்றுவதாய் வாக்களித்தார்கள். அப்படியே நாங்கள் அவர்களரண்மனையிலிருந்து வளர்ந்து வந்தோம். என் தமையன் ஒருவாரத்துக்கொருமுறை வந்து எங்கள் யோகக்ஷேமங்களை விசாரித்துப் போவார். இவ்வாறு 10 வருஷகாலம் கழிந்தது. பிறகு எக்காரணத்தாலோ என் தமையன் வருவதில்லை. நான் மணிபுரம் சென்று எங்களுக்குச் சொந்தமான சிறு தோட்டத்தை விற்றுவரலாமென்று வந்தேன். என்னை இரண்டுபாதகர்கள் பிடித்து [illegible] இக்கோட்டைக்குள் அடைத்தார்கள்.

நான் அடைபட்டது இப்பொழுது மணிபுரம் ஜமீந்தார் எவுத லினுலென்றும் அதற்காக அவர் மாதம் எவ்வளவோ தொகை இக் கோட்டைத் தலைவர்களுக்குக் கொடுத்து வருவதாயும் என்னைக் கொன்றுவிடும்படியவர் ஆணையிட்டிருப்பதாகவும், அவ்வாறுசெய்து விட்டதாய் அவருக்குப் பொய்சொல்லிவிட்டதாகவும், கொன்றுவிட்டால் பிறகு தங்கள்தயவு ஜமீந்தாருக்குத் தேவையில்லாமல் போய் விடுமென்று, என்னைக் கொல்லவில்லையென்றும் நான் அறிந்துகொண்டேன். என் சௌக்கியத்துக்கும் சௌகர்யத்துக்கும் யாதொரு குறைவும் கிடையாது. என்னை ஹிம்சிக்கவாவது மானபங்கம் செய்யவாவது ஒருவரும் துணியவில்லை.

முன் ஜமீந்தாரின் ஆண் சிசு இறந்ததாகவும், அக்குழந்தையும் புதைபட்டிருப்பதாயும், ஊரில் பரவியிருக்கும் வதந்தி முழுமையும் கற்பனையே யொழிய நிஜமல்ல. முன் ஜமீந்தாரின் மகன் பானூர் மகாராஜாவின் அரண்மனையில் மாதவன் என்ற பெயருடன் வளர்கின்றான். அவனுக்கு இப்பொழுது 20, 22 வயதிருக்கலாம். ஐயோ! என் குழந்தை!—என் வயிற்றிற் பிறந்த குழந்தையைப்பார்க்கிலும் பதின்மடங்கு வாஞ்சையுடன் வளர்த்தேனே! குழந்தையை எப்பொழுது காண்பேன்" என்று கோவென்று கதறிக்கொண்டு வேஷதாரியின் கால்களில் வீழ்ந்து மூர்ச்சையானாள்.

---

## பத்தொன்பதாவது அத்யாயம்.

### சிறைமீட்டல்.

### Release.

:(o):

இதற்குள், நமது பரதேசியே வேஷதாரியாய் வந்திருக்கின்றார் என்பதும், அம்மங்கையின் பூர்வ விருத்தாந்தங்களும், அவள் நமது, பரதேசியாரின் ஸகோதரி யென்பதும், நமது நண்பர்கள் ஊஹித்துக் கொண்டிருக்கலாம்.

ஆஹா! எவ்வளவு காலமானால்தானென்ன? அன்புக்குக் காலாவதியுண்டோ? ஸஹோதரவாஞ்சை சிறிதேனும் குறையுமா? அம்மாது திடீரென்று மறுபடி மூர்ச்சையானதும் நமது பரதேசியார்,

மறுபடி யவள்முகத்தில் தண்ணீர் தெளித்து பக்கத்திலிருந்த விசிறியால் வீசவே மறுபடி மூர்ச்சை தெளிந்தெழுந்தாள்.

என்ன ஆச்சர்யம்! இவ்வளவு அவதிகளுக்கு நடுவிலும், நமது பரதேசியார் கொஞ்சமேனும் மனங்கலங்காது,

"வடதிசை சாய்ந்தாலென்ன?
தென்திசை யுயர்ந்தாலென்ன?"

என்றபடி தைர்யமாய்த் தன் கார்யத்திலேயே கண்ணாய் நின்றார்.

அம்மாது எழுந்ததும் மறுபடி பரதேசியாரைநோக்கி 'என்னையனே! தாம் யாரோ? ஏழைமீது தாம் இவ்வளவு கருணைகொள்ள நான் என்ன புண்யம் செய்தேனோ? என்று தீனமாய் வினவ,

பரதேசி:—தன் சோகத்தையடக்கிக்கொண்டு, கண்மணி! என்னருமைச் சகோதரி"

அம்மாது:—" ஆ! அண்ணா! தாங்கள்தானா! தாங்கள்தானா! அண்ணா! அண்ணா!" என்று 'கோ' வென்று அலறி அவர் மார்புமேல் சாய பரதேசியார், தன் கைகளால் அவள் முகத்தைத் திருப்பிக் கண்ணீரைத் தன் துணியால் துடைத்தார்.

அம்மாது:—"அண்ணா! தாங்கள் இவ்விடம்வந்தகாரணமென்ன? நானிருக்குமிடம் தாங்கள் எவ்வாறு அறிந்தீர்கள்."

பரதேசி:—"கண்மணி! காலதாமதமாகின்றது. இதைப்பற்றிப் பின்பு விவரமாய்ச் சொல்லுகின்றேன். வந்த கார்யத்தைப் பார்க்க வேண்டும். அவஸரம். தாமதிக்கலாகாது."

அம்மாது:—"ஐயோ! என்னோடு போகாமல், தாங்களும், இப்பாதகர் வலையிலகப்பட்டுவிட்டீர்களே! எவ்வாறு தப்பிப்பது?"

பரதேசி:—கண்ணே! அந்த விசாரமுனக்கு வேண்டாம்! எல்லாம்வல்ல ஈசன் அருள் நமக்கிருப்பின் ஆகாதென்பதும் நமது அகராதியிலுமுண்டோ!

அம்மாது:—அண்ணா! இதோ தயாராயிருக்கிறேன். தங்கள் சொற்படி நடக்கின்றேன்!

பரதேசி:—"இன்னும் வந்த வேலை முற்றிலும் முடியவில்லை. உன்னைப்போலின்னொருவர் சிறைப்பட்டிருக்கின்றார்."

அம்மாது:—"ஆத்திர மாத்திரத்தில் அதையுமறந்துவிட்டேன். இன்னொரு அறையில் புதிதாய் ஒருவர் சிறைப்பட்டுச் சுமார் இரண்டு மாதங்களாகின்றன. அவரைமீட்டினால் எவ்வளவோ புண்யமுண்டு."

பரதேசி:—"எங்கே புறப்படு, வழிகாட்டு!" என இருவரும் புறப்பட்டு, சற்றுதூரம் அச்சுரங்கத்தின்வழியே மினுக்கு மினுக் கென்றெரியும் தீபவொளியிற் செல்லக் கடைசியாய், ஓர் அறையின் பலகணிக்கதவுமுன் நின்றார்கள்.

உடனே தன் வர்த்தி வெளிச்சத்தால் பரதேசி உள் நோக்கின வுடன், அங்கிருந்தவொருவர் திடுக்கிட்டெழுந்து, கதவண்டையோடி வந்து, பரதேசியாரைப்பார்த்துவிட்டு, 'கோ'வென்றுகதறிக்கொண்டு அப்பலகணிக் கதவுமேலேயே சாய்ந்தார். இதுவரை தைர்யமா யிருந்த நமது பரதேசியார், 'அப்பா! தினகர! என்னப்பனே! என் றலறினர்.

பக்கத்திலிருந்த அம்மாது, 'அண்ணு! ஏது தாங்கள்கூட இவ் வாறு சோகத்துக் குள்ளாயினீர்கள். அபாயமோ தலைமேல் தொங்கு கின்றதே! சீக்கிரம் தப்பிக்க வழிபார்க்கவேண்டாமா', என்று வினவ,

பரதேசி மறுபடி தைர்யமடைந்து: தன் கையிலிருந்த பற்றுக் குறடால், அக்கதவின் கீல்களை நெம்ப, உடனே கதவு திடீரென்று விலகிற்று.

பரதேசி உட்சென்று தினகரனுக்கு ஆசுவாஸப்படுத்தத் தின கரன் மறுபடி "என்னையனே! என்னாண்டவனே! ஐயோ என் மாதவ! என்மாதவ! ஐயையோ!"

பரதேசி:—அப்பா தினகர! நீ ஆண்பிள்ளையாயிருந்தும் இவ் வாறு பரிதபிக்கலாமோ?"

தினகரன்:—"என்னையனே! முதலாவது என்மாதவன் உயிருட னிருக்கின்றானு சொல்லுங்கள். ஐயோ! என் ஆவி துடிக்கின்றதே."

பரதேசி:—"அப்பா தினகர! மாதவன் உயிர் உன்கைகளிலிருக்கின்றது. இனிக் கொஞ்சமேனும் காலதாமதமன்னியில், தைர்யமாய் நான் சொல்லுவதைச் செய்வாயாகில், அவனைக் காப்பாற்றலாம்."

தினகரன்:—என்னாண்டவனே! இதோ தயாராயிருக்கிறேன். நீங்கள் சொல்லுவதை யெல்லாம் கேட்கின்றேன். என் நண்பன் மாதவனை நாளைக் காலைக்குள் நான் பார்ப்பேனோ? இல்லாவிடில் இதோ—என்—உயிர் துறந்துவிடுவேன்."

பரதேசி:—தைர்யமாயிரு! என் பின்னேவா! என்றழைக்க மூவரும் அச்சுரங்கத்தின்வழியாய்ச் சற்றுதூரம் சென்று கடைசியாய், அதன் முடிவுக்கு வந்தார்கள். பரதேசி அக்கம்பக்கத்தில் சுற்றிப் பார்த்துவிட்டு, வீராவேசத்துடன் ஆங்கிருந்த ஓர்பாறையை நகர்த்த அதன்வழியாய் மூவரும் வெளியேறினார்கள். "ஜல்தி, ஜல்தி" என்று பரதேசியார் எச்சரிக்க மூவரும், மங்கின நிலவொளியில் கள்ளன் கோட்டையினின்றும் வெளியே ஓடினார்கள்.

---

## இருபதாவது அத்யாயம்.

### தூக்குமரம்.

### The Gallows.

---

காலை சுமார் 7-மணியிருக்கலாம். மதுரை புதுஜெயில் ப்ராகாரத்துக்கு வெளியே உள்ள பெருஞ்சாலையில் திரள் திரளாய் ஜனங்கள் கூடியிருக்கின்றார்கள். "ஐயோ! அங்கென்ன வேடிக்கை? இதொரு விநோதமா உங்களுக்கு? நரிக்குக்கொண்டாட்டம் நண்டுக்குப்ராணாவஸ்தை? ஐயோ! இந்தப் பாவத்தைப்பார்க்கவும் இம்மூட ஜனங்கள் இவ்வாறு கூடுவார்களா?" என்று சிலர் தீனமாய் ப்ரலாபித்துக்கொண்டு "கொடுமை" கொடுமையென்று கதறிவிட்டுத் தங்கள் வழியே சென்றார்கள். ஆயினும் அனேகர் ஆங்குநடக்கப் போகிற விசேஷத்தைக் கண்ணுற ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

வெளியே நின்றவர்களுக்கு, ப்ராகாரத்துள்ளிருக்கும் தூக்கு மேடை தெரிகின்றது. அம்மேடைமீது இரண்டு ஸ்தம்பங்கள், உயரமாய் நிமிர்ந்து நிற்க அவைகளின் உச்சியிற் போட்டுள்ள குறுக்கு மரத்தினின்றும், காலபாசம் போன்ற ஓர் கயிறு, ஓர் ரோதையில் தொங்குகின்றது. அக்கொடுங்காட்சியைக் கண்ணுற்றால், 'கொண்டுவா! பலிகொண்டுவா!' என்று அத்தூக்குமரம் கோஷிப்பதுபோல் தோன்றும். ஐயோ தூக்குமரமே! நீ எத்தனை பேர்களைக்கொன்றிருக்கின்றாய், ஐயோ! உனக்குத்தயை என்பது கிடையாதா? ஆமாம் நீ அசேதனந்தானே! பகுத்தறிவுடைய ப்ராணிகளே, அவைகளிலும் மானிடர்களே, இவ்வாறு கொடுமைகள் செய்யத்துணிகின்றார்களே. நீ என்னசெய்வாய், நீ கேவலம்சாதன மாத்ரமாய்த்தானே விளங்குகின்றாய்! இன்றைக்கு உனக்குப்பலியாக நியமிக்கப்பட்டிருக்கும் மாதவனுடைய குறை குணங்களை நீ எவ்வாறு அறிவாய்? அவன் இவ்வாறு அவதிக்குட்பட எத்தனை காரணங்கள் ஏற்பட்டுவிட்டன. இவைகளையெல்லாம் உற்றுநோக்குமிடத்து, தர்மாதர்மங்கள், ந்யாயாந்யாயங்கள், ஈசுவராதீனமா? அல்லது கேவலம் ஸம்பாவிதங் (Accidents)களா? என்றும் சங்கையுண்டாகின்றன.

நமது மாதவனுடைய சரித்திர மூலமாய், டார்வின் கூறிய 'பிழைப்புக்கு மன்றாட்டம்' (Struggle for Existence) என்ற சித்தாந்தமும், நமது முன்னோர்கள் கூறியபடி 'மன்னுயிர் கொன்று தன்னுயிர் காத்தல்,' (ஜீவோ ஜீவஸ்ய ஜீவனம்) என்ற சித்தாந்தமும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விசதமாகின்றனவே.

சிறிது நேரத்துக்கெல்லாம் திடீரென்று எங்கும் நிச்சப்தமாயிற்று. எல்லோர் கண்களும் தூக்குமேடையை நாடின. ஐயோ! என்ன நடந்தது! என்னவிபரீதம்! யமகிங்கரர்போன்ற இரண்டு ஜெயில் வேலைக்காரர், நமது மாதவனைத் தூக்குமேடைக் கழைத்து வந்தார்கள். என்னகாலம்! என்னகோலம்! மாதவ இதுவும் உன் விதியோ! என்ன நிச்சயிப்பது. உண்மை என்னவென்று சொல்லுவது! அவன் குற்றவாளிதானோ? அப்படியானால் அவன் தண்டனையடையவேண்டியது தகுதியே. நமது சரித்திரத்தின் பூர்வ அத்யாயம் வாசித்தவர்கள் இதை நம்பார்களே. கொலைசெய்யப்பட்ட

தாய் ருஜுவான தினகரன் உயிருடனிருக்கின்றனே. அப்படியிருந்தும் மாதவன் சிறிது நேரத்தில் கொலைக்குற்றத்துக்காக உயிர் துறக்கப்போகின்றனே! கொலையே நடந்திராதபோது கொலைக்குற்றமேது. இதுதான் விதிஎனப்படுவது. விதியை மதியால் வெல்ல முடியாதெனக் கூறும் விதிபலவாதி (Fatalists) கள் கூறும் சித்தாந்தமும் உண்மையாய் விட்டதே! இப்பொழுது மாதவன் மரணத்துக்குயார் ஜவாபுதாரி? சட்டமா? அல்லது சட்டத்தையுபயோகித்த ந்யாயாதிபதியா? அல்லது ஸாட்சி சொன்னபேர்களா? யாரைச்சொல்லுவது. எல்லாம் மாயமாய் இருக்கின்றனவே. மாதவன் கேஸைப் போல் எத்தனை கேஸுகளில் வீணை அபவாதத்துக்கு, நிரபராதிகள், எத்தனைபேர் உட்பட்டுச் சட்டத்துக்கிரையாய் உயிர் மாய்ந்திருப்பார்கள். இதனால் உலகத்தில் தர்மம், ஸத்யம், ந்யாயம், என்பதாவது, அவைகளை பக்ஷபாதமன்னியில், நடத்தும் அதிகாரிகளாவது கிடையாதென்றல்லவோ ஏற்படுகின்றது. என்னசெய்யலாம். மனிதன் ஸர்வக்ஞனு? அவன் என்ன செய்யக்கூடும்? ப்ரத்யக்ஷப்ரமாணங்களாலும் அவைகளினின்றும் உண்டாகும் அனுமானங்களாலும் மாத்திரமே மனிதன் ஓர் ஸித்தாந்தத்துக்கு வருகின்றன். அம்முடிவு பிசகாய்விடுமாயின் அதற்கு அவன் என்னசெய்வான்? ஒரு கார்யம் தர்மவிரோதம், ந்யாயவிரோதம், க்ரமவிரோதமென்று தெரிந்தும் அதை நடத்துபவனே மஹாபாதகன். அப்படிப்பட்ட மஹாபாதகரும் எண்ணிறந்தபேருளர். அதற்குக்காரணம் ஒவ்வொருவனுக்கு மியற்கையாயுள்ளதும், ஒவ்வொருவன் ப்ரவிருத்திகளுக்கும் காரணமானவைகளுமான, மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசையென நம் முன்னோர்கள் கூறியுள்ள ஈஷணாத்ரயங்களும், தற்கால லௌகிகத்தையனுசரித்துள்ள கௌரவாசை யென்பதுமே.

அதிகமாய்வளர்ப்பதேன்! நமது மாதவன் முகத்தில் நிரபராதமானது கூத்தாடிக்கொண்டிருந்த போதிலும், தனக்கு நேர்ந்த அபவாதத்தாலும், அதனால் ஏற்படப்போகிற துர்மரண சிந்தனையாலும், மேகமண்டலங்களால் மங்கிய சூர்ய பிம்பம்போல் அவன் முகம் வாடியிருந்தது. ஆஹா! உயிர்துறக்க யார்தான் ஸகிப்பார்? அதிலும், தூக்குமரமேறச் சகிப்பாரு? இந்த நிலைமையில் மாதவன் தூக்குமரத்தடியில் நிறுத்தப்பட்டான். ஸர்க்கார் வைத்யன், மாத

வன் நாடிகளை ஸ்பர்சித்து 'சரி' (Very well) என்றுவிட்டார். அங்குள்ள அதிகாரிகள் யாவரும் சுமார் 3 நிமிஷநேரம் ஒன்றும் செய்யாமல் அசைவற்று பிணக்கோலம்போல் நின்றார்கள்.

அப்பொழுது மாதவன், கீழ்திசையில் உதித்துப்ரகாசிக்கும் சூரியனைத்தர்சித்து கைகுவித்துப் பிரார்த்திக்கின்றான்.

ஆதியாயனந்தமாகியகிலகாரணமுமாகி,
ஜோதியாயுணர்வுமாகிச்சின்மயாநந்தமாகி,
வேதமாமறைகள்போற்றும்விண்ணவர்தேவர்போற்றும்,
ஜோதியேசுகமேபோற்றிசுத்தநிர்க்குணமேபோற்றி.

உலகந்தோன்றிய காலமுதல் ப்ரகாசிக்கும் சூர்யதேவனே நீயே ஸாக்ஷி! நான் மறிப்பதற்குக் கொஞ்சமேனும் மயங்கவில்லை. ஆனால், கொலைக்குற்றத்துக்காகத் தூக்கேறுவதே என் மனத்தை வருத்துகின்றது. இவ்வுலகில் மனிதன் ஜன்மமெடுத்ததற்குப் பலன் தனக்காவது சுகமிருக்கவேண்டும். அல்லது பிறருக்காவது உபயோகமாயிருக்கவேண்டும், இரண்டுங்கெட்ட தூர்ப்பாக்யனை நான் இருந்தென்ன? இறந்தென்ன? மாலினி! என் கண்ணே!—ராஜகுமாரி!—அம்மா! நீ இனிமேலாவது சௌக்ய மடைவாய்! நான் நிரபராதியென்பதை நீயாவது உணர்ந்திருப்பாய் என்ற ஒரு திருப்தியே எனக்கு இத்துன்பங்களின் மத்தியில் போதும். என்னை இதுகாறும் தந்தையினுமதிக அபிமானத்துடன் வளர்த்த உன் தந்தைக்கு என் வந்தனத்தைக் கூறுவாய்.

எல்லாமறிந்த ஈசனே! இதுவும் உன் திருவுள்ளமோ? 'அவனவன்விதிப்படியை அடைவது கடமையல்லவா?

என்று பலவாறாகத் தியானித்துக்கொண்டு, யோகநித்ரைகொண்டவன்போல் கிழக்கு நோக்கி ஸ்தப்தமாய் மாதவன் கண்மூடி நிற்க ஜெயிலதிகாரியின் ஜாடையின்பேரில் இரண்டு கொலையாளிகள் மாதவனருகிற்சென்று, ஓர் குல்லாவையவன் தலையில்மாட்ட அஃது, அவன் முகம்முழுதும் மூடிற்று. அதைக்கழுத்துடன் சேர்த்துக் கட்டிவிட்டு, தூக்கு ஞாணுக்கு நேரே யவனை நிறுத்தி, தூக்குச் சுருக்கையவன் கழுத்தில் மாட்டினார்கள்.

இக்கொடுமையைக் கண்ணுற்றோர் யாவரும் ஐயோ! ஐயோ; என்றலறினார்கள். ஐயோ! கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே! ஐயோ அநியாயமாய் நிரபராதியான ஒரு ஜீவன் சற்றுநேரத்தில் உடலினின்றும் பிரியப்போகின்றதே! ஜெயில் வேலைக்காரர், சொருகு பலகையண்டை தயாராய்க் காத்துக்கொண்டு, அதையிழுக்கத் தயாராய் தங்கள் எஜமானன் உத்தரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்களே!

'ஒன்று!' (One) என்று கூறினான் அதிகாரி.

ஐயோ அநாதமாய்ப்போயிற்றே. தர்மந்தலைகாக்கவில்லையே!

'இரண்டு' (Two)! அடடா! என்னபாவம்! இது சட்டக்கொலையோ!

"மூ................"—"என்று அதிகாரி கூறுமுன் ஹா ஹா நில்லு! நில்லு! பொறு! பொறு! சற்றுபொறு! கொல்லாதேயுங்கள்! அவன் கொல்லவில்லை—அவன் குற்றவாளியல்ல" என்று ஓர் பேரிரைச்சல் உண்டாயிற்று.

எதிர்பாராது அச்சாவுகோலமத்தியில் இவ்வளவு துணிவாய் ஏற்பட்ட பேரிரைச்சலால் எல்லோரும் திடுக்கிட்டு நின்றார்கள்.

'மூன்று!' (Three) சொல்லவாயெடுத்த ஜெயிலதிகாரி 'மூ,.. ...' என்று மூடிவிட்டான் 'பலகை யிழுக்கத்தயாராயிருந்த வேலைக்காரர் திகைத்து அப்படியே நின்றுவிட்டார்கள். இதென்ன அதிசயம்! இதுமாதிரி இதுவரை சம்பவித்ததில்லையே. ராஜதண்டனையைச்சிரமேல்வகித்து நிறைவேற்ற நிற்கும் இஜ்ஜெயில் அதிகாரிகளை மந்திரத்தால் கட்டுண்டவர்போல மயக்கிய அப்பேரிரைச்சல் யாது?

எல்லோரும் சத்தம்பிறந்த திசை நோக்கினார்கள். அதிவேகமாய் ஓர் குதிரைவண்டி ஜெயில் வாசலில் நின்றது. அதனின்றும், இரண்டு புருஷர்களும், ஒரு ஸ்த்ரீயும் குதித்தார்கள்.

"நில்லு! நில்லு! பொறு! பொறு" என்று சப்தித்துக்கொண்டு தங்கள் உயிரைப் பொருட்டாய் எண்ணாமல், பக்கத்திலிருந்த வாயிற்காப்போனைக் கூடலக்ஷ்யம் செய்யாமல், உட்புகுந்து அதி விரைவாய்

தூக்குமேடை ஏறினார்கள். அவர்களில் அதிவயதானவர், அதிக தைர்யத்துடனும், வந்தது வரட்டுமென்ற தெம்புடனும் தன்கையிலிருந்த கத்தியால் தூக்குனானைச் சேதித்தார்.

உடனே பக்கத்திலிருந்த தினகரன் "அப்பா என் மாதவ!," என்றலறியவனை இறுகத்தழுவி, அப்படியே செந்தூக்காய்த்தூக்கிக்கொண்டு, அப்புறமகன்றான். இப்பொழுது நடந்த விருத்தாந்தமெல்லாம் க்ஷண நேரத்தில் நடந்தனவாதலால், அங்கிருந்த ஜெயிலதிகாரிகளுக்கு இன்ன நடக்கின்றது, இன்ன செய்வதென்ற ஸ்மரணையேயற்று ஓர் கனவுகண்டவர்கள்போலவும் மந்திரத்தால் கட்டுண்டவர்போலவும் சித்திரப்பாவைகள்போல ஸ்தப்தமாய் நின்றார்கள்.

மயக்கம் தெளிந்து விழித்தார்கள். சிறிதுநேரத்துக்கெல்லாம் எல்லாமாயமும் கதிரவனைக்கண்ட இருள்போலகன்றன. கொலை செய்யப்பட்டதாய் ருஜுவான தினகரன் உயிருடன் எதிரே நிற்கின்றான். மாதவன் உயிரும் தப்பித்தது. எல்லோரும் ஆச்சர்யமடைந்தார்கள். சிறிது நேரத்தில் அநேகவிடங்களுக்குத் தந்திஸமாசாரங்கள் பறந்தன. 'தூக்கை நிறுத்து' என்று மேலதிகாரிகள் உத்தரவும் வந்துவிட்டது.

அதிகமாய் வளர்ப்பதேன், மாதவனும் தினகரனும், அம்மாளும், நமது பரதேசியும், பரஸ்பரம் ஆலிங்கனம் செய்து கண்ணீர் சொரிந்தார்கள்.

அங்கிருந்த ஜனங்களெல்லோரும் ஆச்சர்யத்தால் ஆரவாரஞ் செய்தார்கள்.

## இருபத்தொன்றாவது அத்யாயம்.

### சந்தோஷ ஸமாகமம்.

### Happy Meeting.

மணக்கோலமாயிருந்த மணிபுரநகரெல்லாம், மாதவன் கொலைக்கேஸால் பிணக்கோலமானபிறகு, நமது பாலூர்ஜமீன்தார், மணிபுரியில் தங்குவதற்குச் சற்றேனும் மனமில்லாதவராயும், மணிபுரம் ஜமீன்தாரின் சரிதையில் அவ்வளவாக த்ருப்தியற்றவராயும், தினகரனை யிமந்தநம் தவிர யாதொரு பாவமுமறியாத மாதவன்மேரில்

அவதூரான கொலேக்கேஸ் மணிபுரம் ஜமீன்தாரின் ஏவுதலினுல் நேர்ந்ததையும் நினைத்து, மிக மனம் வருந்தியவராய்த் தன் மகனும், தானும் இரண்டு மூன்று உரித்தான வேலைக்காரருடன், மணிபுரத்தினின்றும் புறப்பட்டு, மதுரையில், மாசிவீதியில், சிறுபாளையம் ஜமீன்தார் பங்களாவில் தற்காலத்தில் வாஸஞ்செய்து வருகின்றார்.

ப்ரீவி கௌன்ஸில் அப்பீலுக்குப் போன கேஸ் இன்றைக்கு நாளைக்கென்று இழுபட்டுக்கொண்டே யிருக்கிறது. மணிபுரம் ஜமீன்தாரின் சிநேகமும் குறைந்துவிட்டது. இதுவரை ஏராளமாய்ப் பொருளுதவிசெய்துவந்த செட்டியார், ரங்கூனில்தன்னுடைய உண்டியல் கடைகள் முறிந்து போய்விட்டபடியாலும், அநேகமாய், பாபர் மனு தயாரிக்க வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டபடியாலும், ந்யாயஸ்தலங்களில் வ்யவஹாரங்களின் அனுகூலப் ப்ரதிகூலங்கள் நிலையற்றதென்ற பயத்தாலும் முன்போலத் தாராளமாய்ப்பணம் அனுப்ப முடியவில்லை. ஐயோ! என்செய்வார்? பாவம்! நமது பாலூர் ஜமீன்தார் தன் ஏகபுத்ரனை தினகரன் மரணத்துக் கழுவாரா? அல்லது தன் புதல்வனினு மதிகமாய் வளர்த்த மாதவன் நிலைமைக் கழுவாரா? தன் பதவிகளெல்லாம் நிலைகுலைந்து இவ்வாறு அவதிப் பட நேர்ந்ததை நினைத்தழுவாரா? என்னசெய்வார்?

"பட்டகாலிலேபடும் கெட்டகுடியே கெடுமல்லவா?" ஆஹா! இவ்வுலகிற்பிறக்கும் ஸமஸ்த ஜீவராசிகளுக்கும், பிறவிமுதல் உடன் பிறக்கும் ஓர் பொதுக்குண முண்டல்லவா? அதுதான் பசியென்று பெயர். பசித்தழாப் பிள்ளை பிழைக்காது. ஆகையால் பசியே ஸகல ஜீவராசிகளின் நடத்தைகளுக்கும் ஆதி காரணமாகின்றது.

அப்பசியைத் தீர்க்க உணவும், உணவுதேடப் பணமும் வேண்டும். போதுமான பணமின்மையே வறுமையெனப்படும். வறுமையே எல்லாத்துர்ப் பாக்கியங்களினு மதிகக்கொடியது.

"கொடியது கேட்கி னெடியவெவ் வேலோய்,
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது முதுமையில் வறுமை"—ஔவை.

"பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவிரன் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலா மகல வோட்டி மானமென் பதனை வீட்டி
யில்லெலா மிரத்த லந்தோ விழிவிழி வெந்த ஞான்றும்.
[—குசேலோபாக்யானம்.]

தன்பதவி குலைந்து தன்னைப்போன்ற இதர ஜமீன்தார் கை பார்த்துப் பிழைக்க நேர்ந்ததை நினைத்து நினைத்து பாலூர் ஜமீன் தார் மனம் நொந்தார்.

அதிகமாய் வளர்ப்பதேன். மாதவனைத் தூக்குப்போடக்குறிப் பிட்ட காலைசுமார் 7 மணியிருக்கலாம். முற்கூறிய ஜாகாவில் ஓர் அறையில் ஓர் சாதாரணமான படுக்கையில் பாலூர் ஜமீன்தார்படுத்து இருபுறமும் புரண்டுகொண்டிருக்கின்றார். தூங்குகின்றாரா? அல்ல! தூக்கமேது இவ்வளவு அவதிகள் நடுவில்? இராமுழுமையும் தூங் காது,"அப்பா! அப்பா! ஐயோ; என் கண்மணி! ஐயோ என் இரண்டு கண்களும் ஒரே காலத்திலா நானிழப்பேன். அப்பா ! அப்பா," என்று கதறிக்கொண்டிருக்கிறார். அறைக்கதவு மூடப்பட்டிருந்தது.

இந்நிலைமையில், பனிகால இரவு முடிவில், பனிக்கொடுமை யால், வாடிச்சுருங்கிக் கிடக்கும், செந்தாமரை மலர்போல், வாடி வெளுத்த முகமும் தனக்கியற்கையாயுள்ள முகலக்ஷணங்களெல்லாங் குறைந்து சரீரம்வாடி, பதவிக்கும் பருவத்துக்கும் தக்க உடை அணி யாதொன்று மற்றவளாய், நமது மாலினி 7-மணியடித்தும் தன் பிதா, படுக்கையைவிட் டெழாதிருப்பதைக் கவனித்து மனம்பதறி, அவ் வறையண்டை சென்று "அண்ணா! அண்ணா!" என்று மெது வாய் ஐந்தாறு தடவை கதவைத் தட்டினாள். ஒரு பதிலும் காண வில்லை. மனம் பதறினாள். என்னசெய்வாள்? பாவம்! யாருமற்ற அநாதையாய் விட்டாளல்லவா? தந்தைக்கும் ஏதாவது விபத்து நேர்ந்துவிட்டதோ? அப்படி யேதாவது நேர்ந்தால் அவள் கதி அதோ கதிதான். "நேற்றிரவு நெடுநேரம், தினகரனைப்பற்றியும் மாதவனைப் பற்றியும் நினைத்து நினைத்துக் கதறிக்கொண்டிருந்தாரே! ஒரு சப்தமும் உள்ளே கேட்கவில்லையே. ஒருவேளை சோகபாரம் தாங் காது எங்கேயாவது ஓடிப்போய்விட்டாரோ? அல்லது உயிர்துறந்து

விட்டாரோ! அல்லது தற்கொலை புரிந்தாரோ! என்ன செய்வேன்! என்ன செய்வேன்! அண்ணு! அண்ணு! என்ன செய்வேன்" என்று கையைக் கையை நெறித்துக்கொண்டு கடைசியாய் கைகுவித்து முகத்தைச்சாய்த்து "ஐயோ! யாருமற்ற பாவியானேனே! தெய்வமே! தெய்வமே!" என்று நமது மாலினி கதறினுள்.

இப்ராலாபத்தைக் கேட்டு, "என்னடியம்மா! மாலினீ! என்ன? என்ன?" என்று பதைபதைப்புடன் கேட்டுக்கொண்டே தோழி கமலா ஓடிவந்தாள்.

மாலினீ:—"கமலா! அம்மா! ஐயோ! அண்ணு உள்ளே படுத்திருந்தாரே! ஒரு சத்தமும் கேட்கவில்லையே! கதவைத் தட்டித் தட்டிப் பார்த்தேனே. ஐயோ! என்னசெய்வேன் என்னசெய்வேன்" என்று கையைப் பிசைந்தாள்.

அதற்குள் வேலைக்காரன் ஓடிவர, எல்லோரும் கதவைத் திறந்தார்கள்.

மாலினீ மான்குட்டிபோல ஒரே தாவாய்த் தாவித் தகப்பனுர் படுக்கையில் பாய்ந்து அவர் பக்கத்தி லுட்கார்ந்து அவரைக் கட்டிக்கொண்டு, "அண்ணு! அண்ணு! ஐயோ! ப்ரதிதினமும், உதயத்துக்கு முன் எழுந்திருப்பீர்களே! 7-மணி யாய்விட்டதே! ஏதண்ணு உங்களுக் கென்னசெய்கிறது! அண்ணு! ஒரு வார்த்தை கூடச் சொல்ல மாட்டே னென்கிறீர்களே! ஐயோ! அண்ணு! "மாலினி மாலினீ!" என் றழைப்பீர்களே! ஐயோ! அவ்வினிய பதங்களையு மறந்துவிட்டீர்களோ! அடி கமலா! ஐயோ! ஒன்றுந் தெரியவில்லையே! டாக்டரை யாவது வரவழையேன்! அடியே அண்ணுவும் என்னைக் கைவிட்டு விடுவார்களோ!" என்று ப்ரலாபித்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்திற் கெல்லாம், டாக்டர் சுந்தரராஜசர்மா வந்து சேர்ந்தார். கைபிடித்துப்பார்த்து 'அம்மணீ' இதொன்றும் பயமில்லை. ஏதோ அசதியாயிருக்கின்றுர், உங்கள் தகப்பனுர்! ஒருவேளை இரவில் வெகுநேரம் விழித்திருந்தாரோ, என்று வினவ, மாலினீ "ஆமாம், நேற்றிரவெல்லாம் என் தமயனையும்—" என்று கண்ணீர் தாரை தாரையாய்ச் சொரிந்து "ஹா! ஹா!" என்று விம்மியழுதாள்.

டாக்டர், "சரி இருக்கட்டும், இந்தச்சமாசாரங்களைப்பற்றி இவரிடம் ஒன்றும் சொல்லவேண்டாம். இக்கொடுந்துன்பமே, இவர் தேகத்தையு மதிகமாய்த் தாக்கிவிட்டது. இதை மறப்பதற்கு என்னென்ன உபாயங்களுண்டோ, அவைகளை நீங்கள் செய்யவேண்டும்."

இந்நிலைமையில் ஜமீன்தார் திடுக்கிட் டெழுந்துட்கார்ந்து 'என்னப்பா! என்னப்பா! ஐயையோ! போனையோ! மாதவ! போனையோ! போனையோ!' என்று மார்பிலும் தலையிலும் 'படீர், படீர்,' என்று மாறி மாறி யடித்துக்கொண்டார். அருகில் நின்ற அதிபால்யரும், அதிலும் அபலைகளுமான மாலினியும் கமலாவும் ஒன்றும் செய்யத் தோன்றாதவர்களாய் கைகால் பதறி 'ஐயோ ஐயோ!' வென்று கதறினர்கள். டாக்டரும் ஒன்றும் சொல்லத்தோன்றாதவராய் ஸ்தம்பித்து நின்றுவிட்டார்.

"அப்பா' ஐயையோ இரண்டு கண்ணும் போச்சே! இரண்டும் போச்சே! ஐயையோ! மாதவனைக்கொண்டுபோரான்! கொண்டுபோரான்! ஐயையோ விடாதே! விடாதே! ஐயையோ ஐயையோ" என்று கதறித் திடீரென்று கட்டிலினின்றும் குதித்து அறைக்குவெளியே ஓட ஆரம்பித்தார்.

உடனே டாக்டரும் இரண்டு வேலைக்காரருமாக அவரைப் பிடித்திழுத்து மறுபடி கட்டிலி லுட்கார்த்தி, பிடித்துக்கொண்டு விசிறி போட்டு வீசி ஆசுவாசப்படுத்தினர்கள்.

"அப்பா! அப்பா! என் இரண்டு கண்ணுமாபோகும் தினகரன் போனனே. நீங்களிருவரும் இரண்டு கண்கள்போ லிருந்தீர்களே! கண்மணிகளே! மாதவ! அவனுடன் நீயும் போகவேணுமா. அப்பா! என்னைக் கூட்டிச்செல்லலாகாதா! ஐயோ! ஐயோ!" என்றலறினர்.

இந்த நிலைமையில், திடீரென்று வாசலில் ஒரு குதிரைவண்டி வந்துநின்றது. அதிவிரைவில் உள்ளிருந்து நால்வர் குதித்தார்கள். திடீரென்று வாயிற் கதவும் திறக்கப்பட்டது. நால்வரும் நேரே சரேலென்று நமது ஜமீந்தாரின் அறைக்குட் புகுந்தார்கள்.

அவ்வாறு பிரவேசித்தவர்கள் நமது மாதவன், தினகரன் பரதேசி, அன்னவர் சகோதரி. தினகரனையும் மாதவனையும் பார்த்ததும் அங்கிருந்தோர்க்கு தாங்கள் காண்பது கனவோ அல்லது நினை

வோ என்று பிரமித்துவிட்டார்கள். தினகரனிறந்து பலமாதங்களா யின. மாதவன் இன்று காலை தூக்குக்கிரையானனே. ஒருவேளை அவர்களின் ஆவிகள்தான் பிசாச ரூபமாய் இவ்வாறு தோன்றுகின் றனவோ! பகல்வேளைகளில் பிசாசுகள் நடமாடாவே. அதிலும், எல்லோர் கண்களுக்கும் ஒரேமாதிரியாகவா இவ்வாறு தோன்றும்! பிசாசுகள் மனதின் பலஹீனத்துக்குத் தக்கவாறல்லவோ ஆவிர்ப் பவிக்கின்றன! இதென்னமாயம்! ஒன்றும் விளங்கவில்லையே! என்று எல்லோரும் மதிகலங்கி யாதொன்றும் செய்யத் தோன்றாது திகைத் திருக்கையில் விசேஷமாய்ச் சஞ்சலமடைந்த நமது பாலூர் ஜமீன் தார், "அடேடே அப்பா தினகர! என்னைப்பயமுறுத்தாதே. அடே மாதவ! என்னை வருத்தாதீர்கள்! உங்கள் கட்டளையை கரையேற்ற நான் ராமேசுவரம் போகிறேன். ஐயையோ என்னைப் பயமுறுத்து கின்றீர்களே. ஐயையோ! நீங்கள் செத்தவர்கள்வந்து பிசாசாக என் னைப்பயமுறுத்துகின்றீர்களே! ஐயையோ! என்னசெய்வேன்! என்ன செய்வேன்! ஏ! ஏ! பரதேசி! நீதான் கைக்கருப்பை ஏவிவிட்டாயோ! ஐயோ ஓட்டு ஓட்டு, இந்தப் பிசாசுகளை ஓட்டு, உனக்குக் கோடி புண்யமுண்டு! இதோ! இன்றைக்கே ராமேசுவரம் போறேன். துர் மரணமா யிறந்ததாலல்லவோ தகப்பன் என்றுகூட எண்ணுமல் என்னை—" என்று கதறிக்கொண்டே தன் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு திடீரென்று கீழே சாய்ந்தார். உடனே எல்லா ஸம்ப வங்களுக்கும் தயாராயிருந்த நட்பதர்சியான நமது பரதேசி, சமயத் துக்குதவி, சாய்பவரைத் தாங்கி, அருகிலிருந்த சோபாவில் சாய்த் துப் பன்னீர் தெளித்து, விசிறிகள் வீசி வேண்டியபடி ஆசுவாஸப் படுத்தினர். இதற்குள், மற்றவர்களும் இவையெல்லாம் கனவுமல்ல மனதின் நினைவுமல்ல, தினகரனும் மாதவனும் உயிர்த்திருக்கத் தாங்கள் காண்பது உண்மைதான் என்று தைர்யமடைந்தார்கள்.

இதுவரை யொன்றும் செய்யத்தோன்றாது பிரமித்துக்கொண் டிருந்த நமது மாலினி திடுக்கிட்டு நித்திரையினின்றும் கண்விழித்த மான்பேடு போலத்துள்ளி "அண்ணு" வென்று கதறிக்கொண்டு, தினகரன்மேல் பாயத் தினகரன் "கண்ணே" என்று கதறி யவளை வாரி யணைந்து கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருக்கினன். இதற்குள் பாலூர் ஜமீன்தாரும் திடுக்கிட்டு விழிக்கவே தினகரன்

'அண்ணு! நான் தினகரனில்லையா! தெரியவில்லையா' வென்று கதறிக் கொண்டு தன் தகப்பனாண்டை செல்ல அக்கிழவர், அப்பா! அப்பா! தினகரா! என் கண்மணி! அப்பா! நீ தினகரன்தானு! ஐயோ! என் மாதவன் போனுனே! போனுனே! அடேடே பாவிப்பயல்களா! மாதவனைக் கொல்லாதே! கொல்லாதே! ஐயையோ! ஐயையோ! என்றலற மாதவனருகிற்சென்று 'மாமா! இதோ இருக்கிறேனே! தெரியவில்லையா' என்று கண்ணீர் தாரை தாரையாய்ப் பொழிந்தான்.

அதிகமாய் வளர்ப்பதேன். அப்பரிதாபக் காட்சியை வர்ணிக்கப்போதுமான வார்த்தைகளுமில்லை. நடந்தவை யெல்லாம், சரீர அங்கச் சேஷ்டைகளும், ரோதனங்களும், ஆலிங்கனங்களுமேயொழிய வேறில்லை.

இவ்வாறு கால்மணி நேரஞ் சென்றபிறகு, பெரும் புயலால் தாக்கப்பட்டு, அங்கு மிங்கும் தத்தளித்த மரக்கலம் போல, எல்லாம் ஆடி அமர்ந்தன. பிறகு எல்லா விருத்தாந்தங்களும், ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். இதற்குள் ஊரிலுள்ள பெரியோர்களும், நண்பர்களும், இவ்வதிசய சம்பவத்தைக் கேட்டு, ஜமீன்தாரை க்ஷேமம் விசாரிக்க வந்தார்கள். வாசலில் ஜனங்கள் திரள் திரளாய்க் கூடினுர்கள். இவ்வற்புத காட்சியை அதிகமாய் வர்ணிப்பதைப் பார்க்கிலும் நமது நண்பர்கள் ஊகித்துக்கொள்வதே சுலபம்.

இந்த நிலைமையில் திடீரென்று, ஓர் தந்திச்சேவகன் பிரவேசமாய், ஜமீன்தாரை நோக்கி, 'எசமான் தந்தி வந்திருக்குது' என்று சொல்லித் தந்தியை நீட்ட, உடனே ஜமீன்தார் பரபரப்புடன் வாங்கி உடைத்துப் படித்தார்.

தந்தி விவரம்

மெஸேர்ஸ் தாம்ஸன் அண்ட் ப்ரௌன்
ஸொலிஸிடேர்ஸ்
கிங்க்ஸ்வே, லந்தன்.

பாலூர் ஜமீன்தார் அவர்களுக்கு
மதுரை
தென் இந்தியா.

"தங்களுக்கு ப்ரீவி கௌன்ஸில் கேஸ் அநுகூலமான விஷயம் தெரிவிக்க எங்களுக்கு அபரிமிதமான சந்தோஷம்"

என்ன சொல்வது! கதிரவன் வரவால் மலர்ந்த தாமரைக்குளம்போல ஆங்குள்ளோர் எல்லோர் முகங்களும் இச்சந்தோஷ சமாசாரத்தாலும் இவ்வதிசய சம்பவங்களின் சேர்க்கைகளாலும் ஆதவனைக் கண்ட இருள்போல, இச்சிறு குடும்பத்துக்கு மேல் மேல் நேர்ந்த கஷ்டங்கள் திடீரென்று விலகிய அதிசயத்தாலும், ஆச்சர்யமடைந்து மலர்ந்தன.

---

## இருபத்திரண்டாவது அத்யாயம்.

———:(o):———

### விவரங்கள்.

### Explanations.

தன்னயம் என்பது ஸகலப்ராணிகளின் ப்ரவ்ருத்திக்கும் காரணமென்று ஸ்வார்த்த (Egoists) வாதிகளால் கூறப்படுகின்றது. அப்படியிருக்க, தன்னயத்தைக் கொஞ்சமேனும் கருதாது பராபிமானமே ப்ராதானமாய்க்கொண்டவர்கள், ஸஹாரா என்னும் பாலைவனத்தில், காணப்படும் ஓயஸிஸ் என்னும் சோலைகளைப்போல, ஆங்காங்கு சிற்சிலர் காணப்படுகின்றார்களே. இது முன்கூறிய பொதுவிதிக்கு விரோதமாகின்றதல்லவா ?

இப்படிப்பட்ட ஸர்வாபிமானி (Altruists)களின் மனநிலையைப் பகுத்தறி (Analyse) யும் மனவித்வான்கள் (Psychologists) அதன் காரணத்தின் தன்மையைப்பற்றிப் பலவாறு அபிப்ராயப்படுகின்றனர். ஸ்வாபிமானம் என்பதுமாத்ரம் பொதுவிதி யல்லவென்றும், அதைத் தவிர, அதற்கு வேறான ஸர்வாபிமானம் என்ற இன்னொரு தத்வ (Element) மும் உள்ளதென்றும் ஸர்வார்த்த (Altruists) வாதிகள் கூறுகின்றார்கள்.

ஸர்வாபிமானந்தான் மூலகாரணம் (Fundamental motive) என்றும், அது, கால தேச வர்த்தமானங்கள், ஜன ஸஹவாஸம் பயிற்சி (Training) முதலான செயற்கை (Artifiical) காரணங்களாலும் ஜன ஸங்கேதங்களாலும் (Convention and Artificial rules)

ஸர்வாபிமானத்துக்குமே ஹேதுவாகின்றதென்றும், ஜனஸமூகத்தில் ஸ்வானுகூலமான கார்யத்தைச்செய்வதால், ஸ்வானுகூலமும் விருத்தியாகின்றதென்றும் தெரிந்துதான், பரோபகாரஞ் செய்கின்றான் என்றும், அவ்வாறு சிலகாலஞ் சென்றதும், 'காரணமே கார்யமாகக் கருதப்படும்,' (Means takes the place of End) என்னும் மஹா விதியால், அவன் தன்னயம் மறந்து ஸர்வாபிமானியாகின்றான் என்றும் ஸ்வார்த்த (Egoists) வாதிகள் கூறுகின்றார்கள். இதற்கு உதாஹரணம், ஸகல சுகத்துக்கும் இன்றியமையாததென்று தேடப்படும் பணம் ஸ்வயமாகவே யாதொரு சுகமும் உண்டுபண்ண சக்தியற்றதாயினும், பணமே பெருஞ்சுகமென்று பாதுகாக்கும் பேதையர் பெரும்பான்மையோர் உளரல்லவா?

இச் சித்தாந்தத்தின் உண்மை பலவாறு இருக்க, அன்றுமாலை பாலூர் மஹாராஜா ஜாகையில், நமது கதாபுருஷர்கள், தங்கள் அனுபவங்களைப்பற்றி பரஸ்பரம், ஸம்பாஷித்துக்கொண்டு ஸந்தோஷமடைந்துகொண்டிருந்தார்கள். ஆமாம், ஸந்தோஷந்தான், துக்க நிவர்த்தியும் சுகானுபவமும் சந்தோஷகாரணங்களல்லவா?

இச் சம்பாஷணைகளைச் சுருக்கமாக எழுதுவோம். தினகரன் தெரிவித்துக்கொண்டது:—

'நான் அன்று மாலை' மாதவனும், மாலினியும் சிங்கார வனத்திலிருக்கக் கண்டதும் எனக்கு அடங்காத்துயரம் முதல் முதல் ஏற்பட்டதாயினும், கடைசியாக இதெல்லாம் ஈசுவர ஸங்கல்பமேயொழிய வேறல்லவென்று எண்ணி, என்புத்தியீனத்தைப் பலவாறு நொந்துகொண்டு, அவ்வனத்தில் ப்ரமைகொண்டவன்போலத் திரியலானேன். அத்தருணத்தில், கள்ளன்கோட்டைத்தலைவர்களால் விரட்டப்பட்ட ஓர் காட்டுப்பன்றி நான் இருக்குமிடம் நோக்கி வந்தது. உடனே நான் என் வாளை உருவிக்கொண்டு, அதைத் தகைந்தேன். பன்றி வேகமாய் என்மீது பாய, நான் நிலைதவறி அருகிலிருந்த ஓடையில் வீழ்ந்து மூர்ச்சையானேன். நான் விழிக்கும்பொழுது இரவு சுமார் 10 மணி இருக்கலாம், கள்ளன்கோட்டையிலிருக்கக் கண்டேன்."

மாதவன் செய்தி:—

தினகரனைப் பன்றி தாக்கியதைக்கண்ட நான் சற்றுமுன் நேர்ந்த விரோதத்தை முற்றிலும் மறந்து அவனைக் காத்தற்பொருட்டு பன்றியை எதிர்த்து வெகுதூரம் சென்றேன். கடைசியாய் அதை எதிர்த்து, அதன் விலாவில் என் கத்தியால் குத்தி இழுக்கையில் என் கத்தி ஒடிந்துவிட்டது. ஒடிந்த பிடியை எறிந்துவிட்டேன். நல்லவேளை பன்றியும் இறந்துவிட்டது. உடனே தினகரனைத்தேடி வந்த வழியே திரும்பினேன். தினகரனைக் காணேன். ஒருவேளை அரண்மனை சென்றிருப்பானோ என்று அரண்மனை வந்துசேர்ந்தேன்.

கள்ளன்கோட்டைத் தலைவர்வசம் தினகரன் அகப்பட்டுவிட்டானென்பது எனக்குத் தெரியமாட்டாது. இந்தத் தகவல் கொடுக்க முடியாவண்ணம் என் புத்தியே மாறி, எனக்கும் வாழ்வில் ஓர் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. இதைப்பற்றி விவரமாய்த் தூண்டிக் கேட்கும் அபிமானமும் பொறுமையுமுள்ள உற்ற நண்பர் யாவரும் என்னிடம் வரவில்லை. நான் ஜாமீனில் இருந்த காலத்தில் என் நண்பர் யாரும் என்னைப் பார்க்கமுடியாவண்ணம் அவ்வளவு பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது. மணிபுரம் ஜமீன்தார்மாத்திரம் என்னை அடிக்கடி வந்து பார்த்து மாலினியை நான் விவாஹம் செய்யாது மறுத்துவிட்டு இப்ரதேசத்தைவிட்டு எங்கேயாவது கண்ணுக்கெட்டாத் தேசத்துக்கு ஓடிப்போவதாய் வாக்களித்தால் என்னை எப்படியாவது இவ்வாபத்தினின்றும் பணத்தாலும் மற்ற உபாயங்களாலும் தப்புவிப்பதாய்ச் சொல்லி நச்சுக்கொண்டிருப்பார்.

நான் ஓடிப்போக இணங்கவில்லை. ஓடிப்போனால் என்மேலுள்ள சந்தேகம் உறுதியாய்விடும். மேலும் க்ரிமினல் குற்றத்துக்குக் காலாவதியுமில்லாததால், இன்றைக்குத் தப்பினும் என்றைக்காவது அகப்பட வேண்டியதுதானே என்ற பயத்துடன் காலங்கழித்துவந்தேன். தவிரவும் தினகரன் மறிக்கவில்லை என்று எனக்கு நிச்சயமாய்த்தெரிய வந்ததால், அவனைப்பார்த்து, என் நிர்த்தோஷ (Innocence) த்தை ஸ்தாபித்துவிட்டு, இவ்வளவு ஆபத்துக்குமிடமான இவ்விடத்தை விட்டகலலாமென்பது என் எண்ணம். மாலினி என்னை விவாஹம் செய்ய மனமில்லாது தர்ம ஸங்கடத்துக்ககப்பட்டுத் தவிக்கிறாள்

என்று மணிபுரம் ஜமீன்தார் சொன்னார். "என்னால் ஏன் அவளுக்கு இவ்வளவு தர்மஸங்கடம்?" என்ற அனுதாபத்தால் தான் அந்தக் கடிதம் எழுதி அவர்மூலமாய் அனுப்பினேன். அக் கடிதத்தைக் கொண்டு, அவ்வளவு கல்பனைகள் அவரும் போலீஸ் அதிகாரிகளும் செய்வார்களென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. ஸெஷன்ஸ் கோர்ட்டில் மணிபுரம் ஜமீன்தார் வாக்குமூலம் முழுமையும் பொய். நான் கொலைசெய்ததாய் ஒருவரிடமும் ஒப்புக்கொள்ளவில்லை.

ஆபத்து நேர்ந்ததுமுதல் எனக்கு மரணதண்டனை விதித்த பிறகு தான் புதுஜெயிலில் இம் மஹானுபாவன் பரதேசியாரைக் கண்டேன். அவர் யுக்தியாய்ப் பல கேள்விகள்கேட்டு என் விடைகளின் ஆதாரங்களைக்கொண்டு இவ்வளவு வேலை செய்திருக்கின்றார். "தெய்வம் புருஷகாரேண" என்றாற்போல இம்மஹானுபாவ னில்லாவிடில் நான் இதுவரை உயிர்த்திருப்பது அஸாத்யம்."

இந்நிலைமையில் பரதேசியார் வெளியேயிருந்து வெகு அவசரமாய் ப்ரவேசித்து ஓர் கடிதத்தைப் பாலூர் ஜமீன்தார்முன் எறிந்து இதை வாசிக்கச் சொல்லுங்களென அதைத் தினகரன் பின்வருமாறு வாசித்தான்.

கன்னன்கோட்டைத் தலைவரவர்களுக்கு

"என் உயிர் நண்பர்களே!

உங்கள் தலைமுறைதத்துவமாயும், எங்கள் தலைமுறை தத்துவமாயும் உங்கள் குடும்பமும், எங்கள் குடும்பமும் ஒருவருக்கொருவர் எவ்வளவோ அன்யோன்யமாயும் அன்புடனும் வாழ்ந்துவந்த விஷயம் உங்களுக்குத் தெரியாததில்லை. இப்பொழுதும், என் பிராணன் எல்லாம் நீங்களே. அப்படியிருக்க என்மீது நீங்கள் இவ்வளவு தயவில்லா திருப்பது என் காலக்கொடுமையே. 20 வருஷத்துக்குமுன் நடந்த கொலையை அறிந்திருக்கும் அப் பெண்பிள்ளையை இன்னும் நீங்கள் வேலையைச் சாய்க்காமல் வைத்துக்கொண்டிருப்பதாய்த் தெரியவருகிறது.

மாலினீயை நீங்கள் விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்ற எண்ணமிருப்பதாய் எழுதியிருந்தீர்கள். உங்கள் இஷ்டத்துக்கு

விரோதமாய் நான் என்றைக்காவது நடந்ததுண்டா?" மாதவன் நாளையதினம் தூக்கில் மடிந்துவிடுவான். உங்கள் வசத்திலிருக்கும் தினகரனையும் நீங்கள் வேலைசாய்த்து, இப்பொழுது நடந்திருக்கும் மாயம் ஒன்றும் வெளியாகாவண்ணம் செய்துவிடுவீர்களாகில், மாலினியை நீங்கள் அபஹரித்துச்செல்ல வேண்டிய உபாயம் செய்துவிடுகிறேன். எல்லாம் உங்கள் தயவு.

தங்கள் அன்புள்ள,

கிருஷ்ணராஜன்.

இக்கடிதம், மணிபுரம் ஜமீன்தாரால் எழுதப்பட்டதென்றும், பரதேசி, தினகரனைத்தேடி பகல்வேஷம்பூண்டு, கள்ளன்கோட்டை சென்ற மாலை தலைவர்கள் கையினின்று வீழ்ந்தபோது இவர்வசமாச்சுதென்றும் நமது நண்பர்கள் அறிவார்கள்.

இக்கடிதத்தை வாசித்ததும் ஆங்குள்ளோர் மனோபாவத்தை எவ்வாறு வர்ணிப்பது! மனமானது ஆழமான கடலுக்கொப்பானது. கடலினுள், திமிங்கலம் முதலான ஜலஜந்துகளும் பவளப்பாறைகள் அந்தர்வாஹினிகள் (Under currents)முதலான அபாயங்களுமிருப்பதுபோல வஞ்சகர் மனமும் எத்தனையோ கொடிய எண்ணங்கள் கொண்டிருக்கும்.

அதிகமாய் வளர்ப்பதேன்? நமது பரதேசியார் அச்சிறு சபையை நோக்கி, "நண்பர்களே! நான் ஒரு புதிய விஷயம் சொல்லப் போகிறேன். அது ஆச்சர்யமானது. அதாவது நமது மாதவன், இம்மணிபுரம் ஜமீன்தாரின் தமயன் புதல்வன்."

ஆங்குள்ளோர் யாவரும் ஆச்சர்யத்தால் நடுங்கினார்கள்.

பிறகு ஆதியோடந்தமாய் நமது மாதவனுடைய பூர்வ விருத்தாந்தங்களை விவரித்தார்.

பாலூர் ஜமீன்தார்:—தாங்கள் சொல்லுவதை நான் நம்பாமல் கேட்கவில்லை. உண்மை யெப்படி யிருப்பினும், தாங்கள் சொல்லுவதை சட்டப்படி நிரூபிக்க முடியுமா? வாஸ்தவத்துக்கும் சட்டருஜுவுக்கும் வித்யாஸமிருக்கின்றதே. இதை ருஜுப்படுத்த முடியா

நிலைமையில் இவ்வாறு சொல்லித்திரிந்தால், 'ஏதோ பிதற்றுகின் றான்' என்று உலகத்தார் நகைக்க இடமாகுமல்லவா?

பரதேசி:—மஹாராஜ்! நாளைக்காலைக்குள் இதை ருஜுப்படுத்த முடியும். அவ்வாறு செய்து முடிந்தால், இப்பொழுது கொலைபாதக னாய் விளங்கும் கிருஷ்ணராஜன் கதியைப்பற்றி என்ன தீர்மானிக் கின்றீர்கள்.

தினகரன்:—(கோபாவேசத்துடன்) அப்பாதகனைத் தூக்குக் கனுப்பவேண்டியதுதான். பழிக்குப்பழி வாங்குவது பாவமோ?

பாலூர் ஜமீன்தார்:—"அப்பா! தினகர! பதறாதே! அவன் பாத கன் தான். ஆயினும் நாமும் பழிக்குப்பழி செய்வோமாகில். அவ னுக்கும் நமக்கும் வித்தியாசமென்ன? நாமும் அவன் நிலைமைக்கு இறங்கிவிடுவோமல்லவா?" 'அப்பா மாதவ! இனி நீ தான் சொல்ல வேண்டும், நமது பரதேசி ஸ்வாமிகள் சொல்லுகிறபடி நேரிட் டால், உன் சிற்றப்பனாகிய—"

மாதவன்:—மாமா! எவ்வளவு பாதகனாயினும் கிருஷ்ணராஜா என் சிற்றப்பன். என் தாய் தந்தையர் இனி உயிர்த்துவரப்போகின் றார்களா? நான் பட்ட கஷ்டத்துக்கு அவரை ஹிம்ஸித்தால் த்ருப்தி யாய்விடுமா? நாம் இக்கொடும் ஸம்பவங்களின் காரணங்களை வெளி யிடுவோமாகில் உலகமுள்ளவரை மணிபுரம் ஜமீன்தார் வம்சம் கொலைக்கார வம்சம் என்ற அபவாதம் என்றென்றைக்கும் ஸ்தாபன மாய்விடும்.

தினகரன்:—அப்படியானால் உனக்குக் கிடைக்கும் ஜமீன்தாரி யைத் துறந்து, அப்பாதகன் கைகளில் மறுபடி ஒப்புவித்துவிட்டுக் காசியாத்திரை போகின்றாயா?

மாதவன்:—ஏதோ! எனக்கொன்றுந் தோன்றவில்லை, மாமா தான் சொல்லவேண்டும்.

பாலூர் ஜமீன்தார்:—எனக்கென்ன தெரிகின்றது. இவ்வளவுக் கும் ஸூத்ரதாரன் போலிருந்து இவ்வளவு ஆபத்துக்களினின்றும் தப்புவித்த பரதேசியாருக்குத் தெரியாத யுக்தியா நாம் சொல்லப் போகின்றோம். அவாள்தான் சொல்லவேண்டும்.

பரதேசி:—மாதவன் சொல்லுவது ந்யாயந்தான். இன்று இரவு அவனைச் சந்தித்து மாதவன் தன் தமையன் மகனென்றும், ஜமீன்தாரிக்கு அடுத்த வாரிஸ் எனவும் அது தனக்கு இப்பொழுதுதான் தெரியவந்த தெனவும் ஒப்புக்கொள்ளச் சொல்லி கூடிய சீக்கிரம் குறிப்பிடும் தினத்தில் ஜமீன்தாரியை மாதவனுக்கு நானே இருந்து பட்டங்கட்டி வைத்துவிட்டு, தகுந்த ஜீவனும்சத்துடன் உத்தர இந்தியாவில் காசி நகரத்தில், சன்யாசியாய் ஒழிவுடன் காலங்கழிப்பதாய்ப் பேர்செய்துவிடுகிறேன். அவருக்கு மாதம் என்ன கொடுக்கலாம்.

தினகரன்:—ஒருசாண் கயிறும், ஆறடித் தரையுந்தான்! என்ன கொடுப்பது வயிறெரிகையில்?

மாதவன்:—ரூபாய் 400 வரை.

பாலூர் ஜமீன் தார்:—சரிதான்.

சரி அவ்வாறே செய்கிற தென்ற தீர்மானத்துடன் அச்சிறுசபை, அன்று மாலை கலைந்தது.

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
யாந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

—மூதுரை.

## இருபத்துமூன்றும் அத்யாயம்.

### பாதகன்.

### The Wretch.

"தன்வினை தன்னைச் சுடும்."

இப்ப்ரபஞ்சத்தின் கண்ணுள்ள ஸமஸ்த சராசரங்களும் சேதனங்களெனவும் அசேதனங்களெனவும் இருவகையாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள், சேதனங்களென்பவைகள் உயிர், மனம், புத்தி, ஸங்கல்பம், விகற்பங்களென்னும் அற்புத சக்திவாய்ந்தவைகளாயிருக்கின்றன. ப்ராணிகளிலும் விசேஷமானது மனிதஜன்மமே.

மற்ற ப்ராணிகளைப் பார்க்கிலும், மனிதனுக்கு விசேஷ அறிவையும், தர்மம், அதர்மம், ந்யாயம், அந்யாயம், நல்லது, கெட்டது என்ற பகுத்தறிவையும் கடவுள் கொடுத்திருக்கின்றார். இவ்விசேஷ அறிவின் பயனை அனுபவியாது கேவலம் இதர மிருகங்களைப்போல் ஸஞ்சரிக்கும் மனிதனை மிருகத்திலும் கேடுகெட்ட பதிதனாய்ப்போய்விடுகின்றான்.

மேற்கூறிய தர்மாதர்மங்கள், ந்யாயான்யாயங்களெல்லாம் வ்யவஹார (Relative) மாத்ரமாய்த் தோன்றினும், அநேக விஷயங்களில், அவைகள் ஸர்வ ஸம்மதமாயிருக்கின்றன. கொலைசெய்தல், திருடல் முதலான தீங்தொழில்களெல்லாம் அதர்மமென்பதில் இரண்டு அபிப்ராயங்களுண்டோ?

ஒவ்வொருவனும் தன் தன் வினைப்பயனை அனுபவிக்கின்றான் என்றும், இப்பிறவி தப்பினும் எப்பிறவியிலாவது அதை யனுபவிப்பது நிச்சயமென்றும் கர்மவாதிகள் கூறுவார்கள், அதன் உண்மை எப்படியிருப்பினும் சில சமயங்களில் தன் வினைப்பயன்களை இப்பிறப்பிலேயே அனுபவிக்குமாறு, ஸந்தர்ப்பங்களெல்லாம் அவ்வளவு கோவையாக நேர்ந்துவிடுகின்றன.

ஒவ்வொருவனும் தான் மாத்திரம் புத்திசாலியாயிருப்பதாகவும், எதிரியவ்வளவு திறமையற்றவனென்றும், எதிரியை ஏமாற்றுவது சுலபமென்றும் எண்ணித் தான் தனது எண்ணங்களை நிறைவேற்ற முயல்கின்றான். ஆனால், சில சமயங்களில் தன் எதிரியின் விசேஷ பலத்தால் தானே ஏமாந்துபோய்விடுவான். 'கெடுவான் கேடுநினைப்பான்' என்னும் பழமொழியின் உண்மை அப்பொழுது தான் அவனுக்கு வெளியாகின்றது.

அன்று இரவு சுமார் 11 மணி இருக்கலாம். மதுரை வெளி வீதியிலுள்ள மணிபுரம் பங்களா மாடியில், ஓர் பெரிய அறையில் ஓர் சோபாவில் சாய்ந்தவண்ணம் நமது 'மணிபுரம் ஜமீன்தார் பெருமூச்சுவிட்டு ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்.

அவ்வறையானது அநேக விளக்குகளாலலங்கரிக்கப்பட்டிருந்ததாயினும், நடுவில் தொங்கிக்கொண்டிருந்த ஓர் விளக்கின் சிறிது

மங்கின ஒளியால், அப்பெரிய அறை ஒருவாறு ப்ரகாசித்துக் கொண்டிருந்தது. மனித அரவமேயின்றி எங்கும் நிஸ்சப்தமாயிருந்தது. சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் மாத்திரம், ஓயாது, 'டக்,டக்' என்று அடித்துக்கொண்டு விகலை கலையாகவும், கலை நிமிஷமாகவும், நிமிஷம் மணியாகவும், மணி நாளாகவும், நாள் மாதமாகவும், மாதம் வருஷமாகவும் சென்று மனிதரின் ஆயுள்நாளின் செல்லையும் கால கதியையும் தெரிவித்துக்கொண்டிருந்தது.

"ஆகா என்ன ஆச்சர்யம்! மனிதனொன்று நினைக்கத் தெய்வமொன்றல்லவோ நினைத்தது. வரும் விதிப்பயனை யாரால் மாற்ற முடியும். எவ்வளவோ யுக்தியாய் வேலைசெய்தும், அதற்கும் மேலான யுக்திசாலி யொருவர் இருக்கிறதாக வல்லவோ நிச்சயமாய் விட்டது. இனி என்ன செய்யலாம். காலக்கொடுமையை யாரால் மாற்றக்கூடும். ஓடிவிடலாமா? எங்கு ஓடிவிடுவது? தற்கொலை செய்யலாமா? ஐயோ! இதற்காகவா இந்த ஜன்மமெடுத்தேன்." என்று நமது ஜமீன்தார் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

உடனே அவ்வறைக்கதவு திடீரென்று திறக்கப்பட்டது. ஜமீன்தார் திடுக்கிட்டெழுந்தார். உடனே சேவகன் ப்ரவேசமாகி, 'மஹாராஜ்' வாசலில் யாரோ, கடுதாசி கொண்டுவந்திருக்கிறார்—மஹாராசாவுக்கு—

ஜமீன்தார்:—திடுக்கிட்டு! ஏண்டா! சோணை! அத்தெவாங்கியாருதானே இங்கே!

சோணை:—மஹாராசா! நாக்குட்டி கேட்டேன்லே! அது ஏதோ ரகசியமாம்—மஹாராசாவிட்ட நேரிலே கண்டு கொடுக்கணுமாம்:—

ஜமீன்தார்:—வரச்சொல் !

சோணை:—உத்தரவு ! (வெளியே போகிறான்.)

ஜமீன்தார் "யாராயிருக்கலாம்! இந்நிசி நேரத்தில், அவ்வளவு அவசரமாய் நமக்கு—, ஒருவேளை தலைவன்களா யிருக்கலாமோ ஐயோ! பாதகர்கள் இன்னும் என்னைப் பயமுறுத்தக்காத்துக் கொண்டிருக்கிறார்களோ. என் உயிரெல்லாம் அப்பாதகர் கையிலகப்

[illegible] தகிக்கின்றதே! ஐயோ! மனச்சஞ்சலமில்லாமல் ஒரு க்ஷணமாவது வாழ்வதே நலம். இப்படி எவ்வளவு நாள் காலங்கழிப்பது? ஐயோ! ஒவ்வொரு க்ஷணமும் கழிவது ஓர் யுகம்போலிருக்கின்றதே—"

இதற்குள் ஓர் தூதன் வேஷம் பூண்ட நமது பரதேசி ப்ரவேசமானார். வந்தவரின் இனத்தை ஜமீன்தார் சுலபமாயறிந்து விட்டார். உடல் முழுதும் கிடுகிடென நடுங்கிற்று. கைகால்கள் பதறின. வந்தவரை 'என்ன' என்று கேட்கக் கூடவாயெழவில்லை. என்ன செய்யலாம். வழிதப்பி நடந்தால் வருவன வெல்லாம் அநுபவிக்க வேண்டியதுதானே! ஆயினும் பரதேசி, அதிக காலதாமதத்துக்கு இடங்கொடாமல்,

"கிருஷ்ணராஜ்!"

"எ-எ-ன்-ன!"

"இதோ இக்கடிதத்தைப்பார்!" என்று ஓர் கடிதத்தை ஜமீன்தார் கையில் கொடுத்தார். ஜமீன்தார் கைகால் பதற அதையுடைத்து வாசித்துப் பார்த்தார். ஐயோ! என்ன கண்டார்? நொடிப்பொழுதில் அவர் எண்சாண் உடலும் ஒருசாண்போல குறுகிற்று. 'ஹா!' என்று கதறி யப்படியே சோபாவில் சாய்ந்தார்.

பரதேசி தைர்யமாயருகிற் சென்று, முகத்தில் ஜலம் தெளித்து மூர்ச்சை தெளிவித்து எழுப்பி உட்கார்த்தினார்.

ஜமீன்தார்:—ஐயோ! எ-ன்-ன்-னே-வ—

பரதேசி:—அடே! துஷ்டா! இதைப்படித்தாயா?

பலஹீனமான மனிதனாயினும், சிற்சில சமயங்களில் தப்பிக்க முடியாத நிலைமை வந்ததும், உயிரையே வெறுக்கத் தக்க ஓர்விதக் கோபவெறி வந்து விடுவதுண்டு. இதுவரை பயந்திருந்த ஜமீன்தார், திடீரென்று கோபங்கொண்டு பற்களை நறநறவென்று கடித்து அக்கடிதத்தைத் துண்டு துண்டாய்க் கிழித்தெறிந்துவிட்டு, சிங்கக் குட்டியைப்போல் உன்னி நமது பரதேசிமேல் பாய்ந்து தன் இடக் கையால் அவர் கழுத்தைப்பிடித்துக்கொண்டு, "அடே! ஆண்டிப்

பயலே! நீ என்ன செய்து விடலாமென்று நினைக்கிறாய்?" என்று சொல்லி ஒரே வேகமாய் எதிரிலிருந்த கல்லை நோக்கித் தள்ளி விட்டார்.

இக்கோலமெல்லாம் நேரிடலாமென்று எதிர்பார்த்து எல்லா வற்றிற்கும் தயாராயிருந்த நமது பரதேசி தைர்யமாய்த் தன் நிலை தவறாது ஸ்திரமாய் நின்றுகொண்டு பரிகாசத்துடன் சிரித்துவிட்டு,

"அடே! துஷ்டா! என்ன என்று நினைத்தாய்? உன் உயிர் என் கையிலிருக்கின்றது. அவ்வளவு லேசாய் உன் எதிரியை எண்ணி விடாதே! அந்தக்கடிதத்தை வாசித்தாயா?

"அடே! ஆண்டிப் பயலே! இனி நீ என்ன செய்வாய்? அந்தக் கடிதந்தான் கிழித்துவிட்டேனே!"

பரதேசி:—வெகு அலக்ஷியமாய் கைகொட்டிச் சிரித்து விட்டு "அடே மூடசிரோமணி! பிழைக்கத் தெரியாத பயித்யக்காரா! அந்தக் கடிதம் நீ தலைவர்களுக்கு எழுதியதுதானே?" என்றார்.

ஜமீன்தார்:—ஆமாம் அதுவும் தொலைந்து விட்டது—

பரதேசி:—அடே மடையா! நீ கிழித்தது நீ எழுதிய கடிதமே யல்ல. உன் கடிதத்தின் நகல். நீ எழுதிய கடிதம்—

ஜமீன்தார்:—உடனே தன் அபாய நிலைமையை யுணர்ந்து, அருகிலிருந்த சிறு கைத்துப்பாக்கியைத் திடீரென்றெடுத்து, பரதே சிக்கு நேரே பிடித்துக் கொண்டே "அடே! ஆண்டி! அந்த அசலைக் கொடுத்துவிடு! இல்லாவிடில் இதோ சுட்டு விடுவேன்—" என்று சொல்ல அவர் கட்டைவிரலும், அத்துப்பாக்கியின் விசைப்பக்கம் நாடிற்று.

பரதேசி:—மனதைர்யத்துடன் "அடே மடையா! நீ என்னைச் சுடவும் முடியாது, சுடவும் மாட்டாய். உன் அசல் கடிதம் என் வக்கீலிடம் பத்ரமாயிருக்கின்றது. நான் இங்கு வந்திருப்பதற்குத் தக்க ஸாக்ஷிகள் வெளியே காத்திருக்கின்றார்கள். இன்னும் 5 நிமி ஷத்தில் என் நண்பரண்டை நான் க்ஷேமமாய்ப்போய்ச் சேராவிடில்

உன் அரண்மனையானது போலீஸ் முற்றுகைக் குட்பட்டுவிடும். நீயும் நமது புதுஜெயிலுக்கு ஓர் புது மாப்பிள்ளையாய்ப் போக வேண்டியதுதான். உன் கதியும் அதோகதிதான்.

கைத்துப்பாக்கி அதன்படியே நழுவிக் கீழே வீழ்ந்து விட்டது. இடதுகையால் தன் நெற்றியையிறுகப் பிடித்துக்கொண்டு, "ஐயோ! ஐயோ!" என்றலறி யப்படியே சோபாவில் ஜமீன்தார் சாய்ந்தார்.

மறுபடி பரதேசியை நோக்கி "ஓய்! எனதுயிர் உமது கையிலி ருக்கின்றது. என்னை ஏன் இவ்வாறு கஷ்டப்படுத்துகின்றீர். என் னைக் கொன்று விடுமே! மன வேதனை பொறுக்க—"

"நாயே! நாயைக் கொன்றால் இறைச்சி கூட உதவாது. உன் னைக் கொன்று எங்களுக்கென்ன ஆகவேண்டும்! நாய்! நாய்! நீ இன் னும் நீடூழிகாலம் உயிருடனிருந்து நீ செய்த பாதகத்தின் பயனை இப்பிறவியிலேயே அநுபவிக்க வேண்டாமா?

ஜமீன்தார்:—"என்னை என்னதான் செய்யச் சொல்லுகின்றீர்? என்மீது இரக்கமில்லையா?"—நீ-நீ-நீர்-த-தான்—

பரதேசி:—"அடே இரக்கமற்ற சண்டாளா! உன்னுடன் அதிக வார்த்தையாடிக் காலதாமதம் செய்வதேன்? நாயுடன்! அடே! நான் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்! இனி தப்புவது கடினம். இனியாவது சரியாய் நான் செல்லுகிறபடி"—

ஜமீன்தார்:—என்னவேண்டுமானாலும் சொல்லுங்கள்! ஐயோ! என்னுயிர் துடிக்கின்றதே! என்னைச் சித்ரவதை பண்ணலாமா?

பரதேசி:—சரி! சொல்லு! மாதவன் யார் தெரியுமா?

ஜமீன்தார்:—ஆ-அ-அ-ந-நா-ன் எ-எ-ன-க்-க்-கு—

பரதேசி:—சீ! நாயே! மறுபடியும் பொய் பிதற்றுகின்றாய், சரியாய்ச் சொல்லுகின்றாயா? அல்லது இப்பொழுதே உன்னைப் போலீஸ் வசம்—

ஜமீன்தார் சரீர முழுமையும் மின்ஸார ப்ரயோகமானது போல் நடுநடுங்கிற்று. இருகைத்தலங்களையும் குவித்து முக மீது வைத்து ஹா ஹா!' என்று விம்மி விம்மி யழுதார்.

பரதேசி:—"இப்போ தெரிகின்றதா? அன்று அன்யாயமாய் ஒருவனைத் தூக்குக்கு அனுப்பப் பொய்ஸாக்ஷி சொன்னாயே! அடே பாதகா! தமயனையே கொன்ற துரோகி—!"

'ஆ!' என்றார் ஜமீன்தார் 'இனி தப்புவது அசாத்தியம்' தன்னுடைய பூர்வசரித்ரங்கள் முழுமையும் அறிந்தவன் இப்பரதேசி வேஷம்பூண்ட எதிரி. ஸர்வக்ஞனாகவும் ஸர்வாந்தர்யாமியாயுமிருக்கும் ஈசன் தான் இவ்வேஷம் பூண்டு தன்னைச் சோதிக்கின்றானோ! இல்லாவிடில் எவ்வளவோ ரஹஸ்யமாய்ச் செய்த அக்கொடுங்கொலையின் விவரங்கள் 20 வருஷங்களுக்குப் பின் எவ்வாறு வெளியே வரும்? எல்லாம் ஈசன் சங்கல்பமே. "அரசன் அன்று கெடுப்பான், தெய்வம் நின்று கெடுக்கும்" "அவனவன் விதிப்பயனை யவனவனே யனுபவியாது யாரனுபவிப்பது." என்று பலவாறு சிந்திக்கலானான்.

பரதேசி:—அடே பாதக! காலதாமதமாகின்றது. சீக்கிரம் நான் வந்த கார்யத்தை முடித்துக் கொடுக்கின்றாயா? அல்லது நானே முடித்துக் கொள்ளட்டுமா?

ஜமீன்தார்:—ஐயனே என்னாண்டவனே! தங்களிஷ்டப்படி செய்கின்றேன். எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தருளவேண்டும்.

பரதேசி:—இடியிடியென்று சிரித்து விட்டு, 'ஐயோ! கெட்ட கேட்டுக்குப் பட்டுக் குஞ்சம் வேறு! இந்தக் கோலத்தில் உனக்கும் உயிரும் வெல்லமாய்த் தோன்றுகின்றதே! அடே, பெண்ஹத்தி செய்ய முயன்ற பாதகா! இதோ தந்தேன்! தந்தேன். உன்னுயிரை! ஆனால்—ஒரு நிபந்தனை மாத்திரம். இனி இவ்வித அக்ரமங்கள் நீ செய்வதில்லை யென்று வாக்களிக்க வேண்டும். இஜ்ஜமீன்தாரியை உடையவரிடம் ஒப்புவிக்க வேண்டும். நீ செய்த குற்றங்களை யெல்லாம் ஒப்புக்கொண்டு எழுத்து மூலமாய் ஓர் வாக்குமூலம் என் கையில் கொடுக்கவேண்டும். நாய்க்குக் கருப்புக்கட்டி போடுவது போல, உனக்கு நானூறு காசு மாதந்தோறும் கடனாகச் சொல்லுகின்றேன். சீக்ரம்! பத்ரம்! தெரியுமா?

ஜமீன்தார்:—ஐயனே! என்னை ரக்ஷித்தாலும் நீர்தான், பக்ஷித்தாலும் நீர்தான், தாங்கள் செல்லுகிறபடி செய்கிறேன்.

உடனே பரதேசி தன் உள்சட்டைப்பையில் தயாராய் வைத்திருந்த கடிதாசியையும், பேனு மைக்கூட்டையும் ஜமீன்தார்முன் வைக்க, பரதேசி கேட்ட கேள்விகளுக் கெல்லாம் கோவையாய்த் தன் விருத் தாந்தங்களை ஓர் வாக்குமூலமாக எழுதிப் பரதேசியார் கையில் கொடுத்தார்.

பரதேசியும் அதை வாங்கிப் பத்திரமாய் அடக்கம் செய்து கொண்டு, 'அடே கிருஷ்ணராஜ்! ஞாபகமிருக்கட்டும். இனிமேலா வது ந்யாயமாய்ப் பிழை,' என்று சொல்லி யதட்டிவிட்டுச் சரே லென்று வெளியேறினார்.

அப்பாதகன் "ஐயோ! ஐயோ!" என்று கதறிக்கொண்டு அப் படியே சோபாவில் சாய்ந்து மூர்ச்சையானான்.

தானே புரிவினையாற் சாரு மிருபயனுந்
தானே யனுபவித்தற் றப்பாது—தானூறு
கோடிகற்பஞ் சென்றாலும் கோதையீர் செய்தவினை
நாடிநிற்கு மென்றார் நயந்து.

—நீதிவெண்பா.

---

# இருபத்திநான்காம் அத்யாயம்.

## முடிவு.

## Conclusion.

தோற்றமுற் பவத்திற் செய்த தீங்குநன் கெனு மிரண்டும்
ஆற்றல்சால் கரும மென்ப ரக்கரு மத்தை நோக்கிச்
சாற்றுமிப் பிறப்பில் தக்க தரித்திரஞ் செல்வம் நல்கிப்
போற்றுவ னுயிரை யெல்லாம் பொலிசுடர்த் திகிரி வள்ளல்.

—குசேலோபாக்யானம்.

ஆக்கமும் வறுமை தானு மல்லலு மகிழ்வு மெல்லா
நீக்கமில் லுயிர்கட் கென்று நிலையெனக் கொள்ளற் பாற்றோ
மேக்குயர் கடவுட் டிங்கள் வெண்ணிலாக் கதிரின் கற்றை
போக்கொடு வரவு நாளு முறைமுறை பொருந்திற் றன்றே.

—கந்தபுராணம்.

இவ் வுலகின்கண் மானிட வாழ்வை, ஓயாது சுழலும் சக்கரத்துக் கொப்பிடுவது வழக்கம். இதற்கு ஸம்ஸாரசக்கர மென்று பெயர். எவ்வாறு சக்கரத்தின் பல பாகங்கள், உயர்வதும் தாழ்வதும் இயற்கையாயிருக்கின்றனவோ, அவ்வாறே மனித வாழ்விலும், சுகதுக்கங்களும், சுபாசுபங்களும், லாபநஷ்டங்களும் மாறி மாறியே வந்து கொண்டிருக்கின்றன.

இன்பம தடைந்த காலை யினிதெனு மகிழ்ச்சி யெய்யார்
துன்பம துற்ற போதுந் துண்ணெனத் துளங்கிச் சோரார்
இன்பமுந் துன்பந் தானும் இவ்வுடற் கியைந்த வென்றே
முன்புறு தொடர்மை யோர்வார் முழுவது முணர்ந்த நீரார்.

மனிதனுடைய ஸங்கல்ப விகல்பங்களுக்கு அதீதமாய் ஏதோ ஒரு பராசக்தி இருக்கின்றதென்றும், அது, அவனவன் கர்மானுபவத்துக்குத் தக்கவாறு பலனைக் கொடுக்கின்றதென்றும், கர்மவாதிகள் கூறுவார்கள். இம்மஹா விசாரணையின் உண்மையும் தன்மையு மிவ்வாறிருக்க.

முன் அத்யாயத்தில் கூறிய விருத்தாந்தங்கள் நடந்து ஒரு வாரமாயிற்று. மணிபுரம் கொலைக்கேஸின் மாயவிளக்க விருத்தாந்தமானது உலக மெங்கும் பரவிற்று. முன் மதுரை ஜில்லா சூப்ரிண்டெண்டெண்ட், எல்லிஸ் துரையின் ப்ரசம்ஸைகளைப்பற்றி வெகு முறுக்காய் வர்ணித்த நமது சென்னை தண்டரர் (Thunderer) என்னும் ஓர் ஆங்கிலோ—இந்தியன் பத்திரிகை, தன் முறைப்படி பின் வருமாறு எழுதிற்று.

"ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தின் அருமையை இந்நாட்டார் கொஞ்சமேனும் அறிந்தவரில்லை. ப்ரிட்டிஷ் ந்யாய விசாரணைகளில் ராஜாங்கத்தாருக்கு ஜனங்கள் உதவி செய்யாதிருப்பது ஓர் பெருங் குறையே. தீர்க்க தர்சியான எல்லிஸ் துரையவர்களுக்குக் கூட இக்கேஸ் அகப்படாதிருந்தது, மேற்கூறியவாறு ஜனங்களின், ந்யாயாபிமானக் குறைவைத்தான் தெரிவிக்கின்றது"

என்று; ஒரே அடியாய் பழியை ஜனங்களின் மேல்சுமத்திப் பலவாறு ஆத்திரப்பட்டது.

'ஆர்யா' என்ற ஹிந்துப் பத்திரிகை, தன் முறை (Policy)ப்படி பின் வருமாறு முறையிட்டது:—

"மணிபுரம் கொலைக் கேஸ் ஸம்பந்தமாய் அப்போதைக்கப் போது ஸகல நடபடிக்கைகளையும் வெளியிட்டிருப்பதை நமது நண்பர் அறிவார்கள். கொலையே நடந்திராதிருக்கும் பொழுது, நிரபராதியான மாதவன், ஸெஷன்ஸ் கோர்ட்டில், கொலை செய்தவனாய்த் தீர்க்கப்பட்டு, மரண தண்டனையும் விதிக்கப்பட்டது அதிக ஆச்சர்யமாயிருக்கின்றது.

"இறந்ததாகச் சொல்லப்பட்ட தினகரன், சற்று 5 நிமிஷம் தாமதமாய் தூக்கு ஸ்தானம் வந்திருந்தால், மாதவன் கதி எவ்வாறு முடிந்திருக்கும்! இவ் விஷயம் நமது இராஜாங்கத்தார் நன்று கவனிக்க வேண்டும், இக்கொலைக் கேஸினின்றும், நாமறிவதென்னவென்றால், நமது ராஜாங்கத்தார் நமது நன்மையை எவ்வளவோ கருதியும், ந்யாய பரிசீலனை (Judicial Machinery) யந்திரத்தில் ஏதோ சில சிக்கல்கள் (Complications) இருக்கின்றனவென்றும், அதன் சில முக்ய உபகரணங்கள் (Parts) சிதிலமடைந்திருக்கின்றனவென்றும் நன்றாய் விளங்கும்.

"போலீஸ் சீர்திருத்த விஷயத்தில் போலீஸ் கமிஷன் நியமனமான காலம் முதலே, இப்போது செய்திருக்கும் சீர்திருத்தங்கள் சரியல்லவென்று அப்போதைக்கப்போது நமது பத்திரிகை மூலமாய் வெளியிட்டிருக்கின்றோம்.

"யார் வைத்த தீயானால் என்ன? வீடு வெந்ததில் குறைவில்லை! என்று சொல்லும்படி, கணந்தப்பினால், நிரபராதியான மாதவன் மரணமடைந்திருப்பான். மனித பலம் முழுமையும் அவனுக்கு விரோதமாயிருந்திருக்க, அவன் தப்பியது தெய்வ பலம் என்றே சொல்லவேண்டும்.

"இவ்விஷயமானது ஆதியோடந்தமாய் நமது ராஜாங்கத்தார் விசாரணை செய்வார்களென்றும், நமது சட்ட சபையில், யாராவது ஓர் (ஆனரபிள்) கௌரவ ஸ்ரீமான் கேள்வி (Interpellation) கேட்பார் என்றும் எதிர்பார்க்கின்றோம்."

## முடிவு.

அடுத்த நாள் 'ஆர்யா' பின்வருமாறு கூறுகின்றது. மணிபுரம் கொலைக்கேஸில் மரணதண்டனையடைய இருந்த மாதவன், மணிபுரம் முன் ஜமீன்தார் ராமராஜாவின் மகனென்றும், இப்பொழுதிய கிருஷ்ணராஜாவின் தமையன் புதல்வனென்றும், மணிபுரத்துக்குச் சரியான வாரிஸ் என்றும் கேட்க நமது நண்பர்கள் ஆச்சரியமடைவார்கள். முன் ஜமீன்தாரும், அவர் மனைவியும் கொலையுண்டதும், அக்கொலை மாயம் நுட்ப தர்சிகளாகிய போலீஸ் நிபுணர்களாலும் கூட விளக்கப்படாது மறைந்திருப்பதும், இறந்தவர் தம்பி கிருஷ்ணராஜ், ராஜ்யத்தையே வெறுத்திருந்ததும், இப்பத்திரிகை மூலமாய் நமது நண்பர்கள் அப்போதைக்கப்போது அறிந்திருப்பார்கள்.

தன் தமயன் புதல்வன் மாதவனென்றும், அவன் உயிர்த்திருக்கப்பார்க்க நேர்ந்தது தன் பெரும் பாக்யமென்றும், உள்ளங்குளிர்ந்த கிருஷ்ணராஜன் உடனே மாதவனை ஆலிங்கனஞ் செய்து கண்ணீர் சொரிந்தாராம். மாதவனுக்கு ராஜ்யத்தைத் தானேயிருந்து பட்டம் கட்டுவிக்கப் போகிறாராம்.

"மாலினியை மாதவன் விவாகம் செய்யப்போகிறான். இவ்விரண்டு சந்தோஷ கார்யங்களும் அடுத்த வெள்ளிக்கிழமை நடக்கின்றனவாம். தான் உத்தர இந்தியா ஸஞ்சாரம் செய்வதாயும், தனக்கு யாதொரு பொருளுதவியும் வேண்டாம் என்று கிருஷ்ணராஜா மறுத்தும் பெருந்தன்மை வாய்ந்த மாதவன், அவருக்கு மாதம் 400 ரூ அனுப்புவதாய் வாக்களித்திருக்கின்றாராம்.

கள்ளன்கோட்டைத் தலைவர்கள் தங்கள் கோட்டை கொத்தளங்களையும் சிறிது பூமியையும் மாதவனுக்குச் சாஸனம் செய்துவிட்டு, அதற்கு ப்ரதி ப்ரயோஜனமாய் மாதம் ஒன்றுக்கு 300 ரூ அவர்கள் ஆயுளளவும் பெறுவதென்ற ஒப்பந்தத்துடன் தேசஸஞ்சாரம் செய்யப் போய்விட்டார்களாம். திடீரென்று சம்பவித்த இதன் மாயம் இன்னதென்று விளங்கவில்லை.

மதுரை ஜில்லாவுக்கே ஓர் திலகம்போல் விளங்கும் இப்பூர்வ ஜமீன்தாரி மறுபடி நன்னிலைமையடைந்து மாதவன் ஆளுகையில் செழித்தோங்கும் என்று நாம் வேண்டுகின்றோம்.

பாலூர் ஜமீன் ராஜ்யமானது ப்ரக்ருத ஜமீன்தார் குண சேகாருக்கு அனுகூலமாய், டிை ஜமீன்தாரிணியையும், அவர் ஒப்புக் கொண்டு விட்டார்.''

இப் பத்திரிகையின் அபிப்பிராய மிவ்வாறிருக்க, தூக்குநாள் இரவில், பரதேசியாருக்குக் கிருஷ்ணராஜ் எழுதிக்கொடுத்த கடிதம் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"..........................................................................

எல்லோரும் என்னை நல்லவன் என்று நினைத்திருக்க, என்னைப் போன்ற பரமபாதகனும் துரோகியும் உலகத்திலேயே கிடையாது. என் அண்ணனையும், அவர் மனைவியையும் கொன்றது நானே. அன்று இரவு கொன்றுவிட்டு அடுத்த மெயில்வண்டியில் பட்டணம் ஓடிவிட்டேன். மறுபடி ஸமாசாரம் தெரிந்து வந்தவன்போல வந்து வேண்டிய அபரக்ரியைகள் செய்தேன். மாதவனைக் கொல்ல நினைத்தது மாறிப்போய், தாதியின் பெண்குழந்தையைக் கொன்றுவிட்டோம். உலகத்துக்கு ஆண்குழந்தை இறந்ததாகத்தான் வதந்தி, ஆண்குழந்தை காணவில்லை. தாதியும் காணப்படவில்லை. நாங்கள் தப்பிதத்தை யறிந்ததும் பரவினவதந்தி அவ்வாறே இருக்கட்டுமென்று, அக் குழந்தையை ஜமீன்தார் புதல்வனென்றே சொல்லிப் புதைத்தோம். இப்போது சமாதியிலிருப்பது பெண்குழந்தையே.

பிறகு ராஜ்யத்தை ஒப்புக்கொள்ள எனக்கே மனம் ஸகிக்கவில்லை. எப்போதாவது மணிபுரம் வந்தால், என்னோடு யார் பேசினாலும், கொலையை யறிந்து பேசுவதுபோல் எனக்குப் பயமாயிருக்கும். இவ்வாறு நான் கனவிலும் நினைவிலும் பட்டதுயரமும், அடிக்கடி கொலையுண்டவர் என் கனவில் தோன்றுவதும், என் வாழ்நாளெல்லாம் வீண் நாளாக்கின. இவ்வாறு கஷ்டகாலங் கழித்து வரும் காலத்தில், மாலினியின் பேரழகால், ஒருவேளை என்வாழ்வைப் பயன்படச் செய்யலாமென்று நினைத்தேன். "கெடுவான் கேடு நினைப்பான்." ஆனால் பரதேசியின் புத்தித் திறமையையும், அக் குழந்தை கொலைக்குத் தப்பி எங்கேயோ தென்படாது வளர்ந்து வருகின்றான் என்பதையும் நினைக்குங்கால், இன்றைக்குத் தப்பினும்

என்றைக்காவது ஆபத்துக்குட்பட்டேத்தான் தீரவேண்டுமென்று நிச்சயமாய் நினைத்திருந்தேன். கடைசியில் மாதவன் தன் தாய் தந்தையர்போகூடத் தெரியாது மாயமாய் வளர்வதையும் அவனிடத்துப் பரதேசி அவ்வளவு அன்பு பாராட்டவும் காண எண்ணாத எண்ணமெல்லா மெண்ணி யெண்ணி ஏழைநெஞ்சம் புண்ணாயிற்று என்று திகிலடைந்து விட்டேன். எப்படியாவது மாதவனைத் தொலைக்க வழிதேடினேன். தான் கொலைசெய்ததாய் என்னிடம் அவன் ஒப்புக் கொள்ளவில்லை. ஸெஷன்ஸ்கோர்ட்டில் நான் கொடுத்த வாக்குமூலம் முற்றிலும் பொய்.

ஏதோ என் மனதிலிருப்பதைச் சொல்லி முடித்தேன். இனி ரக்ஷித்தாலும் நீர்தான். சிக்ஷித்தாலும் நீர்தான்."

கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலுங்
கற்பூர மாகுமோ கடலுப்பு—பொற்பூரும்
புண்ணியரைப் போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணிய ராவாரோ புகல்.

நீதிவெண்பா.

கிருஷ்ணராஜன் எழுதிய இக் கடிதத்தை ரகஸ்யமாய்ப் பத்திரப் படுத்தி வைத்துக்கொண்டார் நமது பரதேசியார். அதிகமாய் வளர்ப்பானேன்? குறித்த தினத்தில், மங்களகரமாய் மாலினிக்கும், மாதவனுக்கும் விவாஹமஹோத்ஸவமும், மணிபுரம் பட்டாபிஷேகமும் நடந்து முடிந்தன. கிருஷ்ணராஜன் கூடவே இருந்து எல்லாவற்றையும் நடத்தி வைத்தார். அவருடைய தர்மசிந்தையையும், ஒழுங்கையும், அன்பையும் பற்றி எல்லோரும் வியந்தார்கள். 'ஆர்யா' பத்திரிகை க்ரமப்படி, பத்திரிகா முகத் (Editorial Column) தில் மணிபுரம் கிருஷ்ணராஜனைப் பற்றி ஸ்துதி செய்து தீர்த்தது.

ஊர் வழக்கப்படிக்கும் நவீன நாகரீகத்துக் கிணங்கவும், விருந்துகளும் தமாஷாக்களும் நடந்தன.

மாதவனும் மாலினியும் மணிபுரத்தில் சுகமாயரசாண்டு வருகின்றார்கள். பாலூர் ஜமீன்தார் தன் மகன் தினகரனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு, தீர்த்த யாத்திரை சென்றிருக்கின்றார்.

[illegible]

மணிபுரம் கிருஷ்ணராஜன், மாதம் ஒன்றுக்கு ... நாசிகநகரில் வசிக்கின்றார்.

நமது பரதேசியாரும் அன்னவர் ஸஹோதரியும், தோழி கமல வும் மாதவனுடன் சௌக்கியமாய் வசித்து வருகின்றார்கள்.

இவ்வாறு மணிபுரம் கொடுங்கதையின் மாயங்கள் வெளிவரா இம்மட்டில் ரகஸ்யமாகவே இருக்கின்றன. இம் மாயமானது இக் கதாபுருஷர் சிலருக்கு மாத்திரம் தெரியுமே யொழிய, வேறொரு ரும் அறியார்கள்.

போலீஸ் பரிசீலனை ரிப்போர்ட் வருஷந்தோறும் வழக்கப்படி தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஆர்யாவும், தண்டரும், க்ரமப்படி தங்கள் முறையைக் கழித்து வருகின்றன.

## மங்களம்.

'ஸோந் ஜோந் ஜோஸமைன'—மெட்டு.

பூமியில் இலக்கம் போன்ற பாரததேசம் வாழ்க.

பூமியாளும் மன்னர் வாழ்க !
பாரத் தனயர் வாழ்க ! [பூதல]

ஆதியே யனாதியே நம்மை
ஆளும் பரஞ் ஜோதியே ! [பூதல]

முற்றிற்று.